தமிழ்க்கலை

தமிழியல் காலாண்டு ஆய்விதழ்

தமிழ் 1. கலை 4

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 001
தமிழ்நாடு-இந்தியா

கட்டுரை, கருத்துரையாளர்கள்

1. டாக்டர் பி. மருதநாயகம்,
ஆங்கிலப் பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை.

2. ஆங்கிலம்:
டாக்டர் கே. இராசஇரத்தினம்,
இயக்குநர்,
புதிய அனைத்துநாட்டுப் பொருளியல்
ஒழுங்கு மையம், சென்னை.

தமிழாக்கம்:
டாக்டர் நான்சி டேவிட்,
இணைநிலைப் பேராசிரியர்,
புதிய அனைத்துநாட்டுப் பொருளியல்
ஒழுங்கு மையம், சென்னை.

3. வித்துவான் அடிகளாசிரியர்,
இணைநிலைப் பேராசிரியர்,
சுவடிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

4. ஆங்கிலம்:
திரு கே. ஏ. சௌதுரி,
" ஏ. கே. கோச்,
" எஃச். என். சென்.

தமிழாக்கம்:
டாக்டர் கு. சீனிவாசன்
தாவரவியற் பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

5. பேரா. ஆ. சுப்பிரமணியம்,
தலைவர், அறிவியற்புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

6. வடமொழி:
மேதகு போசசராசன்

தமிழாக்கம்:
திரு சு. சுவாமிநாத சாத்திரிகள்
சரபோசி கல்லூரி,
வடமொழிப் பேராசிரியர் (ஓய்வு)
தஞ்சாவூர்.

7. (அ) திரு இரா. செயராமன்,
5 இராமராவ்தோட்டம்,மூன்றாவதுதெரு,
இராயப்பேட்டை, சென்னை 14.

(ஆ) திரு பழ. முத்தப்பன்,
பேராசிரியர், தமிழ்க் கல்லூரி, மயிலம்.

8. திரு சண்முக. முருகானந்தம்,
ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை.

9. டாக்டர் இராம. சுந்தரம்,
திட்டம், தமிழ் வளர்ச்சித் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தொல்காப்பியமும் மேலைநாட்டுக் கவிதையியலும்

ப. மருதநாயகம்

தொல்காப்பியத்தின் எழுத்தும்சொல்லும் உலக அரங்கில் அவற்றிற்கு உரிய ஏற்றத்தை ஓரளவேனும் பெற்றுள்ளன. மேலைநாட்டு மொழி நூல் வல்லார் இவற்றின் சிறப்பைக் கண்டு தெளிந்து மொழி ஆய்விற்கான புதுமைத் துணைக்கருவிகள் எவையுமற்ற காலத்தே தமிழ்மொழியின் எழுத்து, சொல் இலக்கணங்களை ஆழமாக, நுட்பமாக, விரிவாக, வெவ்வேறு கோணங்களினின்றும் தொல்காப்பியர் ஆய்ந்துள்ளமைபாராட்டிற்குரியது என்பதையேற்றுக் கொண்டுள்ளனர். ஆனால், பொருளதிகாரம்மற்றைய இரண்டு அதிகாரங்களைப் போன்றே நுண்ணிய பார்வை, தெள்ளிய சிந்தனை ஆகியவற்றின் விளைவேயாயினும் அதற்குரிய பெரும் பெயரை மேலைநாட்டு இலக்கியத்திறனாய்வாளர்களிடையே பெறவில்லை. புளும்பீல்டு, சாம்ஸ்கி போன்றோரின் கவனத்தை எழுத்தும் சொல்லும் ஓரளவு கவர்ந்தன. பொருளோ உலகப் பேரிலக்கியங்களின் கவிதையியல்களையெல்லாம் துருவித்துருவி ஆய்ந்துவரும் ரெனிவெலக்கு போன்ற எந்தத் திறனாய்வாளரின் எண்ணத்தையும் பற்றியீர்க்கவில்லையே என்பது வியப்பையும் கவலையும் தருகின்றது.

ஆயினும், பொருளதிகாரம்பற்றி தம்மவர் எழுதியுள்ள நூல்களும் கட்டுரைகளும்பற்பலவாகும். இவைசட்கெல்லாம் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் எழுதிய உரைவிளக்கங்களே அடிப்படையாக அமைந்தன. சோமசுந்தரபாரதியும் புலவர் குழந்தையும் பழந்தமிழரின் பண்பாட்டுச் சிறப்பை விளக்கவும் அது ஆரிய நாகரிகக் கலப்பற்றது என்பதை நிலைநாட்டவும் தமது புத்துரைகளைப் பயன்படுத்திக்கொண்டனர். மு. இராகவையங்காரின் தொல்காப்பியப் 'பொருளதிகார ஆராய்ச்சி' நச்சினார்க்கினியரின் அடியொற்றிச் செல்லும் பொருளதிகாரப் பொழிப்புரையாகும். இவர் சில நூற்பாக்களை மட்டும் விரிவான விளக்கத்திற்கெடுத்துக்கொண்டு அங்கெல்லாம் வடவரின் நான்மறைக் கருத்துக்களும் பண்பாடும் தமிழரால் போற்றிப் பாதுகாக்கப்பட்டனவென்றும் இஃதே இவரின் சிறப்பென்றும் தோன்றுமாறு போல் வாதிடுகின்றார். தொல்காப்பியர் சுக்கிரனது வழிவந்த பிருகு முனிவரின் மரபைச் சார்ந்த அந்தணர்; வடநூலார் கூறும் இராக்கதம் முதலிய மணமுறை தமிழரிடையேயும் உண்டு; தொல்காப்பியர், கைக்கிளை ''காமஞ்சாலா இளமையோள் வயின்'' நிகழ்வது என்று கூறுவதால் தமிழ்நாட்டில் குழந்தைகள் மணமுறைஇருந்தது; ''அடியோர்பாங்கினும் வினைவலர்பாங்கினும்'' என்ற அடி தமிழகத்தே அடிமைமுறை மேற்கொளப்பட்டதற்குச் சான்று; ''ஐயர்யாத்தனர் கரணம்'' என்பது ஆரிய முனிவர் விதித்த மணச்சடங்குகளைத் தமிழர்க்கு ஐயர் அறிவுறுத்தினமையைத் தெளிவு படுத்துகிறது; நால்வகை வருணத்தாரே உயர்ந்தோர்; ஐந்திணைநிலமக்கள் தாழ்ந்தோர் என்பதே காப்பியர் முடிவு-என்பன போன்ற கருத்துக்களைக் கூறிப் பொருளதிகார ஆய்வைத் தவறான பாதையில் இழுத்துச் சென்றது இந் நூல்.[1] இம்முடிவுகளுக்கெல்லாம் ஐயத்திற்கிடமற்ற இலக்கியச்

சான்றுகளையோ கல்வெட்டுச் செய்தி போன்ற வரலாற்றுச் சான்றுகளையோ இராகவையங்கார் தரவில்லை. மேலும் இத்தகைய ஆய்வு பொருளதிகாரம் தரும் கவிதைக் கருத்துக்களுக்குரிய சிறப்பைத்தர வில்லை என்பது நோக்கற்பாலது. இதற்கு நேர்மாறான, ஆனால் இதேபோல் பயனற்ற பணியைப் புலவர் குழந்தை செய்துள்ளார். பொருளதிகாரத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் 'தூய்மை ந்தன்மை'யை வலியுறுத்தற்குப் பயன்படுத்த முயல்கிறார்.

கா. சுப்பிரமணியபிள்ளையின் 'பழந்தமிழர் நாகரிகம்' தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்துக்களின் தொகுப்பாகும். இது பண்டைத்தமிழரின் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டையும்படம்பிடித்துக்காட்டும் கண்ணாடியாகப் பொருளதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்கிறது. வ. சுப. மாணிக்கம் எழுதிய 'The Tamil Concept Of Love' (தமிழரின் காதற் கோட்பாடு) என்ற ஆங்கில நூல் சங்க இலக்கியத்தில் காதல் எனும் பொருள் பற்றியதாயினும் அகத்திணை பற்றித் தொல்காப்பியரும் உரையாசிரியரும் கூறும் கருத்துக்களை ஆங்காங்கே எடுத்தாள்கிறது.[2] நூலின் பெரும்பகுதி அகத்திணை விளக்கமாகவும் அகத்திணைப்பாடல்களின் ஆய்வாகவும் அமைகிறது. கைலாசபதியின் 'Tamil Heroic Poetry' (தமிழ் வீரயுகக் கவிதை) சான்றோர் செய்யுட்களைக்கிரேக்க வீரயுகப்பாடல்களோடு ஒப்பிட்டுக்காட்டி அவையும் வீரயுகத்தைச் சார்ந்தவையே என்று நிலைநாட்ட முயல்கிறது[3]. இம்முயற்சிக்குத் தொல்காப்பியத்தையும் ஒரு மூல நூலாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஆசிரியர் அது சங்க இலக்கியங்களுக்குப் பின்தோன்றியதென்பதை ஐயத்திற்கு இடமற்ற ஒரு கருத்தாகக்கொண்டு தமது முடிவுகளை அடுக்கிச் செல்வதுகுறிப்பிடத்தக்கது. கைலாசபதியின் நிலையற்ற சான்றுகளையும் தமது முடிவுகளுக்கேற்ப வளைத்துக்கொள்ளும் ஆர்வத்தையும் இந்நூலில் காணலாம். வீரயுகக் கவிதைகளைப் பற்றிக் கூறுகின்ற ஓர் இரண்டாந்தர இலக்கண நூலாகவே தொல்காப்பியத்தை இவர் கருதுவது தமிழ் அறிஞர்கட்கு அதிர்ச்சியைத் தருவதற்கே போலும்! தமிழண்ணலின் Tradition and Talent in Cankam Poetry' (சங்கஇலக்கியத்தில் மரபும் ஆற்றலும்) என்ற நூல் சங்க இலக்கிய ஆய்வை மேற்கொள்வதன் முன் தொல்காப்பியத்தின் மூலநூல்கள், தொல்காப்பியக் கவிதை மரபுகள், தொல்காப்பியம் கூறும் திணைக்கோட்பாடுகள் ஆகிய மூன்று பொருள்கள் பற்றியும் விரிவாகப் பேசுகிறது.[4]

தொல்காப்பியப் பொருளதிகாரம் பற்றிய கட்டுரைகளில்குறிப்பிடத்தக்கது, தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் 'The Theory of poetry in Tolkappiyam (தொல்காப்பியத்தில் கவிதைக்கோட்பாடு)[5] என்ற சிறிய, பொருள் பொதிந்த கட்டுரையேயாம். இக் கட்டுரை மேலைநாட்டு இலக்கியத் திறனாய்வாளர்களின் முறையைப் பின்பற்றித் தொல்காப்பியர் கவிதைபற்றிக் கொண்ட கருத்துக்களை மயக்கமோஉயர்வுநவிற்சியோ இன்றிச் சில ஆங்கிலக்கோட்பாடுகளோடு ஒப்பிட்டு விளக்குகின்றது. தொல்காப்பியம் சங்க இலக்கியங்களுக்குச் சில நூற்றாண்டுகளேனும் முன் தோன்றியிருக்க வேண்டுமென்றும் அது கூறும் மரபுகள் பல சங்க இலக்கியம் தோன்றியபொழுதே வலுவிழந்துவிட்டனவென்றும் இக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

மேலை நாடுகளில் கவிதை பற்றிய கொள்கைகள் தலைமுறைக்குத் தலைமுறை மாறிவரக் காண்கிறோம். இதனால் அவர்கள் தங்கள் இலக்கியங்களையும் மாறுபட்ட அளவுகோல்கள் கொண்டு அடிக்கடி மறுமதிப்பீடுகள் செய்கின்றனர். இதனால் அவ்விலக்கியங்களின் நிறைகளும் குறைகளும் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயப்படுகின்றன. அக்கவிதைக் கோட்பாடுகளில்

ஒரு தெளிவு பிறந்திருப்பதோடு அவற்றின் ஆழமும் அகலமும் வியத்தகு முறையில் அதிகரித்துள்ளன. அவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன் ஓட்டத்தை மிக விரைவாகத் தொடங்கிய நாம் இன்று மிகவும் பின்தங்கி விட்டோம். எனினும், தொல்காப்பியம் கூறும் கவிதை நெறிகளை மேலைத் திறனாய்வாளர்களில் பெருஞ் சிறப்புடையார்கூறுவனவற்றோடு ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது அவற்றின் உயர்வும் அவரது நெடுநோக்கும் தெளிவாகப் புலப்படும். இருபதாம் நூற்றாண்டில் உயர்ந்த கவிதைக் கோட்பாடுகள் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டவற்றுள் பல பொருள் அதிகாரத்தில் புதைந்து கிடக்கக் காணலாம்.

மேலைநாட்டுக் கவிதை வரலாற்றை ஆய்ந்து பார்க்கும்பொழுது அங்கு இரு வேறுபட்ட நெறிகள் மாறிமாறி ஏற்றம் பெற்று வந்திருப்பது கண்கூடு. செவ்வியல் நெறி (Classicism), புனைவியல் நெறி (Romanti-cism) ஆகிய இரண்டிற்கும் நடைமுறையில் அதிக வேறுபாடுகள் இல்லை என்று இப்பொழுது சில திறனாய்வாளர்கள் கருதினும் அவை ஒன்றிலிருந்துஒன்று மாறுபட்டவையே யென்று மிடில்டன் மரி (Middleton Murry) எலியட் (T. S. Eliot) போன்றோர் தெளிவாகச் சுட்டுவர். செவ்வியல் நெறியின் சிறப்பைப் பேசும் எலியட் இவையிரண்டிற்கும் உள்ள வேறுபாடு முழுமைக்கும் அரைகுறைக்கும், முதிர்ச்சிக்கும் வெண்மைக்கும் ஒழுங்குக்கும் குழப்பத்திற்கும் உள்ள வேறுபாடுகள் போன்றதே என்று நிறுவ முயல்வார்.[6] (1) செவ்வியல் நெறி. மரபைப் போற்றுவது; புனைவியல்நெறி மரபைப் புறக்கணிப்பது. செவ்வியல் நெறி ஐரோப்பிய இலக்கிய மேதைகளின் நூல்களில் காணப்படும் கோட்பாடு பின்பற்றப்பட வேண்டியது என்பதை முதற் கொள்கையாகக் கொண்டது. கவிஞனின் உள் மனம் (inner voice) ஒன்றனுக்கே மதிப்பளித்து ஏனைய கட்டுப்பாடுகளையெல்லாம் தூக்கியெறிய முனைவது புனைவியல் நெறி. (2) புதுப்புதுக் கருக்கள், புதிய கவிதைப் பொருள்கள், பாவகைகள், புதிய சந்தங்கள், புதிய நடைகள் ஆகியவற்றில் நாட்டங் கொண்டு புரட்சிக் கவிதைகளைப் படைக்க வேண்டும் என்ற பேரவாவினைப் புனைவியல் கவிஞர்கள் வெளிப்படுத்தினர். செவ்வியல் நெறியோ கட்டுப்பாடு, ஒழுங்கு, கண்ணியம், சீரமைப்பு, சமநிலை, எளிமை, ஆய்ந்தறிதல் (Restraint, order, propriety proportion, balance, simplicity, reason,) ஆகியவற்றை வலியுறுத்துவது. புனைவியல் நெறியோ கட்டுப்பாடற்ற கற்பனை, பெருமிதம், புதிர்நிலை, மகிழ்ச்சிப்பெருக்கு (free-play of imagina-tion, profusion, mystery, rapture) ஆகியவற்றைக் கொண்டாடும் தன்மையது. (3) பெரும்பாலான செவ்வியல்நெறிக் கவிஞர்கள் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ளோரைப்பற்றியே கவிதைகள்யாப்பர். புனைவியலார் கீழ் நிலையிலுள்ளோரையும் கவிதைப் பொருளாக்கிச் சனநாயகம் சமத்துவம், உரிமை, ஆகியவை பற்றிப் பெருங்குரல் எழுப்பத் தயங்கார். (4) செவ்வியலார் கவிதையாக்கத்தில் அறிவின் பங்கையும் (brainwork) புனைவியலார் கற்பனையின் பங்கையும் (dream work) மிகைப்படுத்துவர். (5) இயற்கையைப் பார்க்கும் புதிய பார்வையிலும் பழமை மேலுள்ள காதலிலும் அறிய முடியாதது மறைக்கப்பட்டது புதியது ஆகியவற்றிலுள்ள ஈடுபாட்டிலும், அவலம், தன்னிரக்கம், என்னும் உணர்வுகளைப் போற்றுவதிலும் (the spiritualizing approach to Nature the, delight in the past, the interest in the unknown mysterious and fantastic, the self-assumed melancholy) புனைவியலார் மற்றையோரிலும் வேறுபட்டவராவர். டிரைடன் (Dryden), போப் (Pope) சான்சன் (Johnson) ஆகியோரின் கவிதைகளில் செவ்வியல் நெறியும் கோல்ரிட்சு, வேர்ட்சுவொர்த், கீட்சு, செல்லி, பைரன் (Coleridge, Wordsworth, Keats, Shelly, Byron) ஆகியோரின் கவிதைகளில் புனைவியல் நெறியும் பொலிவுறக் காணலாம்.

இவ்வேறுபாடுகளை மனத்திற் கொண்டு தொல்காப்பியரின் கவிதை இயலை நோக்கின், அது செவ்வியல் நெறியின்பாற்பட்டது என்பது தேற்றம். அதுமரபைப் போற்றுவது: தமக்கு முன்பிருந்த பேரிலக்கியங்களின் பண்புகளையே அவர் கோட்பாடுகளாகத் தருகிறார் என்பதை ஆங்காங்கே "என்ப", "என்மனார் புலவர்" என்று அவர் கவனமாகச் சேர்க்கும் சொற்களால் அறியலாம். செய்யுள்பற்றி அவர் சொல்வது எல்லாம் அவராகத் தருகின்ற விதிகளல்ல. அவர் காலத்துக்கு முன்பிருந்த புலவர்களாலும், இலக்கணிகளாலும் வரையறுக்கப்பட்டவை. அவர்களை "நல்லிசைப் புலவர்" "யாப்பறி புலவர்", "தொன்மொழிப்புலவர்" "புலன் உணர்ந்தோர்" என்றெல்லாம் குறிக்கிறார். (செய்யுளியல் 1, 74, 230, 233), வழிவழிவந்த இலக்கியக் கொள்கைகளைக் குறிக்க அவர் "புலனெறி வழக்கம்" என்ற தொடரையே

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

என்ற நூற்பாவில் (அகத்திணை;56) குறிப்பிடுகிறார். இன்னின்ன பொருள்கள் பற்றி, இவ்விம் முறைகளில் இவ்வாறு பாட வேண்டும் என்று தெளிவாகச் சொல்கிறார். அகத்திணையியல் கூறும் எழுதிணைப் பாகுபாடு, முதல், கரு, உரியமைப்பு; புறத்திணை இயல் கூறும் ஏழுதிணைகள், அவற்றிற்குரிய துறைகள்; களவியல், கற்பியல், பொருளியல், காட்டும் தலைமகன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர், கூத்தர், இளையோர் அவரது கூற்றுக்கள் பற்றிய விளக்கங்கள் இவையெல்லாம் ஒரு கவிஞன் தெரிந்தெடுக்கத்தக்க பொருள்கள், அவற்றைக் கூற அவன் பயன்படுத்தவேண்டிய பாத்திரங்கள், அவர்களின் கூற்று நிகழக்கூடிய நிலம், பொழுது ஆகிய பின்புலம் ஆகிய யாவற்றையும் பட்டியலாக்கித் தருகின்றன. இப்பட்டியல்களிலிருந்து தனக்குத் தேவையானவற்றைத் துருவி ஆய்ந்து எடுத்துக் கொள்வதே கவிஞனின் வேலையாகும்.

செய்யுளியலில் ஏழுவகையான இலக்கிய வகைகளையும் அவைகளுக்குரிய முப்பத்து நான்கு கூறுகளையும் பகுத்துக் கூறுகிறார். கவிதையின் சொற் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல் வேண்டுமாதலின் அதற்குரிய மெய்ப்பாடுகளைத் தொகுத்து எட்டு வகை என்றும், விரித்து முப்பத்து இரண்டு என்றும் மெய்ப்பாட்டியியலில்விளக்குகிறார். உவமையியலில் உவமையின் தன்மையும் அதன் வகைகளும் உவமைச் சொற்கள் வருமிடங்களும் உவமைக்குரிய மரபும் வேறுபாடுகளும் கூறப்படுகின்றன. மரபியல், கவிஞன் எவ்வாறு மரபு கெடாது சொற்களை வழங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்தி இளமை, ஆண்பால், பெண்பாற் பெயர்கள் இவையெனக் குறிப்பிட்டு நூலின் இலக்கணத்தோடு முற்றுப் பெறுகிறது.

"மரபு நிலை திரியில் பிறிது பிறிதாகும்"
(மரபியல் 92)

"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான"

என்னும் நூற்பாக்கள் குறிப்பிடத்தக்கன.

இத்தகைய வரையறைகள் தொல்காப்பியர்கூறும் கவிதையாக்கத்தில்உணர்ந்த உழைப்பு (Conscious Labour) என்று குறிக்கப்படும் அறிவுப்பணியே இன்றியமையாததென்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இங்கு கற்பனையின் பங்கு, உள்மனம் என்றெல்லாம் புனைவியலார் போற்றும் புரிந்து கொள்ள முடியாத உந்துசக்தி (mysterious power)க்கு அதிக இடமில்லை. பழம் கிரேக்கர்களும் உரோமானியர்களும் கவிதையாக்கம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களிலிருந்து இது மிகவும் மாறுபட்டது. ஆனால் எலியட் போன்ற இருபதாம்நூற்றாண்டுச் சிந்தனையாளர்களின் கோட்பாட்டிற்கு மிக நெருக்கமானது. கவிதையாற்றல் புரிந்துகொள்ள முடியாத ஒன்று என்றும் கவிஞன் என்பவன் ஓர் வியத்தகு ஆற்றலால் வயப்படுத்த

பட்டவன், அதனால் உந்தப்பட்டுத் தன் வயமிழந்து கவிதைமழையை எந்திரம்போல் பொழிபவன் (a possessed creature, an inspired savage, an automaton of genius) என்றும் கிரேக்கர்கள் கருதினர். ஆனால் இப்பொழுது மேலைநாட்டுக் கவிஞர்களும் திறனாய்வாளர்களும் கவிதையாக்கத்தில் கவிஞனின் கூர்த்தஅறிவும்,தெளிந்தசிந்தனையும் ஆழ்ந்த பட்டறிவுமே பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்வர்.7

கவிதையின் நோக்கம்பற்றியும் வேறுபட்ட கருத்துக்கள்கூறப்பட்டுள்ளன. ஓரசு (Horace) என்ற அறிஞர் இன்பம், பயன் என்ற இரு நோக்கங்களையும் வலியுறுத்தினார். பதினெட்டாம் நூற்றாண்டில் டிரைடன் (Dryden), போப்பு (Pope), சான்சன் (Johnson) முதலியோர் கவிதைவாழ்க்கையை உள்ளவாறும், மகிழ்வளிக்கும் முறையிலும் படம்பிடித்துக் காட்ட வேண்டும் (a just and lively representation of life) என்பதை வலியுறுத்தினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோலரிட்சு (Coleridge) கவிதையின் முதல் நோக்கம் இன்பம், இரண்டாம் நோக்கம் உண்மை என்றார். வேர்ட்ஸ்வொர்த் (Wordsworth) தமது ஒவ்வொரு கவிதையும் ஓர் அறங் கூறும் தன்மையது என்று அறிவித்தார். செல்லி (Shelley) கவிதைஇதயத்தைத் தாக்கியும் கற்பனையைத் தூண்டியும் நாம் எல்லாஉயிர்களின் பாலும் அன்பும் இரக்கமும் கொள்ள வழிசெய்யும் பயனுள்ள கருவியே யாகும் என்று வாதிட்டார். ஆனால், இவர்களுக்குப் பின்னால்வந்த கௌடியர் (Gautier), போதலேர் (Baudelaire), ரெனன் (Renan), பேடர் (Pater), ஆஸ்கார் ஒயில்டு (Oscar Wilde), சுவின் பர்ன் (Swinburne) போன்றோர் கவிதை கவிதைக்காகவே என முழங்கினர். அது வாழ்க்கைப் பயனையோ அறமுணர்த்துவதையோ குறிக்கோளாகக் கொள்ளக்கூடாதென்றும், வாழ்க்கையோடு தொடர்பு கொள்வதே அதற்குக் கேடு விளைவிக்கும் என்றும் கருதினர். கவிஞன் கவிதைக்காகவே வாழவேண்டும் என்றும் மக்களை நன்னெறிப்படுத்துவது அவனது கடமையன்றென்றும் கூறினர். ஆனால் மாத்யூ ஆர்னால்டு, டால்ஸ்டாய் போன்றோர் வாழ்க்கையை நெறிப்படுத்த முன்வராத கவிதை தேவையற்றது என்று தெளிவுபடுத்தினர்.8

இன்றைய மேலைநாட்டுத்திறனாய்வாளர்கள் மகிழ்விப்பது, அறமுணர்த்துவது என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகள் அல்லவென்றும் இரண்டும் இயைந்து செயல்படுதல் கூடுமென்றும் கருதுவர். பொருளதிகாரத்திலிருந்து கவிதையின் நோக்கம்பற்றிய தொல்காப்பியரது கருத்தை அறிவது அரிதன்று. அகப்பாடல்கள் பற்றிய அவரது கருத்துக்கள் மனிதன் அகவாழ்வைப் பல்வேறு கோணங்களிலிருந்து காண்பதால் ஏற்படும் இன்பத்திற்கே முதலிடம் தருகின்றன. தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் போன்றோர் மனிதவுணர்வுகளிலெல்லாம் தலையாய காதலுணர்வின் தன்மைகளைப் பலவாறு புலப்படுத்திப் படிப்போர்க்குக் கழிபேருவகையை ஊட்டுகின்றனர். இவர்கள் இயங்குகின்ற காட்சிகளில் இயற்கை, பொருத்தமும் அழகும் கொண்ட பின்னணியாக அமைந்து மகிழ்வை மிகைப்படுத்துகின்றது. தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட அகப்பாடல்களில் ஒருமித்த மனமுடைய தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு இல்லற வாழ்வு மேற்கொண்டு இன்பம் துய்ப்பதே முறையென்னும் பொது நெறி தவிர வேறுஅறங்களைச்சொல்லி மனிதனைத் திருத்த முயலும் நோக்கம் கிடையாது. தலைவன், தலைவி கொண்ட காதல் பற்றிய எந்த உணர்வினை யார் எந்தச் சூழலில் எவ்வாறு சொல்லவேண்டும் என்பதனையே தொல்காப்பியர் வரையறுத்துச் சொல்கிறார். இங்கு நுண்ணிய மன உணர்வுகளை உள்ளவாறுபடம் பிடித்துக்காட்டுவதால் ஏற்படும் மகிழ்வே முதல்நோக்கமன்றி வாழ்வின் நன்மை தீமைகளைப் பகுத்தாய்வதோ அற

நெறியுணர்த்துவதோ அல்ல என்பது தெளிவு. தலைவன், தலைவி, செவிலி, தோழி முதலியோரின் புறவாழ்க்கை வேறுபாடுகள் காட்டப்படுவதில்லை என்பது நோக்கற்பாலது. ஒரு தலைவனிலிருந்து மற்றொரு தலைவன், ஒரு தலைவியிலிருந்து மற்றொரு தலைவி புறகூறுக்களால் பெரும்பாலும் வேறுபடுத்திக்காட்டப்படுவதில்லை. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் திணை வேறுபாடுகளும் உள்ளுணர்வுக்கேற்ற இயற்கைப் பின்புலன் படைப்பதற்காகக் கொடுக்கப்பட்ட வேறுபாடுகளேயன்றி அவ்வந்நில வாழ்க்கை வேறுபாடுகளை எடுத்துக் காட்ட அமைந்தவையல்ல. புணர்தல், ஊடல் இரங்கல், இருத்தல், பிரிதல் போன்ற நிலைகளை எடுத்துக்காட்ட ஏற்ற நிலம், பெரும்பொழுது, சிறுபொழுது ஆகியவை சுட்டப்பட்டனவேயன்றி, குறிஞ்சி நிலத்துக் குறவனும், முல்லை நிலத்து வேட்டுவனும், பாலை நிலத்து எயினனும், மருத நிலத்து உழவனும், நெய்தல் நிலத்து நுளையனும் எவ்வாறு மாறுபட்ட வாழ்க்கை முறைகளை மேற்கொண்டனர் என்பதைப்படம்பிடித்துக் காட்டுவதைக் கவிதையின் நோக்கமாகத் தொல்காப்பியம் கூறவில்லை.

வழிவழிவந்த புலவர்களும் இலக்கணங்களும் முறை செய்த இத்திணைப் பாகுபாடுகளால் கவிஞர்கள் அடைந்த நன்மைகள் பல. காதல் வயப்பட்ட தலைவன் அல்லது தலைவியின் மன நிலையையும், பட்டறிவையும் கவிதை வடிவில் தருதல் எளிதன்று. இதற்குத் தேவையான பின்னணி, உருக்காட்சிகள், குறியீடுகள் ஆகியவற்றை ஒவ்வொரு முறையும் புலவன் தேடி அலைவானேயாயின் தகுந்த சொற்களைத் தெரிந்தெடுப்பதில் அவன் முழுக்கவனம் செலுத்தவியலாமல் போகும். தலை சிறந்த கிரேக்க நாடக ஆசிரியர்களான ஈஸ்கிலசு, சாபகிளிசு, யூரிபிடிசு ஆகியோர் முன்னர் வழக்கிலிருந்த, சிறந்த கருக்களையுடைய கதைகளையே நாடகமாக்கியபொழுது இத்தகைய நன்மையைப் பெற்றனர். தங்களது முழு ஆற்றல்களையும் பொருட்செறிவுடைய உரையாடலை அமைப்பதில் செலவிட்டனர். கவிஞனுக்கும் கவிதையைப்படிப்போனுக்கும் பொதுவான, அவர்கள் இருவரும் ஏற்றுக்கொண்ட முதல், உரி, கருப்பொருள்கள் இருப்பின் விரும்பிய உணர்வைக் கவிஞன் படைத்தலும், படிப்போன் அதையெளிதில் தனதாக்கித் துய்த்தலும் எளிதாகின்றன. கவிஞன் எழுப்பவிரும்பும் உணர்வைச் சூழல் வழியும் படிப்போன் புரிந்துகொள்கிறான். தகுந்த சூழலும் பின்னணியும் இல்லாத பொழுதுதான் எடுத்துக்கொண்ட உணர்வைப் புலப்படுத்தும் முயற்சியில் புலவன் தோல்வியுறுகின்றான். இதையே சேக்ஸ்பியரின் நாடகமான ஆம்லெட்டின் (*Hamlet*) தோல்விக்குக் காரணமாக எலியட் கூறுவர். அவர் குறிப்பிடும் Objective correlative என்ற கோட்பாடு இங்கு எண்ணுதற்குரியது.[9] குறிப்பிட்ட சிலபொருள்கள், ஒரு சூழ்நிலை அல்லது ஒரு சில நிகழ்ச்சிகள் கவிஞனால்ஒருகுறிப்பிட்ட உணர்வை வெளிப்படுத்தச் சூத்திரமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுதலையே இத் தொடரால் எலியட் குறிப்பிடுகின்றார். திணை, துறை பாகுபாடுகளும், அவற்றிற்குரிய முதல், உரி, கருப்பொருள்களும் இத்தகைய Objective correlatives ஆகப் புலவர்கள் பயன்படுத்திக்கொள்ள ஏற்பட்டவையே. முன்னரே வரம்பு செய்யப்பட்டுத் தயாராகவுள்ள இவற்றில் தனக்குத் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு புலவன் தான் கவிதையாக்க விரும்பும் உணர்வுக்குச் சொல் வடிவம் கொடுப்பதில் மட்டுமே நாட்டம் செலுத்துதல் போதும். படிப்போனும் இம்மரபுகள் அறிந்தோனாதலால் அவ்வுணர்வை எளிதில் தெரிந்துகொண்டு கவிதையை அனுபவிப்பது எளிதாகின்றது. தவறான Objective correlative காரணமாகக் கவிதை தோல்வியடைந்தது என்ற நிலை ஏற்பட இங்கு வழி இல்லை.

நிலம், பெரும்பொழுது, சிறுபொழுது ஆகியவற்றைக் கூறுவதன் மூலம் இயற்கை

வண்ணனைக்கும் வழிவகுக்கப்பட்டது. உள்ளுறை உவமம், ஏனை உவமம் ஆகியவற்றில் அவ்வந்நிலத்தின் கருப்பொருள்களே பயன்படுத்தப்படுவதன் சிறப்பு நோக்கற்பாலது. ஒரு கவிதையில் வரும் ஒவ்வொரு சொல்லும் கவிதையின் முழுப்பொருளுக்குத் துணை செய்வதாய் அமையவேண்டுமெனக் கூறும் 'நோக்கு' எனும் தொல்காப்பியரின் கோட்பாடும் இதனோடு சேர்த்து ஆராய்தற்குரியது. இவ்விரண்டு அடிப்படைகளும் ஒவ்வொரு கவிதையையும் ஓர் உயிரோட்டமுள்ள முழுப்பொருளாகத் தொல்காப்பியர் கருதினார் என்பதை ஐயமறத் தெளிவாக்குகின்றன. மேலைநாட்டில் கோலரிட்சும் அவரைப் பின்பற்றி இருபதாம் நூற்றாண்டின் புதுத்திறனாய்வாளர்களும் (the New Critics) ஒரு கவிதையின் பொருள், நடை, சொற்கள், அணிகள் ஆகியவை ஒன்றோடொன்று உயிர்த்தொடர்புடையனவாய், கவிதையின் முழுத்தாக்கத்திற்குத் துணை செய்வனவாய் அமைய வேண்டும் என்று கூறுவர்[10]. ஒருகவிதையின் பல கூறுகள் ஒரு மாலையில் அருகருகு வைத்துத் தொடுக்கப்பட்டுள்ள பூக்களைப் போல் அல்லாது ஒரு வளரும் செடியில் உள்ள பூக்கள், தண்டு, இலை, வேர்களோடு உயிர்த் தொடர்பு கொண்டிருப்பதைப் போன்று ஒன்றையொன்று சார்ந்தவையாய் அமைதல் வேண்டும். கோலரிட்சு. ''ஒரு முழுக்கவிதை அளிக்கும் இன்பம் அதன் பல கூறுகள் அளிக்கும் இன்பத்தோடு பொருந்தியதாய் இருத்தல் வேண்டும்'' (*A poem proposes to itself such delight from the whole as is compatible with a distinct gratification from each component part*)[11] என்றும், ''படிப்போன் கவிதையின் முடிவுதரும் இன்பத்தை நோக்கிச் செல்லும் வழியிலும் அதற்கேற்ற இன்பம் துய்க்கும் பாங்கில் கவிதை அமைய வேண்டும்'' (*The reader should be carried forward, not merely or chiefly by the mechanical impulse of curiosity*[12] .. ..) என்றும் கூறும் கூற்றுகள் தொல்காப்பியரின் நோக்கு எனும் கோட்பாட்டோடு ஒப்பிடற்பாலன.

தொல்காப்பியர் அகப் பாடல்களுக்கு இயற்கையைப் பின்னணியாக்கும் சிறப்பு குறிப்பிடத்தக்கது. இயற்கையழகைத் துய்க்கும் ஆற்றல், முதிர்ந்த பண்பாட்டின் சின்னமாகுமென்று வரலாற்றுப் பேரறிஞர்கள் கூறுவர். ஆர்னல்டு டாயின்பீ குறிப்பிடும் இருபத்தாறு நாகரிகங்களில் மூன்று நாகரிகங்களே பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே இயற்கையழகில் ஈடுபடும் முதிர்ச்சிபெற்றிருந்தன. மேலைப் பண்பாடும் சீனப்பண்பாடும் இந்தியப் பண்பாடுமே இப்பீடு எய்தியவை[13]. குழந்தைகளும், நாகரிகமற்றபழங்குடியினரும் இயற்கையழகால் கவரப்படார். மேலை நாகரிகம் இயற்கையைப் பாராட்டத் தொடங்கியது பதினேழாம் நூற்றாண்டின் இடையில்தான். சீனர்கள் அதன்சிறப்பை 1800 ஆண்டுகளுக்கு முன்னே உணர்ந்தனர். தமிழ் நாகரிகம் தொல்காப்பியர் காலத்திற்கும் முன்னமேயே இயற்கையைப் பாராட்டவும் அதனைக் கவிதையில் சீரிய முறையில் இணைக்கவும் கற்றிருந்தது.

அகப்பாடல்களில் முருகியல் உணர்வுக்கு முதலிடம்தந்த தொல்காப்பியர் அறமுணர்த்தலுக்குப் புறப்பாடல்களில் ஒரு பகுதி ஒதுக்கப் பட்டிருத்தலைச் சுட்டுகிறார். ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி எனும் நால் வகைப்படும் பாக்களும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று முதற் பொருட்கும் உரியனவாகவரும் என்றும், மேற்கூறிய நான்கு பாவும் வாழ்த்தியற்பொருளினும் வரும் என்றும், இவ்வாழ்த்து புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து என்று இரு வகைப்படுமென்றும் கூறி அவையடக்கியல், செவியறிவுறூஉ என்பன பற்றியும் பேசுகிறார்.[14] ''பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண் அவிதல் கடனெனச் செவியுறுத்தன்றே'' என்பது செவியறிவுறூஉ பற்றிய நூற்பாவாகும். ''ஒருவருக்குக் கேள்வியறிவு படுத்து அவரைவாழ்த்துதல்'' செவியறிவுறூஉ என்பர் நச்சர். ''பெரியோர் நடுவில் வெள்குதலின்றித் தாழ்ந்து ஒழுகுதல் கடன் எனச்

செவியறிவுறுத்தல் செவியுறை அல்லது செவியறிவுறூஉ ஆகும்'' என்று விளக்குவர் இளம்பூரணர். அடிவரையில்லாதனவென்று தொல்காப்பியர் குறிப்பிடும் ஆறனுள் முதுமொழி, மந்திரம், குறிப்பு அல்லது அங்கதம் ஆகிய மூன்றும் அறமுணர்த்தும் தன்மையவாம்.

அகப்பாடல்கள் அனைத்தும் போர்க்களம் பற்றிய பல புறப்பாடல்களும் கவிதையின்பத்தையே முதற் குறிக்கோளாகக் கொண்டவை என்பதும், நிலையாமைபற்றிய பாடல்களும், செவியறிவுறூஉ முதுமொழி, மந்திரம், குறிப்பு போன்றனவும் அறமுணர்த்தும் நோக்குடையன வென்பதும் இவை பற்றிய தொல்காப்பியரது விளக்கங்களால் தெளிவாகும்.

கவிதையின் அளவுபற்றிய தொல்காப்பியரது கருத்துக்கள் மேலைநாட்டுக் கவிஞர்களின் கருத்துக்களோடு ஒப்பிடத்தக்கவை. ஆங்கிலத்தில் நீண்ட காப்பியங்கள் எழுதப்பட்ட போதிலும் குறைந்த அடிகளையுடைய கவிதைகளே முற்றும் கவிதைத் தன்மையுடையனவாய் இருக்கமுடியும் என்ற கருத்தை மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ''எந்த அளவுடைய கவிதையும் முழுவதும் கவிதையாக இருக்கமுடியாது; இருக்கவேண்டிய இன்றியமையாமையும் இல்லை'' (*A poem of any length neither can be, nor ought to be all poetry*)15 என்கிறார் கோலரிட்சு. ''நீண்ட கவிதையென்ற தொடரே முரண்பாடு உடையதாகும்'' (*A long poem is a flat con-dradiction in terms*)16 என்கிறார் போ. கவிதையெழுதத் தொடங்கும் முன்னமேயே உந்து சக்தியானது தளர்வுறத் தொடங்குகின்றது என்கிறார் செல்லி.17 தொல்காப்பியர் நீண்டகாப்பியங்கள் பற்றிப் பேசவில்லையென்பது நோக்கற்பாலது. ஆசிரியப்பாவிற்கு சிற்றெல்லை 3 அடி; பேரெல்லை 1000 அடி. வஞ்சியும் ஆசிரிய நடைத்தே. வெண்பாவில் குறுவெண்பாட்டு 7 சீர்கொண்ட 2 அடிகளை உடையது. நெடுவெண்பாட்டிற்குப் பேர் எல்லை 12 அடி. கலிப்பாவில் அம்போதரங்க ஒரு போகுக்குச் சிறுமை 30 அடி; பெருமை 60 அடி. பரிபாடலுக்குச் சிறுமை 25 அடி பெருமை 400 அடி. இதிலிருந்து தொல்காப்பியர் ஆயிரம் அடிகளுக்குக் குறைவான பாடல்களைப்பற்றியே பேசுகிறார் என்பது தேற்றம். நீண்ட கவிதையெழுதுவோன் இடையிடையே கவிதைத் தன்மையற்ற உரைநடை வரிகளைப் பொருத்தமாகச் சேர்த்தல் தவிர்க்க முடியாதது என்று கோலரிட்சு கூறுகிறார். தொல்காப்பியர் உரை என்ற நிலம் பற்றிப் பேசும்பொழுது ''பாட்டிடை வைத்த குறிப்பு, பாவின்று எழுந்த கிளவி'' ஆகிய இரண்டையும் குறிக்கின்றார். உரையாசிரியர்களும் தகடூர் யாத்திரையைச் சான்றாகக் காட்டுகிறார்கள்.

ஒரு கவிதையில் கவிஞனின் ஆளுமை (*the personality of a poet*) எந்த அளவு நிலைக்கிறது, நிலைக்கவேண்டும் என்பது பற்றியும் மேலைநாட்டார் பல கருத்துக்களைத் தந்துள்ளனர். கவிஞனின் ஆளுமைக்கே முதலிடம் என்று புனைவியலார் கூறுவர். ஆனால் செவ்வியலார் இதனைஏற்பதில்லை. கவிஞனின் ஆளுமை அடியோடு மறைக்கப்பட்ட கவிதையே உயர்ந்த கவிதை என்பது எலியட்டின் கருத்தாகும். (*The progress of an artist is a continual self-sacrifice, a continual extinction of personality*)18 கவிஞன் தனது பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு கவிதை எழுதவேண்டியிருப்பினும் அப்பட்டறிவின் நிலையற்ற—சாரமற்ற (*acci-dental crudities of the experience*) இன்றியமையாமையில்லாத கூறுகளை அறவே நீக்கவேண்டுவது அவன் கடமையாகும். இதன்மூலம் அவன் தற்சார்பற்ற தன்மையை (*total objectivity*) கவிதைக்கு அளிக்கமுடிந்தால் அது நெடுங்காலம் உயிருள்ள கவிதையாக வாழ வாய்ப்புண்டு. தொல்காப்பியர் அகப்புறப்பாடல்கள் பற்றிப் பேசும்பொழுது கவிஞனின் ஆளுமைக்கு இடமே வைக்க

வில்லை என்பது நோக்கற்பாலது. அகமானா லும் எவ்வெந்நிகழ்ச்சிகள் பாடலுக்குரியவை யென்று அவரே திணை, துறை பாகுபாடு களின் மூலம் பட்டியலிட்டுத்தந்துவிடுகிறார். பெரும்பாலும் தொல்காப்பிய நெறிபற்றி யெழுந்த சங்கப்பாடல்களில் ஒருசில தவிர ஏனையவற்றிலெல்லாம் தற் சார்பற்ற தன்மை எளிதில் கைவரப் பெற்றிருத்தலைக் காணலாம். தனிமனிதர் என்ற முறையில் இப்புலவர்களின் பண்புகள் எவையென்று இக்கவிதைகளின்மூலம் நாம் அறிவதற்கு வழியேயில்லை. பல புலவர்கள் தம் இயற் பெயர்கூடத் தெரியாதவாறு தம்மை மறைத்துக்கொண்டுவிட்டார்கள் என்பது வியப்பிற்குரியது. அவர்கள் செம்புலப் பெய்ந் நீரராகவும் தேய்புரிப் பழங்கயிற்றினராக வும் தொடித்தலை விழுத்தண்டினராக வும் விளங்கி வருதல் காலம் அவர்கள்கவிதை யின் தற்சார்பற்ற தன்மையால் பெற்ற வெற்றிக்கு அளித்த பரிசேயாகும். ஒளவை யின் பாடல்களில் ஒளவைக்கும் அதியமானுக் கும் காதல் இருந்ததாகக் காண்பது தொல் காப்பிய மரபிற்குப் புறம்பானதாகும்.

தொல்காப்பியர் கூறும் அகத்திணைப் பாடல்களைப் பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் ஆங்கிலத்தில்எழுதப்பட்ட நாடகத் தனிப்பேச்சு (Dramatic mono-logues), நாடகஇசைப்பாடல்கள் (Dramatic lyrics) என்னும் நாடக முன்னிலைப் பாடல் களோடு ஒப்பிட்டுப் பலர் பேசியுள்ளனர். அவர் ஒவ்வொரு கவிதையையும் நாடக மாகவே காண்கின்றார். அதற்குரிய இடம், காலம், பாத்திரங்கள், நிகழ்ச்சிகள், கரு ஆகியவற்றையும் திட்டவட்டமாக வரை யறுத்துத் தந்துள்ளார். கருத்துக்களைக் கருத்துக்களாகவே தராமல் நாடக உத்தி களைக்கையாண்டு ஒரு முக்கிய பாத்திரத்தின் பேச்சாகத்தரும் பொழுது அதன் தாக்கம் பல மடங்கு வலுப்பெறுகிறது. பத்தொன் பதாம்நூற்றாண்டில் ராபர்ட்பிரௌனிங்கும் இருபதாம் நூற்றாண்டில் பவுண்டு (Ezra Pound), எலியட் (T. S. Eliot) போன்றோரும் இத்தகைய கவிதைகள் பலவற்றைப் பாடி யுள்ளனர். இது 20-ஆம் நூற்றாண்டின் மிக இன்றியமையாத பாவகையாகக் கருதப் படுகிறது. எலியட்டின் நாடக முன்னிலைப் பாக்களைத் திறனாய்வு செய்த கென்னர் (Hugh Kenner) என்பார் எலியட்டின் கவிதை களில் எப். எச். பிராட்லி (F. H. Bradley) யின் தாக்கத்தைப் பற்றிப்பேசுகிறார்.[19] இத்தத்துவ வல்லுநர் தமது "தோற்றமும் உண்மையும்" (Appearance and Reality) என்ற நூலில் உடனடிப் பட்டறிவு (Immediate experience) என்ற கோட் பாட்டைக்குறிக்கின்றார், இக்கோட்பாட்டின் தாக்கமே எலியட்டின் கவிதைகளைப் பிரௌனிங்கின் கவிதைகளிலிருந்து வேறு படுத்துகிறது. பிராட்லியின் கோட்பாடு கவிஞனும் வாசிப்போனும் ஒன்றுபடும் பொழுது கவிதையில் யார், எந்தச் சூழலில் பேசுகிறார் என்பன போன்ற விளக்கங்கள் தேவையே இல்லை என்பதையும், பேசு வோனின் ஊரும் பேரும் தெரியாத வழியும் படிப்போன் கவிஞனின் குரலோடு தன்னை இணைத்துக் கொள்ளுதல் எளிதென்பதையும் எலியட்டுக்குத் தெளிவாக்கிற்று. பிரௌனிங் கின் 'Andrea del Sarto' என்ற கவிதையை யெடுத்துக் கொண்டோமானால் அது ஆண்டிரியா என்பவன் பதினான்காம் நூற் றாண்டில் இத்தாலியில் வாழ்ந்த ஓர்ஓவியன். இரவுக் காவலர்களால் கைப்பற்றப் பட்ட பொழுதுஅவன் சொல்லியகருத்துகளைஅடிப் படையாகக் கொண்டது. இக்கதாபாத்திரம் பற்றிய சில உண்மைகளும் அவன் பேசிய சூழலும் நமக்குக் கவிதையின் மூலம் தெரிய வருகின்றன. ஆனால் எலியட் எழுதிய 'ஆல்பிரட் புரூப்ராக்கின் காதல் கவிதை' (The love Song of J. Alfred Prufrock) என்ற பாடலிலிருந்து புரூப்ராக் என்பவன் யாவன், எக்காலத்தில் எந்நாட்டில் வாழ்ந்தவன், அவனது பழக்க வழக்கங்கள் எத்தகையவை என்பன பற்றி நமக்கு ஏதும் சொல்லப்பட வில்லை. இருப்பினும் நாம் புரூப்ராக்கோடு ஒன்றித்துப்போகமுடிகிறது. தொல்காப்பியர் காட்டும் அகத்திணை மரபில் இத்தகைய

கவிதைகளே குறிக்கப்படுகின்றன என்பது நோக்கற்பாலது. தலைவன், தலைவி, தோழி ஆகிய எந்தப் பாத்திரத்தின் பெயரும் கூடச் சுட்டப்படுவதில்லை. உரிப் பொருளோடு தொடர்புடைய நிலமும், பொழுதும், கருப் பொருள்களும் மரபுப்படி கவிதையின் மூலம் பெறப்படுகின்றனவேயன்றிப் பேசும் பாத்திரத்தின் ஊர், வயது, நிறம், பழக்கவழக்கங்கள் ஆகிய வேண்டாத விளக்கங்களெல்லாம் ஒதுக்கப்படுகின்றன. இவையெல்லாம் ஒரு கவிதைக் குரலோடு நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளத் தேவையற்றவை யென்பதே பிராட்லி கண்டு எலியட்டால் பயன்படுத்தப் பட்ட உத்தியாகும். தொல்காப்பியர் கூறும் மரபுப்படி எழுதப்பட்டுள்ள அகத்திணைப் பாடலில் முதல் அடியிலேயே பாத்திரத்தின் பேச்சு துவங்குகிறது. பாத்திரம் பற்றிய எந்தவிதமான அறிமுகமும் இருப்பதில்லை. வழிவழியாகத் தமிழ்க்கவிஞர்கள் கையாண்ட மரபுகளும் கவிதையில் உவமைகளாகக் கையாளப்பட்டுள்ள பொருள்களும் பிற உத்திகளும் எந்த நிலத்தைச் சேர்ந்த பாத்திரம் எந்தச் சூழலில் பேசுகிறது என்ன கருத்தை வலியுறுத்துகிறது என்பதை நமக்குத் தெளிவாக்குகின்றன. காதல் வயப்பட்ட இப்பாத்திரங்களின் நுண்ணிய மனவுணர்வுகள் மட்டுமே நம் கவனத்தை ஈர்ப்பவை. அவர்களின் புறவேறுபாடுகளைக் கவிஞனும் காட்டுவதில்லை; நாமும் கவிதையையனுபவிக்க அவற்றைத் தேடுவதில்லை. தலைவர்கள் யாவரும் வீரர்கள்; தலைவியர் யாவரும் அழகியர் என்பன தவிர ஒரு குறிஞ்சிநிலத் தலைவன் மற்றொரு குறிஞ்சிநிலத் தலைவனிடமிருந்து புறக்கூறுகளில் எவ்வாறு வேறுபட்டான் என்பதில் கவிஞர்களுக்கு ஈடுபாடில்லை; நம் கவனமும் அவற்றிற்குத் திரும்புவதில்லை.

உவமைகளாகவோ, உருவகங்களாகவோ அல்லது காட்சி உருக்களாகவோ பயன்படுத்தப்படுபவையெல்லாம் நாம் அன்றாட வாழ்க்கையில் காணுகின்ற பொருள்களாக விருத்தல் சிறப்பென்றும், இல்பொருள் உவமைகள் அவ்வளவு பீடு உடையன அல்ல வென்றும், எந்தக் கருத்தையும் கருத்தாகவே கூறிவிடாது காட்சி உருவின் மூலம் மனக்கண்ணிற்கு ஓவியமாக்கித்தருதலே கவிஞனின் கடமையென்றும் மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் கருதுவர். சேக்ஸ்பியர் தமது நாடகங்களிலும் கவிதைகளிலும் இத்தகைய உவமைகளையே கையாண்டாரென்பதையும் அவரது காலத்திருந்த பல்கலைக்கழக மேதைகளான நாடகாசிரியர்கள் சிலர் இந் நுணுக்கமறியாமல் உவமைகளிலும் தமது புத்தக அறிவையே காட்ட முனைந்து சொல்லோவியங்களைத் தீட்டவியலாது தோல்வியுற்றனர் என்பதையும் சுட்டிக் காட்டுவர். சான்றாக, கரடியைத்துன்புறுத்தி மகிழ்தல் (Bear-baiting) என்னும் விளையாட்டு அக்கவிஞர்களது காலத்தே மிகவும் விளம்பரமுடைய மிகவும் விரும்பப்பட்ட விளையாட்டாக இருந்தது. இதனை சேக்ஸ்பியர் ஒருவரேகாட்சியுருவாகஅழகிய முறையில் தமது நாடகங்களில்பயன்படுத்திக் கொள்கிறார். மற்றையோர்க்கு இதன் அருமை புலப்படவில்லை. மில்டனும் ஓசைக்கே சிறப்பிடம் அளித்து, காட்சியுருக்களைப் படைப்பதில் கவனம் செலுத்தாததால் அவரது கவிதையும் குறையுடையதே என்று எலியட் சாடுகிறார்.[20] நுண்பொருளைப் பருப்பொருள்மூலம் விளக்கும் திறனற்றவரென்று செல்லியைப்பற்றி லீவிசு குறை கூறுகின்றார்.[21] மனக்கண்ணிற்கு எளிதில் புலப்படாத நடமாடும் மலையைக் காட்சியுருவமாக ஆர்னல்டு தமது கவிதையொன்றில் தரமுயல்வதை வன்மையாகக் கண்டிக்கிறார் லீவிசு. ஆனால், சங்கப்புலவர்கள் காட்சியுருக்களுக்கு அளித்த சிறப்பும் மக்கள் அன்றாட வாழ்வில் காணுகின்ற எளிய பொருள்களையே அவர்கள் உவமையாக்குகின்ற சிறப்பும் நாம் அறிந்தனவே. இதற்குத் தொல்காப்பிய மரபே காரணமாகும். உள்ளுறை உவமம், ஏனை உவமம் ஆகியவைகட் கெல்லாம் அவ்வந்நிலத்துக் கருப்பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ளலே பழந்தமிழ் மரபாகும். இல்

பொருள் உவமைகள் திருத்தக்கதேவர், கம்பர் காலத்தில்தான் பல்கிப்பெருகின. காட்சியின்மூலம் ஓவியம்படைத்தலே தொல் காப்பிய-சங்க மரபிற்குஉகந்ததாகஇருந்தது. தேவர், கம்பர் நூல்களில்தான் ஓசையின் மூலம்ஓவியம்படைத்தல் (appeal to auditory imagination) அதிகமாகக் கையாளப் பட்டது.

பக்கம்பக்கமாக ஓசைநயமுடைய சொற் களைக் கவிதைகளாக எழுதிக் குவிப்பதைக் காட்டிலும் நயமும் பொருள் ஆழமும்உடைய ஒரு காட்சியுருவைப் படைப்பதே சிறப்பு என்று எஃச்ராபவுண்டு குறிப்பிடுவார்.[2] தொல்காப்பியர் கூறும் இறைச்சியும் உள்ளுறை உவமமும் இதனை அவர் உணர்ந் திருந்தமைக்குச் சான்றுகளாகும். இன்னின் னார்தாம் உள்ளுறை உவமம் கூறுதற்கு உரியார் என்றும் அங்ஙனம் கூறும்போது யார் யார் எவ்வெப்பொருள்களை அமைத்துக் கூறவேண்டுமென்றும் வரையறுத்துள்ளமை பெருஞ்சிறப்பாகும்.

"கிழவி சொல்லின் அவளறி கிளவி
தோழிக் காயின் நிலம்பெயர்ந்
துரையாது" (27)

"தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி
நோக்கிக்
கூறுதற் குரியர் கொள்வழி யான" (33)

"கிழவோற் காயின் உரனொடு
கிளக்கும்" (28)

"கிழவோற் காயின் இடம்வரை வின்றே"
(32)

"ஏனோர்க் கெல்லாம் இடம்வரை
வின்றே" (29)

எனும் நூற்பாக்கள் எல்லாம் கவிஞன் தனக்குத் தெரிந்த பொருள்களையெல்லாம் உவமையாக்கல் கூட தவறென்பதையும் கவிதையில் பேசும்பாத்திரத்திற்குப் பொருத் தமான உவமையைக் கையாளவேண்டு மென்பதையும் சுட்டுகின்றன.

உவமையின் பயன்பற்றிப் பேசும்பொழுது "புலன் அல்லாதன புலன் ஆதலும் அலங் காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்த லும்" என்று கூறுவார் இளம்பூரணர். இதன் மொழிபெயர்ப்பே போன்று டாக்டர் சான்சன் தெளிவாக்குதல் (Illustration), அழகு செய்தல் (ornamentation) எனும் இரண்டு தொழில்களையும் உவமை செய்ய வேண்டுமென்பார். பல்வேறு வகையான உவமைகள், உருவகங்கள், உருக்கள், படிமங் கள் ஆகியவற்றை ஆராய்ந்த மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் அவை ஐம்பொறிகளில் ஒன்றையோ பலவற்றையோ தாக்குவனவாக அமைமயின் சிறப்பென்பார். இவையேற்படுத் தும் உள்ளக்கிளர்ச்சிகள் கவிதைத் துய்ப்பின் இன்றியமையாக் கூறாகும். உருக்களை ஐம்புலன்களோடு தொடர்பு படுத்தியே மேலைத் திறனாய்வாளர்கள் பேசுகின்றனர். ஆனால், உள்ளக் கிளர்ச்சிகளை உவமைகள், உருக்கள் இன்றியும் கவிதை தோற்றுவித்தல் கூடுமாதலின் அவற்றைத் தனியே தொல் காப்பியர் மெய்ப்பாட்டியலில் விரிவாகப் பேசுகிறார். "மெய்ப்பாடென்பது பொருட் பாடு: அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப் படுவதோர் ஆற்றலின் வெளிப்படுதல்" என்பர் பேராசிரியர். பொருட்புலப்பாடு சிறப்பாக அமையும்போது ஏற்படும் உள்ள நெகிழ்வுகளையே மெய்ப்பாட்டியலில் தொல் காப்பியர் வகைப்படுத்துகிறார்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களும் புதுத்திறனாய்வாளர்களும் ஒரு கவிதை, நுண்மையும் ஆழமும் வெண்மையற்ற வளப்பமும் (subtlety, depth and complexity) உடையதாக இருக்கவேண்டும் என்பர். இச் சிறப்புக்களைப் பெறாத எட்வர்டு, சார்சு காலத்துக்கவிதைகளைக் (Edwardian and Georgian Poetry) குறைகூறிப் புறக்கணித்

த்னர். சொல்லவந்தபொருளைநேரிடையாக வெளிப்படையாகச் சொல்லாமல் ஆழ்ந்து நோக்கப் பல பொருள்களைத் (Layer of meaning) தரவல்லதையே உயரிய கவிதை யென மதிப்பிட்டனர். இதனை poetry of indirection என்பர். எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல், அடிக்கு அடி, அலங் கரிக்கப்பட்ட நுண்ணியவேலைப்பாடமைந்த சிற்பம் போன்றதாகவொரு கவிதை அமைய வேண்டுமென எதிர்பார்த்தனர். ஒவ்வொரு சங்கநூற்கவிதையும் "வைகல் எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த கால்" போன்றமைந்திருத்தல் கண்கூடு. தொழில் நுணுக்கம் அமையப்பெற்ற கலனோடு (The well-wrought urn) கவிதையை ஒப்பிடுவார் கிலியான்த் புரூக்சு. தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகள் சிலவற்றை ஆழ்ந்து பார்க்கும்பொழுது அவரும் கவிதையைப் பற்றி இத்தகைய எண்ணங்களே கொண்டி ருந்தார் என்பது புலப்படும். 'நோக்கு'என்ற உறுப்பு ஒவ்வொரு மாத்திரையும் சொல்லும் அடியும் பொருளுடையதாய், கவிதையின் முழுப்பொருளுக்குத் துணை செய்வதாய் அமையவேண்டும் என்பதை வலியுறுத்து கிறது. 'பயன்' என்ற உறுப்பைப்பற்றி அவர்

"இதுநனி பயக்கும் இதன்மா றென்னும்
தொகுநிலைக் கிளவி பயனெனப்படுமே",

என்பார். யாதானும் ஒரு பொருளைக் கூறும் பொழுது 'இதனைப்பயக்கும்' என விரித்துக் கூறாது, முற்கூறிய சொல்லினாலேயே தொகுத்துக் கூறும் உறுப்பு 'பயன்' எனப் படும். இது சொல்லவந்த கருத்தை மறை முகமாக நயம்படக் கூறுவதையே குறிக் கின்றது. 'எச்சம்' என்ற உறுப்பும் குறிப்பால் பொருள் உணர்த்துவதன் சிறப்பையே உணர்த்துகிறது.

"சொல்லொடுங் குறிப்பொடும் முடிவு
கொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சம் ஆகும்"

என்பது நூற்பா. ஒரு தொடரில் ஒரு சொல் லானது முன்னோ, பின்னோ எஞ்சி நின்று பொருள் தருவது சொல்லெச்சம் எனலாம். தங்குறிப்பிற்பற்றிய எச்சத்தானே முடிவு கூறப்படுவது குறிப்பெச்சம் எனலாம். சொல் லெச்சம் குறிப்பெச்சங்களுக்குத் தொல் காப்பிய உரையாசிரியர்கள் பல்வேறு வகை யான உரைகள் கூறி விளக்கினும் மறைமுகக் கவிதையையே இவை சுட்டுகின்றன என்பதில் ஐயமின்று.

செய்யுளில் எத்தகைய மொழி கையாளப் படவேண்டும் என்பதும் கவிதைக்கோட்பாடு களில் முக்கியமானதொன்றாகும். பதினெட் டாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் காப்பியம், துன்பியல் நாடகம் போன்ற உயர் இலக்கிய வகைகளில் குறிப்பிட்ட ஒரு மொழியையே கையாள வேண்டுமென்றும் பேச்சுவழக்கி லுள்ள பொது மொழியைப் பயன்படுத்துதல் ஆகாதென்றும் கருதினர். அவர்கள் உயர் கவிதைக்கென்று ஒதுக்கிய மொழி கவிதை மொழி (poetic diction) என்று குறிக்கப் பட்டது, ஆனால் பத்தொன்பதாம் நூற் றாண்டில் வேர்ட்ஸ்வொர்த் போன்ற கலை ஞர்கள் இக்கருத்தை மறுத்து, கவிதையில் எச்சொல்லையும் பொருத்தமுறக் கையாளு தலில் தவறில்லை என்றும் உரிய முறையில் உரியஇடத்தில் பெய்யப்பட்ட எச்சொல்லும் உயிர்பெறும் என்றும்விளக்கினர். இதனையே இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களும் திற னாய்வாளர்களும் ஏற்றுக் கொண்டனர். பேச்சு வழக்குச் சொற்களுக்கும் கவிதையில் இடமுண்டு எனக்காட்டினர். ஐ.ஏ.ரிச்சர்ட்சு என்பார் நல்ல கவிதையில் ஏற்றமுறையில் அமைந்த சொற்கள் ஒன்றுக்கொன்று உயிர் ஈந்து கவித்துவம் பெறுவதைப் பேசுகிறார். தொல்காப்பியர் செய்யுளுக்குரிய சொற்கள் இவையென்று பிரிக்கவில்லை. சொல்லதிகார எச்சவியலில்

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல்
வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

என்று கூறுகிறார். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற அனைத்தும் செய்யுளைக் கூட்டுதற்குரிய சொற்கள் என்ற கருத்தை வலியுறுத்துகிறார். திரிசொற்களும் திசைச் சொற்களும் தமிழில் கலந்த வட சொற்களும்கூடக் கவிதையில் உரிய இடத்தில் பயன்படுத்தப்படலாம் என்ற தொல் காப்பியரது கூற்று தனிச்சொல் எதற்கும் உயிரோ கவித்துவமோ சிறப்பாற்றலோ இல்லை; அது தொடரிலே பொருத்தமுற அமைக்கப்படும்பொழுதே இவற்றைப் பெறு கிறதென்பதை அவர் உணர்ந்திருந்தார் என்பதைப் புலப்படுத்துகிறது. புலன் என்னும் வனப்புப்பற்றிப் பேசும்பொழுதும்,

> "தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
> தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
> புலனென மொழிப புலன் உணர்ந்தோரே"

எனக் கூறுகிறார். தெரிந்த மொழியென்பது வழக்குச் சொல்லைக் குறிக்கும். பேராசிரியர் இதனைச் சேரிமொழியென்றே கூறுவார். இப்பொழுது எழுதப்படும் ஆங்கிலக் கவிதை கள் சேரிமொழியைப் பயன்படுத்தத் தயங்கு வதில்லையென்பது யாவரும் அறிந்ததே.

பல்வேறுபட்ட கவிதைக் கோட்பாடுகளுள் சிறந்தவையென்று காலத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையும் பெருமையுடையவை யென்று இருபதாம் நூற்றாண்டு மேலை நாட்டுத் திறனாய்வாளர்களால் போற்றப் படுபவையும் தொல்காப்பியர் கூறும் கவிதை நெறிகளோடு பெரும்பாலும் ஒத்திருக்கின் றன என்று சொல்லுவதில் உயர்வு நவிற்சி யேதும் இருப்பதாகத் தெரியவில்லை. இந் நெறிகளில் பலவற்றைப் பின்பற்றி எழுதப் பட்ட சங்கச் சான்றோர்களின் கவிதை கள் இன்றும் உயிரோட்டமுடையனவாய் அழியாத் தன்மையும் புதுமையும் பெற்று இலங்குவதுஅழியாப் பெருஞ்சான்றுகளாகும்.

அடிக் குறிப்புகள்:

1. இராகவையங்கார், மு, தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, மதுரைத்தமிழ்ச் சங்கம்.
2. *Manickam, V. Sp*, The Tamil Concept of Love, *Tirunelveli: The South India Saiva Siddhanta Works Publishing Society, 1962.*
3. *Kailasapathy, K.*, Tamil Heroic Poetry *Oxford, 1968.*
4. *Periakaruppan, Rm*, Tradition and Talent in Cankam Poetry, *Madurai: Madurai Publishing House, 1976.*
5. *Meenakshisundaram, T P, "The Theory of Poetry in Tolkappiyam" in* Prof. T. P. Meenakshisundaram Sixty - First Birthday Commemoration Volume. *Annamalainagar: Annamalai University, January 1961.*
6. *Eliot, T. S., "The Function of Criticism in* Selected Essays, *Lonodon; Faber and Faber Limited, 1923.*
7. கோலரிட்ஜ் தமது *"Shakespeare's Judgement Equal to His Genius"* என்ற கட்டுரையில் உயர்ந்த கவிஞனின் தகுதி களை இம்முறையில் விவரித்தலைக் காணலாம். இக்கட்டுரை *Critical Theory Since Plato, ed. Hazard Adams, New york: Harcourt Brace Jovanovich Inc.* என்ற தொகுதியில் இடம் பெற்று உள்ளது.
8. கலையின் பயன்பற்றிய விவாதச் சுருக் கத்தை *Wimsatt Jr., Cleanth Brooks* எழுதிய *Literary Criticism: A Short History* என்ற நூலில் *Art for Art's Sake* என்ற அத்தியாயத்தில் காணலாம்.

9. Eliot, T. S. "Hamlet and His Problems' in Critical Theory Since Plato, ed, Hazard Adams, New york : Harcourt Brace Jovanovich, Inc., 1971

10. Coleridge, S. T., "Biographia Literaria" in Critical Theory Since Plato, P. 471.

11. Coleridge, S. T. "Biographia Literaria" in Critical Theory Since Plato, P. 471.

12. Coleridge, S. T., ' Biographia Literaria" in Critical Theory Since Plato, P. 471.

13. Frodsham. J. D., 'Landscape Poetry in China and Europe' Comparative Literature vol XIX, Number 3, Summer 1967, p. 193.

14. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூற்பாக்கள் 108, 109, 110

15. Coleridge, S.T. "Biographia Literaria" in Critical Theory Since Plato, p. 471.

16. Poe, Edgar Allan, The poetic princi-ple" in Critical Theory Since Plato p. 564.

17. Shelly, P. B., "A Defence of poetry" In Critical Theory Since Plato" p.511. 'but when composition begins, Inspi-ration is already on the decline' என்பது ஷெல்லியின் கூற்று.

18. Eliot, T. S., "Tradition and the Indi-vidual Talent" Critical Theory since Plato, p. 785.

19. Kenner, Hugh, "Bradley" in T.S Eliot A Collection of Critical Essays, Engle-wood, Cliffs, N. J : Prentice - Hall, Inc., 1962.

20. மில்டன்பற்றிய எலியட்டின் மதிப்பீட்டை அவரது On poetry and poets என்ற கட்டுரைத் தொகுப்பில் 'Milton I', 'Milton II' என்ற இரண்டு கட்டுரைகளிலும் காணலாம்.

21. காட்சிஉருக்களின் முக்கியத்துவம்பற்றிய லீவிஸின் கருத்துக்களை அவரது "Keats" "Literery Criticism and Philosophy" போன்ற கட்டுரைகளில் காணலாம்.

22. பவுண்டின் கவிதைபற்றிய கருத்துக்களை Faber and Faber வெளியிட்டுள்ள Literary Essays of Ezra Pound என்ற நூலின் கட்டுரைகளில் காணலாம்.

தமிழில் மட்டுமன்று; உலகில் நிலவும் பல மொழிகளில் பாராட்டப்பெறும் எல்லா இலக்கணங்களிலும் இல்லாத இயல் வளமும் எழிலும் பயனும் பண்பும் வாய்ந்தது தொல்காப்பியம். வேறெந்த மொழி நூலுக்கும் இல்லாத பழமையும் பெருமையும் அழகும் அருமையும் அமைந்தது.

— ச. சோமசுந்தர பாரதியார்
(கலைக் களஞ்சியம் :7 :217)

பொருளியலும் ஒரு புதிய சமுதாய அமைப்பும்
[Economics and a New Social Order]

கே. இராசஇரத்தினம்
தமிழாக்கம் : நேன்சி டேவிட்

முன்னுரை

சமுதாயத்தின் இயல்பையும் அமைப்பு முறையையும்நிர்ணயிப்பதில், சமூக அறிவியல்கள் யாவற்றுள்ளும், திறன்படைத்த கருவியாகப் பொருளியல் விளங்குகிறது. வரலாறு, அரசியல், சமூக இயல் போன்ற பிற சமூக அறிவியல்களுக்குத் தேவையான கற்றுணரும் கருத்துக்களையும், ஆய்வு முறையையும் அளிப்பது பொருளியலேயாகும். அரசியல் அறிவியலாலும், சமுதாயத்தின் இயல்புகளை விளக்க முடியும் என்பது உண்மை. ஆனால், அத்தகைய விளக்கத்திலும் கூட, பொருளியலே அதன் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. சமுதாயத்தின் பழைய அல்லது புதிய அமைப்பைத் தீர்மானிப்பதில் பொருளியல் இன்றியமையாத பங்கேற்கிறது என்பதை இந்நாள் நமக்கு உணர்த்துவது போல் வரலாறு எக்காலத்திலும் உணர்த்தவில்லை.

சமுதாயத்தின் வளர்ச்சி அல்லது பரிணாமம், சமுதாயத்தின்விளைச்சல்முறை- அதைச் சார்ந்த தொழில்நுணுக்கம்-என்ற அச்சாணியை மையமாகக் கொண்டுதான் சுற்றிச் சுழல்கிறது. இதை நாம் ஒரு வேளாண்மைச் சமுதாயம் எப்படித் தொழிற் சமுதாயமாக மாறுகிறது என்பதன் மூலம் அறியலாம். பொருளியல் கருத்துக்களும் அரசியல் கருத்துக்களும் ஒன்றாக இணைந்து செல்லக் கூடியவை. முதலாளித்துவம் (Capitalism) என்ற கருத்துப் படிவம் குடியாட்சி என்ற அரசியல் அமைப்புடன் இணைந்து செல்கிறது. அதே போல் சமதருமம்(Socialism) ஒருநாட்டின்பொருளியல் அரசியல் அமைப்புக்களை ஒருமைப்படுத்துகிறது. ஆகவே, புதிய ஒரு சமுதாய அமைப்பின் அறைகூவல்களைப் பொருளியல் நோக்கில் விளக்குவது சாலச்சிறந்தது.

நெருக்கடியிற் பன்னாட்டுப் பொருளியல்

இன்றைய சமுதாயத்தின் உண்மை நிலையை உணரவேண்டுமானால் நாம் குறிப்பிட்ட ஓர் இடத்திலிருந்து துவங்க வேண்டும். உலகச் சமுதாயமும் அதில் பொருளியலின் பங்கும் என்ற கட்டத்திலிருந்துஎன்ஆய்வைத் துவக்கவிரும்புகிறேன்.

நோக்கங்கள் எவையாக இருப்பினும், விளைச்சல், பங்கீடு என்பவைகளுடன் இணைந்த புதினத்தொழில்நுணுக்கம்உலகை ஒன்றாகக்கூட்டி இணைத்துள்ளது. தொழிற் புரட்சியும், புதிய கடல் வழிகளின் கண்டுபிடிப்பும், புதிய அங்காடிகளும், தொழில் மயமாக்கப்பட்ட புதிய நாடுகளின் குடியேற்றமும் முதலாளித்துவம் அல்லது தனியுடைமை என்ற பொருளியல் அமைப்பிற்கு மூல காரணங்களாக விளங்கின. ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டு காலமாக இந்த முதலாளித்துவம் தன் பிடியில் உலக விளைச்சலையும் வாணிபத்தையும் நிலைப்படுத்தி வருகிறது.

இன்று உலகப் பொருளியலின் அடிப்படையே முதலாளித்துவமாக இருக்கிறது. ஏனெனில் இன்றைய உலகப் பொருளியல் முதலாளித்துவத்தின் விளைபொருளாக உள்ளது.

இன்றைய உலகப் பொருளியல் நிலையைக் காண்போம். உலக நாடுகள் வறிய, செல்வ நாடுகள் என இருவகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. வறியவர்களாலும் செல்வர் களாலும் ஆக்கப்பட்ட உலகம் பொருளியல் நெருக்கடியில் இன்று சிக்குண்டு கிடக்கிறது.

ஐக்கிய நாட்டு அவையின் வணிக வளர்ச்சி பற்றிய மாநாட்டின்கோட்பாட்டுக்கட்டுரை இவ்வாறு கூறுகிறது:

உலகப் பொருளியல் முடிவில்லாத ஆழ்ந்த நெருக்கடியில் மூழ்கி அமிழ்ந்து கிடக் கிறது. இந்த நிலை உலக நாடுகள் எல்லா வற்றினதும் எதிர்காலப் பொருளியலை அச் சுறுத்துகிறது, அது மட்டுமன்றி உலக வாணிபம், நிதி, நாணயமுறை யாவற் றையும் இக்கட்டுக்குள்ளாக்கி, வாணிபத்தில் ஒரு போரின் கோரக் காட்சியையும், நாணய முறையில் மதிப்புக் குறைப்பையும், நிதி முறையில் ஒரு வீழ்ச்சியையும் எழுப்பி யுள்ளது. தொழில்மயமான குறிப்பிடத்தக்க நாடுகளில் பொருளியலை முன்னேற்றிக் கொள்ளும் வாய்ப்புக்களின் அறிகுறி தோன்றினாலும், அடித்தளத்தில் நிலை கொண்டுள்ள சீர்கேடுகளைக் களைந்தெறிய இம் முன்னேற்றங்களுக்கு அதிகக் காலம் ஆகும்.

கீழே காணும் அட்டவணை, வளர்ச்சியுற்ற அங்காடிசார் பொருளியலின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

அட்டவணையில், வளர்ச்சியுற்ற அங்காடி சார் பொருளியலின் பண்டங்களின் விலை, பண வீக்கம், இறக்குமதிகளின் தேவை, வேலையின்மை இவைகளைக் காட்டும் குறி யீடுகள் வீதாசாரத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட காலமாகிய 1961-82க்கு கொடுக்கப் பட்டுள்ளன.

	1961 1970	1971 1973	1974 1975	1976 1979	1980	1981	1981அ
உலக அங்காடி வட்டி வீதம்	6.5	7.1	9.0	8.1	14.4	17.0	13.3
ஆண்டுக்கு விலை ஏற்றம் கச்சாய் பொருட்கள்	1.6	15.9	5,0	10.5	14.8	-15.6-	16.1
சுத்தப்படுத்தாத பெட்ரோல்	0.0	24.1	87.8	13.8	68.3	11.4 -	3.7
விளைச்சலான பொருட்கள்	1.8	10.0	17.0	9.0	10.5 -	3.8 -	2.0

வளர்ச்சியுற்ற அங்காடிசார் பொருளியல்

ஆண்டுக்குப் பணவீக்க வீதம்	3.2	10.6	11.2	9.6	9.2	8.9	7.5

	1961 - 1970	1971 - 1973	1974 - 1975	1976 - 1979	1980	1981	1981அ
ஆண்டுக்கு இறக்குமதியில் மாற்றம்	8 9	9.3	-3.3	7.4	-0.8	-3.0	0.0
வேலையின்மை	2.7	3.5	4.4	5.2	5.8	7.1	8.5

ஆதாரம்: ஐ. நா. மா வா. வ. கட்டுரை எண் 8

இவ்வட்டவணையில் நாம் காணும்புள்ளி விவரங்கள் வளர்ந்துவிட்ட நாடுகளின் இக் கட்டுக்குரிய போக்கைக் காட்டுகின்றன. வட்டி வீதத்தில் ஏற்றம், கச்சாப் பொருட் களின் விலைச்சரிவு; பணவீக்கத்தின் ஆண்டு வீதம், வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பு இவையாவும் பணம்படைத்த நாடுகளின் நோயுற்ற நிலையைக் காட்டு கின்றன. இந்த நோயுற்ற நிலை தொற்றும் நிலை பெற்றுத் தனியே இயங்கமுடியாமல் அங்காடி வழியே செயல்படும் நாடுகளைச் சார்ந்துநிற்கும் வறியநாடுகளையும்பிடித்துக் கொள்கிறது.

இனி வளர்ச்சியுற்ற, வளர்ச்சியற்ற நாடு களின் ஆண்டுக்கான பொருளியல் வளர்ச்சி வீதத்தை நோக்குவோம்.

அங்காடி வழி செயல்படும் வளர்ச்சியுற்ற நாடுகளின்ஆண்டுக்கான சராசரிபொருளியல் வளர்ச்சி வீதம் 1960-70 இல் 4.9; 1971-73 இல் 5·1: 1976-79 இல் 4.0; 1980 இல் 1.2; 1982 இல், 0.2. வளர்ந்துவரும் நாடுகளில் இந்த வீதம் 1960-70இல் 5.5; 1971-73இல் 7.2; 1976-79இல் 5.5., 1980இல் 2.5;1982-இல் -0.7 என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொரு ளியல் வளர்ச்சி வீதங்கள் நமக்கு மீண்டும் எப்படி உலகப் பொருளியலின் மந்தமும் செயலற்ற நிலையும் நிலைகொள்ளத் துவங்கிவிட்டன என்பதைக் காட்டுகின்றன. 1981 வரை சராசரியாக 1.5 வீதத்தில் வளர்ச்சி பெற்று வந்த வளரும் நாடுகளில் வளர்ச்சி வீதாச்சாரம் 1982 இல் தாழ் வடைந்து எதிர்மறை நிலையை அடைந்திருக் கிறது. அது மட்டுமன்றி, வளரும் நாடுகளின் மொத்த வெளிக்கடனின்அளவு, டாலர்கணக் கில் 600 மில்லியன்கள் ஆகும். கடந்த 45 ஆண்டுகால அளவில், வளரும் நாடுகள் மலை யாக நம்பியிருக்கும் ஏற்றுமதிப் பண்டங் களின் விலை பெருமளவில் வீழ்ச்சி அடைந் துள்ளது. 1981-82 இல் எண்ணெய் ஏற்றுமதி செய்யாத வளரும் நாடுகள் தமது அயல் நாட்டு வணிக வருவாயில் டாலர் கணக்கில் 34 மில்லியன்களை இழந்துள்ளன. முதலீடும் நுகர்வும் குறைக்கப்பட்டதால் நடைமுறை வேலைவாய்ப்புக்களும் வருங்காலப் பொரு ளியல் வளர்ச்சியும் அதிகமாகத் தாக்கப் பட்டுள்ளன,

இதுவரை நாம் கண்டது, தம் மக்களின் வாழ்வு மலர வேண்டும் என்ற எதிர்பார்ப் போடு, முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விடு தலை பெற்றுவிட்ட வறிய நாடுகளின் நிலை தான்.பாரதத்தில் இன்று நிலவுகின்ற வேலை யின்மையையோ வறுமையின் சாயலையோ கணிக்க வேண்டுமானால், பொருளியல் வளர்ச்சியில் நிகழ்ந்துள்ள சமுதாய பொரு ளியல் இணையமைப்புகளையோ இயந்திர தொழில் நுணுக்க அடிப்படையையோ கொண்டு அளவிட முடியாது. சீனாவைத் தவிர, வளர்ந்து வருகின்ற நாடுகள் அனைத் தோடும் ஒப்பிடும் போது இந்தியாவின் வளர்ச்சிமுறை. மேலானது. எனினும் இந் நாட்டில் இருக்கும் வறுமைக்கும் வேலை இன்மைக்கும் விளக்கம் தேடவேண்டுமாயின் சமூகத்தில் அமைந்துள்ள வெறுப்பு உணர்ச்சி யைத் தான் காட்டமுடியும்.

பொருளியல் நெருக்கடி வாணிபச் சூழலால் வருவதன்று: அமைப்புக்களால் ஆனது

இன்று உலக அமைப்பில் காணப்படும் பொருளியல் உறவிலும் பன்னாட்டுப் பண வழக்கிலுமிருந்து தமதுநாட்டுப் பொருளியல் தப்பிப் பிழைக்கும் என்ற நம்பிக்கையே தமக்கு இல்லை என்று, ஒன்று கூட நீங்கல் இல்லாமல், ஏறக்குறைய 125 மூன்றாம் உலக நாடுகள் அண்மையில் நடந்த ஆறாவது ஐக்கிய நாட்டு அவையின் வணிகம், வளர்ச்சி மாநாட்டில் வலியுறுத்தியுள்ளன. இன்று ஏற்பட்டுள்ள பன்னாட்டுப் பொருளியல் நெருக்கடி வணிகச்சூழலால் ஏற்படக்கூடிய குறுகிய கால நெருக்கடியல்ல. ஆனால் சமுதாய அமைப்புகளால் விளைந்த நீண்ட கால நெருக்கடி என்று மேற்கூறிய நாடுகள் யாவும் முடிவு கட்டியுள்ளன.

ஈரான் நாட்டின் அறிக்கை மூன்றாம் உலக நாடுகளின் நிலையை எடுத்துக் காட்டுகிறது. காலப் போக்கிலும் உண்மைகளை அலசிப் பார்க்கும் பொழுதும் இன்றைய நாளின் நெருக்கடி, அமைப்புக் காரணமாக எழுந்த தொன்று என்பதையும், அதனுடைய ஆணி வேர் பன்னாட்டுப் பொருளியல் அமைப்பில் அமைந்துள்ள அடிப்படை ஏற்றத்தாழ்வுகளி லும் ஒப்புரவற்ற நிலையிலும் காணப்படு கிறது என்பதையும் காணலாம் என்று கூறு கிறது.

இந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு எடுத்துக்காட் டாக ஒருபுறம் வளர்ந்துவரும் நாடுகளின் முக்கிய ஏற்றுமதியான மூலப்பொருள்களின் விலை வீழ்ச்சியைக் காட்டலாம். இந்த விலைச் சரிவினால் இப் பொருள்களின் உண்மை மதிப்பு மிகவும் இறங்கிவிட்டது. அதே சமயம் மறுபுறத்தில் வளர்ந்த நாடு களது தொழிற்சாலையில் ஆக்கப் பொருள் களின் விலை உயர்ந்துவிட்டது. இவ்விரு வகைப்பட்ட நாடுகளிடையே நடக்கும் வாணிபமானது வளரும் நாடுகளுக்குத் தீங் காகவும், வளர்ந்த நாடுகளுக்கு நலமாகவும் இருக்கிறது. இதனால் வளரும் நாடுகளின் ஏற்றுமதி வருமானம் ⅕ பங்கு குறைந்து, இந் நாடுகள் கிட்டத்தட்ட 200 மில்லியன் டாலர் அந்நிய செலாவணியை இழந்து விட்டன. இந்த இழப்பு இந்நாடுகளின் வாணிப நிலையை எப்படிப் பாதிக்கும் என்றுசொல்ல வும் வேண்டுமோ?

அந்த அறிக்கை மேலும் கூறுகிறது: இரண் டாவது உலகப் போருக்குப் பின் மேலை நாடுகளின் நுகர்ச்சிப் பாங்கில் பெரும் முன் னேற்றம்ஏற்பட்டுவிட்டது. மாறாக, வளரும் நாடுகளின் நுகர்ச்சிப் பழக்க வழக்கங்களில் வேண்டப்படா மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் மேலை நாட்டு இயந்திரப்பொருள் களுக்கான அங்காடிகளே வளரும் நாடுகளில் விரிவடைந்து வருகின்றன. தீங்கடையும், வளரும்நாடுகள் இதுகுறித்து எச்சரிக்கையாக இருந்து, தங்கள் நாட்டின் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் கருத்தில் கொண்டு, மீண்டும் மீண்டும் தங்களை வளர்ந்த நாடு களுக்கு அடிமையாக்கிக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனின் வளரும் நாடுகள் தொழில்மயமான நாடுகளையே சார்ந்து இருக்க வேண்டிய நிலை தொடரும்.

நீண்டகால அமைப்புப் பிரச்சினைக்குக் குறுகிய காலத் தீர்வா?

இன்று சமுதாயத்தை ஆட்டிப்படைக்கும் இடர்ப்பாடு என்னவென்றால், சமுதாய அமைப்பில் ஊறிக் கிடக்கும் சமூக, பொரு ளியல் சிக்கல்களுக்கு குறுகியகால பணஞ்சார் வழியில் தீர்வு காண முயல்வதே! நாட்பட்ட, தீர்க்க முடியாத வேலையின்மை, பயன் படுத்தப்படாத மக்களின் திறன், வள ஆதாரங்களின் திறன் இவைகளைப் பயன் படுத்தி இதுவரை விளைச்சலில் ஈடுபடாத காரணிகளையும் முடங்கிக் கிடக்கும் மனிதத் திறனையும் பொருளியலின் குறிப்பிடத்தக்க நீரோட்டமான விளைச்சல் பகிர்வு என்ப தோடு இணைப்பதுதான் வளரும் நாடுகளை எதிர்நோக்கி இருக்கும் அறை கூவலாகும். வளரும்நாடுகள் இத்தகைய தங்களது பெரும் பொறுப்பை அறிந்திருந்தும், உடனடி அவசிய மான, தங்கள் அரசியலில் தப்பிப் பிழைக்க வேண்டி இந்நாடுகள் தங்கள் பிரச்சினை களைச் சமாளிக்கக் குறுகிய காலத் தீர்வு நல்கும், செல்வநாடுகளால் பராமரிக்கப்பட்டு அவைகளில் சட்ட திட்டத்திற்குக் கட்டுப் பட்டுள்ள பன்னாட்டு நிதி நிறுவனங் களின் குறுகிய கால உதவியை நாடி அவை களின் வலையில் வீழ்ந்து மீளும் வழியின்றித் தவிக்கின்றன. மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் தங்கள் ஆட்சியை நிலைப்படுத்திக் கொள்ள மேற்கத்திய நாடுகளின் பிடியில் இருக்கும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் விளையாட்டில் பங்கு பெற்று, பொருளியல் அமைப்பால் ஏற்பட்ட அறை கூவல்களைப் போக்கிக் கொள்ள முடியாமல் தடைப்பட்டு நிற்கின்றன. இக் குறைப்பாட்டினால்தான் செல்வமிகு நாடுகள் ஏழை நாடுகளை மிகுதியாகச் சுரண்டுகின்றன.

வீணான போர்ப்படைப்புக்கள்

இந்த அமைப்பின் மற்றுமொரு கேடான அவலத் தத்துவம் என்னவென்றால் மனித வளர்ச்சிக்குத் தேவையான வள ஆதாரங்களை வீணான படைக் குவிப்பில் பயன்படுத்தலே. வளர்ச்சிக்குத் தேவையான இந்த வள ஆதாரங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு நிமிடத்திற்கு 1 மில்லியன் டாலர் அளவில் போர்க்கருவிகள் விளைச்சலுக்கெனச் செலவிடப்படுகின்றன எனக் கணிக்கப்பட்டுள்ளது. வீணான - தேவையற்ற இச் செயல் உலகை அழிவுக்கோடியில் கொண்டு நிறுத்தி விடுகிறது. இத்தகைய அழிவுக்கான இழுபறியில் வறிய நாடுகள் தமது பொருளாதார வளர்ச்சிக்கான அமைப்பையும் நிலையான சமுதாய மாற்றங்களையும் கவனிக்க முடியாத பதற்ற நிலையையேற்படுத்திவிடுகின்றன. இத்தகைய செல்வநாடுகளின் போர்ப் படைப்பில் ஏழை நாடுகள் சொக்கட்டானாகப் பயன்படுத்தப்பட்டுத் தத்தம் அழிவுக்கான பொருளியல் விளைவுகளைத் தேடிக் கொள்கின்றன. ஒரு வேளை இத்தகைய கொடியவிளையாட்டைச் செல்வ நாடுகளே தாங்கிக் கொள்ள முடியும் என்றாலும், அவைகள் பயன்படுத்த இருக்கும் போர்க்கருவிகளின் இயல்பினால் விளையும் எதிர்பாரா விளைவுகளைச் செல்வ நாடுகளால் கூடத் தாங்கிக் கொள்ள முடியுமா என்பது ஐயமே! எப்படியிருப்பினும் ஏழை நாடுகள் தமது பாதுகாப்பிற்காகவும் பொருளியல் தேவைகளுக்காகவும், செல்வமிகு நாடுகளின் மீது சார்ந்து ஏழை நிலையிலே வாழ்ந்து தங்களை அழித்துக் கொண்டிருக்கின்றன.

பிரிவிச் இத்தகைய செலவினங்கள் மீண்டும் விளைச்சலில் ஈடுபடுத்த முடியாத குவியல் என்றும், அவை வறிய நாடுகளின் பொருளியல் வளர்ச்சியின் எதிராளியான பணவீக்கத்தைத் தோற்றுவிக்கின்றன என்றும் கூறுகிறார். மீண்டும் அவர்தம்முடைய ''தனி உடைமையின் நெருக்கடியும் பன்னாட்டு வாணிபமும்'' என்ற கட்டுரையில் ''நாம் தனி உடைமையின் வளர்ச்சியின் கடைசி வரலாற்று ஊழியைக் காண்கிறோம். நீண்டகாலமாக அதிக மூலதனத்தைக் குவித்து வியக்கத்தக்க வகையில் விளைச்சல் திறனைப் பெருக்கிவிட்ட தனிஉடைமை அமைப்பு இன்று சரிவுநிலை அடைந்து, உலகெங்கும் காணப்படும் மந்த நிலைக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், விளைச்சல் ஆதாரங்களின் வீணாக்குதலுக்கும் காரணமாக இருக்கின்றது என்று கூறுகிறார்.

அவர் ஒரு பக்கம் வறிய நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்குமிடையே காணப்படும் அமைப்பின் வேறுபாடுகளைப் பற்றிக் குறிப்பிடுவதோடல்லாமல் மறு பக்கம் செல்வநாடுகளிடையே காணப்படும் பணவீக்கம், தவறான பங்கீடு இவற்றிற்குக் காரணமான வேறுபாடுகளையும் குறிப்பிடுகிறார்.

பன்னாட்டு நாணயமுறை, மறுவிளைச்சல் செய்யும் முதலீட்டையும் நுகர்ச்சிப்பொருள்களின் சமமான பங்கீட்டையும் சரியான முறையில் செய்யத் தவறி, ஏற்றத் தாழ்வுகளையும், பணவீக்கத்தையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் உருவாக்கியுள்ளது.

பன்னாட்டுநாணய முறையில் காணப்படும் மற்றும் ஒரு பெரிய தவறு என்னவென்றால் பிரிட்டன்வுட் முறை டாலருக்கு பன்னாட்டு நாணய மதிப்பை வழங்கியுள்ளது. டாலரின் மதிப்பு மாறாமல் இருந்து அமெரிக்க ஐக்கிய நாடு தனது அரசியல் பங்கைச் சரியாகச் செயல்படுத்தியது வரை இந்த நாணயமுறை வளரும் நாடுகளின் நலனுக்காகச் செயல்பட்டு வந்தது. ஆனால் இன்றோ அமெரிக்க ஐக்கிய நாடு தனது அளவற்ற அரசியல் பொருளாதார ஆதிக்கத்தை பன்னாட்டுப் பொருளியலில் ஏழை நாடுகளின் வளர்ச்சியின் ஆவல்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது. ஏறத்தாழ 125 வளரும் நாடுகளின்

எதிர்கால நல்வாழ்வு அமெரிக்க ஐக்கிய நாட்டின் தன்னல நோக்கில் ஒருங்கிணைந்து கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு வளரும் நாடுகள் அமெரிக்க நாட்டை நாடி நிற்கையில், அமெரிக்க நாடு தனது பாராமுகத்தைத் தொடர்ச்சியாக நடந்த ஐக்கிய நாட்டு சபையிலும், புதிய பன்னாட்டுப் பொருளியல் அமைப்பின் கூட்டங்களிலும், ஐக்கிய நாட்டு அவையின் வர்த்தகம் வளர்ச்சி மாநாட்டுக் கருத்தரங்குகளிலும் வெட்ட வெளிச்சமாகக் காட்டியுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடு தான் மூன்றாம் உலக நாடுகளின் ஆவலையும் நம்பிக்கையையும் தலைகீழாகத் திருப்பி, வளரும் நாடுகளின் வடக்கு தெற்கு உரையாடல்களில் காணப்படும் கோரிக்கைகளை நிராகரித்து, செயல்படுத்தக் கூடிய பல மூன்றாம்உலகநாடுகளின்தீர்மானங்களையும் எதிர்க்கிறது. ஆகவே உலக நாடுகளின் முழு அமைப்பும் ஒரே ஒரு நாட்டின் விருப்பு வெறுப்புகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு அதற்கேற்பச் செயல்பட வேண்டியதாயிருக்கிறது. இத்தகைய ஓர் அமைப்பை ஒரு சிறந்த அமைப்பாக ஏற்றுக் கொள்ள முடியுமா? இந்த அமைப்பைக் கட்டிக்காக்கின்ற விதிகள் அறிவியல் வழிப்பட்டன என்று சொல்வதற்கில்லை. இந்த அமைப்புடன் காணப்படுகின்ற விதிகள் ஒரு புதிய சூழ்நிலைக்குப் பொருந்தாதவைகள். பிரிபிச் இத்தகைய அமைப்பு ஒரு நெருக்கடி நிலையில் இருக்கிறது என்றுகூறுகிறார். சமுதாய அமைப்பின் முறையில் ஏற்பட்ட மாற்றங்களாலும் தொழில் நுணுக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தாலும், இவைகளின் காரணமாக மாறிய அதிகார அமைப்பாலும் தனி உடைமையின் கரைகள் உடைக்கப்பட்டு அமைப்பில் வேறுபாடுகள் அளவிடமுடியாத நிலைக்குஏற்பட்டு, ஏன் செயல்களிலும் மாற்றம் விளைந்துள்ளது. இந்த மாற்றங்களையெல்லாம் எவ்வாறு கையாள்வது என்பது பற்றி ஒரு தெளிவோ உறுதியோ ஏற்படவில்லை. இம் முறையில் ஏற்பட்ட சிக்கல்களால் கருத்துக் கோவையிலும் சிக்கல் ஏற்பட்டு நிகழும் நிகழ்ச்சிகளையும் குழப்பத்தில் ஆழ்த்தி வருகிறது.

மனித உய்வுக்கே அச்சுறுத்தல்

தனி உடைமையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் ஓர் இடுக்கணைத் தோற்றுவித்துள்ளது. இவ்வமைப்பில் காணப்படும் பொறி நுணுக்கங்களும் திறனாய்வுகளும் இலாப நோக்கமும் மனித இனத்தின் உய்வுக்கான அடித்தளத்தையே அழித்துக்கொண்டிருக்கின்றன. இராபர் சீமாவுர், வறிய நாடுகளின் தலா பெட்ரோலியம் நுகர்வு எப்பொழுது செல்வநாடுகளின் 1966 ஆம் ஆண்டிற்குரிய தலா நுகர்வை அடைந்து விடுகிறதோ, அன்றிலிருந்து 40 ஆண்டுகளுக்குள் உலகின் எண்ணெய் வளங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்று கணக்கிட்டுள்ளார்.

புதுப்பிக்க முடியாத அளிப்புள்ள வள ஆதாரங்களைத் தங்கு தடையின்றி, எவ்வித எதிர்ப்பும் இன்றித் தனியுடைமை அமைப்பு தனதுவிளைச்சலுக்காகப் பயன்படுத்துகிறது. எப்படியெனில் அத்தகைய செயலில் ஈடுபட, கூட்டாக நவீனத்தொழில் திறமையும்அதற்கு ஈடு கட்ட இலாபமும் வழிகாட்டுகின்றன. இவைகள் எல்லாம் வாழ்க்கையின் ஆதாரங்களையே அழித்துவிடும். 'மனித இனத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலையில் காணப்படும் சமன்பாடு எங்கே நீங்கிவிடுமோ' என்ற அச்சம் தோன்றியுள்ளது.

இன்றையப் பொருளியல், இயற்கை விதிகளையும் மனிதனால் உருவாக்கப்பட்ட விதிகளையும் மீறிச் செயல்படுகிறது. தனியுடைமையின் விலைக் கோட்பாடுகள் காரணிகளுக்கான செலவைக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றனவே தவிர மிகவும் அதிகமாக உணரப்படும் சமூகப் பாதிப்பைக் கருத்தில் கொள்ளாமல் விட்டுவிடுகின்றன. தனியுடைமை அமைப்பானது பல ஊகங்கள் மேல் கட்டப்பட்டுள்ளது. சீமாவுர்

அந்த ஊகங்களின்செல்லுபடியாகும் தன்மையைப் பற்றிக் கேள்விக் குறி எழுப்புகிறார். அந்த ஊகங்கள் பின் வருபவை:

1. உலகளாவிய வளம் அல்லது செழிப்பு அடையக்கூடியது.
2. இத்தகைய வளத்தைப் பொருள்சார் தத்துவமான 'உன்னை நீ முதலில் வளமாக்கு' என்பதன் மூலம் அடைய முடியும்.
3. அதுவே உலக சமாதானத்திற்கு வழி காட்டும்.

மக்களும் மாக்களும் தாவரங்களும் உயிர் வாழ ஆதாரமாக அமைகின்ற இயற்கை வள ஆதாரங்களும் சுற்றுப்புறமும், முதலாளித்துவ விளைச்சல் பங்கீடு முறையாலும் நவீன தொழில் நுணுக்கத்தாலும் போர் ஆபத்திற்குட்படுத்தப் பட்டுள்ளன. நுகர்வோர் அங்காடியில் இவ்வாறு படைக்கப்பட்டு விற்கும் பண்டங்களை வாங்க விருப்பம் கொண்டு ஒரு விலையைக் கொடுக்கின்றனர். அது விளைவிப்போர்க்குத் தேவையான இலாபத்தை ஈட்டிக் கொடுக்கிறது. ஆனால், உண்மையில் இத்தகைய பொருள்களின் விளைச்சல் உயிரினங்களுக்கு எவ்வளவு தீங்கானது என்பதை நாம் உணர்ந்தால் நாம் எவ்வளவு பெரிய விலை கொடுக்க வேண்டும் என்பதை அறியமுடியும். மனிதனால் உருவாக்கப்பட்ட விதி, இத்தகைய பொருள்களை நாம் அடைவது திருட்டுப் பொருள்களை வாங்குவதை நிகர்க்கும் என்று சொல்லுகிறது. ஆனால், இந்தப் பண்டங்களின் விளைச்சலோ இயற்கை விதியை மீறுவதாகும்.

சீமாவுர் இறுதியாகச் சொல்வது என்னவென்றால் தலைமுறை தலைமுறையாக வருகின்ற பொருளியல் அறிவு ஏழைகளுக்கு உதவக்கூடிய ஒன்றையும் செய்யவில்லை. வறியவர்கள் தனியுடைமை அமைப்பில் ஒரு கட்டாயப் பங்கினரும் இணைப்பாளருமாகி விடுகிறார்கள்.

மகாத்மா காந்தி தனியுடைமையில்அமைந்துள்ள விளைச்சல் முறையும் நவீனப்படுத்துதலும் சமுதாயத்தின் வேலையில்லாப் பிரச்சினையையும் ஏழைமையையும் தீர்க்க முடியாது என்று கண்டுதான் நவீன விளைச்சல் முறையைக் குறிப்பாகவும் கடுமையாகவும் எதிர்த்தார். தனியுடைமை இன்று ஒரு சமூகக் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது.

இன்றைய உலக நிலையும், அந்த நிலையின் ஆய்வும் நமக்கு ஒரு புதிய அமைப்புத் தேவை என்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஏனென்றால், தனியுடைமை அமைப்பில், உள்ளடங்கிய ஒழுங்கின்மை காணப்படுகிறது.

முதலாளித்துவம் அல்லது தனியுடைமைப் பொருளியல்-அதன் அங்காடி விதி, விலை, இலாப விதி, விளைச்சல் பகிர்வு விதி இவை யாவும் ஒன்று சேர்ந்து ஒரு போர்வையின் கீழ் அமைந்து ஒரு கொள்ளைச் சந்தை விளக்கமாகக் கருதப் பட வேண்டிய கருத்துப்படிவத்தை ஒரு மதிப்பிற்குரிய அறிவியலாக மாற்றிவிட்டது. கிழக்கிந்தியக் கம்பெனிதான்முதலில் பொருளியற்கருத்துக் கூடத்தை துவக்கியது என்பதை நாம் பார்க்கும் பொழுது, அந்த முதலாளித்துவ அறிவியல் எவ்வளவு நம்பிக்கைக்கு உட்பட்டது என்பதைக் கண்டுகொள்ளலாம்.

பொருளியலின் முடிவு

பொருளியலின் முடிவு சமுதாயத்தின் ஒரு புதிய அமைப்புக்குத் துவக்கமாகிறது. தனியுடைமை சமுதாயத்திற்கு அளித்த துன்பமே இன்று ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்துவதற்கான தேவையையும் உணர்வையும் கொடுத்துள்ளது. இருப்பினும், முதலாளித்துவம் இன்றும் நிலைநிற்கிறது என்றால் அதன் காரணவிளக்கங்களாய் விளங்கிய பொருளியல் விதிகளே அதற்குக் காரணமாகும். எப்படியும் முதலாளித்துவ அங்காடி விதிகள் இன்றைய சமுதாய நோக்கத்திற்கும் அறைகூவல்களுக்கும் விளக்கம் அளிப்பவை அல்ல.

தேவைகளின் மேல் சமுதாய ஆளுகை

கி. பி. 2110 இல் மக்கள் தொகை உலகில் 10.5 பில்லியனாக நிலை பெற்று விடும் என்ற கருத்துப்படி பார்த்தாலுங் கூட, அன்றைய மக்கள் நல்வாழ்வு பெற வேண்டுமாயின் விளைச்சலும் பகிர்வும் ஒரு புதிய அடிப்படையில் அமைய வேண்டும். டிவோசர் என்ற ஆப்பிரிக்கப் பொருளியல் மேதை ' இன்று, உலகில் தேவைப்படுவது எல்லாம் தேவைகளின் மேல் மனிதனுக்கு ஆளுகையே. இத்தகைய ஆளுகையைச் செயலமைத்துக் காட்ட அங்காடி வழியே செயல்படாத பொருளியல் அமைப்பால்தான் முடியும். உலகில் வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்தையும், உலகின் வரையறுக்கப்பட்ட வள ஆதாரங்களையும் வைத்து ஒப்பிட்டு நோக்கும் பொழுது ஒரு தனி மனிதனின் குறிப்பிட்ட நுகர்ச்சி அளவை வைத்து அவன் செல்வநிலையைக் கணிக்க முடியாது. மாறாக, அவன் தன் சமூகத் தேவைகளை எந்த அளவில் வென்றுவிட்டான் என்பதே சரியான ஒரு புதிய அமைப்பின் அடிப்படையாகும்'' என்று கூறுகிறார்.

புதிய சமுதாய அமைப்பை அமைக்கத் தேவைப்படும் மற்றும் ஒரு திறமை என்ன வென்றால், விளைச்சல், வாழும் இடம் இவைகளின் அளவைப்பற்றியதாகும். அதிக அளவில் விளைவித்தல், அதிக அளவில் ஊதியம் பெறுதல் போன்ற செயல்கள் தனியுடைமைப் பொருளியலைச் சேர்ந்தவை. அத்தகைய முறை குழப்பத்தையே தோற்றுவித்துள்ளது. ஆனால், இன்று 'சிறியதே அழகுடையது' என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது. அன்று கிராமக்குடியரசு வேண்டும் என்று மகாத்மா காந்தி சொன்னபொழுது மக்கள் சிரித்தனர். ஆனால், இன்று பெரிய நகரங்களில் காணப்படும் சமூக, கலாச்சாரப் பிரச்சினைகளுக்குப் பல சமூக அறிவியல் வல்லுநர்கள் விடை தேடித் திரிகின்றனர். அவர்களுக்குத் தெரியுமா காந்தியம்தான் சரியான விடை என்று.

பண்பாட்டின் விளைவு

உற்பத்தியின் அளவு, பகிர்வு முறை, நீதி ஆட்சி, சட்டம் ஒழுங்கு நிலைபெறுதல் இவை யாவற்றிற்கும் கிராம சமுதாயமே ஓர் இலட்சிய சமுதாயமாக இருக்கமுடியும் என்று காந்தி தமது கிராமக் குடியரசில் குறிப்பிடுகிறார். மக்கள் சிறிய அளவில் வாழும் இடமாகிய கிராமத்தில் மனிதஇனம் மேலோங்க முடியும். அவ்வாறு மேன்மை அடைய ஒவ்வொரு மனிதனும்ஒரு விளைச்சல் முயற்சியில் ஈடுபடவேண்டும் அதே சமயத்தில் சமுதாயத்தின் கூட்டுக்குழு மொத்தமாகப் பாதுகாப்பு, பண்டங்களின் அல்லது சேவைகளின் விளைச்சல், பகிர்வு முதலியவற்றைக் கண்காணித்துமக்களின் வாழ்க்கைத் தரம் சமுதாயத்தின் பண்பாட்டு எல்லைக்குள் வளரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று இந்தியாவில் அத்தகைய ஒரு சமூக, பொருளாதார வாழ்வை ஏற்படுத்தத்தேவை யான வாய்ப்புக்கள் உள்ளன. ஏனென்றால், அன்று காந்தி எந்த நிலையில் இந்தியக் கிராமங்களைக் கண்டாரோ அதே நிலையில் தான் அவைகள் இன்றும் உள்ளன.

மேனாட்டுச் சமுதாயத்தில், குறிப்பாக ஐரோப்பாவில், பெரும் தலைவர்கள் 'சிறியதே அழகு' என்ற தத்துவத்தை விளைச்சல், பகிர்வு, வாழும் இடங்கள்இவைகளில் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றனர். இதனால்அவர்கள் இந்த தத்துவத்தில் பித்துப் பிடித்து அலைகின்றனர் என்பது பொருளன்று. மனித இனம் உய்ய இத்தத்துவத்தைக் கடைப்பிடிப்பதைத் தவிரவேறு வழியில்லை. காந்தியின் இக்கருத்துக்கள் உயிர் பெற்றுச் செயல்பட சீமாவுர் போன்ற அறிஞர்கள் வழிகாட்டியுள்ளனர்.

காந்தி விடுத்த இச் செய்தி, சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவின் பழம் பெருமையையும் பண்பாட்டையும் பறை சாற்றுவதாக இல்லாமல், தொழில்மயமாக்கப் பட்ட நாடுகளின் அழிவுக்கான பட்டறிவு களைப் பின்பற்றத் துடிக்கும் – மக்கள்

தொகை பெருகிய - நாடுகளுக்கு ஒரு செயல் பட வேண்டிய திட்டமாக அமைகிறது.

நிலைப்பான சமுதாயம்

இவ்வாறாகக் காந்தி ஒரு நிலைப்பான சமுதாயத்தை அமைக்கும் வழி வகையைக் காட்டுகிறார். இன்று மனிதனின் கவலை எல்லாம் ஒரு நிலைபெற்ற சமுதாயத்தை எப்படிப் படைப்பது என்பதும், புதுமைத் தொழில் நுணுக்கத்தின் தூண்டுதலால் பொருள்சார் வளத்தை இந்த யுகத்தில் எப்படி அடைவது என்பதுமே. கடினமான இந்த உண்மை மனித சமுதாயத்தை அழித்துக்கொண்டிருக்கும் இவ்வெல்லைகளை அடைவது அன்று. ஆனால், காந்தி, சீமாவுர் காட்டிய வழியில் எவ்வாறு சமுதாயத்தை அமைக்கப் போகிறோம் என்பதே.

உலகில் மாசேதுங் மட்டுமே, தாம் தீட்டிய அமைப்புக்குள், தேவையான பொருளாதார கலாச்சார கருத்துக்குரிய இணையமைப்புக் களை அமைத்து. காந்தியின் தத்துவங்களின் வழி நின்று, அவர் தம் நாட்டின் அடித்தளத் தில் வேர் கொண்டிருந்த - பல்லாயிரக்கணக் கான மக்களின் ஏழைமை நிலையையும் வேலையின்மையையும் நீக்கினார் என்பது நாம் விரும்பிக் கேட்டு செயல்படுத்தக் கூடிய ஒரு செய்தியாகும். சிறிய நிலப்பரப்பில் வாழும் மக்களை ஈடுபடுத்தி, அந்நிலப் பரப் பின் எல்லைக்குள் காணப்பட்ட வள ஆதாரங் களைப் பயன்படுத்தி, அதற்கேற்ற தொழில் முறையைப் பின்பற்றி, அந்தச் சமுதாயத்துப் பண்பாட்டின் மதிப்பை விளைச்சலிலும் கல்வி முறையிலும் கைக்கொண்டு அந்தச் சமுதாயத்தின் தேவைக்கான சிறிய விளைச்சல் கூடங்களை நிறுவி மாசேதுங் ஒரு புதிய சமுதாய அமைப்பை ஏற்படுத் தினார். கிட்டத்தட்ட நாட்டின் மொத்த விளைச்சலிற் பங்குபெறும் 900 மில்லியன் மக்களுக்குத் தேவையான பயன் தரு வேலை வாய்ப்பைத் தேடித் தரும் ஒரு சமூக, பொரு ளியல் முறையைக் கொண்டுவந்து மாசேதுங் வெற்றி பெற்றார். காந்தியின் கருத்துப்படி யான ஒரு சமுதாயத்தை அமைக்கும் வாய்ப் புக்கள் இருக்கின்றன என்பதை சீனா செயல் முறையில் மெய்ப்பித்துக்காட்டியது. ஆனால் இன்றையச் சீனாவில் பொருள்சார் செழிப் பையும், நவீனத்தையும் தேடிச் செல்லும் மனப்போக்கு ஒரு நிலைப்பான சமுதாயத் தின் கடினமான அடித்தளத்தையே ஆட்டங் கொள்ளும்படி செய்து விட்டது.

அங்காடி வழியேசெயல்படும் பொருளியல் தகுதியானவர்களே வாழமுடியும் என்ற தத்துவத்திற் செயல்படுவதால், செல்வச் சமுதாயத்தின் எதிர் காலத்தைக் கூட தற் காலிகமானதாகவும் அடிக்கடி மாறக்கூடிய தாகவும் செய்து விடுகிறது. ஆகவே, உலக மக்கள் தொகையில் பெரும்பான்மையாக இருக்கின்ற ஏழைமக்களின் துயர் எப்போ தும் ஒரே மாதிரியாகவும் மாறாமலும் இருக்கிறது.

வாழ்வின் தன்மை, வாழ்வின் கூட்டுத் தோற்றம்

பொருளியல் வளர்ச்சியை தனியே இயங் கும் ஒரு தத்துவமாக வைத்துப் பார்க்கும் பொழுது, வளர்ந்துவிட்ட, வளருகின்ற சமுதா யத்தில் காணப்படுகின்ற குறைகளுக்கு இவ் வளர்ச்சியின் கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதே காரணமாகும். இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளில் பொருளியல்வளர்ச்சி தளர்ந்த நடை போட்டு வறுமையை அகற்ற முடியாமல், பெருவாரியாக இந்திய மக்களை இன்னும் வறுமைக் கோட்டிற்கு அடியிலே வைத்திருப்பதற்கு, வளர்ச்சி என்ற கருத்தை யும்அதன் முறைகளையும் தவறான எல்லைக் குள் வைத்துக் கணித்ததே காரணமாகும். வளர்ச்சியினை மனித வாழ்வின் கூட்டுத் தோற்றமாகக் கணக்கிடுவதைக் கைக் கொண்டு, வளர்கின்றநாடுகள் தங்கள்எல்லை களையும் முறைகளையும் அடையக்கூடிய தன்மைக்குள் பொருத்திச் சமுதாய, பண் பாட்டின் பாதிப்பிற்குள்ளாக அமைத்துக் கொண்டால்தான், பொருளியலின் முழுத் தன்மையும் விளங்கும். அவ்வாறன்றி, மேலை நாடுகளைப் போல் வாழ்க்கைத்தரத்தைக் கொண்டு பொருளியல் வளர்ச்சியைக் கணிக் கின்றமுறைவளர்கின்றநாடுகளுக்குஒவ்வாது.

இப்படிப்பட்ட கருத்தும், செயல் முறையும் பயன்படுத்தப்பட்டால், சமுதாய வகுப்புவாதங்களையும் அரசியல் கசப்புத் தன்மையையும் குறைப்பதற்கு ஏதுவாகும். இன்று சமுதாயத்தில் நிகழ்கின்ற குழப்பங்கள், ஒருபுறம் பொருளால் உயர்ந்தநிலை உடையவர்களுக்கும் அரசியலின் அதிகார வர்க்கத்திற்கும், மறுபுறம் பொருளற்ற சமூகத்திற்கும் அரசியல் அதிகாரமற்றவர்களுக்கும் ஏற்பட்ட மோதலே ஆகும். செல்வரும் அரசியலில் ஆதிக்கம்பெற்றவரும் எந்தஒரு சூழ்நிலையிலும் நெருக்கடியிலும் தங்களைக் காத்துக்கொள்ளும் திறன் படைத்தவர்களாய் இருக்கின்றனர்.

உண்மைப் பொருளியல் வளர்ச்சி

உண்மைப்பொருளியல் வளர்ச்சி என்பது பல மூலக் கருத்துக்களைக் கொண்ட ஒரு கூட்டுக்கோவையாக அமைந்துள்ள வாழ்வின் தன்மையைக் குறிப்பதாகும். இதில் காணக் கூடிய உணவு, உடை, உறையுள், உடல்நலம், பணி போன்றவைகளும்; உணரக் கூடியவைகளான கல்வி, குடும்பம், சமூக வாழ்வு போன்றவைகளும்; ஆன்மீகத் தேவைகளும் இடம் பெறுகின்றன. தேவைக்கு ஏற்ப வழங்கீடு இல்லாமையால் நிகழ்கின்ற வேண்டாத போட்டி காரணமாக, சமுதாய ஆன்மீகக் கருத்துக்களும் பண்பும் அச்சமுதாயத்தில் அமைந்துள்ள வாழ்வின் தன்மையைத் தாக்குறைவாக்கி மனித இனத்தின் மதிப்பினைக் குறையாடி விடுகின்றன. ஆகவே, சமுதாயத்தில் செல்வர்கள் கூட மகிழ்ச்சி அற்றவர்களாகப் பெரும்பான்மை மக்களிடம் மதிப்பையும் இழந்து காணப்படுகின்றனர்.

சமுதாய முன்னேற்றத்தின் இலக்கானது, கொடுக்கப்பட்ட சில வாழ்வின் தரத்தையும் தன்மையையும் உட்கொண்டதாக இருப்பின் ஒவ்வொரு சமுதாய உறுப்பினரும் தம்மால் ஆனவற்றை நல்கி, சமுதாயத்தில் போட்டியின்றி அமைதியான அமைப்புடன் வாழ முடியும். இல்லையெனில் எந்த ஒரு சமுதாயத்திலும் ஒரு சிலர் செல்வர்களாகவும், பலர் ஏழைகளாகவும் இருப்பின் தொடர்ந்து அந்நிலை நீடிப்பதற்கு, சமுதாய அமைப்பில் இலக்கு இல்லாததே காரணமாகும். டியோசரின் கருத்துப்படி செல்வமே ஏழைமையை உருவாக்கிறது. மார்க்சு கூற்றின்படி வீடு என்ற ஒன்று பெரியதா சிறியதா என்பதன்றி, அங்கு வாழும் மக்களுக்கு அது நிழல் தருகின்றதா என்பதே கேள்வி. ஆயின் அதன் அருகில் ஒரு மாளிகை கட்டப்படுமாயின் அச்சிறிய வீடு குடிசையின் அளவுக்குக் குறைக்கப்பட்டு அதன் சிறுமை நமக்குத் தெரிகிறது.

பொருளியல் அறிவியலின் பொய்த்தோற்றம்

இது காறும் நாம் கற்றுணர்ந்த, போதித்த பொருளியல் அறிவியல் நம்மைப் பல நூற்றாண்டுகளாக தன்னுடனே எடுத்துச் சென்று கொண்டிருக்கிறது. பொய்த் தோற்றமும் நம்பிக்கைகளும் நீண்ட காலம் நீடிப்பவை அல்ல. உண்மை நிலையில் இவ்வறிவியலின் விதிகளும் சட்டங்களும், விதிப்புகளும் அவைகளின் மேல் நிலையில் செயல்முறைக்கு ஒவ்வாத ஏட்டுச்சுரைக்காயாகவே அமைந்து விட்டன. ஆட்சியிற் பங்கு கொண்ட ஒரு சிலரே இதனால் பயனடைந்து அரசியல் வலுவைப் பெற்றனர். இன்னும் சிலர் வள ஆதாரங்களின் மீது தங்கள் ஆளுகையைச் செலுத்தி புதிய விளைச்சல் முறைகளைத் தங்களுக்குள் அமைத்துச் செல்வத் திரளைப் பெற்றனர். இவையனைத்தும் அவர்கள் பொருளியல் விதிகளுக்குக் கட்டுப்பட்டதால் அடைந்தவைகள் அல்ல. அவ்விதிகளை மீறியதாலே அடையப்பெற்றனர். ஆகவேதான் பொருளியல் விதிகள் அறிவியல் மதிப்போ அல்லது சமுதாய மதிப்போ உடையவைகள் அல்ல.

பொருளியல் தந்தை ஆதம் ஸ்மித்தின் சமுதாயக் கூட்டமைப்பு, வள ஆதாரங்களின் பகிர்வு முறை, அளிப்பு, தேவை இவைகளின் சமநிலை, போட்டியின் விலை நிர்ணயம், பன்னாட்டுவாணிபத்தில் ஒப்பு, நன்மை இவை அனைத்திற்கும் மேலாக தனி ஒருவனின் தன்னலம் சமூகமேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்ற அனைத்துக் கருத்துக்களும் ஒரு பொய்த்தோற்றம் உடையனவாகவேகாணப்படுகின்றன. இன்றைய சமுதாயத்தின் ஒழுங்கின்மையும் மனச்சோர்வும்தாம் இவைகளை எடுத்துக் காட்டுகின்றன. நாம் தீவிர உள்ளுணர்வோடு பொருளியல் அமைப்பையும் பொருளியல் அறிவியலையும் கண்ணோக்க வேண்டும். பொருளியல் அறிவியல்சமுதாயப் பண்பாட்டின் அரசியல் மாற்றத்தின் நோக்கில் அமைந்து மக்களின் வாழ்க்கைத் தன்மையைஉயர்த்துவதாக இருக்கவேண்டும். அந்நாள்வரை நீதியின்பாற்பட்ட ஒரு சமுதாயத்தைப் புதிய சமுதாய அமைப்பின் கீழ் நாம் காணமுடியாது.

பாட்டியல் கூறும் கணப் பொருத்தம் பைந்தமிழ்க்குப் பொருந்துமா?

— அடிகளாசிரியன்

தோற்றுவாய்

பல மொழிகளில் வழங்கும் பயன்படும் செய்திகளைத் தமிழ் மொழிக்குக் கொண்டு வந்து சேர்த்தல், தமிழறிஞர் தமிழ்மொழிக்குச் செய்யும் நல்ல தொண்டாகும். ஆனால், பயன்படாதவற்றைக் கொண்டுவந்து குவிப்பதும், பிழையான செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பதும், தமிழ் மொழிக்குச் செய்யும் நல்ல தொண்டாகா என்பது என் கருத்து. அதற்கொரு எடுத்துக்காட்டான செய்தியை இக்கட்டுரையில் கூறுகிறேன்.

பாட்டியல் பகர்வது

பன்னிருபாட்டியல் என்னும் நூல், எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூன்று இயல்களை உடையது. அந்நூலில் சொல்லியலில், 'சீர்க்கணம்' என்ற தலைப்பு, சீருக்குரியனவாகிய கணங்களைப் பற்றிக் கூறுகிறது.

தமிழ் யாப்பிலக்கணத்தில் ஈரசை, மூவசை, நான்கசை, ஓரசை யென நான்குவகைச் சீர்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஈரசை, நான்கசை, ஓரசைகளை ஒழித்து விட்டு மூவசைச் சீர்க்கே கணம் கூறப்படுகின்றது. (54, 56) "கணமே மூவசைக் கூட்டமாகும்" என்பது கபிலர் நூற்பா.

நற்கணம்

மூவசைச்சீர்களில், 'நேர் நேர் நேர்' என்னும் மூன்றசையினால் அமைந்த சீர் இயமான கணமாகிய நற்கணம் ஆகும், (58)

'நிரை நேர் நேர்' என்னும் மூன்றசையினால் அமைந்த சீர் திங்கள் கணமாகிய நற்கணம் ஆகும் (59)

'நிரை நிரை நிரை' என்னும் மூன்றசையினால் அமைந்த சீர் நிலக்கணமாகிய நற்கணம் ஆகும். (60)

'நேர் நிரை நிரை' என்னும் மூன்றசையினால் அமைந்த சீர் நீர்க்கணமாகிய நற்கணம் ஆகும் (61)

தீக்கணம்

மூவசைச்சீர்களில் 'நேர் நிரை நேர்' கதிர்க் கணமாகிய தீக்கணம் (62).

'நிரை நிரை நேர்' வரின், வானத்தின் கணமாகிய தீக்கணம் (63)

'நிரை நேர் நிரை' வரின், நெருப்பின் கணமாகிய தீக்கணம் (64)

'நேர் நேர் நிரை' வரின் காற்றின் கணமாகிய தீயகணம் ஆகும். (65)

மூவசைச் சீர்கள் நற்கணம் என்றும், தீக்கணம் என்றும் இரண்டு பகுப்பாகப் பிரிக்கப்பட்டுப் பாட்டின் முதற்சீர்களுக்கு அவை கொள்ளப் பட்டும் தள்ளப்பட்டும் வரும் செய்திகளை (66) ஆண்டு நோக்கி உணர்க. இவ்வமைப்பு முறை தக்கதா? தகுதியற்றதா? என்பனவற்றை இனி ஆராய்ந்து கருதுவோம்.

தமிழில் பாட்டமைப்பு

தமிழில் பாட்டமைப்புமுறை நேரசை, நிரையசை என்னும் இரண்டசைகளை அடியாகக் கொண்டுவரும் என்பர் காக்கைபாடினியார் முதலாகிய ஒரு சாராசிரியர். அவற்றுடன் நேர்பு, நிரைபு என்னும் இரண்டசைகளையும் கூட்டி நான்கசைகளை அடியாகக் கொண்டு வரும் என்பர் தொல்காப்பியர் முதலான ஒரு சாராசிரியர்.

வடமொழியில் பத்திய அமைப்பு

வடமொழியாளர் பாட்டினைச் சந்தசு என்றும், பத்தியம் என்றும் வழங்குவர். பத்தியம் என்றது பிற்கால வழக்கமாகும். அச் சந்தசு லகு, குரு என்னும் எழுத்து வேறுபாட்டால் வரும்.

தமிழில் அசைகள்

முன்னே கூறிய அசைகளுள் நேரசை, குறில் தனித்து வரினும், அஃது ஒற்றடுத்து வரினும், நெடில் தனித்து வரினும், அஃது ஒற்றடுத்து வரினும், நேரசை அல்லது தனியசை என்று கூறப்பட்டு நான்காகும்.

நிரையசை குறிலுங் குறிலும் இணைந்து வரினும், அஃது ஒற்றடுத்து வரினும், குறிலும் நெடிலும் இணைந்துவரினும், அஃது ஒற்றடுத்து வரினும் நிரையசை அல்லது இணையசை என்று கூறப்பட்டு நான்காகும்.

மேலே கூறப்பட்ட நேரசை நிரையசைகள் எட்டும் குற்றியலுகரம் முற்றியலுகரம் என்னும் இருவகை உகரங்களைத் தனித்தனி அடுத்து வந்தால் அவை நேர்பு நிரைபு அசைகள் என்று கூறப்படும்.

அசை என்பது தாளத்தின் உட்கூறு. சீர் என்பது தாளமுடிவு.

வடமொழி லகு குரு

வடமொழிச் சந்தசு லகு, குரு என்னும் இரண்டினையும் அடியாகக் கொண்டு வரும். அவற்றுள் லகு என்பது குறில் மட்டும்தனித்து வரும் ஓசையாகும்.

அக்குறில் ஒற்றடுத்து வரினும், நெடில் தனித்து வரினும், அந்நெடில் ஒற்றடுத்து வரினும் இம்மூவகை யோசை எல்லாம் குரு என்றே கொள்ளப்படும்.

வடமொழியாளர்
கூறும் லகு குருக்கள்
தமிழில் உள்ள நேரசைகளே

மேலே கூறிய லகு, குரு அமைப்பு முறைகளைப் பார்த்தால், தமிழில் உள்ள நேரசை நான்கே லகு, குரு என்னும் இரண்டாக வருகின்றன என்னும் உண்மை புலனாகின்றது. அவர்கள் கூறும் முறைப்படி பார்த்தால் தமிழில் உள்ள நான்கு நிரையசைகளும் முறையே லகுவும் லகுவும், லகுவும் குருவும், லகுவும் குருவும், லகுவும் குருவும் (வெறி, நிறம், சுறா, விளாம்) ஆகும்.

வடமொழியாளர் லகுவிற்கு ஒருமாத்திரை அளவு கூறி ஒரலகு பெறும் என்பர். குருவிற்கு இரண்டு மாத்திரை அளவு கூறி இரண்டலகு பெறும் என்பர்.

அம்முறையைப் பின்பற்றிய தமிழ்ப் பாட்டியற் புலவர் நேர் லகு போன்றது: ஓரலகு பெறுமென்றும்; நிரை குரு போன்றது: இரண்டலகு பெறுமென்றும் கூறுகின்றனர்.

இவர் இவ்வாறு கூறுவது பொருந்துமாறில்லை.

வேறுபாடு

தமிழ் யாப்பிலக்கண நூல்களில் வரும் அசைகள் தாளத்தின் உட்கூறுகளாயுள்ளன; லகு குருக்கள் அவ்வாறில்லை.

நேரசை என்றால் தனியோசை என்று பொருள்; 'லகு' என்றால் கனமில்லாத ஓசை என்று பொருள்.

'நிரையசை' என்றால் இணையோசை என்று பொருள்.

'குரு' என்றால் கனமான ஓசை என்று பொருள். இவ்வகையினாலும் நேரசை நிரையசைகளும், லகு குருக்களும் வெவ்வே றியல் புடையன என்பது புலனாகின்றது.

தமிழில் மூவசைச்சீர் எட்டு

நேரசை, நிரையசை என்னும் இரண்டினை வைத்துஉறழ்ந்தால் ஈரசைச்சீர் நான்குவரும். இந்நான்கினை இரண்டுபடியாக நிறுத்தி, ஒன்றன் ஈற்றில் நேரையும் மற்றொன்றின் ஈற்றில் நிரையையும் சேர்க்க, மூவசைச் சீர் எட்டாக வரும். இவ்வெட்டினுள் நேரீற்று மூவசைச் சீர் நான்கினையும் வெண்பாவுரிச் சீர் என்றும், நிரையீற்று மூவசைச்சீர் நான் கினையும் வஞ்சி உரிச்சீர் என்றும் வழங்கு கின்றோம்.

வடமொழியாளர் கூறும் எட்டுக்கணம்

லகு, குரு என்னும் இரண்டினையும் நேரசை நிரையசைகளைப் போல் வைத்து உறழ்ந்தால் இரண்டன் கூட்டம் நான்கும், மூன்றன் கூட்டம் எட்டும் ஆகும். பிற்கூறிய எட்டைத்தான் அவர்கள் கணம்என்று வழங்கு கின்றார்கள்.

''லகுகுரு, கண, பத, விருத்தம்'' என்பன அவர்கள் கூறும் சந்தசின் உறுப்பாகும்.

வடமொழியாளர் லகு, குரு என்னும் இரண்டாற்கொண்ட எட்டுக் கணங்களுள்

1 லகு குரு குரு, என்னும் ஆதி லகுவை யகணம் என்பர்; இதன் தெய்வம் நீர் என்றும் இதனால் தழைத்தல் உண்டாகுமென்றும் உரைப்பர்.

2 குரு லகு குரு, என்னும் இடை லகுவை ரகணம் என்பர். இதன் தெய்வம் பாம்பு என்றும், இதனால் இறத்தல் நிகழும் என்றும் இசைப்பர்.

3. 'குரு குரு லகு' என்னும் ஈற்றுலகுவை தகணம் என்பர்: இதன்தெய்வம் ஆகாயம் என்றும், இதனால் வறுமை (ஒன்றுமின்மை) உண்டாகுமென்றும் உரைப்பர்.

4. 'லகு லகு லகு' என்னும் முற்றும் லகுவை நகணம் என்பர்; இதன் தெய்வம் சுவர்க்கம் என்றும், இதனாற் செல்வம் விளையுமென்றும் செப்புவர்.

5, 'குரு லகு லகு' என்னும் ஆதி குருவைப் பகணம் என்பர்; இதன் தெய்வம் திங்கள் என்றும், இதனாற் புகழ் விளையு மென்றும் புகல்வர்.

6. 'லகு குரு லகு' என்னும் இடைக்குருவை ஜகணம் என்பர்; இதன் தெய்வம் கதிரவன் என்றும், இதனால் நோய் விளையுமென்றும் நுவல்வர்.

7. 'லகு லகு குரு' என்னும் ஈற்றுக்குருவை சகணம் என்பர்; இதன் தெய்வம் காற்று என்றும், இதனால் பரதேசம் உண்டாம் என்றும் பகர்வர்.

8. 'குரு குரு குரு' என்னும் முற்றும் குருவை மகணம் என்பர். இதன் தெய்வம் நிலம் என்றும், இதனால் திருவுண்டாம் என்றும் தெரிவிப்பர்.

பாட்டியலார் கூறுவது

தமிழில் பாட்டியல் இலக்கணத்தைப் பகர்ந் தவர்கள்நேரசையை லகுவுடனும்,நிரையசை யைக் குருவுடனும் ஒப்புமைப்படுத்தினாற் போல, ஆதி நேராகிய கூவிளங்கனியை ஆதி லகுவாகிய யகணத்துடனும்; இடை நேராகிய புளிமாங்கனியைஇடை லகுவாகிய ரகணத்துடனும்; இறுதி நேராகிய கருவிளங் காயை இறுதி லகுவாகிய தகணத்துடனும்; முற்றும் நேராகிய தேமாங்காயை முற்றும் லகுவாகிய நகணத்துடனும்; அவற்றைப் போலவே, ஆதி நிரையாகிய புளிமாங்காயை ஆதி குருவாகிய பகணத்துடனும்; இடை நிரையாகிய கூவிளங்காயை இடைக் குரு வாகிய ஜகணத்துடனும்; இறுதி நிரையாகிய தேமாங்கனியை இறுதிக் குருவாகியு

ஸகணத்துடனும்; முற்றும் நிரையாகிய கருவிளங்கனியை முற்றும் குருவாகிய மகணத்துடனும் ஒப்புமைப் படுத்தி, அதற்குரிய தெய்வத்தையும் பயனையும் சேர்த்துவிட்டு, மூவசைச் சீர்களுள் இன்னின்னவை நற்கணத்தின் பாற்படுமென்றும், இன்னின்னவை தீக்கணத்தின் பாற்படுமென்றும் பாகுபாடு செய்து விட்டனர்.

மூவசைச் சீர்களைக் கணக்கிட்டால்

ஆனால், மேற்கூறிய மூவசைச்சீர்களை லகு குருக்களைக் கணக்கிடும்முறையிற் கணக்கிட்டால் கூவிளங்கனி 'குரு லகு குரு லகு லகு' என்றும், புளிமாங்கனி 'லகு லகு குரு லகு லகு' என்றும், கருவிளங்காய் 'லகு லகு லகு குரு, குரு' என்றும், தேமாங்காய் 'குரு குரு குரு என்றும்.

புளிமாங்காய் 'லகு லகு குரு குரு' என்றும், கூவிளங்காய் 'குருலகு குரு குரு' என்றும், தேமாங்கனி 'குரு குரு லகு லகு' என்றும், கருவிளங்கனி 'லகு லகு லகு குரு லகு லகு' என்றும் ஆகின்றபடியால் இவற்றையகணம் முதலாகிய எட்டுக் கணங்களாகக் கூற முடியாதே.

தாளசமுத்திரம் கூறும் செய்தி

தாள சமுத்திரம் என்பது தாளமரபுகளைக் கூறும் ஓர் இசைநூலாகும். அது, லகு குருவால் அமைந்த எட்டுக் கணங்களுக்கும், மயிலைக் குவேறன் என்னுந் தலைவனுக்கு உரிமையான எட்டு ஊர்ப் பெயர்களை எடுத்துக்காட்டாகக் கூறுகின்றது. அவை அமைந்த வெண்பாவினைக் கீழே காண்க:—

> ''துய்யவா மந்துூர் புகாரூர் தென் சூரியூர்
> மயிலைக் குவேறன்வயலூர்-செய்யவயல்
> மாகாழி யாகும் விராலிப்பூ வணம் மதுர
> மயரஸத ஜபந மாகும்'' (தாள சமுத்- பக். 15)

என்பது அப்பாடல். அதில் உதாரணமாக வந்த ஊர்ப் பெயர்களைக் கணக்கிட்டால்

'ஆமந்தூர்: குருகுருகுரு ம கணமாகும்' இது தேமாங்காய்
'புகாரூர்: லகுகுருகுரு ய கணமாகும்; இது புளிமா
'சூரியூர்: குருலகுகுரு ர கணமாகும்; இது; கூவிளம்
'வயலூர்: லகுலகுகுரு ஸ கணமாகும்: இது புளிமா
'மாகாழி: குருகுருலகு த கணமாகும்; இது தேமாங்காய்
'விராலி: லகுகுருலகு ஜ கணமாகும்; இது புளிமா
'பூவண: குருலகுலகு ப கணமாகும்; இது கூவிளம்
'மதுர; லகுலகுலகு ந கணமாகும்; இது புளிமா

மேலே தாள சமுத்திர நூல் கூறும் எட்டுக் கண வாய்ப்பாட்டைத் தமிழ்யாப்பிலக்கண முறைப்படி கணக்கிட்டால் தகணம், மகணம் மட்டும் மூவசைச் சீர்களாகும். மற்றைய கணங்களெல்லாம் ஈரசைச் சீர்களாகவே அமைகின்றன.

முடிவுரை

மேற்கூறியவற்றை யெல்லாம் நன்கு கருதின் வடமொழி கூறும் லகுகுரு வேறு, தமிழ் மொழி கூறும் நேர் நிரை வேறு என்பது புலனாம். அதனைப் போலவே அட்டகணமும் வேறு, மூவசைச் சீரும் வேறு என்பதுபுலனாம். இங்ஙனம் தம்முள்பொருந்தாதவற்றைப் பொருத்திப் பாட்டியலில் கூறப்படும் கணப் பொருத்தங்கள் தகுதியுடையனவாக அமையவில்லை என்பது என் எண்ணமாகும்.

குறிப்பு

எட்டு முச்சீர்கட்குக் கணம் வகுத்துக் கொண்ட முறை, சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணிநிகண்டு முதலியவற்றிலும் காணப்படுகின்றது. அதனால் இவ் வழக்கம் சங்க இலக்கிய காலங்கட்குப் பின் வடமொழி அமைப்பை யொட்டி ஏற்பட்டுள்ளது போலும்.

தாவரவியல்

வரலாறு காணாத காலம்

ஆங்கிலத்தில்: கே. ஏ. சௌதுரி
ஏ. கே. கோச்
எ.்ச். என். சென்

தமிழாக்கம்: கு. சீனிவாசன்

1. தாவரவியல் - வரலாறு காணாத காலம்

கே. ஏ. சௌதுரி

வரலாறு கண்ட காலத்தினும் வரலாற்றுக்கு முந்திய காலம் பன்மடங்கு பெரியதாகும். ஏறக்குறைய ஐந்து இலட்சம் ஆண்டுகளாகச் சிறுசிறு வட்டமாகத் திரிந்த மக்கள் உணவுப் பொருள்களைத் தேடி அலைந்தும், சில காலங்களில் குகைகளில் உறைந்தும், வேறு சில காலங்களில் வெளியுலகில் தங்கி இயற்கைவாழ்வு நடத்தியும் வந்தார்கள் என இன்று நம்பப்படுகிறது. இக்காலத்திலேதான் அவர்கள் வேட்டையாடுதற்குக் கற்களைக் கருவிகளாகக் கொண்டனர் போலும். இதற்குப் 'பழைய கற்காலம்' என்று பெயர். இந்நாளிலேயே கற்கருவிகளின்றித் தாவரப் பொருளாகிய மரக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டன என்று சில தொல்பொருளாய்வாளர்கள் கருதுகின்றனர். எனினும், பிந்திய கற்காலத்தில்தான்அவர்கள் மரக்கருவிகளைக் கையாண்டனர் என்று அதிகார பூர்வமாகத் தெரிகிறது. இக்காலத்தில் 'கிளாக்டொனியன் நாகரிக'த்தைச் சார்ந்த மக்கள் இங்கிலாந்து நாட்டில் 'டாக்சசு பக்காட்டசு' (*Taxus baccatis L*) என்னும் யூமரத்தை ஈட்டியாகப் பயன்படுத்தினர். சர்மனியில் சற்றேறக் குறையஇதே காலத்தைச் சார்ந்த ஒருயானையின் எலும்புக்கூட்டுக்குள் யூ மரஈட்டி இருந்ததாக 'ஆக்சு' 'உல்லி' என்னும் இருவரும் விவரிக்கின்றனர். ஆகவே, பிந்திய கற்காலத்திலேதான் மக்கள் மரப்பொருள்களைக் கையாண்டனர் என்று பண்டையச் சான்று கொண்டு கருதலாம்.

தாவரப் பொருள்களை அத்துணைப் பழங்காலத்தில்மக்கள் பயன்படுத்தியதாக இந்திய நாடு சொல்லிக் கொள்ள முடியாது. நமக்குரிய மிகப் பழைய பதிவு சிந்துச் சமவெளி நாகரிகத்திலிருந்துதான் கிடைக்கிறது. அதில் தானியங்களும், மரங்களும் தாவரப் பொருள்களும் பயன்படுத்தப்பட்டன. இதற்கு உண்மையான சான்றுகள் ஒரு சிலவே ஆங்காங்குச் சிதறிக் கிடக்கின்றன. அவற்றிலிருந்து தாவரப் பொருளின் பயன்பாட்டிற்கான வரலாற்றை ஒழுங்குற அமைக்க முடியவில்லை. ஆகவே, தானியங்கள், பருத்தி நூல், மரங்கள் இவற்றை அந்நாளைய மக்கள் பயன்படுத்திய வரலாற்றை மட்டும் தர இங்கே வகை செய்யப்பட்டுள்ளது. மற்றைய தாவரப் பொருள்களைப் பற்றித்

த்குந்த சான்றுகள் கிடைத்தபோது இதனை ஆராய்வது நலம் பயக்கும். இப்போதைக்கு அவற்றை ஒதுக்கி வைப்போம்.

தானியங்கள்

கோதுமையும் பார்லியும்

அரப்பா, மொகஞ்சதாரோவிலிருந்து கோதுமை, பார்லி ஆகிய தானியங்களைப் பற்றிய சான்றுகள் கிடைத்துள்ளன. மெசபடோமியா நாட்டின் பழம்பொருள் களில்இவ்விரு தானியங்களும்காணப்படுதலின் ஏனைய சான்றுகளோடு சிந்துவெளி நாகரிகத் திற்கும், மெசபொடோமிய நாகரிகத்திற்கும் (U R ა.) ஒருவிதத் தொடர்பு இருந்தது என நம்ப முடிகின்றது மேற்கு ஆசியாவில் இவ்விரு தானியங்களும் தொன்று தொட்டு நாட்டுப்புறங்களில் பயிரிடப்பட்டன என்று எல்பே என்பவர் கூறுவது சுவையான ஒரு செய்தியாகும், மொகஞ்சதாரோவில் கிடைத்த கோதுமை இனங்கள் *Triticum vulgare (T. aestinum L) T. Compactum* எனவும், அரப்பாவில் கிடைத்தவை. *Triticum compactum Host T. Sphaerococcum Perceive* எனவும், ஹாத்ரா என்பவர் புலப் படுத்துகிறார்.[1] இந்த மூன்றுகோதுமைஇனங் களையும் சொல்லியல் தலைமுறையியல் வல்லுநர்கள் *vulgare* அல்லது ரொட்டிக் கோதுமை இனத்தில் சேர்க்கின்றனர்[2] கோதுமை தென்மேற்காசியாவில் தோன்றி, ஐரோப்பா, வடஆப்பிரிக்கா வரை ஒருபுறம் பரவிற்று என்றும், காக்கேசியன் நிலப்பகுதி மூலமாக இந்தியாவிற்கு மற்றொருபுறம் பரவிற்று என்றும் புதைபொருள் ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர்.[3] ஆனால், இக் கொள்கை மேலும் வலுவடைய வேண்டும்.

அண்மையில் மேற்கிந்தியாவில் நல்ல சான்றுகள் கிடைத்துள்ளன. செம்புக் காலத் தைச் சேர்ந்த *T. vulgare-compactum Triticum Sp.* ஆகிய இருகோதுமை இனங்கள் நவ்தாதோலி மகேஃச்வரில் அகப்பட்டதாக் மிட்ரே என்பவர் கூறுகிறார். எங்கிருந்து இவை வந்திருக்க முடியும் என்பதற்குத் தற்போது சான்று கிடைக்கவில்லை எனினும் தாவரப் படிவங்களின் அறிவியல் ஆராய்ச்சியின் முடிவாக, சிந்துசமவெளிக் கும் இந்தச் செம்புக்கால நிலப்பகுதிக்கும் இடைப்பட்டதாக இச்செய்திபற்றிஏதேனும் கிடைக்குமாயின் இந்தக் கோதுமை இனங் களின் தொன்மைச் சிறப்புப் புலப்படும்.

மொகஞ்சதாரோவிலும், அரப்பாவிலும், முறையே *Hordeum vulgare Var. rudum H. vulgare Var. hexasticum* எனும் இரு பார்லிஇனங்கள் அகப்பட்டுள்ளன. தற்காலத் தில் பயிரிடப்படும் பார்லி இனங்கள், இரு வரிசைகள், ஆறு வரிசைகள் என்று இரு இன்றியமையாப் பிரிவுகளாகவும், இவற்றின் பிற, புற அமைப்பைக் கொண்டு சிறு உட் பிரிவுகளாகவும் பிரிக்கப்படுகின்றன. இவை இருவேறு இடங்களிலிருந்து தோன்றியிருக்க லாம் என்று வாவிலோவ் என்பவர் கூறு கின்றார். மட்டச்செதிலும் உமியும் உள்ள பார்லி எதியோப்பியா, வட ஆப்பிரிக்கா விலிருந்தும், குட்டைச் செதிலுடையனவும் செதிலற்றவையும், உமியில்லாதனவும் ஆகிய முடிகொண்ட பார்லி, சீனா, சப்பான், திபேத் ஆகிய நாடுகளிலிருந்தும் தோன்றியிருக்க லாம் என்கிறார். எல்பீக் என்பவரோ, இரு வரிசையும் உமியுமுள்ள *H. Spontaneum* என்னும் காட்டுவகைப் பார்லியிலிருந்து பயிர் செய்யப்படும் *H. distichum* போன்ற பார்லி தோன்றி யிருக்குமென்றும், பின்னையதி லிருந்து ஆறுவரிசைப் பார்லி உண்டாயிற்று என்றும் கூறுகிறார். தற்போது பயிர் செய்யப்படும் ஆறுவரிசையும் உமியுள்ளதும் இல்லாததுமான குறைந்த கதிருள்ள *H tetrastichum* சமவெளிப்பகுதியிலும், அதே போன்ற ஆனால், அடர்ந்த கதிருள்ளதுமான *H.hexastichum* மலைப்பகுதியிலும் வளர லாயின என்பார். ஆனால், ஆப்கானிஃச் தானத்திலிருந்து கிட்டிய, சௌத்ரியால் ஆய்வு செயயப்பட்ட பார்லியினம் எல்பீக்

கருத்துக்கு ஏற்பதாகஇல்லை. ஆகவேபார்லிப் பயிரின் தோற்றம் மேலும் ஆய்வுக்குரியது. அப்போது தான் இந்தியப் பார்லியின் தொடர்பு தெளிவாகும்.

அரிசி

அரிசியைப்பற்றிய வரலாறும் தெளிவாக இல்லை. சிலர் 4800 ஆண்டுகட்கு முன்னர் அரிசி சீனாவில் தோன்றிற்று என்றும், அங்கிருந்து பிற்காலத்தில் இந்தியாவுக்கு வந்தது என்றும் கருதுகின்றனர். டி. கண்டோல் இதனை நம்பவில்லை.4 கே. எ. சௌந்தரி புலப்படுத்தியது போல இந்தியாவில் அரிசியைப் பயன்படுத்தியதற்கு நேரடியான சாட்சியம் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முந்திய செம்புக் காலத்தைச் சேர்ந்த மீரட்டுக்கு அண்மையிலுள்ள அஸ்தினா புரத்திலிருந்து கிடைக்கிறது. அங்கே தீய்ந்துபோன அரிசி தான் கிடைத்தது. அதனுடன் வீட்டு மண் சுவரை இறுக்குவதற்கு நெல் உமி பயன்படுத்தப்பட்டது.

இதனால் அஸ்தினாபுரக் காலத்திற்கு முன்பே வட இந்தியாவில் அரிசி பயன்படுத்தப்பட்டது தெளிவாகும். ஏனெனில் துணைப் பொருளான உமியின் பயனைத் தெரிந்து கொள்வதற்குப் பல்லாண்டுகட்கு முன்பே இன்றியமையாத இயற்கைப் பொருளான அரிசியின் பயன் மக்களுக்குப் புலப்பட்டிருக்க வேண்டும். இதற்கு இரண்டு எழுத்துமூலமான சான்றுகள் உள்ளன. முதலாவது, அரிசி அதர்வண மறையில் குறிப்பிடப்படுகிறது. இரண்டாவது, ஆயூர்வேத மருத்துவமுறையில் ஒரு சில நோய்கட்குப் பரிகாரமாக அரிசியைக் கொள்ள வேண்டும் எனச் 'சுஸ்ருதர்' அறிவுறுத்துகிறார். ஆகவே கி.மு 1000-க்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே அரிசியுணவு தெரிந்திருந்தது என்ற உண்மை இச்சான்றுகளால் வலியுறுத்தப் படுகின்றது. குசராத்தில் உள்ள லோதல், சௌராட்டிரத்தில் உள்ள இரங்பூர் என்னுமிடங்களில் கி.மு. 2000-க்கும் கி.மு. 1600-க்கும் இடைப்பட்ட காலத்து நெல், உமி கிடைத்ததாகக் கோசி கூறுகிறார். கோசுக்குக் கிடைத்த சான்றுகள் போதாவாகையால் அவர் கூற்று ஐயப்பாட்டிற்குரியதென மிட்டர் தெரிவித்திருக்கிறார். ஆகவே, அந்நாளில் அரிசி உணவாகக் கொள்ளப்பட்டது என்ற முடிவுக்கு வருமுன் அரப்பா புதை பொருள்களில் அரிசி பற்றி மேலும் சான்று காண்பது முறையாகும். மற்று, செம்புக் காலத்து நவதா தோலி மகேஸ்வர் என்னும் மேற்கிந்தியப் பகுதிகளில் ஒரைசா சாடைவா (*Oryza Sativa L*) அரிசி கிடைப்பதாக மிட்டர் கூறுவது, தென்னிந்தியாவில் இருந்து கிடைக்கும் மிகப் பண்டைய அரிசிக்கு முதல்முதல் கிடைக்கும் சான்றாகும். இதற்கு மேற்கொண்டு சான்று கிடைக்குமா என்று பொறுத்திருந்துபார்த்துப் பிறகு பயனுள்ள ஆய்வை நடத்தலாம்.

கேழ்வரகு

சங்காலியாவும் அவரது தோழர்களும் தென்னிந்தியாவில் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பல புதை பொருள் இடங்களை அகழ்ந்து ஆய்ந்துள்ளனர்.5 கி.மு. 2000 க்குரிய ஓரிடத்தில் ஆய்ந்ததில் அவர்கள் கேழ்வரகைக் (*Eleuesine Coracona (L) Gaertn*) கண்டனர். கேழ்வரகு முதலில் தோன்றியது இந்தியாவில் என்பர். இதனை வலியுறுத்துவதற்கு மேலும் பல இடங்களில் பழமையாகவே கேழ்வரகு இருந்தது என்பது காட்டப்படவேண்டும்.

பருத்தி

இந்த நூற்றாண்டில் இன்றியமையாத வணிகப் பொருளாக உள்ள பருத்தி *Gossypium sp*) பழைய சிந்துச்சமவெளி நாகரிகம் வரை தொடர்புடையது. மொகஞ்சதாரோவில் பருத்தித்துணி இழைகளும் கண்டு எடுக்கப் பட்டன. தற்போது இந்தியாவில் மிக அதிகமாகப் பயிரிடப்படும் பருத்தியில் (*G.arboreum*)இழையென அவற்றைக் குலாதிடர்னர் ஆகியவர்கள் நுண்ணோக்கியில் ஆய்ந்து கண்டனர். பழைய உலகப் பருத்தியில் ஆராய்ச்சி செய்த எட்சின்சன்

சைலோ, ஃசிடீபன்சு முதலியோர் பயிர் செய்யப்படும் பருத்தி சிந்துச் சமவெளியில் தோன்றியதென்று 1947 இல் கூறினராயினும், பின்னர் அட்சின்சன்[6] இதனை மறுத்து ஆப்பிரிக்காவில் தோன்றியிருக்கலாம் என்கிறார். இதற்கு முன்னரே வாட் என்பவர்[7] இந்தியாவின் பழைய பருத்திச் சரக்கின் ஒரு பகுதி ஆப்பிரிக்காவிலிருந்து வந்ததுஎன்றார். இவ்வாராய்ச்சி தொடர்ந்து நடக்கிறது. எகிப்து நாட்டில் நூசியாவில் சிற்றிழைகள் உள்ள பருத்தி விதைகள் தோண்டி எடுக்கப் பட்டன. அவை *G. herbaceum* என்னும் பருத்தியிழைகளை ஒத்துள்ளன என்று நுண்ணோக்கியின் மூலம்அறியப்பட்டது. ஆதலால் இன்றைய பருத்தியின் தோற்றம் பற்றிய ஒருதலையான முடிவுக்கு வருவதற்கு மிகுந்த ஆராய்ச்சி தேவை என்பது புலனாகும்.

பருத்தி முதன்முதலாகக் குறிப்பிடப் படுவது இருக்குமறையில் என்று பிரௌன்[8] எடுத்துக் காட்டுகிறார் இதுவே இதற்கு எழுத்து மூலமான சான்றாகும். பின்னர் எழுதப்பட்ட மனுவின் சமய நூல்களிலும் பருத்தி குறிப்பிடப்படுகிறது. இரோடோடசு, தியோபிராஃசுட்டசு முதலிய கிரேக்க எழுத்தாளர்கள் இந்தியக் காட்டு மரப்பழங்களிலிருந்து பருத்தி உண்டாகிறது என்பர். இந்தியர்கள்பருத்தியைப்பயிரிட்டதல்லாமல் பருத்தியில் இருந்து கொட்டை நீக்கி நூலாக முறுக்கித் துணிநெய்யும் முறைகளையும் ஏற்படுத்தினார். புராதனக்கருவிகள் ஆயினும், பண்டைய நூற்றாண்டுகளில் இந்தியாவுக்கு வந்த அயல்நாட்டார் நமது பருத்தியாடைகளின் சிறப்பைப் பாராட்டியுள்ளனர்.

மரம்

இந்தியாவில் மரத்தின் பயன்பற்றிய மிகப் பழைய தகவல் அரப்பாவில் இருந்தும், குசராத்தில் அரப்பா நாகரிகப் பகுதிகளில் இருந்தும் கிடைக்கிறது. முன்னையதில் தேவதாரு (*Cedrus deodara*) மரத்திலும், கருங்காலி (*Dalbergia latifolia roxb*) மரத்திலும் செய்யப்பட்ட சவப்பெட்டி கிடைத்தது. இரண்டு மரங்களும் நறுமணத்திற்குப் பெயர் பெற்றவை அன்றித் தானியங்களை உடைக்கும்மரஎந்திரமும்இங்கேதென்பட்டது. *Zizyphus mauritiana Lamk Syn. Z. Jujuba Lam non Mill* எனும் இலந்தை மரத்தில் செய்யப்பட்டதாக மரத்துண்டுகளைப் பரிசோதித்த சௌதுரியும் கோசும்கூறுவர். இங்ஙனம் மரங்களைப்பொறுக்கி எடுத்துக் கையாண்டதைப் பார்த்தால்இம்மரங்கள் அவ்விடத்தில் வளர்ந்தன என்பதுடன், அவற்றின்பயன்களும் நன்கு தெரியப்பட்டிருந்தது என்பதும் புலப்படும். ஆகவே, அரப்பா நாகரிகம்,தாவரப் பொருள்களைப் பயன்படுத்தும் பல்லாண்டுப் பழக்கத்தின் அடிப்படையில் எழுந்தது என்பதற்கு தக்க சான்றாகும். குசராத்தில் லோதால் என்னும் இடத்தில் கிடைத்த மரக்கரிகள் (*Accacia sp*) வேல இனம் (*Albizzia sp*) வாகைஇனம்(*Tectona grandis L. and Odina Cordifolia (Roxb)Benth and Hook, Soymida febrifuge A.Juss*) தேக்கு இனம் என ராவும் லாலும் ஆராய்ந்து கண்டனர். இதனால், அரப்பா மக்கள் மரங்களின் பயனை நாம் இந்நாளில் அறிந்துள்ள அளவிற்கு ஏறத்தாழத் தெரிந்திருந்தனர் என்பது தெளிவாகிறது

காச்மீரில் பர்சோம் பகுதியிலும், பீகாரில் சிரண்டு பகுதியிலும், புதுக் கற்காலத்தைச் சேர்ந்த மரக்கருவிகள், தளவாடங்கள் ஆகியவற்றின் இரு பெரும் எஞ்சிய பகுதிகள் குறிப்பிடத்தக்கவை இவ்விடங்களில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பலவகை மரங்கள், செடிகள் ஆகியவற்றை இவை புலப்படுத்துகின்றன. அஃச்தினாபுரத்திலிருந்து கிடைத்த *Dalbergia Sissoo Roxle Holarrhena anti-dysenterica Wall* மரங்கள் செம்புக் காலத்தவை என்றும், அவை விறகாகப் பயன்பட்டன என்றும் சௌதுரியும் கோசும் கூறுகின்றனர்.

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பாடலிபுரத்தில் கங்கை ஆற்றின் மண் அரிப்பைத் தடுப்பதற்கு முடைசல் பிடிக்கப்

பட்டுள்ளது. அதற்கு *Shorea robusta Gaertn*, இந்த மரம் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்த மரம் நெடுங்காலத்திற்கு மண்ணில் மடித்துப் போகாத தன்மைவாய்ந்த சிறந்த மரங்களுள் ஒன்றாகும் எனச் சௌதுரியும் கோசுவும் கருதுகின்றனர். சிசுபல்காரில் (*Acacia SP.*) மரம், வாயிலாகப் (Gate) பயன்படுத்தப்பட்டுள்ளது என்பர். இவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் வரலாறு காணாத மனிதர் மரங்களை ஏற்றவகையிற் பயன்படுத்த அவற்றின் இயல்புகளை உணர்ந்திருந்தனர் என்பது தவறாது புலனாகும்.

பழைய நூல்களில் மரங்களின் இயல்புகளும் அவற்றின் பயன்களும் பல இடங்களில் பேசப் படுகின்றன. சிலவிடங்களில் பல்வேறு செயல்களுக்கு மரங்களை எப்படிப் பயன்படுத்துவதென்று கூறப்பட்டுள்ளது. இக்கூற்றுக்களை ஆராய்ந்தால் அக்காலத்திலேயேமரங்களைப் பயன்படுத்தும் முறைகள் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருந்தனர் என்பதை அறிகிறோம். மரவேலைகளைச் செய்வோர் 'வத்தகி'' எனப்பட்டனர் என்ற குறிப்பு முதன்முதலாகக் கிடைக்கிறது. ஆகவே, இந்தியமக்கள் ஏறக்குறைய 5000 ஆண்டுகட்கு முன்னரே மரங்களின் இயல்புகளையும், அவற்றைத் திறம்படப் பயன்படுத்துவதையும் நன்குணர்ந்து இருந்தனர் என்பது போதரும். மறைக் காலத்தினர் பயிர்களை மாற்றி மாற்றிப் பயிர் செய்தார் என்றால் மரங்களைப் பயன்படுத்திக் கருவிகளைச்செய்வது அதற்கும் முன்பிருந்த மக்களைச் சாரும்.

2. நான்மறைக் காலமும் அதற்குப் பின்னரும்

ஏ. கே. கோச்
எஃ்ச். என்- சென்.

மறைக் காலம்:-

வரலாறு காணாத காலத்தில் கோதுமை, பார்லி, நெல், கேழ்வரகு முதலிய தானியங்கள் பயிரிடப்பட்டன என்றால், பலவகை மரங்களின் பயன் தெரிந்திருந்த தென்பதற்கு சான்றுகள்கிடைக்கின்றன என்றால், சம்கிதைகள், பிராமணங்கள், ஆரண்யக உபநிடதங்கள் முதலிய பழைய வரலாற்றுக் காலத்திய இலக்கியங்களில் அவற்றைப் பற்றிய குறிப்புகளை எதிர்பார்ப்பது இயல்பேயாகும். மறைக் காலத்தியப் பொருளியலில் இன்றியமையாப் பகுதியாகப் பயிர்த்தொழில் வளர்ச்சி இருந்தது என்பதற்கு இவ்இலக்கியங்களே போதிய சான்று. அந்நாளில் கலப்பையின் பயன், விதை விடுதல், அரிவாள் கொண்டு அறுவடை செய்தல், தாளடித்தல், தானியங்களைத் தூற்றுதல், வாய்க்கால்வழி நீர் பாய்ச்சுதல் முதலிய வேளாண்மை வளர்ச்சிபற்றிய குறிப்புகள் இருக்கு மறையில் காணப்படுகின்றன. பின்னைய மறைக் காலத்தில் வேளாண்மையில் பலவகையான முன்னேற்றங்கள் தென்படுகின்றன. அவற்றுள் கோதுமை, அவரை, சோளம், எள் முதலிய பயிர் பற்றிய குறிப்பு, எள்ளினின்றும் எண்ணெய் எடுத்தல், பருவத்தில் பயிர் அறுவடை செய்தல், தாவர நோய்களை மந்திரத்தால் களைய முயலுதல் முதலியவை குறிப்பிடத்தக்கவை. தாவர வாழ்வில் பழகியதன் காரணமாகத் தாவரங்கள் நோய் தீர்க்கும் மருந்தாவதை உணர்ந்திருந்தனர். இதனை அறியும் அதர்வ மறை வித்தகர்கள் தோன்றினர். அதே நேரத்தில் தொழில் வளர்ச்சிக்குங்குறைவில்லை. கூடைமுடைதல் கயிறு முறுக்குதல், சாயமேற்றுதல், தேர் கட்டுதல் முதலிய வேளாண்மை அடிப்படைத் தொழில்களும் காணப்படுகின்றன,

சம்கிதைகள், பிராமணங்கள், உபநிடதங்கள் முதலியவற்றில் காணப்படும் தாவர அறிவு

சம்கிதைகள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் முதலிய சான்றிலக்கிய நூல்களிலும், கரணங்களை (சடங்குகளை) ஒட்டிய பொருள்களிலும் காணப்படும் தாவரக்குறிப்புகள் எவ்வகையான தாவர அறிவின் வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றன? தாவர அறிவியல், பிற அறிவியல்கள் போல, இத்தெய்வத் தொடர்பான இலக்கியங்களில் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கின்றது. இது ஓர் இடர்ப்பாடு. ஒழுங்குபடுத்திய தாவர அறிவும் அதன் சிறப்பியல்பாகிய பரிணாமமும், அப்போது வளரவில்லை. எனினும் அக்குறிப்புக்களை எல்லாம் தற்காலத் தாவரவியலுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்திப் பார்த்தால் தாவரங்களின் புறவியல், அகவியல், செயலியல், வகைப்பாட்டியல் முதலியவற்றிற்கு அவரது முயற்சி முதலிய அறிவியல், மறைக் கால இந்தியர்களுக்கு இருந்தமை ஓரளவு புலப்படும்.

சம்கிதைகளிலும், பிராமணங்களிலும், உபநிடதங்களிலும், தாவரத்தின் புறவியல் பகுதிகளாகிய வேர், முளை, தண்டு, கிளை, இலை, பூ, பழம் முதலிய உறுப்புக்கள் தெளிவாகப் பெயரிடப்பட்டுள்ளன. இருக்குமறை அடிமரத்தை கந்தம்என்றும், தைத்திரிய சம்கிதையும் வாசசநேய சம்கிதையும் தாவர வேரை மூலம் என்றும், இலைப்பகுதியைத் தூலம் என்றும், தண்டைக் காண்டம் என்றும், குச்சியை வல்சம்என்றும், கிளையைச் சாகை என்றும், இலையைப் பர்ணம்என்றும், மலரைப் புட்பம் என்றும், கனியைப் பலம் என்றும் விவரிக்கின்றன.9 மருந்துச் செடிகளைக் கூறும் அதர்வ மறையிலும் இவை அவ்வாறே சொல்லப்படுகின்றன. 10

மரங்கள் வெவ்வேறு நிறமுள்ளனவாகவும் கூறப்படுகின்றன. பழுப்பு (பப்ரு), வெண்மை (சுக்ரம்), சிவப்பு (ரோகிணீ), கறுப்பு (கிருட்டிணம்), புள்ளியுடையவை (பிருச்னி) அழுக்கு (அளிக்னி), ஒரு சில பரவி வளர்வன (பிரஸ்ச்த்ருணதி), அடர்ந்தவை (ஸ்தம்பினி), இணைந்தவை (காண்டினி), கிளைமலிந்தவை (அம்சுமதி), ஒரு புல்லி வட்டத்தைக் கொண்டவை (ஏகசுங்கா), கிளைபடர்ந்தவை (விசாகா), நீண்டு வளர்பவை (பிரதன்வதி) என்ற பாகுபாடும் காணப்படும்

செடிகளின் வேர்களில் தேன் உள்ளது. அவற்றின் உச்சியிலும் நடுவிலும் இலையிலும் மலரிலும் தேன் பிலிற்றுகிறது.

மலர் உள்ளன, மஞ்சரி உள்ளன, பழமுள்ளன, பழமில்லன முதலியவற்றில் தாவரங்களின் உள்ளமைப்பைப் பற்றிய விரிவான அறிவைக் கொள்ளமுடியாது. எனினும் இருக்கு மறையில் மரத்தின் மென்மையான பகுதியும், கடினமான பகுதியும் (தாரு) தெளிவாக வேறுபடுத்தப்பட்டுள்ளன என்று மசும்தார் குறிப்பிடுகின்றார். பண்டைய இந்துக்கள் மரத் தண்டை இருபகுதிகளாகப் பிரித்தறிந்தனர் என்பர். தண்டின் புறப்பகுதி 'த்வக்' என்றும் 'வல்கலம்' என்றும், 'மச்சா' என்னும் உட்சத்துப்பகுதியைச் சுற்றியுள்ள 'சாரம்' உட்பகுதி என்றும் கண்டனர். பிருகதாரண்ய கோபனிடதம் மனித உடலை மரத்துடன் ஒப்பிடும்போது, மரத்தின் உட்பகுதியின் அமைப்பைக் கீழ்க்காணுமாறு தெரிவிக்கிறது. புறப்பகுதியின் மேல்அடுக்கு 'வல்கம்' என்றும், கீழடுக்கு 'வல்கலம்' என்றும் தைத்திரிய சம்கிதை பிரித்துக்காட்டுகிறது.

பிருகதாரண்ய கோபனிடதம் மனித உடலை மரத்துடன் ஒப்பிடும்போது மரத்தின் உட்பகுதியின் அமைப்பைக் கீழ்க்காணுமாறு தெரிவிக்கிறது.

"மனிதன் ஒரு பெருமரத்தை ஒத்துள்ளான். அவனுடைய மயிர் மரத்தின் இலைகளைப் போலவும், தோல் மரப்பட்டை போலவும் இருக்கின்றன. தோல் வழியாகக் குருதி கசிவது போல மரப்பட்டையில் சாறு வெளி

யாகிறது. காயம்பட்ட இடத்தில் குருதி வெளியாவது போல வெட்டுப்பட்ட மரத்தில் சாறு வழிகிறது. அவனுடைய சதை மரப் பட்டைக்குள் இருப்பதை ஒத்ததாகக் காணப் படுகிறது. நரம்புகள் உட்புற நார்களைப் போன்றவை. சதைக்கு உள்ளே இருக்கும் எலும்புகள் போன்று, தண்டின் 'சகரம்' எனும் மெல்லியபகுதிக்குள் கடினமான பகுதி உள்ளது. எலும்புக்குள்ளே ஊன்நீர் இருப்பது போலத் தண்டின் அகத்தே தக்கை இருக் கிறது.11

ஆகவே, தாவர உள்ளமைப்பில் புறத் தோல் (த்வக்), பட்டை அல்லது மென்தசை (சகரம்). அதனுள் இருக்கும் நார்த்தசை (கிநாபர்), உள்மரம் (தாரு), மரத்தினுள்ளே இருக்கும் தக்கை (மச்சா) என்னும் பகுதிகள் பிரித்தறியப்பட்டன.

இருக்குமறையில் வரும் சக்ருத் (சாணம்). கரிசம் (வறட்டி) என்னும் சொற்களைக் கொண்டு வேத காலத்தில் எருவிடுதல் தெரிந்திருந்தது என்று சிலர் கருதுகின்றனர். இச்சொற்கள் ஆளப்பட்ட பகுதியில் இக் கருத்து எளிதில் பொருந்துவதாக இல்லை.

'ஆநிம்ருச சக்ருதேக அபாபரத் கிம்' என்னும் இருக்குமறைச் சொற்றொடர் 'ஞாயிறு மறைகின்ற வேளையில் ஒருவன் கழிபொருள்களைச் சுமந்து செல்கிறான்' என்றுதான் பொருள்படும். 'யச்சக்ருத்க ரோதி தஸ்மை ஸ்வாகா' என்றுதான் தைத் திரிய சம்கிதை பஞ்சாணத்தைப் போற்று கிறது. அது உரமிடுவதை அறிந்திருந்த தாகக் குறிப்பதாகாது.

'கரீஷிணிம் பலவதிம் ஸ்வதா மிராம்
சநோ க்ருஹே
ஔதும்பரஸ்ய தேஜஸா தாதா புஷ்டிம்
ததாதுமே.

என்னும் அதர்வு வரிகள் விட்னி என்பவரால் ஒருவாறு உரம்பற்றியதாகக் கீழ்க்கண்ட வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'உரமிகுதியும் பழமிகுதியும் எப்போதும் மகிழ்ச்சி தரும் உதும்பா மரத்தின் (குளிசத் தின்) தேசசில் மகிழ்ச்சிகரமான இல்லத்தை தாதா எனக்குத் தருக'

'த்விஹ சம்வத் ஸரஸ்ய சஸ்யம் பச்யதே' என்று தைத்திரிய சம்கிதை இருபோக விளை வைக் குறிப்பிடுகிறது.12 ஆனால், மசும்தார் சொல்வது13 போல விளைவு மாற்றத்தைக் குறிக்குமா என்பது ஐயமாக இருக்கிறது. தானியங்களைத் தொகுப்பதும் சேமித்து வைப்பதும் பிருகதாரண்யகஉபநிடதத்திலும் மைத்ராயணி சம்கிதையிலும் காடகசம்கிதை யிலும் காணப்படும். நிலத்தின் சத்து நீர் என்றும், நீரின் சத்து செடி என்றும், செடி யின் சத்து பூ என்றும், பூவின் சத்து கனி என்றும் இந்நூல்கள் கூறும்.14

இருக்குமறைக் காலந்தொடங்கித் தாவரங் களின் புறவியல் அமைப்பைக் கொண்டு பாகுபாடு செய்ததாகத் தெரிகிறது.15பொது வாக மரங்கள் (விருட்சம்; செடிகள் (ஔசதி), கொடிகள் (வீருத்) என்று பிரிக்கப்பட்டன. பூக்குந் தாவரங்கள் (புட்பவதி), பூவாதன, காய்ப்பன (பலவதி), காயாதன எனவும் பகுக்கப்பட்டன, புல் வகைகள் அனைத்தும் 'த்ருணம்' என்று குறிக்கப்பட்டன. மேலும் புறவியல்பை மற்றும் சிறப்பியல்பைக் கொண்டு செடிகள் (பிரஸ்த்ருணதி) படர்வன (ஸ்தம்பினி) புதர் (ஏகசுங்கா), ஒருபுறவிதழ் (பிரதன்வதி), நீள்வன (அம்சுமதி), தழைப்பன (காண்டினி), ஒட்டியன, (விசாகா), நீண்ட கிளையுடையன. (சுவல), உணர்வன (நகாரிசா) தீமை பயவாதன, (மதுமதி) மிக இனியன எனவும் அதர்வ வேதத்தில் பிரிக்கப்பட்டன.

'நட்வலம்' என்பது ஒருவகைப் புல் மலிந்தஇடம், சிபால்யா என்பது (சிபால்யம்) சிபலம் வளருமிடம். இப்படியாக ஓரிடத்தில் வளரும் தாவரங்களைக் கொண்டு அவ்விடத் திற்குப் பெயரிடுவதும் வாசசநேயி சம்கிதை, தைத்திரிய பிராமணம், அதர்வமறை முதலிய வற்றில் காணப்படுகிறது.

மறைப் பிற்காலம்
மருத்துவ நூல்களில் தாவரவியல்

இக்காலத் தாவரஇயல் வளர்ச்சிக்குச் சமற்கிருத நூல்களைப் பெரிதும் நம்ப வேண்டியுளது. நோய்களையும் அவற்றிற்கு மறைகளிற் கூறிய மருந்துச் செடிகளையும் சரகர், சுச்ருதர், வாக்படர் முதலியோரின் மருத்துவ நூல்களும் அவற்றின் விரிவுரைகளும் விரிவாகக் கூறுகின்றன. வேதத்தில் மருந்து மூலிகைகளைப் பற்றியும், பண்டுவ (சிகிச்சை) முறை பற்றியும் கூறப்பட்டவற்றிற்கு மேலாக ஏற்பட்ட வளர்ச்சியை இந்நூல்களிற் காண்கிறோம். இதன் மூலம் தாவரஇயல் வளர்ச்சிபற்றியும் அறிகிறோம்.

தாவர அறிவில்லாவிட்டாலும் செடிகளின் தன்மைகளையும், அவற்றின் மருத்துவப் பயன்களையும், பிற அனைத்தையும் நன்கு அறிந்தவனே சிறந்த மருத்துவன் எனச் சரகர் திட்டவட்டமாகக் கூறுகிறார்.16 சமற்கிருதத்திலும், பிராகிருதத்திலுமுள்ள செடிகொடிகளின் பெயர்களை நன்கு தெரிந்து அவற்றின் குணங்களையும், இயல்புகளையும் தானே கண்டும் கற்றும் அறிந்துகொள்வதோடு, பலரையுங்கேட்டறிந்து கொள்ளலும் பேசசவித்தை முறை தெரிந்தவன் சிறந்த மருத்துவன் எனத் தன்வந்திரி நிகண்டு கூறும்17 'பேசச வித்தை' என்பது தாவரங்களையும், அவற்றின் வளர்ச்சி முறையையும் மருந்தியல்புகளையும் அறிந்து கொள்ளும் அறிவியல் பிரிவு.

புராணங்கள், அர்த்த சாத்திரம், பிருகத் சம்கிதைகளில் தாவர இயல்

அக்கினி புராணம், அர்த்த சாத்திரம் பிருகத்சம்கிதை ஆகிய வைவிருட்சாயுர்மறையென்னும் தாவரக்கலையைத் தனி அத்தியாயங்களில் கூறுகின்றன. விதைகளைத் தொகுத்தல், பொறுக்குதல், முளைக்க வைத்தல், செடிகளை ஒட்டுதல், பதியன் போடுதல், நடுதல், விதைத்தல், வளர்த்தல் மண்வளம் தேர்தல், எருவிடுதல், தாவர வளர்ச்சிக்கேற்ற தட்பவெப்பச் சூழ்நிலை காணுதல், குடியிருப்புகளில் அழகு, நலத்துறை இவற்றிற்கேற்பச் செடிகளை வளர்த்தல் முதலியனவெல்லாம் பேசப்படுகின்றன. வேளாண்மை பற்றிய தனி நூல்களன்றி மருந்துச்செடிகளைப் பற்றிய விருட்சாயுர் வேதம் வேளாண்மை பற்றியும் சிறப்பாகப் பேசுகிறது. வேளாண் மேற்பார்வை அலுவலருக்கு இருவகை அறிவு வேண்டுமெனக் கௌடில்யர் கூறுவர். ஒன்று வேளாண்மை பற்றிய கிருசிதந்திரம்; மற்றொன்று தாவர இயல் பற்றிய விருட்சாயுர் வேதம். பண்டைய இந்தியாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 64 கலைகளில் விருட்சாயுர் வேதக்கலையும் ஒன்றென வாத்யாயனரின் காமசூத்திரம் கூறும். இதனின்றும் தாவர இயல் தனி அறிவுத்துறையாக இருந்ததை அறியலாம். அன்றி வேளாண்மை பற்றிய கிருசிபராசரம் என்னும் பிரபல நூலும் இருந்து வருகிறது. கிறித்து பிறப்பதற்கு முன்னரே பராசரரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும்விருட்சாயுர்வேதக்கையெழுத்துப் படி கிடைத்துள்ளது. ஆகவே மறைப் பிற்காலத்தினர் தாவரவியலைத் தனித்தியங்கக் கூடிய ஓர் அறிவியல் துறையாகக் கண்டனர் என்பதில் ஐயமில்லை.

தத்துவத்துறை, பிறதுறை நூல்கள் :-

மேலும் தத்துவ நூலாகிய நியாய வைசேடிகம், அதனுடைய விரிவுரைகள், அமர கோசம், இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றிலும் ஆங்காங்கே சிறந்த தாவரக்குறிப்புகள் உள்ளன.

பராசரரின் விருட்சாயுர்மறை

முன்னர்குறிப்பிடப்பட்ட நூல்கள் மருத்துவம், அரசியல்முறை, காப்பியம், பொதுச் செய்திகள் முதலியவற்றைக் கூறுதற்கெழுந்தவை. அவற்றுள் தாவரவியல் பற்றிய சிற்சில செய்திகள் காணப்படும். ஆனால், பராசரரின் விருட்சாயுர் வேதம் தாவரவியலுக்காகவே எழுதப்பட்டதாகும். புகழ்

பெற்ற இதன்படியொன்றை நவத்விபத்தைச் சேர்ந்த வைத்திய சாத்திரி சோகேந்திரநாத் பிசக்ரத்னம் கண்டெடுத்தார். அவரது மகன் என். என். சர்க்கார் 1950-இல் *Journal of the Asiatic Society*' என்னும் இதழில் இதனைப் பல மேற்கோள்களுடன் வெளியிட்டார். இந்நூல் கி. மு. முதல் அல்லது கி. பி. முதல் நூற்றாண்டில் எழுதப் பட்டிருக்கலாம். சூத்திர வடிவில் எழுதப்பட்ட இந்நூல் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை;-

பீசோத்பத்தி காண்டம்
வனஸ்ச்பதி காண்டம்
வானஸ்ச்பத்ய காண்டம்
வீருதவல்லி காண்டம்
குல்மக்சுப காண்டம்
சிகித்சித காண்டம் என்பனவாம்.

தாவரநோய்களைப்பற்றியஇதன்கடைசிப் பகுதி கையேட்டில் காணப்படவில்லை. பீசோத்பத்தி காண்டமாகிய இதன் முதற் பகுதி கீழ்க்காணும் எட்டு அத்தியாயங்களைக் கொண்டது.

1) பீசோத்பத்தி சூத்ரீயாத்தியாயம் (தாவரங்களின் புற உறுப்பியல்)

2) பூமி வர்க்காத்தியாயம் (நிலத்தியல்புங் குணங்களும்)

3) வன வர்க்காத்தியாயம் (காடுகளின்இயல்பும், அவற்றின் அமைப்பும்)

4) விருட்சாங்க சூத்ரியாத்தியாயம் (மர உறுப்புகளின் நுண்ணியல்புகள்)

5) புட்பாங்க சூத்ரியாத்தியாயம் (பூக்களும் அவற்றின் உறுப்பு இயல்புகளும் வகைப்பாடும்)

6) பலாங்கசூத்ரியாத்தியாயம் (பழங்களும் அவற்றின் இயல்புகளும் வகைப்பாடும்)

7) அட்டாங்க சூத்ரியாத்தியாயம் (தாவரங்களின் எட்டு உறுப்புகளும் அவற்றின் இயல்புகளும்) வேர், தண்டு, பட்டை, வைரம், சாறு, சுரப்பிகள், பிசின், முள் முதலியன)

8) துவிகணீயாத்தியாயம் (விதைகளும் கரு முளை முதலியனவும்)

இக்காலத்துப் பயிற்சி போலப் பண்டைய இந்தியாவில் மருத்துவக்கல்விக்குரிய தாவரக் கல்வியின் அடிப்படையாக விருட்சாயுர் வேதம் இருந்தது எனச் சர்க்கார் என்பவர் கூறுவர். பராசரரின் தாவரப் பெயர்கள் தாவரச் சிறப்பியல்பு, மருந்தியல்பு, வாழ் விடம் அல்லது சிறந்த நிகழ்ச்சி ஆகிய மூவகை அடிப்படையிலே எழுந்தன. இவை சரகர், சுசுருதர் முதலிய ஆயுர்வேதமருத்துவ நூலாசிரியர்களாலும் பெருமளவு தமது நூல்களில் கையாளப்பட்டன. ஆனால், பழைய மருத்துவ நூல்களில் காணப்படும் சில தாவரங்களின் பெயர்களை இந்நூலின் உதவிகொண்டு அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது.

மறைப் பிற்காலத் தாவர அறிவு

பராசரரின் நூல் உட்பட, இதுவரை கூறிய நூல்களில் உள்ள தாவரவியல் அறிவின் வளர்ச்சியைத் தொகுத்துக் காண்போம். இதனை விதையும், விதை முளைத்தலும், புற உறுப்பியல், உடலியங்கியல், சூழ்நிலை இயல், பாகுபாட்டியல் என்னும் முறையான தலைப்புக்களில் சுருக்கமாக அறிவது நன்று.

விதையும், விதைமுளைத்தலும்

விதை பீசம் எனப்படுகிறது. விதை பீச கோசமென்னும் கவசத்தால் மூடப்பட்டு உள்ளது. பருப்பு அல்லது முளைசூழ்தசை சஸ்யம் எனவும், விதையிலை வியிசபத்திரம் எனவும் கூறப்படும். ஒருவித்திலைத் தாவர விதையைத் துலிமாத்ருகபீசம் எனவும் பராசரர் வழங்குவர். இச்சொல் முளைசூழ் தசைக்குள்ளிருக்கும் முளைக்குருத்தையும் குறிக்கும். இது விதை முளைக்கும்போது முதல் இலையாக வெளிவரும். விதையிலை

கருவளர்ச்சிக்கு வேண்டிய உணவுப்பொருள்களைச் சேமித்து வைக்கும்.

முளைத்தல் என்பது அங்குரோத்பேதம் எனப்படும். அங்குரம் என்பது முளை. அதாவது விதை உயிர் பெற்று முளைத்தல் ஆகும். விதை முளைப்பதற்குக் காற்றும், நீரும், வேண்டிய வெப்பமுள்ள பருவமும் தேவை. தக்க பருவம், நல்ல நிலம், தேவையான நீர், நல்ல விதைகள் இவை விதை முளைப்பதற்குத் துணைசெய்யும் எனச் சுசுருதர் கருதுகிறார்.[18] ஆல் (*Ficus indica*), அரசு (*Ficus religiosa*), வேம்பு (*Melia azadarach*) முதலியவற்றின் விதைகள் மழைக்காலத்தில் பனிக்காற்று இவற்றின் துணை கொண்டு முளைக்கும் எனக் குணரத்னர் என்பவர் சட்தர்சன சமுச்சயத்தின் விரிவுரையில் கூறுகிறார்.[19] விதை முளைக்கும் நிகழ்ச்சியினைப் பராசரர் இன்னும் சுவையாக விளக்குவார். முளை வெளிவரும்போது அதனுடைய விதையிலையிடம் இருந்து உணவைப் பெறுகிறது. அதனால் தனக்குரிய வேரை வளர்த்துக் கொள்கிறது. முளை பூமியிலிருந்து தானாக உணவை எடுத்துக்கொண்டு வளரத் தொடங்கியவுடன் இலைகள் காய்ந்து போகின்றன என்று பராசரர் திறம்பட விரித்துரைக்கின்றார் 20

புற உறுப்பியல்

வேர்

தாவரங்கள் இரு பாகங்களாகப் பகுக்கப்படுகின்றன. நிலத்தின் கீழே உள்ள பாகத்துக்கு மூலம் (வேர்) என்றும், மேலே உள்ள பாகத்துக்கு வித்தாரம் அல்லது தூலம் என்றும் பெயர் மூலம் என்பது தாவரத்தை நிலத்தில் ஊன்றவைக்கும் உறுப்பு. தாவரத்தின் பாதமாகிய வேர் நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சுவதற்கு உதவுகிறபடியால் தாவரம் பாதவம் எனப்படும். சாகை என்றும் சிபை என்றும் சொல்லப்படுகின்ற கிளைகளிலிருந்து வெளிப்படும் நார்களும் விழுதுகளும் அறியப்பட்டிருந்தன. உணவுக்கு ஏற்ற கிழங்கு வேரைப்பற்றி அர்த்த சாத்திரம் குறிப்பிடுகிறது.

தண்டும் தழைப்பகுதியும்

தண்டும் இலைகளுடன் கூடிய தண்டைக் குறிக்கும் தண்டு காண்டம் எனவும், வேருக்கும் தண்டில் கிளைக்குமிடத்திற்குமிடைப்பட்ட பகுதி பிரகாண்டம் எனவும் பெயர் பெறும் கந்தம் என்னும் வேதச் சொல்லும் தண்டைக்குறிக்கும். வனஸ்பதி, வானஸ்பத்யம் என்பவை தண்டின் உறுதியையும், நேராக வளர்வதையும் குறிப்பிடும். வல்லி, வீரததி, லதா இவை மென்தண்டைக் குறிப்பிடும். இவை ஒரு மரத்தையோ, கொழுகொம்பைச் சுற்றியோ, பற்றியோ வளரும். (வல்லி வேட்டயதே விருக்சம்). தண்டுள்ள தாவரங்களும் தண்டில்லாத் தாவரங்களும் உண்டு. கணுக்கள் (பர்வம் அல்லது கிரந்தி) கணுவிடைகள், ஸ்தாணு முதலிய சாகை, பிரதிசாகை, அனுசாகை முதலிய கிளைகளும் விவரிக்கப்படுகின்றன. அடிநிலத் தண்டு, வேர்களைப் போலப் பயன்படுமாயினும் அவை உண்மையான வேர்கள் அல்ல என்பதை அறிந்திருந்தனர். அது கந்தம் எனப்பட்டது (யந்மூலமேவ பீசம் ஸ்கந்த:). தாவரங்களின் தண்டு நீளமாகவோ, குட்டையாகவோ, வன்மையாகவோ, மென்மையாகவோ, சதைப் பற்று உள்ளதாகவோ இருப்பதைக் கொண்டு மரம், புதர், செடி என்று பாகுபடுத்தப்பட்டது. ஒரு தாவரத்தின் விருந்தாளி போல அதனிடம் உணவு உண்டு வளரும் தாவரம் விருக்சாதனி, அதாவது புல்லுருவி என்றும், ஒரு தாவரத்தின் மேல் வளரும் தாவரம் விருக்சருகா அதாவது தொற்றுச்செடி என்றும் அறியப்பட்டன. பாசிகள் (சைவாலம்), பச்சைப் பாசிகள் (சலாநின்), காளான் (சாத்ரா) முதலியவை குறுந்தாவரங்களெனக் கருதப்பட்டன

இலை :-

பச்சை நிறத்தையும், உதிரும் இயல்பையுங் கொண்ட இலைகள் பத்ரம் எனவும், பர்ணம்

எனவும் கூறப்படுகின்றன. காம்புள்ள இலை ஃச்விருந்தம்,(பத்ரவ்ருந்தம்),காம்பில்லாதன (வ்ருந்தகீனம்)எனவும் அழைக்கப்படுகின்றன. இலைப்பரப்பு பக்சம் எனப்படுகிறது. அதைப் பராசரர் இருபக்க சமச்சீரானது (சமபக்சம்), சமச்சீரில்லாதது (விசமபக்சம்), சமப்பிளவுற்றது (சமகர்ணம்), சமப்பிளவில்லாதது (விசக்கர்ணம்) எனப்பிரித்தார். காம்புள்ள இலையில் காம்பு பக்கத்தில் அடியுடனோ (பிராந்தகிரந்திகம்) அல்லது தண்டுடனோ சேர்ந்திருக்கும்இலை அடுக்கம்(பத்ரபந்தனம்) பல சிறத்தது என விருட்சாயுர்வேதம் விவரிக்கிறது. பல அலகுள்ள இலைகள் சிற்றிலைகளின் எண்ணிக்கையைக் கொண்டு த்விபத்ரம், திரிபத்ரம், சப்தபத்ரம் என்றெல்லாம் பிரிக்கப்பட்டன. *Shorea robusta* வின் இலை குதிரைக் காது போன்றதெனவும் (அச்வபர்ணம்). *Salvinia* வின் இலை எலிக் காது போன்றதெனவும் (மூஷிகபர்ணி), *Achyranthes aspera* நாயுருவியின்இலை குரங்கின் காதுபோன்றதெனவும் (கிசபர்ணி), இலைகள் வடிவை யொட்டி பெயரிடப்பட்டிருக்கின்றன. 21

இலைகளின் நரம்பமைப்பு சம ஒழுங்கான அமைப்பு (ப்ரகுணம்), பின்னல் அமைப்பு (வெல்லிதம்)என இருவகைப்படும். நரம்புகள் இலைப் பகுதிகட்கு உணவைக் கொண்டு செல்லுகின்றன எனப் பராசரர் கூறுகிறார். பிரகுண நரம்பமைப்புள்ள இலைகளை மௌஞ்சபத்திரம் என்றும், பின்னல் அமைப்புள்ள இலைகளை சாலிகபத்திரம் என்றும் கூறுவர்.

மலர் :-

பிரசவபந்தனம்பூக்காம்பு (புட்பவிருந்தம்), பூவடி (தாலகம்), புல்லி இதழ் (சாலகம்), அகவிதழ் (தளம், புட்பதளம்) என்பன பூவின் பாகங்கள். ஆணகத்திற்குத் தக்க பெயர் காணாவிடினும் மகரந்தக் காம்புகள் (கேசரம்), மகரந்தப்பை (கிஞ்சல்கம்), மகரந்தம் (பராகம் சேசரேணு) என அது பகுத்தறியப்பட்டது. அதுபோலவே பெண்ணகம், சூலகம் (பீசதாரம்), சூல் காம்பு (வராடகம்), சூல்முடி (வராடக சீர்சம்) என அதன் பாகங்கள் பெயரிடப்பட்டன.

விருட்சாயுர் மறையின் புட்பாங்க சூத்ரியாத்யாயத்தில் நால்வகைப் பூக்கள் கூறப்படுகின்றன. பூவிலைகள் அமைந்திருப்பதைக் கொண்டு. குறிப்பாகப் பூத்தளத்தில் சூலக அமைப்பையொட்டி, துந்துபுட்ப மண்டலம், 2) கும்பபுட்ப மண்டலம். 3) துங்க புட்ப மண்டலம், 4) வாட்யபுட்ப மண்டலம் என நான்கு வகையாகப் பூக்கள் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் வகையில், மகரந்தக்கால்கள், அகவிதழ்கள், புறவிதழ்கள் எல்லாம் சூலகத்திற்கு அடியிலிருந்து எழுகின்றன. அதனால், இவை சூலகக் கீழானவை (புட்பகிராந்தபீசதாரம்)ஆகும். இரண்டாவது வகையில் மகரந்தங்கள், அகவிதழ்கள், புறவிதழ்கள் எல்லாம் சூலகத்திற்குமேலிருந்துஎழுகின்றனஅதனால் இவை சூலக மேலானவை (புட்பசீர்சபீசாதாரம்) எனப்படுகின்றன. மூன்றாவதுவகையில் பூத்தளம் குழிந்த கிண்ணம் போன்றது. சூலகம் தனியே நடுவில் இருக்கும். மகரந்தக் கால்கள், அகவிதழ்கள், புறவிதழ்கள்எல்லாம் பூத்தள விளிம்பிலிருந்து எழும். அதனால் இவை (தலகோத்சங்கம்) எனப்படும். நான்காவது வகைப் பூக்களில் மகரந்தக்கால்கள் எல்லாம் இணைந்து ஒரு குழல்வடிவாகவோ, உரல் வடிவாகவோ இருக்கும் இவற்றை பராசரர் வாட்யமண்டல கணம் என்பர். இது மால்வேசி குடும்பத்தின் சிறப்பியல்பாகும்.

கனி :-

பலாங்க சூத்ரியாத்யாயத்தில் பராசரர் பழங்களின் பாகுபாடும், பயனும்பற்றிக்கூறுகிறார். பசுங்கனி (சலாது), சதைக்கனி (கசிரகம்) உலர் கனி (வானம்) இருபுற வெடிகனி (சமீ, சிம்பம்) எனப் பலவகையான கனிகள் கூறப்படுகின்றன,

உள்ளுறுப்பியல்

மறைக்கால இலக்கியத்தில், அதிலும் உபநிடதங்களில், தாவரங்களின் உள்ளமைப்பு பற்றிய முன்னோடிக் கருத்துக்கள் காணப்படுகின்றன. விருட்சாயுர் வேதம் இத்துறையில் மிகவும் முன்னேறியுள்ளது. இலையின் உள்ளமைப்பை அது விரித்துரைக்கிறது. இலையின் தொழிலைக் கூற வேண்டிய அவசியத்தால், இவ்வியல் பற்றிப் பராசரர் சில வியத்தகு கருத்துக்களைக் கூறுகிறார். ஓர் இலையில் கண்ணுக்குத் தோன்றாத (அணவச்வ) பலப்பல செல்கள் (ரசகோசம்) உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு செல் உறையால் (கலாவேட்டிதேன) மூடப்பட்டுள்ளது. அது மிகமெல்லியது (சூட்சும பத்ரகா) செல்களில் பஞ்சபூதங்களின் இயல்புள்ள (பஞ்சபௌதிக குணசமன் விசஷீச்யரசஷீச்யாசயா) தாது சேகரிக்கப்பட்டுள்ளது. அதுவும் ஒரு வண்ணந் தரும் இயல்பைக் (ரஞ்சகாயுக்தா) கொண்டதாகும். தாவரத்தண்டில் சாறு போக்குவரத்துக்கான குழாய்கள் உள்ளன. வேரிலிருந்து தண்டுவழியாகத் தாவரத்தின் பல பாகங்களுக்கும் சாறு செல்வதற்கு சியந்தனி என்றும், இலைகளில் சாறு போவதற்கு சிராசாலனி என்றும் பெயர். இதில் சாறு மேலேறும் வழிகளும் கீழிறங்கும் வழிகளுமுண்டு (சிராபிசு சோபாசர் பயந்தி அபசர் பயந்தி சபாவாபாவௌ)

வாழ்வியல்

வளர்தல், நகர்தல் உறங்குதல், விழித்தல், நோயுறல், பண்புகளைப் பரம்பரையாகச் செலுத்துதல் முதலான பல உயிரியல்புகள் தாவரங்களுக்குஉள்ளன என்பது பலஇந்தியத் தத்துவக் கொள்கைகளில் காணப்படும். வைசேடிக மரபைச் சார்ந்த 'கிரணாவளி' என்ற நூலில் உதயணர் தாவரங்களின் பல உயிரியல்புகளைக் கூறுவார். உயிர்ப்பொருள் போல வாழ்தல், இறத்தல், உறங்கல், விழித்தெழுதல், நோய்வாய்ப்படுதல், மருந்துண்ணல், நலந்தரும் பக்கமாக நகர்தல், இடர்தரும் பக்கத்திலிருந்து ஒதுங்குதல் முதலியவை தாவரங்களுக்கு உள்ளன எனக் கூறியிருக்கிறார். புத்த தருக்க நூலாகிய 'நியாய பிந்து பீடிகை'யில் தர்மோத்தாரர் என்பவர் சிலதாவரங்கள் இரவில் இலைகளை மடித்துக் கொண்டு உறங்கும் என்பார். குணரத்னர் என்பவர் தமது 'சட்தர்சன சமுச்சயத்'தில் தாவர உயிரியல்புகளை விவரிக்கிறார். தாவரங்கள் வளரும்போது குழந்தைமை, இளமை, முதுமை எனும் மூன்று நிலைகளைக் கடக்கின்றன. அவற்றின் அசைவு உறங்குதல், விழித்தல், தொடுவதை உணர்தல், சார்பு வேண்டுதல் என்பவற்றை பொறுத்துளது. மருந்தின் மூலம் காயத்தை ஆற்றிக் கொள்ளவும், பீடிக்கும் நோய்களிலிருந்து விடுபடவும் அவைகளால் முடியும். இவற்றிற்கு ஏற்றவாறு நிலத்திலிருந்து உணவைச் சேகரித்துக் கொள்கின்றன23 உறக்கம், விழிப்பு ஆகியவற்றிற்குள்ளாகும் செடிகளின் பட்டியல் தரப்பட்டுள்ளது. 'தொட்டால் சிணுங்கி' (*Mimosa pudica*) என்ற செடிதாவரங்களின் உணர்வுநுகர்ச்சிப் பண்புக்குச் எடுத்துக்காட்டாகும். பொதுவாக, சம்கிதைகள், உபநிடதங்களின் காலத்திலேயே அடிக்கடி தாவரங்களின் உயிரியல்புகள் மனித உடலுடன் ஒப்பிட்டு பேசப்படுகின்றன.

ஊட்டம்

தாவரங்களில் ஊட்டச் செயலுக்குப் பல இடங்களில் சிதறிக்கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டு பார்த்தால், வேர்களின் (பாதப) மூலம் நிலத்தில் இருந்து சாற்றுணவை அவை இழுத்துக் கொள்கின்றன என்பது புலனாகிறது. 'பாதபம்' என்ற பொருள் பொதிந்த சொல்லை முன்பே கண்டோம். தாமரையிலையின் துளையுள்ள காம்பின் மூலமாக, வாய்க்குள் நீரை இழுப்பது போல, தண்ணீரை உறிஞ்சுகின்றது எனமகாபாரதம் கூறுகிறது.24 மரங்களின் இலைகள் வாயால் நீரை உறிஞ்சுவது போல உணவை உறிஞ்சுவது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட உண்மை என்றும் இதனை அக்காலத்திலேயே நமது

முன்னோர் அறிந்திருந்தனர் என்றும் மசும் தார்கூறுவர்.25 தண்டுகளில்சாற்றின்போக்கு வரத்தைச் 'சியர்தனி' என்றும், இலைகளில் அதனைச் 'சிராசாலனி' என்றும் பராசரர் கூறுவர். கணாதர் என்பவரின் 'வைசேடிக சூத்திரத்'திலும் இதனைக் காண்கிறோம். (உத்ஸ்ரோஸஸ்தமஹ ப்ராயா அந்தஸ்பர்சா விசேஷிணஹ) பராசரர்கூறும்இலையமைப் பும் இலையில் காணப்படும் நிறப்பொருள் களும் இவற்றைக் கொண்டு சீரணிக்கும் (ரஞ்சகேனபக்யமானத்) என்பது இலைகளில் உணவு தயாரிக்கப்படும் உண்மை அறிவை உணர்த்தும் என்று சர்க்கார் என்பவர் புலப்படுத்துகிறார்.

தாவர நோயியல்

தாவரங்களில் உண்டாகும் நோய்களும் அவற்றைத் தீர்த்தலும் நுணுகி ஆராயப் பட்டன. மிகுதியான குளிர், காற்றில் உலர்தல், மிகுந்த ஞாயிற்று வெப்பம் இவை கள் தாவர நோய்களுக்குக் காரணம்என்றும்; இலைகள் மஞ்சளாதல், அரும்புகள் முதிரா திருத்தல், கிளைகள் உலர்தல், சாறு வெளிப் படுதல் ஆகியவை நோய்க்கு அறிகுறி என்றும் வராகமிகிரர் கூறுவர். காசிபரும் அதே கருத்தைக் கொண்டிருந்தார், மனித உடம் புக்கு வரும் மஞ்சட்காமாலை, இளைத்தல், விரல் குட்டையாகுதல், மூக்கு சப்பை முதலிய நோய்களைப் போலவே தாவரங் களும் இடம்மாறிப் பூத்தல், கனி, இலை, பட்டைமுதலியவற்றில்மாறுபாடுகள்முதலிய நோய்களுக்கு ஆளாகின்றனஎன்றுகுணரத்னர் கூறுகின்றார். நெய், சாணம்ஆகியவற்றுடன் களிமண்ணைச்சேர்த்துப்பிசைந்து அதனுடன் நீர் கலந்தபாலையும் கூட்டி வேரில் பூசினால் நோய் தீர்வதை வராகமிகிரர் கூறுகிறார். இலைகள் உதிர்ந்து போகும் நோய்க்கு கொள் (*Dolichos biflorus*), உளுந்து (*Phaseolus mungo*), பயறு (*Ph. radiatus*), எள் (*Seasmum indicum*), பாசிப்பயறு (*Phaseolus radiatus*), பார்லி முதலிய விதை களைச் சேர்த்துக் காய்ச்சிய சூடான கசாயத்தை வேரில் விட்டால், நோய் தீரும் என்று பிரகத்சமிதா, 'அக்னி புராணம்' முதலியவை குறிப்பிடுகின்றன.

இனப்பெருக்கம், பால் பாரம்பரியம்

பழங்கள், விதைகள், வேர்கள், பதியன்கள், ஒட்டு, நுனிக்குருத்து, இலைகள் இவற்றால் செடிகளை வளர்க்கத் தெரிந்திருந்தனர். 'திகநிகாய'த்தின் உரைநூலாகிய 'சுமங்கல விலாசினி'யில் இம்முறைகளைக் குறிப்பதற்கு மூலபீசம் (வேர்விதை), கண்ட பீசம் (தண்டு விதை), பலுபீசம் (கணுவிதை), அக்ரபீசம் (குருத்து விதை), (பீச பீசம்) விதை என்ற சொற்களைக் கையாளுகிறார். புத்த கோசர் என்பவர். விதைகளைக் கொண்டு செடி வளர்ப்பதை மனுவும், அதர்வ மறை யும் குறிப்பிடுகின்றன. கிழங்கு, வேர்களைக் கொண்டு (காண்டபீசம்) பயிரிடுதலைஅர்த்த சாத்திரம் கூறும். கரும்பு பலா, மாதுளை, திராட்சை, நாரத்தை, அரசு, ஆல், அத்தி முதலியவற்றின் தண்டுகளைத் துண்டாடி நடும் முறை (கந்த பீசம்), 'அர்த்த சாத்திரம்' 'பிருகத் சம்கிதை' 'சுமங்கலை சிலாநிலி'முதலியவைகளில் கூறப் படுகின்றது. ஒரு மரத்தின் கிளையை வேறு ஒரு மரத்தின் தண்டில் செருகி வளர்க்கும் ஒட்டுமுறையானது தண்டு நடும் முறையை விடச்சிறந்ததுஎன்று வராகமிகிரர் கூறுவர். வெற்றிலை, சமிரணம், (அச்சூகம்) (*Ocimum basilicum*), கிரிவீரம் (*Andropogon Cyna-nthus*) முதலியவைகளின் குருத்துகள் நட்டு வளர்க்கப்படுவன.

பால்வழிப்பெருக்கம்பற்றி ஆரித சம்கிதை சரக சம் கிதைகள், அரைகுறையாகப் பேசு கின்றன. ஆண்,பெண் அணுக்கள் இணைந்தா லன்றித் தாவரங்கள் ஏன் பூப்பதில்லை, காய்ப்பதுமில்லை? இதே முறையில் மகளிர் ஆண்இணைவின்றி ஏன்மகப்பெறுதல்கூடாது என்ற கேள்வியும் எழுந்தது. அதற்கு ஆத்ரேயர் என்பவர் பதிலும் சொல்கிறார். கொடிகளிலும், தாவரங்களிலும் பாலணுக் களின் சம்பந்தத்தால் விதைகள் உண்டா

கின்றன.26 நிலைத்த தாவரங்கள் ஆண் (சிவம்), பெண் (சக்தி) தன்மைகளைப் பெற்றுள்ளன. ஆண் இனத் தாவரங்கள் வெண்மையான பூக்களையும், பெரிய கனி களையும், மென்மையான இலைகளையும், உடையவை எனவும்; பெண் இனத்தாவரங் கள் மஞ்சள் நிறப் பூக்களையும், சிறு கனி களையும், குட்டைத் தண்டுகளையும் உடை யவை எனவும் சரகர் வேறுபடுத்துவார். தாழையின் (Pandanus odorattissimus) ஆண்செடி 'சிதாகேதகி' எனவும், பெண் செடி, 'சுவர்ண கேதகி' எனவும் இரண்டை யாகவே கேதகீத்வயம் என வழங்கப்படு கிறது. இதை ராச நிகண்டும், தன்வந்திரி நிகண்டும் கூறுகின்றன. ஆண் தாழை (கேதகம் அல்லது விமலா) காய்ப்பதில்லை என்றும், பெண்தாழை(கனகபிரசவா)பொன் நிறக்கனிகளைத் தருமெனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

பிராமணங்களின் காலந்தொட்டுத் தலை முறையியல் பேசப்படுகிறது. கருவுற்ற அணுவில் தாவரத்தின் எல்லாப் பண்புகளும் நுண்ணியல்பில் அமைந்துள்ளன என்றுசரகர், சுச்ருதர் இருவரும் கூறுவர். எடுத்துக் காட்டாக மூங்கில் விதையில் விந்தணுப் பண்புகளும், மூங்கில் மரத்தின் பல் வேறு பாகங்களுக்கான பண்புகளும் நுண்ணிதாக அடங்கியுள்ளன என்பர். இக்கருத்துகள் டார்வின் சொல்லுகிற "செம்யூல்சு", ஃச்பென்சர் சொல்லுகிற "சட்சு" முதலிய வற்றை ஒத்துள்ளன.

பாகுபாட்டியல்

அறிவியல் துறையில் எந்தப்பகுதியையும் தக்க பெயர்களால் பாகுபடுத்தி அறிதல் பழங்கால இந்தியர்களின் ஒரு தனிச் சிறப் பாகும், இதனைத் தாவரத்துறையின் பாகு பாட்டியலில் நன்கு காணலாம்.

தாவரங்களைப் பெயரிடுவதற்குக் கீழ்க் கண்டவை கருதப்பட்டன:

1. தாவரத்தின் தனிச்சார்பு அரசு: (Ficus religiosa), அசோகு (Saraca indica). ஊமத்தை (Datuxa fastuosa)

2. மருந்தாகவோ, வீட்டுப்பயனுக்காகவோ பயன்படும் இயல்புடைமை: எடுத்துக் காட்டு; கொன்றை, கருணைக்கிழங்கு, பருத்தி, கோரை.

3. இலை வடிவம், கூட்டிலையில் உள்ள சிற்றிலைகளின் எண்ணிக்கை, பூக்களின் நிறமும் வடிவமும் முதலான புற உறுப் பியல்: எ-டு: நாயுருவி, அச்வபர்ணகம் முத்துக் கொட்டை, சுகத்தி (வச்ர புட்பம், சதமூளி),

4. வாழ்விடத்தின் சார்பும், புறச்சூழ்நிலை யியல்பும்.- எ-டு: இலந்தை, முல்லை, மிளகு, தாமரை, துளசி.

5. இவை யல்லாத சிறப்பியல்புகள்:- மருத்துவத்தைச் சார்ந்தவையும் சாராதவையுமான தாவரங்களின் புற அமைப்பு அல்லது சிறப்பியல்புகள் பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன. அன்றி, வளைந்த பூவுடைய தாவரம் வக்ரபுட்பம் என்றும், வ்ரணாரி (இரணங்களின் எதிரி) என்றும், மணி வடிவமான பூவுள்ளமையால் ஊமத்தை கண்டாபுட்பம் என்றும், முள் மலிந்த பழத்தை உடைமையால் கண்டபலம் என்றும், அதிகமான மயக்கந் தரு தலால் மகாமோகி என்றும் பெயரிடப் பட்டுள்ளது. இங்ஙனம் பெயரிடும் முறை யைக் கண்டு வியந்த வில்லியம் சோன்சு என்பவர் 'இலின்னேயசுக்கு சமற்கிருதம் தெரிந்திருந்தால், தாவரங்களைப் பெய ரிடுவதற்கு இந்துக்களின் முறையைக் கையாண்டிருப்பார்'' என்று சொல் கிறார்.

வகைப்படுத்தல்

தாவரங்கள் செடி, கொடிவகை (உத் பிதம்), மருந்து வகை (விரேசனாந்தி),

உணவு வகை (அன்னபானாதி) என மூன்றின் அடிப்படையில் பிரிக்கப்பட்டன. விருட்சம், ஓசதி, விருத் என்ற வேத கால வகைகளைக் காட்டிலும் பிறகாலத்தில் தாவரப் பாகுபாடு விரிவாகவும், அறிவியலுக்கு ஏற்றதாகவும் உள்ளது. மனு தாவரங்களைக் கீழ்க் கண்ட எட்டுவகையாகப் பிரித்துள்ளார்.27

1. ஓசதி-மிகுந்த மலர்களையும், கனிகளையும் உடையன. கனி முற்றியவுடன் காய்ந்து போகும். எ—டு: நெல், கோதுமை.
2. வனஸ்பதி— வெளிப்படையான மலர் இன்றிக் காய்ப்பன.
3. விருட்சம்-பூக்களும் கனிகளும் உடையன.
4. குச்சம்-புதர் போன்ற செடிகள்: உதாரணம்-மல்லிகை
5. குல்மர்-சதைப்பற்றுள்ள செடிகள்.
6. திருணம்-புற்கள்
7. பிரதனம் - தண்டுகள் பூமியில் படிய வளரும் கொடிகள்.
8. வல்லி-ஏறுகொடிகள், பற்றுக்கொடிகள்.

சுச்ருதரும்; சரகரும் வேத கால பாகுபாட்டியலின் அடிப்படையிலேயே தாவரங்களை நான்கு வகையாகப் பிரித்து, மனுதந்த சில பாகுபாடுகளைச் சிறு பிரிவுகளாக்கினர்.28

1. வனஸ்பதி—பூவின்றிக் காய்ப்பன,
2. விருட்சம் அல்லது வானஸ்பத்யம்—பூவும் கனியும் உடையன.
3. விருத் — தரையிலோ, மேலேறியோ படர்வன;
4. ஓசதி-ஓராண்டுச் செடிகள், காய்த்தபின் உலர்வன,

சுச்ருதரின் நூலுக்கு உரை எழுதிய தல்கணர் என்பவர் வனஸ்பதிக்கு அத்தியினத் தாவரங்களையும் (*Ficus infectoria*, *Ficus glomerata*); கனிகளையும் மலர்களையும்கொண்டவிருட்சங்களுக்குமாமரம்நாவல் மரங்களையும் (*Eugeniajambolana*) எடுத்துக்காட்டுகின்றார். குல்மின்யா, விருத்வகையை பிரதானவத்யம் (தரையில் படர்வன), (சதைப்பற்றுள்ள செடிகள்)எனஇரண்டாகப் பிரித்துள்ளார். ஓசதிக்குக் கோதுமை பார்லிகளைச்சான்றுகாட்டுவார். சரகரின்நூலுக்கு உரை எழுதிய சக்ரபாணி என்பவர் விருத் வகையை லதை, குல்மம் எனப் பிரித்தும், ஓசதியை ஓராண்டுச் செடிகள், பல்லாண்டுச் செடிகள் (காய்ப்பன) எனவும், புல்வகை (காயாதன) எனவும் வகுத்தும் உட்பிரிவுகளைச் சொல்கிறார்.

வைசேடிகர் தாவரங்களை விருட்சம் திருணம், ஓசதி, குல்மம், லதை, அவதானம், வனஸ்பதி என ஏழுவகைப் படுத்துவர். உதயனர் என்பவர் தமது கிரணாவளியில் விருட்சம் என்பது அடி மரம் கிளைகள் முதலியவற்றுடன் பூ கனிகளை உடையன எனவும், திருணங்கள் 'உலபம்' போன்றவை எனவும், ஓசதிகள் 'கலமம்' போன்றவை (காய்த்தபின் உலர்வன)எனவும், குல்மங்கள் 'பாடர்' போன்ற கொடிகள் எனவும், பரங்கி, பூசுணை போன்றவை எனவும், அவதானங்கள் கேதகி போன்றவை எனவும் வனஸ்பதி வகை பூவாது காய்ப்பன எனவும் கூறுகிறார்.

விருட்சாயுர்மறையில் பராசரர் பூவின் இயல்புகளையும் ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கொண்டு விரிவாகப் பாகுபாடு செய்கிறார். தாவரங்களை அவர் கீழ்க் கண்டவாறு குடும்பங்களாகக் கூட பிரித்துள்ளார். (கணவிபாகம்). எடுத்துக் காட்டாக சமீகணியம் (*Leguminosae*): இக்குடும்பம் சமீவிருட்சம் போன்று இருபக்க வெடிகனிகளை உடையது (சிம்பிபலம்), இதன் கூட்டிலை சிற்றிலைகள் இறகு வடிவானவை, சூலகக் கீழான பூவில் ஐந்து அக இதழ்கள் புறவிதழ்கள் இணைந்துள்ளன.

ஆணகத்தில் பத்துமகரந்தக்கால்கள் உள்ளன. இக்குடும்பம் வக்ர புட்பம், விகர்ணிகபுட்பம், சுக புட்பம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது,

புப்லிகணீயம் (Rutaceae): இத்தாவரங்கள் முள் உடையன. இலைகளுக்கு மணமுண்டு. இலைக்காம்பு சிறகுடையது. சூலகக் கீழான இதன் பூவில் இதழ்களும், மகரந்தக் கால்களும் தனித்துள்ளன, கனிகளில் சாறுமிக்க இழைகளும், விதைகளும் நிரம்பியுள்ளன. 'சதைக்கனி': இக்குடும்பத்தில் கேசரகம், மாலுரபலம் என இரு வகையுள்ளன. சுவஃச்திகா கணீயம் (Crucifere) குடும்பம்: இதன்மலரில் புறவிதழ்கள், சுவஃச்திகா வடிவில் இருப்பதால் இப்பெயர் பெற்றது. பூக்களில் நான்கு புறவிதழ்கள், நான்கு அகவிதழ்கள், தனித்த ஆறு மகரந்தக்கால்கள், சூலகக் கீழானவை. மஞ்சரியில் வரிசையாக மலர்கள் அடுக்கப்பட்டுள்ளன. இரு சூலறைகளும் இணைந்து காய், தானியத்தையொத்த இரு சூலகக் கனிகளை உண்டாக்கும். திரிபுட்ப கணீயர் (Cucurbitaceae): இச்செடிகள் சூலக மேலான பூக்களையுடையன. சிலவற்றில் ஒருபால் பூக்களே உள்ளன. பூவில் ஐந்து புறவிதழ்கள் ஐந்து அகவிதழ்கள் இணைந்து உள்ளன. மூன்று மகரந்தக்கால்கள்; சூல் தண்டு மூன்று பிளவுள்ள சூல் முடியை உடையது. இதன் மூவறைச் சூலகம் பல விதைகளை உண்டாக்கும்.

மல்லிகாகணீயர் (Apocynaceae): இதனைச் சேர்ந்த செடிகளில் பலவகை மலருள்ள மஞ்சரியைக் காணலாம். பூக்களில் ஐந்து அகவிதழ்களும் ஐந்து புறவிதழ்களும் இணைந்துள்ளன. ஐந்து மகரந்தக் கால்களும் அகவிதழ்களை ஒட்டியுள்ளன. ஒரு பக்க வெடிகனி. இரு சூலறைச் சூலகத்திலிருந்து உண்டாகும் விதையில் நீண்ட மெல்லிய மயிரிழைகள் இருக்கும்.

குர்ச்ச புட்பகணீயர் (Compositeae): இக்குடும்பத்தில் உள்ள செடிகளில் மலர்கள் காம்பின்றி ஒரே தண்டில் இணைந்துள்ளன. தூரிகையின் உரோமங்கள் போன்ற வடிவில் மலர்கள் அனைத்திற்கும் புறவிதழ்ப்படை பொதுவாக இருக்கும் சூலகம் அடியில் இருக்கும்.

சூழ்நிலை இயல்

சூழ்நிலைக் கேற்றவாறு தாவரங்களின் அமைப்பும் செயலும் அமைந்திருந்தன என்று மறைப் பிற்காலத்தில் ஒருவாறு அறிந்திருந்தனர். சரகரும், சுச்ருதரும் மண்ணின்இயல்பு, தட்ப வெப்பநிலை, தாவர அமைப்பு முதலியவைகளைக்கொண்டு நிலத்தைப் பல பகுதிகளாகப் பிரித்தனர். இப்பகுதிகளுக்கு உரிய தாவரங்களைப் பார்த்தால் அவர்கட்கு சூழ்நிலையியல் பற்றிய அறிவு இருந்தது புலப்படும். சாங்கலப்பகுதி (Jangala) பெரிதும் பாலைவனப்பகுதியைக் குறிக்கும். ஆறுகளோ அருவிகளோ இல்லாத வறண்ட நிலப்பகுதி. வேலமர இனம் (Acacia Catechu), சல்லகி (Boswellia Sp) சாலம், (Shorea robusta), அரசு (Ficus religiosa), ஆல் (Ficus bengalensis), நெல்லி (Phyllanthes embilica), சிம்சபா (Dalbergia sissoo) முதலிய மரங்கள் இப்பகுதியில் வளர்வதாகச் சரகர் சொல்கிறார்.29

அனூபப் (Anupe) பகுதியைச் சதுப்பு நிலமெனலாம். ஆறுகளும் குட்டைகளும் நிறைந்தது. காடுகளை உடையது. இப்பகுதியில் (Eugenia Jambolana) நாவல், பிரம்பு (Calamus, rotung), கடம்பு (Anthrocephalus Cadamba), திராட்சை, மருதம் (Terminalia arjuna) முதலியவைவளர்வதாக வராகமிகிரர் கூறுவர். ஈச்சையினம் தால, (Phoenix Paludosa), பனை (Borassus flabellifer), தமாலம் (Cinnamoum tamala), தென்னை (Cocos nucifera) முதலியவற்றைச் சரகர் குறிப்பிடுவர். சாதாரணப் பகுதியில் (Sadharana) மேற்கண்ட இரு வகைகட்கும் ஒருவகையில் பொதுவான தாவரங்கள்

உள்ளனவாகச் சொல்வர். இப்பகுதி வனஸ்பதி, வனஸ்பதியம் முதலியவற்றிற்கு ஏற்ற இடம்.

சாங்கலப் பகுதியில் 16 துரோன அளவு மழை என்றும், அனூபப் பகுதியில் அதை விடப் பாதி அதிகம் என்றும், மழைபெய்யும் அளவைக் கொண்டு இப்பகுதிகளை வேறு படுத்துகிறார் கௌடில்யர்.30

மரத்தோட்டம் வளர்த்தல்

மரங்களைப் பயிரிட்டு வளர்ப்பது ஒரு தனி அறிவியலாக இருந்தது. விருட்சாயுர் மறையின் பெரும்பகுதி இதனைப் பற்றிய தாகும். மக்கள் பொழுது போக்குக்காக வும், உடல்நலத்திற்காகவும், மகிழ்ச்சியுடன் இருப்பதற்காவும், பூங்கா, தோட்டம் முதலியவற்றைப் பேணிவளர்த்தனர். இருக்கு மறைக் காலத்தில் இவ்வறிவியலின் எளிய அடித்தளத்தைக் காணலாம். அரசர்கள், செல்வர்கள் ஆகியோரின் வாசத் தலங் களில் எல்லாம் ஒரு சிறு காய்கறித் தோட்ட மும் பூங்காவும் அமைந்திருந்தன.

பொதுப்பூங்காக்கள், தோட்டங்கள் முதலி யவைகள் தக்க தலைவரின் மேற்பார்வையில் இருந்தன. அவருக்குத் தாவரங்கள் பூப்பதும், காய்ப்பதும், அவற்றை வளர்ப்பதும் பற்றிய அறிவு தேவையானது. தக்கநிலத்தை ஆராய வும், உரிய காலத்தில் வேண்டிய அளவுக்கு நீர்பாய்ச்சவும், தகுந்த மண் சேர்க்கவும் தெரிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு மரமும் என்ன நோய்க்கு மருந்தாகும் என்றும் அறிந் திருக்க வேண்டும். செடிகளை ஒட்டும் முறை 64 கலைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. அக்கலையையும் இவ்வலுவலர் கண்டிப்பாகத் தெரிந்திருக்கவேண்டும். பெரிய வீடுகளிலும், அரண்மனைகளிலும், விருட்சவாடிகை அல்லது புட்பவாடிகை என்ற மனம்மகிழ் தோட்டமிருந்தது என வாத்ஸ்யாயனர் கூறுவர் 31 விதையிட்டும், தண்டு நட்டும் பட்டையிட்டும், தண்டு ஒட்டியும், குருத்து ஒட்டியும் செடிகளைப் பல வகையாக வளர்த்தல் மறைகளிலும், அர்த்த சாத்திரத் திலும் பிருகத் சம்கிதையிலும் காணப்படு கின்றது. பண்டைக் காலத்தில் மிகப் புக ழுடனும் பிரகாசமான மையமாகவும் விளங் கிய இந்தியா, ஆசியாவில் உள்ள மக்களுடன் நெருங்கிய தொடர்பு உடையதாகவும், எல்லாத் தத்துவ மெய்யறிவரும் அறிஞர் களும் உயிர்அறிவியலைப் பயிலுவதற்கு வரும் இடமாகவும் இருந்தது என்ற உண்மையை யாம் மறக்க முடியாதென சாக்கோலியட் என்பவர் குறிப்பிடுகின்றார்.32 பிம்பிசாரர், அசோகர் முதலிய அரசர்களின் பொழுதுபோக்குத் தோட்டங்களைப் பற்றிப் புத்த இலக்கியங்கள் கூறுகின்றன. புத்த கயாவில் கௌதம புத்தர் மெய்யறிவொளி பெற்றுக்கொண்டதும் அரச மரத்தடியில் தான். அதன் கிளைகளைக்கொண்டுபோய்த் தொலைப் பகுதிகளிலும் நட்டனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட சாரங்கதாரரின்பெருநூலான சாரங்க தரபத்ததியில் 'உபவன வினோதம்' என்ற அத்தியாயம் விருட்சாயுர்மறையின் ஒரு பாகமாக உள்ளது. மசும்தார் (G.P.) அதனை மொழி பெயர்த்துப் பதிப்பித்துள்ளார். மக்கள் நலனுக்காக வேண்டி இப்புத்தகம் அரசரது ஆணையால் பதிப்பிக்கப்பட்டது. கீழ்க்கண்ட தலைப்புகள் அதில் உள்ளன. மரங்களின் பெருமை, சில மரங்களின் அருகில் குடியிருப்பதனால் உண்டாகும் நன்மை தீமைக்குறிகள், நிலத்தைத் தேர்ந் தெடுத்தல், தாவரங்களின் பாகுபாடு, விதை இடுதல், நீர் பாய்ச்சுதல், தாவரங்களைப் பாதுகாக்கும் முறை, தோட்ட வீடுகளைக் கட்டுதல், கிணறு தோண்டுதற்குரிய நிலத்தை ஆராய்தல், தாவரங்களை வளர்க்கும் முறை கள், குணப (Kunapa), நீர் (இயற்கைச்சாறு) வடித்தல், நோய்க்குள்ளாயினவும் நோயற் றனவுமான தாவரங்களின் பண்டுவம், தாவர வியப்புகள் (செயல்முறைமுடிவுகள்),33 வனத் துறைகள் அந்நூலில் இருந்தன. அவை திறமான அலுவலர்களின்கீழ் இருந்தன என்றும், புதிய

காடுகளைப் பயிரிடுதலும், காட்டுத்துறை வருமானத்தை நாட்டு நலத்துக்காக ஒழுங்கு படுத்துவதின் மூலம் வன விதிகளைக் கை யாளுதலும் அவர்களது வேலை என்றும் அர்த்த சாத்திரம், காமசூத்திரம், சுக்கிரநீதி முதலிய நூல்கள் கூறுகின்றன.

இராமர், இலக்குவர், சீதை இவர்களின் பயணத்தை விவரிக்கும் போது, சித்திரகூடத் தில் காணப்பட்ட பல்வேறு தாவரங்களை வால்மீகி இராமாயணம் கூறுகிறது. சீதையை அசோக மரப் பொதும்பரில் (*Saraca indica*) இராவணன் சிறை வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. கிருட்டிணனுடைய வாழ்க்கையில் கடம்ப மரம் (*Anthocephalus cadamba*) பிணைத்துக் கூறப்படுகிறது. பிருந்தாவனத்திலும் மதுராவிலும் அந்நாளில் இருந்த ஈரச் சூழ்நிலைக்குக் காரணம் கடம்ப மரங்களின் அடர்த்தியாகவும் இருக்கலாம். துளசிச்செடி (*Ocimum sanctum*) பெரும் பாலான இந்துக்களின் வீடுகளில் சிறப்பாக இன்றும் வளர்க்கப்படுகிறது.

தாமரை (*Nelumbo lucifera*) புராணங் களில் குறிப்பிடப்படுகிறது. விட்டுணுவின் உந்திக் கமலத்தில் பிரம்மா தோன்றினார். மொகஞ்சதாரோ காலத்தில் கதிரவனுடைய தலையில் தாமரை மலர்கள் அணியப்பட்டன. மகுவ மலர்களிலிருந்து (*Maduca indica*) சிதுவும் (*Sidhu*), பேரீச்சையிலிருந்து (*Phoenix sylvestris*) கார்சுராவும் (*Kharjura*), சில தானியங்களிலிருந்து 'சுரா'வும் தயாரிக்கப் பட்டன. கஞ்சா (*Cannabis sativa*) நாரி லிருந்து பாங் என்னும் போதைப் பொருள் தயாரிக்கப்பட்டது. கள்ளில், தெய்வங்கள் அருந்தும் 'சோமரசம்' குடித்தால் இறவாமை தரும் என்று கருதப்பட்ட போதிலும், அது எவ்வாறு வடிக்கப்பட்டதென்பது புலப் படவில்லை. இந்நாளில் உலகமெல்லாம் புகழும் பாம்புக் களாச்செடி (*Rauwolfia serpentina*) சரகராலும் இந்து ஏடுகளிலும் குறிப்பிடப்படுகிறது. இதற்குச் சமற்கிருதத் தில் சர்பகந்தா என்று பெயர். இது பாம்புக் கடி, மற்றப் பூச்சிக்கடிக்குத் தக்க மருந்து என்றும், பைத்தியம் தெளிவிக்கும் மருந்து என்றும்பேசப்படும். இதற்கு இந்தியில் 'பாகல் கி தவா' (*Bagal ki dawa*) என்று பெயர்.

குடியிருப்பு வீடுகளுக்கு அணிகலமான வெற்றிலை தாம்பூலம் (*Piper bettle*) பாக்கு சுபாரி' (*Areca catechu*), ஏலக்காய், (*Elettaria cardamoum*), சண்பகம் (*Michelia champaca*), சந்தனம் (*Santalum album*) முதலிய தாவரங்களைக் காளிதாசர்கூறுவர். பல்துலக்கும் குச்சிகள், மயிர் வளர்க்கும் எண்ணெய்கள், தலைக்குத் தடவும் தைலங் கள், நறுமணப்பொருள்கள் பிருகத் சம்கிதை யிற் பேசப்படுகின்றன.

வங்காளம் தூரக்கிழக்கு நாடுகளுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தது. சீனா வும் தூரக்கிழக்கு நாடுகளும் சந்தனமரத்தை 8-ஆம் அல்லது 9-ஆம் நூற்றாண்டு வரை இறக்குமதி செய்து வந்தன. சந்தன மரம் அரசாங்க மரம். அதனை யாரும் பயிரிடக் கூடாது. அது இந்தியாவில் இயல்பாக வளர்ந்து வரும் மரம். கி. மு. 2-ஆம் நூற்றாண்டிலேயே மாமரமும், சந்தன மரமும் இந்தியாவில் வளர்ந்து வந்தன என்ப தற்குப் பார்கூத் சிற்பங்களே போதிய சான்றுகளாகும்.

இந்தியாவின் மேற்குக் கடலோரப் பகுதி களுக்குரிய மிளகு, ஏற்றுமதி செய்யப்பட்ட மிகக் குறிப்பிடத்தக்க பொருள் ஆகும். கிரேக்க நாட்டினர்க்கு அது நன்றாகத் தெரிந்திருந்தது. பின்னர் பாரசீக வளைகுடா அல்லது செங்கடல் சுயசுக் கால்வாய் மூலமா கவும், மெசபடோமியா, சிரியா முதலிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. மிளகு ஒரு காலத்தில் எடைக்கு எடை வெள்ளி தங்கத்துடன் விற்கப்பட்டது. ஐரோப்பியர்கள், இந்தியாவுக்குக் கடல்வழி தேடி வருவதற்கு இதன் மேல்வரிவிலை ஒரு குறிக்கத்தக்க காரணமாகும்.

3. அரேபிய, பாரசீக மூலங்களில் இடைக்காலத் தாவர இயல்

கே ஏ சௌதரி

இடைக் காலத்தில் தாவரவியல் ஓர் உயிர் நூலாக எழுதப்பட்டதாகப் பெரும்பாலும் வரலாறு ஒன்றும் இல்லை என்றே சொல்ல வேண்டும். பாகுபாட்டியல், புற அமைப்பு இயல், வாழ்வியல், சூழ்நிலை இயல் முதலான தாவரவியற் பகுதிகளில், அடிப்படைக் கருத்துக்களை யாரும் எழுதிவைக்க அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. தாவரப் பொருள்களை உணவுக்கும், உறையுளுக்கும், உடைக்கும் பயன்படுத்துவது பற்றியும்; வேளாண்மை, கறிகாய்களைப் பயிரிடுதல் காடுகளில் கிடைக்கும் பொருள்கள் பற்றியும் சிலகுறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு ஏதேனும் ஒரு பொருளைப் பற்றிய அறிவியல் வளர்ச்சியைத் திட்டவட்டமாகக் கூறஇயலாதெனினும், அந்நாளில் தாவரவியலில் என்ன நடந்ததென்று மட்டும் ஒருவாறு கருதலாம். பொதுவாக வேளாண்மைப் பொருள்களைப் பொறுத்தமட்டில் இன்றைய நிலையை நோக்க அக்காலத்தில் பெரிய மாறுதல் ஏதும் இருந்ததாகச் சொல்ல இயலவில்லை. அக்காலத்தில் நமது நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட சில புதிய தாவரங்களைப் பற்றிப் பிறகு நோக்குவோம்.

கோதுமை

தில்லியிலிருந்து ஆண்ட சுல்தான்கள் காலத்தில் முக்கிய விளைபொருள்கள் பருப்புகள், கோதுமை, பார்லி, தினையரிசி, பட்டாணி, அரிசி, எள், கரும்பு, பருத்தி முதலியவையாகும். (அமீர்குச்ரோ)3[4]

பிருஃச்சா துக்ளக் என்பவர் இசார், பிருஃச்சாபாத் முதலான இடங்களில் கால்வாய் வெட்டி நீர்ப்பாசனம் செய்வித்தார் என்றும், அதனால் அவ்விடங்களில் கோதுமை கரும்பு, எள், பருப்புகள் எல்லாம் சிறந்த முறையில் விளைந்தன என்றும் அறியலாம். கோதுமை, அரிசி, கரும்பு முதலியவற்றைத் தில்லி நகரம் (அலகாபாத்திற்கருகிலுள்ள) மணிக்பூரிலிருந்து பெற்று வந்தது. ஏனெனில் அவ்விடத்து விளைபொருள்களின் தரம் மிக உயர்வாக இருந்தது. வடஇந்தியாவில் கிழக்கு மேற்கு மைய மாநிலங்களில் எல்லாம் அக்பர் காலத்தில் கோதுமை (*Triticum Sp*) பயிரிடப்பட்டது. வங்காளத்திலும் கோதுமை வேண்டிய அளவு பயிர் செய்யப்பட்டது. ஆயினும், அதன் தரம் நன்றாக இல்லை.[85] அறுநூறு ஆண்டுகளாகிய இந்த இடைக்காலத்தில் கோதுமையின் வகைகள் எவற்றையும் காணமுடியவில்லை. நாட்டின் பலதிறப்பட்ட தட்பவெப்பச் சூழ்நிலைகளுக்கு இடையில் பெரும்பாலும் பாசன வசதியின்றி வளரும் கோதுமையில் பலவகைகளை எதிர்பார்க்கமுடியும். ஆனால், அவற்றின் வேறுபாடு பற்றிய குறிப்பைக் காணாதிருத்தல் வியப்பாக இருக்கிறது.

அரிசி

அக்பர் காலத்து நெல்சாகுபடியைப் பார்த்தால் ஒன்றுக்கு மேற்பட்ட அரிசி வகையிருந்ததாகத் தெரிகிறது. ஆக்ரா, அலகாபாத், அயோத்தி ஆகிய நிலப்பகுதிகளில் மூன்று வகையான நெல் பயிரிடப்பட்டது என்று 'ஐன்' நூல் கூறுகிறது.[36] அவை ஆலி முட்கின் என்னும் பாரசீகத்தில் வழங்கப்படும் கறுப்பு அரிசி ஒன்று; முஞ்ச் என்னும் அரிசி மற்றொன்று. பின்னது டேராடூன் பகுதிகளில் இக்காலத்தில் விளையும் பாசுமதி என்னும் அரிசி வகையைச் சார்ந்தது. இயல்

பான அரிசி மூன்றாவது. வங்காளத்தில் வளரும் மற்றும் ஓர் அரிசி 'ஐன்' நூலில் கீழ்க் கண்டவாறு கூறப்படுகிறது.37

"ஒவ்வொரு வகையிலும் ஒரு கதிரில் உள்ள நெல்லைத் தொகுத்தால் அவை ஒரு பெரும் குமிழுக்குள் நிரம்பும். அதனை விதைத்தால் அதே நிலத்தில் பயிருக்குப் பழுதின்றி மூன்று போகச் சாகுபடி செய்ய லாம். வயல் நீர் உயர்வது போலத் தண்டும் வளர்கிறது. ஆனால் கதிர் அமிழாது. பழக்க வழக்கத்தில் பார்த்தால் ஒரே இரவில் ஆறு முழம் வளர்கிறது."

இதில் சற்று அதிகமான புனைந்துரை காணப்படுகிறது. எனினும் இவ்வகையான அரிசி அசாம், வங்காளம் ஆகிய மாநிலங் களின் சில பகுதிகளில் பயிரிடப்படுகிறது.

உழவர்கள் அரிசி வகைகளைப் பாகுபடுத்தி எந்த வகை எந்தச் சூழ்நிலைக்கு ஏற்றது என்பதைத் தெரிந்து பயிர் செய்தனர். இத் துணைக் காலமாக நெல்லைப் பயிரிடுவதற்கு அறிந்திருந்தனராயினும், எப்படி இவர் களது நெடுங்காலப் பட்டறிவு நெல் தானியத் தில் பெருவாரியான ஆராய்ச்சியில் ஈடுபட வில்லை என்பது வியப்புக்கு உரியதாகும்.

பார்லி

பார்லி (*JGU*) (*Hordeum vulgare*) வழக்க மாகக் கோதுமை வளருமிடங்களில் பயிரிடப் பட்டது. வங்காளத்திலும், அசாமிலும் பார்லி பயிர் செய்யப்படவில்லை. பொது வாகக் கோதுமையும் பார்லியும் மூன்றுக்கு ஒன்று என்னும் வீதத்தில் பயிரிடப்பட்டன. நிலத்தில் ஐந்தில் ஒரு பாகத்தில் பார்லி இருந்ததாக 'ஐன்' கூறுகிறது.

இதர தானியங்கள் (*Millets*)

நாட்டின் வறண்ட பகுதிகளில் பலவகை யான சிறு தானியங்கள் பயிரிடப்பட்டன. அக்பருடைய காலத்தில் கீழ்க் காணும் தானியங்களுக்கு வரிவிதிக்கப்பட்டது.

தமிழ்ப் பெயர்	பாரசீகப் பெயர்	இந்துத்தானிப் பெயர்	ஆங்கிலப் பெயர்	இலத்தின் பெயர்
சோளம்	சோவர்	சோர்கம், சோர்	பெரிய மில்லட்	*Sorghum vulgare pers*
குதிரைவாலி	சாமாக்	சான்வான், சான்வா	சப்பானிய மில்லட்	*Echinochloa colona var. frumentacea (Roxb) Link.*
வரகு	கோட்ரான்	கோடு, கோண்டோ	கோடோ மில்லட்	*Paspalaum Scrobiculatum L.*
தினை	(கால் (அ) குங்கினி	காங்கிரி, காங்குகும்	இத்தாலியன் மில்லட்	*Setaria italica L. Bean*
சாமை	அர்சன்	சின், மோரி, அனு	பொதுமில்லட்	*Panicum millaceum L*
கேழ்வரகு	மன்வா	மண்டுவா, மண்டல்	ராகி	*Eleusine coracana L. Gaertn*
கம்பு	லதாரா	பச்ரா	புல்ரச் அல்லது முத்துமில்லட்	*Pennisetum typhoides Burn (f) Stapf and C. B. Hubb*

இவற்றுள் பெரும்பாலானவை இன்றும் பயிரிடப்படுகின்றன 38 ஏழைகளின் உணவுக்காகவோ, கால்நடைகளுக்காகவோ இச்சிறு தானியங்கள் பயிரிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டில் மிகப் பெரிய மேய்ச்சல் நிலங்கள் இருந்தனவாகத் தெரிவதால், இவை பெரும்பாலும் கால்நடைகளுக்காகவே பயிரிடப்பட்டன என்பது போதரும். எடுத்துக்காட்டாக, இப்போது புல்தரையாகவுள்ள சில இடங்கள், அந்நாளில் பெரும்பாலும் கால்நடைகளுக்குப் புல் வளரும் இடங்களாக இருந்தன. அதனால், நெய் அதிகமாகக் கிடைத்தது. அரிசி, பருப்பு தானியங்களுடன் வெண்ணெய் பொதுமக்களின் உணவாக இருந்தது என்றும், இவற்றை உண்ணாத மக்களே ஆக்ராவில் இல்லை என்றும் சே, சேவியர் கூறுகிறார்.[39]

இவற்றிலிருந்து நமக்குக் கிடைப்பது என்னவெனில், கம்பு பயிரிடப்பட்ட நிலம் இக்காலத்தைக் காட்டிலும் அக்காலத்தில் மிகவும் குறைவானது என்பதாம்.

பருப்புகள்

பருப்பு என்னும் பெயரில், தாவரப் புரதச் சத்துள்ள பலவகையான பருப்புகள் உணவாகக் கொள்ளப்பட்டன. அக்பர் காலத்தில் பலவகையான பருப்புகள் பயிரிடப்பட்டன. கீழ்க்காண்பவற்றிற்கு வரியும் வசூலிக்கப்பட்டது.

தமிழ்ப் பெயர்	பாரசீகப் பெயர்	இந்துத்தானிப் பெயர்	ஆங்கிலப் பெயர்	இலத்தின் பெயர்
பாசிப்பயறு	மாச்	முங்	க்ரீன்கிராம்	*Phaseolus radiatus Roxb*
உளுந்து	மாச்சியா	உர்த்	பிளாக்கிராம்	*Phaseolus mungo Roxb*
	மோத்	மெத், காலை, கேரி		*Vigna sinensis*
காராமணி	லோப்யா	லோபியா	கௌபீ	*Vigna catjang walp*
கொள்ளு	குல்ட்	குல்தி	ஆர்சு கிராம் (கொள்)	*Dilichos biflorus L.*
	அதாசு	மாசுர்	லெண்டில்	*Lens cubinanis Medic*
கொண்டைக் கடலை	நகூத்	சானா	சிக் பீ, கிராம்	*Cicer arietivum L.*
பட்டாணிக் கடலை	மசாங்	மத்தார்	கார்டன் பீ (பட்டாணி)	*Pisum saticum L. var arvensenpoir*
	கேசரி		கிராசு பீ	*Lathyrus sativus L.*

எண்ணெய் வித்துக்கள்

பல எண்ணெய் வித்துக்கள் பயிர் செய்யப்பட்டன. லினன் (*Linun usitatissimum*); சாப்ளவர் (*Carthamus tinctorius L*) எள் (திலம்)(*Sesamum indcum L*) கடுகுடோரியா (*Brassica Campestris L Var toria Dutt & Full*) முதலியன முக்கியமானவை. கடுகில்பல வகைகள் கூறப்படுகின்றன.

B Compestris. L. var dichotoma watt – (*Kelisarson*)

B. Compestris L. var. Sarson **Prain** – *Yellow sarson Safed rai*

B. hirta Moench

B Juncea (L) Czern and cass (*rai*)

B. napus L, Kalisarson

B. nigra Kock (*Kalirai*)

எல்லாக் கடுகுவகைகளும் வரிவிதிப்புக்கு ஒன்றாகவே கருதப்பட்டன. அறிவியல் முறையில் தாவரவியற் பாகுபாடு அந்நாளில் இல்லை.

பணப்பயிர்கள்

பணப்பயிர்களில் கரும்பு நாடு முழுவதும் விரிவாகப் பயிரிடப்பட்டது. வங்காளத்தில் கரும்பு தரத்திலும், அளவிலும் அதிகமாக இருந்தது. பருத்திச் சாகுபடி (*Gossypium arboreum L*) கரும்பைக்காட்டிலும் குறைந்த பகுதிகளில் பயிரிடப்பட்டது, வட இந்தியா வில் பருத்தி பொதுவாகப் பயிரிடப்படும் பகுதிகளுக்கப்பாலும் பெரும் அளவில் பயிரிடப்பட்டது. வங்காளத்தில் இந்நாளில் இல்லாத ஒரு சிறந்த பருத்தி அன்று வங்கத்தில் வளர்ந்ததாகக் கூறப்படுகிறது. முறையான போக்குவரத்து வாய்ப்பு இல்லாமை அதற்குக் காரணமாக இருக்கலாம். அந்நாளில் வங்காளம் எளிதில் கிடைக்கும் பருத்தியால் மிக மெல்லிய மசிலின் துணிகளை நெய்வதில் தலைசிறந்து விளங்கிற்று. முகம்மதியர் காலத்தின் பிற்பகுதியில், அவுரி (*Indigofera tinctoria*) உள்நாட்டுப்பயனுடன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பணப் பயிராகவும் இருந்தது. பதினேழாம் நூற்றாண்டில் சாயச்சரக்கான அவுரி பற்றிய வரலாறு பல வணிக இலக்கியத் தொகுதிகளில் காணப்படுகிறது. ஆக்ராவுக்கு அருகிலுள்ள பயானா பகுதியில் மிகச்சிறந்த அவுரி பயிரிடப்பட்டது. மட்டரகமானது தோவாப் குர்சா, கோலி (அலிகார்) பகுதிகளில் பயிராயிற்று. ஆமதாபாத்துக்கு அருகிலுள்ள சார்கேசாவிலும் சிறந்த அவுரி வளர்ந்தது. தெலிங்கானாவில் உண்டானஅவுரி இடைத்தரமானது. அவுரி இயல்பாக வங்காளத்திலிருந்து காண்டேசு வரை வளர்ந்தது. அவுரிச் சாகுபடி அற்றுப் போனவிடங்களில் கோதுமை முதலிய பயிர்கள் நன்கு வளர்வதற்கு நிலத்தில் வேண்டிய சத்து இல்லை என்பது பிறகு தெரியவந்தது. அவுரி வேர் நைட்ரசனைச் சேமித்துவைப்பது நமக்கு இப்போது தெரியும். ஆனால் பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் இவ்வுண்மை தெரிவதற்கு வழியில்லை. எனினும், அவுரி பயிரிடாவிடில் நிலத்தில் ஏதோ கெடுதல் என்று உழவர் உணர்ந்தனர். அல் (*AL*') என்னும் சிவப்புச் சாயத் தாவரம் (*Morinda tinctoria Roxb*) அக்பர் காலத்தில் அறியப்பட்டது. இவ்விரு சாயத் தாவரச் சாகுபடி செயற்கை நிறப்பொருள்கள் உண்டான போது நின்றுவிட்டது.40

அக்பர் ஆட்சியில் வரிவிதிக்கப் பட்ட மற்றொரு சாயச்செடி கென்னா (*Lawsonia inermis L*') என்பதாகும். இதன் இலைகளைக் கெட்டிப் பசையாக அரைத்துமகளிர் கால்களிலும் கைகளிலும் அப்பிக்கொள்வர். அரை மணி நேரங்கழித்துப் பார்த்தால் அவ்விடங்கள் சிவப்பு நிறமாக மாறும் இப்பழக்கம் இன்றும் சிற்றூர்களில் காணப்படுகிறது. நகரங்களில் இக்காலத்தில் மகளிர் நகப்பூச்சுப் போட்டுக் கொள்கின்றனர். மாமன்னரால் வரி விதிக்கப்பட்ட மற்றொன்று வெற்றிலை. இதனுடன் பாக்கு மற்றும் சில நறுமணப் பொருள்களைச் சேர்த்து மெல்லுவது வழக்கம்.

நார்ச்செடிகள்

சன்ஹெம்ப் (*Crotalaria Juncea L*) செடியும், சணலும் (*Corchorus spp*). ஐன், நூலில் நார்ச்செடிகளாகக் குறிப்பிடப்படுகின்றன.41 பின்னையதைக் காட்டிலும் முன்னையது மிக அதிகமாகப் பயிர் செய்யப்பட்டது, சணல் உள்நாட்டில் அதிகமாகப் பயன்படாதபடியால் இந்நாளிலும் வங்காளத்தில் இதே நிலைமை காணப்படுகிறது.

போதைச் செடிகள்

கசகசாச் செடியும் (*Papaver Somniferum L*), அபின் (பாங்) செடியும் (*Cannabis Sativa L*) பழைய ஏடுகளில் குறிப்பிடப்படுகின்றன. கசகசா அநேகமாக எல்லாவிடங்களிலும், அதிலும் முக்கியமாக மலவா பீகார்ப் பகுதிகளில், பயிரிடப்பட்டது, 42 அபினும் பலவிடங்களில் மிகுதியாகப் பயிர்செய்யப்

பட்டது. ஆனால், பிற்காலத்தில் ஔரங்கசீப் அதனை முற்றிலும் அழித்து விடும்படியாக உத்தரவிட்டார்.

வீட்டுத்தோட்டம்:

உண்பதற்குப் பயிர்செய்யப்பட்ட கறிகாய்களுக்கும் வரிவிதிக்கப்பட்டது 43அவையாவன: கத்தரிக்காய் (*Solanum melangena*) வெள்ளரி (*Cucumis sativus L.*), முள்ளங்கி (*Raphanus sativus L*), காரட் (*Daucas car-ota L.var. sativa Dc*), பாகல், (கரேலம்) (*Momordicacharantia L*), தாகுரா, காக்ரோல் (*Momordica Colchichinensis sprang*), குமட்டி(திந்த) (*Citrullus vulgaris var.fistulosus Dutt and Full*), வெங்காயம், (*Allium cepa L*) லெட்டுசு கீரை (*Lactuca sativa L*). லெட்டுசு தென் ஐரோப்பாவில் (கிரீசில்) தோன்றிற்று என்வும், நாம் இப்போது கருதுகின்ற காலத்திற்கு முன்பே அரேபியாவுக்கு வந்ததென்றும், அங்கிருந்து இந்தியாவுக்கு வந்ததென்றும் கூறப்படுகிறது.

நீர் செஸ்நட், சிங்காரா (*Trapa bispi-hosa Roxb*). மஞ்சள், கல்தி (*Curouma domestica valet*), அச்வெய்ன் (*Trachy-spermum ammi L. sprague*), வெந்தயம் (*Trigonella raenum graceum b.*) முதலிய மற்றைய பொருள்களும் விளையுமிடத்திலேயே மதிப்பீடு செய்யப்பட்டு வரிவிதிக்கப்பட்டது.44

மலர்களும், கனிகளும்

காட்டுமலர்கள் எங்ஙனம் வீட்டுமலர்களாக வளர்க்கப்பட்டன என்ற வரலாறு புலனாகவில்லை. மொகலாயர் காலத்துக்கு முன்பே பல மலர்கள், சமயச் சடங்குகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. துளசியும் (*Ocimum sanctum L*) செண்டாவும்(*Tage-tes erecta L*) குறிப்பிடத்தக்கவை. இவற்றுள்பின்னையதுதென்அமெரிக்காவைச் சேர்ந்தது. இது எப்பொழுது இந்நாட்டிற்கு வந்தது என்று தெரியவில்லையாயினும் மொகலாயர் காலத்திற்கு முன்பே இங்கு இருந்ததாகத் தெரியவருகிறது.45 முல்லை (*Jasminum officinale L, var. grandi-florum kobuski*), செம்பருத்தி (*Hibiscus rosa sinensis L*), அலரி (*Nerium indicum Mill*), தாழை (*Pandunus tectorius Soland et Parkinson*) முதலியவற்றைக் காபூலில் காணவில்லை என்று பாபர் (1526-30) தமது குறிப்புகளில் கூறியுள்ளார்.46

அடுத்தபடியாக சகாங்கீர் (1605-27) தமது குறிப்புகளில் பல மலர்களைக் கூறியுள்ளார்47 இவற்றுள் பல அழகிய மலர்கள் மட்டுமல்லாமல், அவற்றின் புறவிதழ் அகவிதழ்கள் பற்றியும், அவர் அவற்றை எவ்விடங்களில் கண்டார் எனவும், அவற்றிற்கு அவரிட்ட பாரசீகப் பெயர்களும் காணப்படுகின்றன. அவையாவன:

தமிழ்ப் பெயர்	பாரசீகப் பெயர்	இந்துத்தானி/ஆங்கிலப் பெயர்	இலத்தீன் பெயர்
அலரி	கனிர்	ஒலியாண்டர்	*Nerium indicum Mill*
புரசு	தாக்	தாக், பலாசு	*Butea frondosa Roxb*
செங்கழுநீர்	நிலுபார்	கமுதினி பம்பர்	*Nymphaes stellata wild*
தாமரை	கன்வால்	பத்மம்	*Nylumbo nucifera Gaertn*
சண்பகம்	குல் இ சம்பா	சம்பா	*Michelia champaca L*

தமிழ்ப் பெயர்	பாரசீகப் பெயர்	இந்துஸ்த்தானி/ ஆங்கிலப்பெர்	இலத்தீன் பெயர்
தாழை	குல் இ கோரா	கோரா	Fandanus tectorius
...	ரைபெல்	சாஸ்மின்	Jasminum sambac L Ait
அடுக்கு மல்லிகை	சம்பெலி	வென் சாஸ்மின்	Jasminum multiflorum (Burnf) Andr
மகிழ்	மௌல்ஸ்ரீ	ஸ்பானிச் செர்ரி	Mumusops elegi L
......	சியோடி	நாய்ரோசு	Rosa glandulifera Roxb
......	குல்இபுலாநிக்	கிரௌண்டு இம்பீரியல் லிலி	Fritillaria impenialis L
	அர்க்வானிஸார்ட்	பட்டர்கப்	Ranunculus sp
	நார்சிசு	நார்சிசசு	Narcissus poeticus L
	பானள்சா	ஊதாமலர்	Viola odorata L
ஆல்மண்ட்	குல் இ பாதம்	ஆல்மண்ட் பூ	Prunus amygdalus Batsch
பீச்	குல்இசாப்டாலு	பீச் பூ	Frunus persica (L) stakes
தொட்டாற் சிணுங்கி	சுயி.முயி	லச்வந்தி	Mimosa pudica L
குங்குமப்பூ	சாப்ரான்	ஸாப்ரான்	Crocus sativus

அன்றியும் ரோசு அத்தர் தமது ஆட்சியில் கண்டுபிடிக்கப்பட்டதென சகாங்கீர் கூறுகின்றார். ரோசு மலரைக் கரைத்த நீரைக் காய்ச்சினால் அதன்மேல் மிதந்து நிற்கும் எண்ணெய் நல்ல மணம் தரும் என்னும் எண்ணத்தை உருவாக்கியவர் நூர்சகான் பீகத்தின் தாய் ஆவர்.48 அந்த எண்ணெய் தான் மிக்க மணமுள்ள ரோசு அத்தர் ஆயிற்று.

பழமரங்களைப் பொறுத்த வரையில் மாங்கனி (*Mangifera indica L*) பெரிதும் பெயர் பெற்றதாக இருந்தது. எனினும் அந்நாளில் இருந்த மாங்கனியின் பல வேறு வகைகளைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. முசுலீம் காலத்திற்குப் பின்னர் தான் மாவின் பல்வேறு வகைகள் தோன்றியிருக்குமோ? மாங்கனியுடன் பலவகைத் திராட்சையும் (*Vitis vinifera L*), பேரீச்சையும் (*phoenix spp*), மாதுளையும் (*Punica granatum L*), வாழையும் *Musa paradisiaca L*), எலுமிச்சையும் (*Citrus spp.*), கிரணியும்(*Manilkara hexandra Roxb Dub*), சமானும் (*Syzygium Cumini L. Skeels*), பலாவும் (*Artocarpus integrifolia L.*) இன்ன பிறவும் அமீர் கௌஸ்ருவினால் பேசப்படுகின்றன.49 தென்னைகள் (*cocos nucifera L*) கடலோரப் பகுதிகளில் மிகுந்திருந்தன. 50 தில்லியிலும் அதன் புறத்திலும் பழத் தோட்டங்களை நிறுவுவதற்குப் பெரேசு சாதுக்ளக் பெரும்பாடுபட்டார். அவரது குறிப்புகளின்படி. தில்லிப்பகுதியில் 1200தோட்டங்களும் சித்தோரியில் 43 தோட்டங்களும் ஏற்பட்டன. சோட்பூரில் மாதுளை பயிர் செய்யத் தனி முயற்சி செய்யப்பட்டது. அங்குண்டான மாதுளங்கனிகள், பாரசீகக் கனிகளை விடச் சிறந்தவைகளாக இருந்தன. பாபருடைய குறிப்புக்களிலும் இக்கனிகள்

கூறப்படுகின்றன.[51] இவை அன்றி, புளி, (Tamarindus indica L), Jeadhil (Arto carpus Iakoocha Roxb), 'ber' (Zizyphus mauritiana Lamk), 'Karoda' Carissa Carandus L 'pani- amla' (Flacourtia jangomas (Lour) 'Raeusch 'guler (Ficus glomerata Roxb. 'amieh' Emblica officinalis Gaertn' 'Chirunji Buchanami முதலியனவும் காணப் படுகின்றன. மேலும் பாபர் பல வகையான நாரத்தை இனத்தைக் கூறுகின்றார் அவற்றை இனம் கண்டு இந்நாளைய வகைப் பட்டியலில் சேர்க்க முடியவில்லை.

அக்பருடைய அரசாட்சிக்குள்ளாக மைய ஆசியாவிலிருந்தும், ஆப்கானித்தானத்தி லிருந்தும் கொண்டுவரப்பட்ட புதுவகைத் தாவரங்களைக் கொண்டு பெரிய சீர்திருத்தங் கள் செய்யப்பட்டன. எடுத்துக் காட்டாக அக்பருடைய காலத்திற்கு முன்பு காச்மீரில் செர்ரி வளரவில்லை. உள்நாட்டுச் செடி களுடன் உயர்ந்த தகுதியுடைய செடிகளை ஒட்டும் முறையும் கையாளப்பட்டது. இந் நாளில் குளிர் நாட்டுக் கனிமரங்கள் அரசுத் தோட்டங்களிலும், பெருஞ்செல்வருடைய தோட்டங்களிலும் மட்டும்வளர்க்கப்பட்டன. சாசகான் காலத்தில் இக் கட்டுப்பாடு நீங்கி எல்லோராலும் கனிமரங்கள் அனைத்தும் பயிர் செய்யப்பட்டன.[52] அனைத்துக்குறிப்பு களையும் கொண்டுபார்த்தால், இந்நாட்டில் கனி மரங்கள் மிகுதியாகப்பயிரிடப்பட்டமை தெரிய வருகிறது சகாங்கீர் கீழ்க்காணும் கனிமரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.[53]

உள்நாட்டுப்பெயர்	ஆங்கிலப்பெயர்	இலத்தீன்பெயர்
சா அலு, கிலசு	இனிப்புச்செர்ரி	Prunus areiun. L
சார்டு அலு	எப்ரிகாட்	Prunus armemiaca L
நாஃச்பதி	பியர் (பேரிக்காய்)	Pyrus communis L
செப்	ஆப்பிள்	Malus Sylvestris L. (Mill)
அம்ருத்	குவாவா (கொய்யா)	Psidium guajava L.
அங்குர்	கிரேப் (திராட்சை)	vitis vinifera L.
அனார்	பொமோகிரானட் (மாதுளை)	Punica granatum L.
தார்பூசு	வாட்டர் மெலன்	Citrullus Vulgaris Schred ex Eckl and Zeyh
கர்பூசா	மஃச்க்மிலன் (குமட்டி)	Cucumis melo. L.
துத்	மல்பெரி	Morus alba L,
ஆஃச்கின்	ஃச்டிராபெர்ரி	Fragaria vesca L.
அலுபாலு	சவர் செர்ரி	Prunus cerasus L.
சாப்டாலு, அரு	பீச்செசு	Prunus persica (L) Stokes

தோட்டங்கள்

முகலாயர்களின் தோட்டங்கள் பற்றி இந்தியரும், அயல்நாட்டினரும் மிகுதியாக எழுதியுள்ளார்கள். ஆனால் இவர்களுக்கு முன்னால் ஆண்ட தில்லி சுல்தான்களும் இந்து அரசர்களும் தோட்டங்களில் மிக்க கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர். கிடைத்த சான்றுகளைக்கொண்டு பார்த்தால் பாபர் தில்லிக்கு வந்தபோது இதனைப் பற்றிய இந்திய நாகரிகம் பற்றிய அவரது குறிப்புகள், முன்னுக்குப்பின் முரணாக உள்ளன. 54 அவரது மகன் உமாயூனை வங்காளத்திலிருந்த கட்டட அமைப்பும் தோட்ட அமைப்பும் அதிக நாள் தங்கும்படி செய்தன என்ற ஒரு செய்தியே பாபரின் முரணிய குறிப்புக்களுக்குப் போதிய சான்றாகும். அக்பரும் அவருக்குப்பின் வந்தவர்களும் தில்லியிலும் ஆக்ராவிலும் இத்துறையில் பலசீர்திருத்தங்களைச் செய்தனர். அதனால் இன்றுகூட இத்தோட்டங்கள், இந்தியர்களாலும் அயல்நாட்டினராலும் பார்க்கத் தக்கவையாகக் கருதப்படுகின்றன.

அந்நாளில் தோட்டங்களில்மலர்ச்செடிகள் மட்டும் அன்றிப் பழமரங்களும் இருந்தன. பழ மரங்களால் அரசுக்கு நல்ல வருவாயும் இருந்தது. ஆக்ராவிலிருந்த அரசாங்கத் தோட்டங்களில் பல வகையான அயல்நாட்டு மரங்கள் அரசர்களின் நேரடிப் பார்வையில் நடப்பட்டு வளர்க்கப்பட்டன என்றும் அறிகிறோம்.

புதிய தாவரங்களை நடுதல் :-

அயல் நாடுகளிலிருந்து பல தாவரங்கள் தருவிக்கப்பட்டன என்று, இந்தியப் பொருளியல் வளத்திற்குப் பயன்தரும் தாவரங்களைப் பற்றிய நூல்கள் குறிப்பிடுகின்றன. எப்பொழுது, எவரால் இவை ஒவ்வொன்றும் கொண்டுவரப்பட்டது என்று தெரியவில்லை. இருப்பினும் அக்பர் காலத்தில் செர்ரி மரம் (*Prunus avium L*) பாரசீகத்திலிருந்து காச்மீரத்திற்குத் தருவிக்கப்பட்டது என்று தெரிகிறது. புகையிலை (*Nicotiana tabacam L.*) தென் அமெரிக்காவிலிருந்து அரேபியா வழியாக இந்தியாவுக்கு வந்தது. கச் பயணம் சென்ற தென்னிந்தியர்கள், புகையிலையைக் கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது. அக்பருடைய காலத்தில் தென்னிந்தியாவிலிருந்த அவரது சார்பாளர் ஒருவர் மாமன்னர்க்குப்பரிசுப்பொருளாகக்கொண்டு போய்க்கொடுத்தபோது, புகையிலை வடநாட்டில் பயிரிடப்பட்டது. ஒரு தடவைக்கு மேல் அக்பர் புகைபிடிக்கவில்லை. இவரது மகன்சகாங்கீர், 'புகையிலைவிலக்கு',ஆணை வெளியிட்டார். ஆனால், இந்த ஆணை மக்களிடம் செல்லுபடியாகவில்லை. மக்கள் புகைபிடித்தார்கள். ஆனால், பொதுவிடங்களில் இல்லை. வரவரப் புகையிலை பயிரிடல் மேற்கேயிருந்து கிழக்கிலும், தெற்கேயிருந்து வடக்கிலும் நாடு முழுதும் பரவலாயிற்று. பதினாறாம் நூற்றாண்டில் மேற்குக் கடலோரத்தில் போர்ச்சுக்கீசியர்களால் இந்தியாவில் பயிரிடப்பட்ட குறிப்பிடத் தக்க இன்னொரு தாவரம் அன்னாசி (*Ananas Cosmus L. Merr*). அது பலராலும் விரும்பிப் பயிரிடப்பட்டது குசராத்திலிருந்து வங்காளம்வரை இப் பழச் செடி மிகுதியாக வளர்க்கப்பட்டது. சகாங்கீருடைய காலத்தில், ஆக்ராவிலுள்ள அரசாங்கத் தோட்டத்தில் ஆயிரக்கணக்கான அன்னாசிச் செடிகள் பயிரிடப்பட்டன. இதற்கு மிகச் செலவில் ஈரமும், வெப்பமும் செயற்கை முறையில் தேவைப்பட்டன. அக்காலத்தில் தருவிக்கப்பட்ட தென் அமெரிக்கத் தாவரங்களில் முக்கியமானவை பப்பாளி (*Carica Papaya L*), முந்திரி (*Anacardium occidentale L*). இவை அன்னாசியைப் போல அத்துணை விரைவாகப் பரவவில்லை, பதினேழாம் நூற்றாண்டில்தான் (1623) இவையிரண்டும் போர்ச்சுக்கீசியப் பகுதிகளில் மிகுதியாகப் பயிரிடப்பட்டன. இந்தியர்களின்இந்நாளைய உணவில் பொதுவாகக் கொள்ளப்படும்

மிளகாய் (*Capsicum frutescens L,*) மொகலாயர் காலத்தில் இல்லை. உறைப்புக்காக மிளகு (*Piper nigrum L,*) மட்டும் பயன்படுத்தப்பட்டது.

'ஐன்' நூலில் காப்பி (*Coffea arabica L*). யைப் பற்றிய குறிப்பு இல்லை.55 அதனால் காப்பி அக்பர் காலத்திற்குப்பின்பு தருவிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பதாயிற்று. ஔரங்கசீபின் அரசாட்சியின் பிற்பகுதியில் செல்வர்களும் பெருமை மிக்கவர்களும் ஏற்றுக் கொண்ட நாகரிகக் குடியாக இருந்தது. அக்காலத்தில் காப்பிக்கொட்டை அரேபியா அல்லது அபிசீனியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. தென்னாட்டில் ஏறக்குறைய 1665 ஆம் ஆண்டில் காப்பிப் பயிர் செய்தல் இருந்ததென்றும், அதன்தரம் இறக்குமதி செய்யப்பட்ட காப்பியைவிடக் குறைவானதென்றும் ஒரு குறிப்பு காணப் படுகிறது.

இதுகாறும் முத்துச்சோளம் (*Zea mays L*) அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்த தாகவே நம்பப்பட்டது. ஆனால், எப்போது என்பதை நாம் அறியோம். அசாம் பகுதியில் ஒரு வகைச் சோளம் இருந்ததென்பது அண்மையில் கண்ட வியத்தகு ஆராய்ச்சி யாகும். மைய இந்தியாவில் ஒரு வகைச் சோளக்கதிர் கிடைத்ததாக அகழ்வாய் வாளர் கூறுகின்றனர். அது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது என்று கருதுவர்' இக்கண்டுபிடிப்புகள் சோளம் இந்தியாவில் தோன்றியதற்குரிய சான்றுகள் ஆயினும், 1600 ஆண்டுகளுக்கு மேலும் ஏன் இந்தச் சிறந்த தானியம் இந்தியாவில் பயிர்செய்யப் படவில்லை என்பது புலனாகவில்லை. சோளம் பயிரானதற்கு எழுதப்பட்ட மிகப் பழைய பதிவு ஔரங்கசீப் காலத்தியதாகும். செய்ப்பூர் பகுதியில் மழைக்காலப் பயிர் களுக்கு (*Kharif*) வரி விதித்த குறிப்புகளைப் பார்த்தால் மக்காச்சோளத்திற்கு 1689 ஆம் ஆண்டில் முதன் முதலாக வரிவிதித்த தாகத் தெரிகிறது. அது முதல் 1744 வரை இதற்கான வரி வசூலைப் பார்த்தால் வரவர சோளம் மிகுதியாக விளைந்ததென்பது தெரியவரும். சட்சு பகுதிகளின் வரிவிதிப்பு அட்டவணையைப் பார்த்தால் மக்காச் சோளத்திற்கு 1664 முதல் 1750 வரை வரி வசூலானது 'தெரிகிறது. முற்குறித்த 1600 ஆண்டுகளுக்கு மக்காச்சோளம் பற்றிய புதிய தகவல்கள் கிடைக்கும்வரை இந்தியாவில் சோளத்தின் தோற்றத்தை உறுதி செய்ய முடியாது.

4. இடைக் காலத்திலிருந்து இந்தியாவில் ஐரோப்பியர் தாவரப் பயிற்சியில் கொண்ட ஈடுபாடு

ஏ. கே. கோச்

கோவாவில் போர்ச்சுக்கீசியர் (1534-1570)

இலின்னேயசு காலத்திற்குமுன் இந்தியா வில் தாவர அறிவு வளர்ச்சியின் வரலாறு, ஐரோப்பியரின் செயல்களைச் சேர்த்தால் அன்றி முற்றுப்பெறாது. மொகலாய மா மன்னர்கள் தமது நாட்டின் பயிர்களைப் பற்றிக் கவனம் செலுத்தியபோது, ஐரோப் பியர்கள் சிற்சில இடங்களில் வளர்ந்த தாவரங்களின் மருந்தியல்புகளைக் கண்டு பிடிப்பதில் ஓசைப்படாமல் முனைந்திருந் தனர். கார்சியா என்ற போர்ச்சுக்கீசிய மருத்துவர் 1534-இல் இந்தியாவுக்கு வந்து கோவாவில் ஒருதோட்டத்திலிருந்து மருந்துச் செடிகளை ஆராய்ந்துவந்தார். அவர் 1565

இல்'*Coloquios des simples edrages cousso medicinalis da India compostos pella* என்னும் நூலை வெளியிட்டார். அதில் அவர் சேர்த்தவை:

1. அரேபியர்கள் வாணிபத்திற்காக மேற்கே அனுப்பிய கீழ்த்திசை மருந்துகள்;

2. மேலை நாட்டினருக்குப் புதியனவாக இந்தியர் பயன்படுத்திய மருந்துகள்;

3. கோவாவில் பயிரான பழங்களும், போதைப் பொருள்களும் பற்றிய தகவல்.

மலையாளத்தில் டச்சுக்காரர்கள்(1667-1750)

கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த டச்சுக்காரர்களில் (1667-1750) சிலர் தாங்கள் வாழ்ந்த மலையாளப் பகுதியில் இருந்த தாவரங்களில் மிகுந்த கவனம் செலுத்தி வந்தார்கள். டச்சுக்காரர்களின் பகுதிகளுக்கு 1667-இல் கவர்னராக நியமிக்கப்பட்ட Hein--rich Van Rheedetot Draakenstein ஒரு நல்ல தாவர அறிஞர். 1674-1675 ஆம் ஆண்டுகளில், உள்ளூர் மக்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட தாவரங்களைக் கொச்சிக்கு அனுப்பினார். அங்கே மத்தேயசு என்பவர் அவற்றிற்குப் படங்கள் வரைந்தார். அவற்றிற்கு மலையாள மொழியில் விளக்கங்கள் எழுதப்பட்டன. அவ்விளக்கங்கள் முதன் முதலாக மேனாட்டுமொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. பின்னர் அவை இலத்தீன் மொழியில் எழுதப்பட்டன. வான் ரீடியின் இப்புத்தகம் ஆம்ஸ்டர்டாமில் 12 பெரும் பகுதிகளாக 794 படங்களுடன் 1686-1703 ஆண்டுகளில் வெளியிடப்பட்டது. இவ் வெளியீட்டைச் சர் வில்லியம் சோன்சு என்பவர் கீழ்க்கண்டவாறு பாராட்டுகின்றார்.''எங்களுக்கு இந்தியாவில் இலக்கிய தத்துவ படிப்புகளுக்குப் போதிய கால வாய்ப்பிருந்தது என்று ஏனையவர்களுடன் யானும் புகார் சொல்லும்போது, வான்ரீடி என்பவரின் பெருஞ்செயல்களை நோக்க வேண்டும். அவர் தமது குறிப்பிடத்தக்க தலைநகரின் ஆட்சியைச் செவ்வனே செய்த தோடன்றி, இலின்னேயசு வாக்கினால் ஒப்புதல் பெறப்பட்ட பன்னிரண்டு பெரும் தொகுதிகளை எழுதி முடித்து வெளியிடுவதற்கு வேண்டிய நேரமும் கிடைத்தது.''

டச்சுக்காரர்களால் வெளியிடப்பட்ட இன்னொரு குறிப்பிடத்தக்க புத்தகம் சார்ச்சு வெர்கார்டு ரம்பியசு என்பவரால் எழுதப் பட்டது அது டச்சுமொழியில் எழுதப்பட்டு டச்சுக் கம்பெனியாரிடம் பல ஆண்டுகள் சிக்கிக் கிடந்தது. ஆம்ஸ்டர்டாமைச் சேர்ந்த பேராசிரியர் சான் பர்மன் என்பவர் அதனைத் தேடிப்பிடித்து 1757-இல் ஆறு பாகங்களாக வெளியிட்டார். அதனோடு இலத்தின் மொழிபெயர்ப்பும் 696 படங்களும் இணைக்கப்பட்டன.

வான் ரீடி என்னும் டச்சுக் கவர்னர் பால் எர்மன் என்பவரைத் தாவர வேலைக்காக இலங்கையில் நியமித்தார். எர்மன் தொகுத்த தாவரங்கள் லெய்டனுக்கு அனுப்பப்பட்டு அவரால் விவரிக்கப்பட்டு 1717-இல் எர்மன் உடைய '*Museum zeylaunicum*' என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. பின்னர் 1737-இல் சான் பர்மன் என்பவர் எர்மனுடைய தாவரங்களை விவரித்தெழுதி, *Thesaurus zeylanicus*' என்னும்பெயரில்வெளியிட்டார். எர்மனுடைய உலர்ந்த தாவரங்கள் டென்மார்க் அரசரின் மருந்துக்கடைக்காரரான குந்நார் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு இலின்னேயசுக்கு அனுப்பப்பட்டன. 1747-இல் இலின்னேயசு சிங்களச் சொற்களையும், மலையாளச் சொற்களையும் அத்தாவரங்களுக்குப் பேரினப் பெயர்களாகக் கொடுத்து *Flora zeylanica*' என்னும் நூலை வெளியிட்டார். பதினெட்டாம்நூற்றாண்டின்தாவரப் படிப்பினைச் செப்பனிட்டதற்கு இது ஓர் உதாரணமாகும்.

தரங்கம்பாடியில் டச்சுக்காரக் குடியிருப்பில் பிராடெஃ்ச்டண்டு மிசனரிகள் (1668-1834)

தாவரப்படிப்புக்கு இந்தியாவில் டச்சுக் காரர்களின் மற்றொரு செயல் குறிப்பிடத் தகுந்தது. 1768-இல் தரங்கம்பாடி மிசனரியாக சான் செரால்டு கோயனிக் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் சுவீடனிலுள்ள உப்சாலாவில் இலின்னேயசிடம் இளமையில் பயின்ற மிசனரி மருத்துவர். கோயனிக் இயற்கை அறிவியற் பொருள்களைச் சேகரிப்பதில் உற்சாகமுள்ளவர். அவர் சென்னைக் கடலோரத் தாவரங்களைப் பயின்றதோடு உலர்ந்த செடிகளையும் தமது ஆசிரியரான இலின்னேயசுக்கும் சர் சோசப் பாங்சு என்பவருக்கும் அனுப்பினார். இலின்னேயசு அவற்றிற்குத் தம் உலர் தாவரச் சாலையில் தனியிடம் தந்தார். கோயனிக் என்பவர்தான் முதன்முதலாக இந்தியத் தாவரங்களுக்கு இலின்னேயசு உருவாக்கிய இரட்டைப் பெயர் முறையைக் கொடுத்தவராவார். இதற்குமுன், தாவரங்களில் உள்ள மலர்களும் பிற உறுப்புகளும் அமைந்துள்ள முறையைப் பாராமல் தாவரங்களின் பயனை அடிப்படையாகக் கொண்டு தாவரப் பாகுபாடு செய்தனர். மிசனரிகள் அனைவரும் இந்தியாவில் தாவர பயிற்சிக்காகக் கோயனிக் தோற்றுவித்த 'இணைந்த சகோதரக் குழு' என்னும்கூட்டத்தில் சேர்ந்தனர். அவர்களுள் தரங்கம்பாடியிலிருந்த மிசனரிகள் ஏன், புக்கானன், ஆமில்டன் கிளியின், ரோட்லர், வில்லியம் ராக்ஸ்பெர்க், வில்லியம்சோன்சு என்பவர்கள் சேர்ந்திருந்தனர். பத்து ஆண்டுகளுக்குப்பின் கோயனிக் ஆர்க்காட்டு நவாப்பிடமும், அப்புறம் கிழக்கிந்தியக் கம்பெனியிலும் தமது வேலையை மாற்றிக்கொண்டார். சையாம் நாட்டு ஏலக்காயைத் தென்னிந்தியாவில் பயிரிடமுடியுமா என்பதைக் கண்டு சொல்வதற்காக, அவரைச் சயாம், மலேயா நாடுகளுக்கு அனுப்பினர். அவர் நோய்வாய்ப்பட்டு 1785-இல் ஓய்வு பெற்றார்.

தாவரப் பாகுபாட்டியலில் ஆய்வுகள் இந்தியாவின் பல்வேறிடங்களில் ஐரோப்பிய உயிரியலறிஞர்களால் தொடரப்பட்டன. அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள், வில்லியம் ராக்ஸ்பெர்க், வில்லியம் கேரே, நத்தானியல் வாலிச், சார்ச் கிங் முதலியவர்கள் ஆவர். 1787 – இல் இராபர்ட் கைடு என்பவரின் முயற்சியால் அரசாங்கத் தாவரத் தோட்டம் நிறுவப்பட்டது. இத் தோட்டத்தின் செயல்கள். 19 ஆம் நூற்றாண்டில் தாவர ஆராய்ச்சிகள், இந்தியத் தாவரக்குழு என்னும் நிறுவனம். இவை தொடர்பான செயல்கள் அனைத்தும் பத்தாவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளன,

---

அடிக்குறிப்புகள்

1. லூத்ரா: பக்கம் 489
2. சலம் வெங்கடேசுவரலு: பக் 180 181.
3. ஆர்கிசு. உல்லி பக். 516
4. சலம் வெங்கடேசுவரலு பக். 180

5. சங்காலியா. பக் 28. 40.

6. அட்கின்சன். சே.பி. பக். 225

7. வாட் என்பவர். வாட் 193. 323

8. பிரௌன் பக். 42

9. தை. ச. VII

10. அ. வே. VIII

11. பிரு. 2; 111. 9. 28

12. தை. ச. V I. 7. 3.

13. மசூம்தார் சி. பி V பக் 103

14. பிருக . உப VI 4 1

15. இரு. ம. X 97. 15.

16. ச. ச. சூ 1. 112.

17. ச. ச. பக். 157.

18. சு. ச. சா. பக் II. 33.

19. ச. ச. பக். 157.

20. அங்குவிரிர் விதே......... ப்ரசோசமா. பத்யதே

21. மசும்தார். சி. பி. 1 பக். 23.24.

22. பத்ரசிரா. சம்யாயதே.

23. சில். பக். 173. 174.

24 சாந்திபர்வம். 177. 16

25. மசூம்தார், சி. பி, பக். 32.

26. வை. சூ. 5.2. 7.

27. மஃச் 1

28. சு. ச. சூ1

29. மசூம்தார். சி. பி. 5 பக் 67.

30. அ. சா. II. 24

31. மசூம்தார். சி. பி. 5 பக். 27.

32. மகேசுவரி செங்குப்தா வெங்கடேசுவரலு. பக்.165.

33. மசூம்தார். சி. பி. 5. பக் 29.

34. அச்ராப். பக். 20;

35. அபீப். பக். 3. 7.

36. சர்க்கார். சே. II

37. சர்க்கார். சே. பக். 134.

38. அபீப். பக். 54

39. சர்க்கார். சே. பக். 69. 117.

40. அபீப். 42. 44.

41. சர்க்கார். சே. II பக். 136

42. அபீப். பக். 44. 45.

43. சர்க்கார். கே. II. பக். 76. 77.

44. சர்க்கார். கே II பக். 78. 82. 85

45. அக்ச்கேப். பக். 201. 202.

46. அச்ராப். பக். 201. 202.

47. அல்விரகிமான். 2. பக். 92. 102.

48. எலியம். டென்சன். பக். 107.

49. அச்ராப். பக். 201.

50. அச்ராப். பக். 201

51. கிங். எல். II 225. 37.

52. அபீப். பக். 51.

53. ஆல். பில். சேமாள் (-) பக் 106. 107.

54. கிங். எல் II பக். 156.

55. அபீப். பக். 46.

பண்டை இந்தியாவில் கால அளவுகளும் அண்டகால இயலும்

ஆ. சுப்பிரமணியன்

பண்டைய இந்தியர்கள் அறிவியலில் மிகச் சிறந்த வல்லுநர்களாக இருந்தனர். இதனை வடமொழி நூல்களால் அன்றித் தமிழிலக்கியம், சமய நூல்கள் ஆகியவற்றாலும் நாம் அறியலாம். சங்ககால இலக்கியங்களிலும், சைவ சமய நூல்களிலும் அண்ட இயல் (cosmology), அண்டத்தோற்ற இயல் (cosmogony), அண்ட காலஇயல் (cosmic chronology), வான் இயல்பியல் (Astro-physics) போன்ற அறிவியல் கூறுகளைப்பல இடங்களில் காணலாம். இச்சிறு உரை பண்டைய இந்தியர் அறிந்திருந்த கால அளவுகளையும், பல்வேறு அண்டங்களின் கால அளவுகளையும் விளக்குகிறது.

மீண்டும் மீண்டும் நிகழும் ஒருநிகழ்ச்சியின் (Repetitive Phenomenon) துணைகொண்டு நாம் காலத்தை அளக்கிறோம். முதன்முதல் மாந்தன் இந்நிலவுலகு தன்னைத்தானேசுற்றி வருவதால் ஏற்படும் பகல் இரவுகளைக் கால அளவாகக் கொண்டான். பின்னர் இவ்வுலகு கதிரவனைச் சுற்றி வருவதால் உண்டாகும் பருவங்களையும், ஆண்டையும் கால அளவுகளாகக் கொண்டான். ஆனால், அவனது வாழ்க்கை நிகழ்ச்சிகளின் காலங்களை உணர்த்தஇரவுபகல்களைவிடமிகச்சிறு அளவுகள் வேண்டப்பட்டன. அவற்றிற்குப் பழந்தமிழன் தனது கண் இமைக்கும் அளவையே ஓர் அடிப்படைக் கால அளவாகக் கொண்டான். இந்தக்கால அளவையும்நான்கு கூறுகளாக்கி அவற்றின்கூறினைத் 'துடி' எனக் கொண்டான். இத்துடியினது மிகச் சிறிய அளவைப் பின்வரும் வாய்ப்பாட்டால் நாம் உணரலாம்:

4	துடிகள் கொண்டது	=	1 இமைப் பொழுது (நிமிடம் அல்லது மாத்திரை)
15	இமைப்பொழுது	=	1 காட்டை
30	காட்டைகள்	=	1 கலை
15	கலைகள்	=	1 கணம்
2	கணங்கள்	=	1 முகூர்த்தம்
4	முகூர்த்தங்கள்	=	1 கடிகை
8	கடிகைகள்	=	1 சாமம்
8	சாமங்கள்	=	1 நாள்
360	நாள்கள்	=	1 ஆண்டு

இங்குக் கூறப்படும் நிமிடம் வேறு; இப்பொழுது வழங்கும் நிமிடம் வேறு இந் நிமிடம் ஒரு செகண்டில் நாற்பதில் ஒருகூறு. துடி என்பது ஒரு செகண்டில் நூற்றறுபதில் ஒருகூறு. இத்துடி ஒரு நாளில், ஒருகோடியே 38 இலட்சத்து 24 ஆயிரம் கூறுகளில் ஒன்று என்பதை மேலே சொன்ன வாய்ப்பாட்டிலிருந்து கணக்கிட்டு அறியலாம்.

இமைப்பொழுது என்ற அளவை மாணிக்கவாசகப்பெருமான் தமது திருவாசகத்துச் சிவபுராணத்தில்,

> "இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்கா
> தான் தாள் வாழ்க"

என்று உணர்த்தி அருள்கிறார். இதில் அவர் இறைவன் திருவடிகள் மிகச்சிறிய காலமாகிய இமைப்பொழுது அளவேனும் தம் நெஞ்சை விட்டுஅகலாமல்என்றும்நிலைத்துநின்றுவாழ்வதை இறைவன் மாட்டு வேண்டுகிறார்.

பண்டைய இந்தியர் துடிபோன்ற மிகச் சிறிய கால அளவேயன்றி, மிகப்பெரிய கால அளவுகளையும் அறிந்திருந்தனர். அதாவதுபேரண்டங்கள்(*Cosmic Universes*), அவ்வண்டங்களில் உள்ள பல ஒளிச்சக்கரங்கள் (*Galaxies*), ஒளிச்சக்கரங்களில் உள்ள பற்பல விண்மீன்கள் (*Stars*), கோள்கள் (*Planets*) ஆகியவற்றின் கால அளவுகளையும் அறிந்திருந்தனர்.

இந்நில உலகில் நாம் கொள்ளும் ஓர் ஆண்டு தேவர்கட்கு ஒருநாள். 360 தேவ நாள்கள் ஒரு தேவ ஆண்டு. பன்னிரண்டாயிரம் தேவ ஆண்டுகள் ஒரு சதுர்யுகம். இது கிருதயுகம், திரேதயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களின் மொத்தக் கால அளவு. இது 43 இலட்சத்து இருபதாயிரம் மாந்த ஆண்டுகள் ஆகிறது. இவ்வாறு ஆயிரம் சதுர் யுகங்கள் கொண்டது நான்முகனது பகற் காலம். அவனது இரவும் இதே கால அளவு உள்ளது. எனவே நான்முகனது நாள், நமக்கு எண்ணூற்று அறுபத்து நான்கு கோடி ஆண்டுகள் ஆகும். இந் நான்முகனது நாள் தொடக்கத்தில், நம் நில உலகு, மேல் உலகு, கீழ் உலகு ஆகிய உலகுகள் தோன்றும் எனவும், இந்நாள் முடிவில் இவை அழியும் எனவும் சைவ நூல்கள் கூறும். இந்த அழிவுபிரமனது 'நாள்ஊழி' (தினப்பிரளயம்) எனப்படும். இவ்வாறு 360 நாள்ஊழிகள் ஆனதும் — அதாவது ஏறத்தாழ மூன்று இலட்சத்து பதினோர் ஆயிரம் கோடி வருடங்கள் (3.11×10^{12} -*Solar years*) ஆனதும்-நில மண்டலம் முழுவதிலும் பெரிய தொரு அதிர்ச்சிஉண்டாகும் இவ்வாறு நூறு பிரம ஆண்டுகள் கழிந்ததும் நான்முகனது வாழ்நாளும்முடிந்து நிலமண்டலமும்அழிந்து நில உலகுகளின் கருப்பொருள்கள் தூல நிலையை விட்டு ஒரு சூக்குமநிலையை அடையும். இந்நிகழ்ச்சியே நான்முக ஊழி எனப்படுவது. அதற்குரிய காலம் ஏறத்தாழ மூன்றுகோடி (3×10^{14}) ஆண்டுகளாகும். இனி, கோடி கோடியை 'சங்கம்' என்று பண்டைய இந்தியர் வழங்கி வந்தனர் இதனைச் சைவ ஆகமங்களின் சாரமாய் விளங்கும் 'சித்தாந்த சாராவளி' என்ற நூலாலும், பிங்கல நிகண்டாலும் அறியலாம்.

நம் உலகைக் கொண்ட இந்நில மண்டல மன்றி, நீர், தீ, காற்று, வானம் என்றநான்கு மண்டலங்களும் உள்ளன. இம்மண்டலங்களுள் ஒவ்வொன்றும் பல உலகுகளைக் கொண்டது. இம் மண்டல உலகுகள் ஒன்றை விட ஒன்று சூக்குமமான கருப்பொருள்களால் ஆனவை என்று சைவ நூல்கள் கூறும். அதாவது வான மண்டல உலகுகள் மிகமிகச் சூக்குமமான முதற் பொருளால் (*Primordial matter*- ஆல்) ஆனவை. மண் முதலிய ஐந்து மண்டலங்களுக்கும் அதி தெய்வங்கள் முறையே அயன், மால், உருத்திரன் மகேசுவரன், சதாசிவன் ஆவர். இவர்களது ஆட்சியிலுள்ள மண்டலங்களின் ஊழிக்கால அளவுகளைச் சைவ நூல்கள் கூறும்,

மண்மண்டல ஊழிக்காலம்	—	சுமார் 3 சங்க மாந்த ஆண்டுகள் என்று நாம் முன்பு கண்டோம்.
புனல் மண்டல ஊழிக்காலம்	—	3740 சங்க ஆண்டுகள் (3.74×10^{17} *Solar years*)
அனல் மண்டல ஊழிக்காலம்	—	சுமார் $4\frac{1}{2}$ ஆயிரம் ஆயிரம் சங்க ஆண்டுகள் கோடி சங்கத்தை உணர்த்தும் பேரெண்ணுக்கு 'விந்தம்' என்று பெயர். எனவே அனல் ஊழிக்காலம் $\frac{1}{2}$ விந்தம் ஆண்டுகளாம். ($\frac{1}{2} \times 10^{21}$ *Solar years*)
காற்று மண்டல ஊழிக்காலம்	—	16 ஆயிரம் விந்த ஆண்டுகள் (16×10^{24} *Solar years*)
வான மண்டல ஊழிக்காலம்	—	20 கோடி கோடி விந்த ஆண்டுகள். கோடி விந்தம் குமுதம் என்றும், கோடி குமுதம் பதுமம் என்றும் முன்னர் வழங்கி வந்தனர், எனவே வானமண்டல ஊழிக்காலம் 20பதும ஆண்டுகள் (20×10^{35} *Solar years*)

இந்த ஊழிகளின் கால அளவுகள் திருமூலர் திருமந்திரத்தின் "காலச் சக்கரம்" என்ற பகுதியில், சில பாடல்களில், மறைமுகமாக இருப்பதை நாம் காணலாம். இப்பாடலின் பொருளை நாம் அறிய, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய 'சிவப்பிரகாச விகாசம்' என்ற நூல் துணை செய்கிறது.

சமய நூல்களன்றிச் சங்க இலக்கியமாகிய பரிபாடலும் ஊழிகளைப் பற்றிக் கூறுகிறது:

"கருவளர் வானத்து இசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊழ் ஊழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும், பனியொடு,
தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்
றுள்முறை வெள்ளம் மூழ்கி, ஆர்தருபு
மீண்டும் பீடுயர்பீண்டி அவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத் தூழியும்"

என்பது கீரந்தையார் பாடிய பாடற் பகுதி இது முன்னே நாம் கண்ட மண்டலங்களின் ஊழிகளையே உணர்த்துகிறது. மேலும் இப்பகுதியினைத் தொடர்ந்து

"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் முதலிய
செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை"

என்று கால ஊழிகளின் அளவுகளைக் குறிக்கும் பேரெண்களையும் நமக்குக் கீரந்தையார் எடுத்துக்காட்டுவதை நாம் காணலாம். தமிழ் இலக்கியங்களில் மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியமும் எண்ணுப் பெயர்களை எடுத்துக் காட்டுகிறது. இந்தப் பேரெண்ணுப் பெயர்களைக் கொண்டு தமிழகத்தில் எண்களின் இடத்தை நோக்கி அவற்றைப் பத்துப் பத்து மடங்காக மதிப்பிடும் பழக்கத்தின் (*Digital notation with base ten*) தொன்மையை நாம் அறியலாம்.

வான மண்டல உலகுகளது ஊழிக்காலம் முழுமுதற் கடவுளாகிய பரசிவத்துக்கு ஒரு 'துடி' என்று 'சிவப்பிரகாச விகாசம்' கூறும். பரசிவத்தின் துடிக்கால அளவு நம் துடியை விடப் பத்தாயிரம் கோடி பதும மடங்கு அல்லது பத்தாயிரம் 'நாடு' மடங்கு (10^{46} *times*) பெரியது எனக் கணக்கிட்டு அறியலாம் 6 கோடி பதுமம் (10^{42}) 'நாடு' என வழங்கி வந்ததைப் பிங்கல நிகண்டு உணர்த்தும். இதனால் பரசிவத்துக்கு இமைத்தல் உண்டு என நாம் கொள்ளக் கூடாது. ஏனெனில் பரசிவத்துக்கு நம் போன்ற உடல் இல்லை. மேலும் அவர் காலம் கடந்தவர் விண், கால் அனல், புனல், மண் ஆகிய அண்டங்களின் கால அளவுகளை உண்டாக்குபவர். இதனைத் திருநாவுக்கரசு அடிகளார்:

"இமையாது உயிராது இருந்தாய் போற்றி"

என்று எடுத்துக்காட்டிப் பரசிவம் என்றும் மாறுபாடின்றி நிலைத்து நிற்கும் தன்மையைப் போற்றிப் புகழ்வர்.

நடராசப் பெருமான் தமது வலது திருக்கையில் ஏந்தி இருக்கும் துடி (உடுக்கை) இறைவன் பல்வேறு வகைப்பட்ட உலகுகளைத் தோற்றுவிக்கும் ஆற்றலை உணர்த்தும் என்று சைவ நூல்கள் கூறும். உலகுகளை உடுக்கையால் தோற்றுவிக்கும்போது காலமும் தோற்றுவிக்கப்படுகிறது, இவ்வாறு நமது சிறுகால அளவாகிய துடியையும் பழைய அறிவியலோடு இணைத்துக் காண்பது நாம் மகிழ்தற்குரியது.

நமக்கு மிகப் பெரிதாகத் தோன்றும் நம் உலகு, கதிரவனைச் சுற்றிவரும் ஒன்பது கோள்களில் ஒன்று. கதிரவன் ஒரு விண்மீன் இது போன்ற நாற்பது ஆயிரம் கோடி விண்மீன்களைக் கொண்டது நமது ஒளிச்சக்கரம். இது '*Milky way galaxy*' என ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. இதிலுள்ள விண்மீன்கள், கோள்கள் முதலியன ஒரு மையத்தைக் கொண்டு சுற்றி வருவதாலும், ஒளியுடன் விளங்குவதாலும் இதனை 'ஒளிச் சக்கரம்' என்பர் திருமூலர். நம் பால்வழி ஒளிச் சக்கரத்தில் கதிரவன் இருபத்து நான்கு கோடி ஆண்டுகளுக்கு ஒரு சுற்றாக ஒரு மையத்தைச் சுற்றி வருகிறது எனத் தற்கால

வானியல் அறிஞர்கள் கண்டுள்ளனர். இதனால் எண்ணூற்று அறுபத்து நான்கு கோடி ஆண்டுகளைக் கொண்ட நான்முகனது ஒரு நாளில், கதிரவன் முப்பத்தெட்டு முறை சுற்றி வருவதை நாம் அறிகிறோம்.

ஈயம், யுரேனியம், பொட்டாசியம் போன்ற உலோகங்களின் ஓரகத் தமனியங்கள் (Isotopes) நம் உலகில் பல உள்ளன இத் தமனியங்கள் திரியக்கத்தால் தேய்வன. இவை தேயும் அளவுகளைக் கொண்டு (extent of decay) நம் உலகின் வயது நானூற்று ஐம்பது கோடி ஆண்டுகள் முதல் நானூற்று எழுபது கோடி ஆண்டுகள் வரை இருக்கலாமெனத் தற்கால வானியலார் கணக்கிட்டுள்ளனர். நான்முகனின் நாள் ஊழிக் காலமாகிய எண்ணூற்று அறுபத்து நான்கு கோடி ஆண்டுகளில் ஏறத்தாழ நானூறு கோடி ஆண்டுகளே எஞ்சி நிற்பன எனவும், அதன் பிறகு நம் உலகு முற்றிலும் அழியும் எனவும் இதனால் பெறப்படுகிறது.

'நம் ஒளிச்சக்கரம் ஆயிரத்துஐந்நூறுகோடி அல்லது இரண்டாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன் ஒரு மிகமிகச் சிறிய அளவு (infinitesimal dimensions) கொண்ட அணுவாக இருந்தது; மிகப்பெரியதொரு செறிவினைக் (infinte density) கொண்டதாகவும் இருந்தது; இந்த அணு வெடித்துப் பின்னர் விண்மீன்கள் தோன்றின' என்பது தற்கால அறிவியல் கொள்கைகளில் ஒன்று. ஒளிச்சக்கரத்தின் இக்கால அளவு நான்முகனுக்கு ஏறத்தாழ இரண்டு நாள்கள் ஆகும். தற்கால அறிவியல் இதற்கு மேல் உள்ள கால அளவுகளைக் காணவில்லை; காண முடியாது எனத் தோன்றினாலும், பண்டைய நூல்கள் தற்கால அறிவியல் வளர்ச்சிக்கு மிகவும் பயன்படும் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை. இதனை ஒருவாறு எடுத்துக் காட்டவே பழந் தமிழ் நூல்களில் காணும் அண்ட கால அளவுகள் சுருக்கமாகக் கூறப்பட்டன.

எனவே, தற்கால அறிவியல் அறிஞர்கள் தமிழ் மொழியிலும், வட மொழியிலும் உள்ள பண்டைய நூல்களைத் தெளிவாகக் கற்று, அவற்றில் புதைந்து கிடக்கும் அறிவியற் கூறுகளை நன்கு அறிந்து, பின்னர் அவற்றைத் தற்கால அறிவியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தி இந்த உரையை முடிக்கிறேன்.

குறிப்பு:- இது அகில இந்திய வானொலி நிலையத்தார் தமிழ்ப்பல்கலைக் கழகத்துடன் சேர்ந்து நடத்திய அறிவியல் பேரரங்கில் 13-6-1983-இல் நிகழ்த்தப்பட்டஉரை; வானொலி நிலையத்தார் இணக்கநயம் (Courtesy) பெறப் பட்டது.

....

கணப் பொழுது

(தாமரையின்)

நூற்றிதழ் அடுக்கி, ஓரிதழ் அதனில்
சின்னூசி ஊன்றிடுங் காலங் கணமாம்

—அரபத்த நாவலர்
(பரத நூல்)

....

"யுக்தி கல்பதரு"

(பதினோராம் நூற்றாண்டில் போச அரசனால் செய்யப்பட்ட வடமொழி நூல்)

கால்களில்லாத வண்டி (படகு)களைப் பற்றிய இறுதி அத்தியாயம்

(நிட்பதயானோத்தேசம்)

பிரயாணமுறை - (யான - யுக்தி)

தமிழ்மொழிபெயர்ப்பு - திரு சு. சுவாமிநாத சாஸ்திரிகள்

முன்னுரை

தமிழ்ப் பல்கலைக் சுழகத் தொல்தொழில் துறை சோழர்கால கப்பல் கட்டும் தொழிலை ஆய்தற்கு முனைந்துள்ளது. பழைய செய்திகளைத் தொகுத்தபோது 'யுக்தி கல்பதரு' என்ற சமற்கிருத நூலில் கப்பல் கட்டும் செய்திகள் குறிக்கப் பட்டுள்ளன. வினைநுட்பமறிந்தவர்கள் தங்கள் தொழில் நுட்பங்களைப் பாதுகாக்க சமற்கிருத மொழியில் நூல்செய்து பாதுகாத்தனர் என்பதற்கு இந்தநூல் மற்றொரு சான்று. பிராமணர் அல்லாதார் சமற்கிருத நூல் செய்தமைக்கும் இந்நூல் ஒரு சான்று. கட்டிட சாத்திரங்கள் அனைத்தையும் பிராமணர் அல்லாதார் வாழ்வு நெறியாகக் கொண்டிருந்தனர். எனவே, அவர்கள் நூல் செய்தும், நூற்செய்தியை அறிந்தும் தமது தொழிலைச் செவ்வனே நடத்தினர். 'யுக்தி கல்பதரு' என்ற நூலின் சில பகுதிகள் தமிழிற் பெயர்த்துப் பிறர் படித்தறிய இங்கே வெளியிடப்படுகின்றன.

பதிப்பாசிரியர்.

1. **நௌகா1 என்று கூறப்படுகிற, கால்களில்லாத, பயணத்திற்குரிய வண்டிகளின் இலக்கணம் கூறப்படுகிறது.**

பூமியில் பிரயாணம் செய்வதற்கு குதிரை (அசுவம்) முதலானவைகள் வாகனங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தண்ணீரில் பயணம் செய்வதற்கு நௌகா என்ற படகு ஒன்றுதான் ஏற்றவாகனம். ஆதலால் அதனை முயற்சியுடன் செய்து பயன்படுத்த வேண்டும்.

2. **(படகு செய்வதற்கேற்ற காலம்)**

நல்லநாள், வேளை, திதி. சந்திரன் (நட்சத்திரம்) இவைகளின் சேர்க்கை, மகரம் முதலான ஆறு சரலக்னங்கள்,2 27நட்சத்திரங்களில் கடைசி ஏழுநட்சத்திரங்கள்3 நீங்கலாக மற்ற நட்சத்திரங்களில் படகைச் செய்தல் வேண்டும் என்று கூறுகிறார்கள்.

3. (படகில் பயணம் செய்வதற்குகந்த காலம்)

அச்வி,[4] (மேஷம்), கராம்சு[5] —(சிம்மம்), சுதாநிதி[6] —(கடகம்). மித்ர[7] —(விருச்சிகம்). தன[8] (விருஷபம்-துலாம்), அச்யுத[9] —(மகரம்) ஆகிய இந்த சுகஇலக்னங்களிலும், நல்ல திதி, வாரம், நட்சத்திரம் இவைகளின் சம்பந்தத்தால் ஏற்படுகிற(நல்ல) யோகம் இவைகளிலும், சந்திரன் சுத்தனாக[10] இருக்கும்பொழுதும் உள்ள நல்லநாளில், படகிற் பிரயாணம் செய்தால் நன்மையைத் தரும்.

4. படகு செய்வதற்கேற்ற மரங்கள்

மரங்களின் இனம் பொதுவாக நான்கு வகை என்று மரத்தைப் பற்றிய வைத்திய நூலில் (விருட்ச ஆயுர்வேதத்தில்) கூறப்பட்டிருக்கிறது.

அ. பிரம்மசாதி—இது இலகுவானதாகவும்[11], அழகானதாகவும் (கோமளம்)[12] நன்கு செய்வதற்கேற்றதாகவும்[13](சுகடம்) இருக்கும்.

ஆ, சத்திரியசாதி—இது திருடமாகவும்[14] இலகுவானதாகவும் (அகடமாகவும்[15]) சிரமப்பட்டு அல்லது மிகவும் பிரயாசையுடன் செய்வதற்கேற்றதாகவும் இருக்கும்.

இ. வைசியசாதி—இது திடமானதாகவும் கனமானதாகவும் (குரு)[16] இருக்கும்.

ஈ. வேளாளசாதி[17]—இது திடமானதாகவும் கனமானதாகவும் இருக்கும்.

4.1 மரங்களைச் சேகரிக்கும் பொழுது பிரம்மசாதி (திவிசாதி) முதலான மரங்கள் அவைகளுக்குரிய இரண்டு இலக்கணங்களையுடையவைகளாக இருப்பதைப் பார்த்துச் சேகரித்தல் வேண்டும்.

4.2. சத்திரியசாதி மரத்தினால் செய்யப்பட்ட நௌகா(படகு) சுகத்தையும் சம்பத்தையும் கொடுக்கவல்லது என்பது போசனின் கருத்து.[13] இலகுவாகவும், திடமாகவும் இருக்கிற மற்ற மரங்களினால் செய்யப்பட்ட படகுகள் (நௌகா) தண்ணீரில் மார்க்கம் தவறி, (செல்லக்கூடாத மார்க்கத்தில்) சென்று விடும்.

4.3 முன் கூறப்பட்ட நான்குவகை மரங்களில் ஒரே வகையைச் சேர்ந்ததல்லாத மரங்களால் (விபிந்த) செய்யப்பட்ட படகு (நௌகா), கீர்த்தியை (ச்ரேயசை) கொடுப்பதாக இல்லை; சுகத்தையும் கொடுப்பதில்லை; மேலும் நீண்டநாள் உழைப்பதில்லை; அழிந்து விடுகிறது; அல்லது பிளந்து விடுகிறது; தண்ணீரில் மூழ்கியும் விடுகிறது.

4.4 உலோகங்களினால்[19] இணைக்கப்பட்ட படகு கடலில் செல்வதற்கு அருகதை அற்றது. ஏனெனில் உலோகங்களினால் இணைக்கப்பட்ட படகு கடலிலுள்ள உலோகங்களின் காந்த சக்தியினால் இழுக்கப்படுகிறது; இதனால் அப்படகு தண்ணீரில் விபத்துக்குள்ளாகிறது. ஆதலால் கயிற்றினால் இணைக்கப்பட்ட படகுதான் (கடலில்) தண்ணீரில் ஏற்றது என்பது போசனின் கருத்து. 20

5. படகின் இலக்கணம்

படகுகள் (நௌகா) பொது[21], சிறப்பு[22] என இருவகைப்படும்.

5.1 சாதாரணப் படகுகள்

இவற்றுள்ராசகஃச்தத்தின்23அளவைக்கொண்ட நீளத்தையும்(ஆயாமத்தையும்)அதன் நான்கில் ஒரு பங்கு அளவையுடைய அகலத்தையும், அதே அளவு (அகலத்தின் அளவு) உடைய உயரத்தையும் கொண்ட படகு (நௌகா) சூத்ரா24 என்று அறிஞர்களால் கூறப்படுகிறது

5.1.2. சூத்ரா என்னும் படகிற்குக் கூறப்பட்ட நீளத்தின் அளவில் மேலும் ½மடங்கு கூடுதலாக (அல்லது 1½ மடங்கு)நீளத்தையும், நீளத்தில் ½ பாகம் அகலமும் நீளத்தின் மூன்றில் ஒரு பாகம் உயரமும் கொண்ட படகு (நௌகா) 'மத்யமா' என்று கூறப்படுகிறது.

இதுவன்றி 28 அங்குலம் கொண்ட 'கிட்டுகுறா' என்ற ஒரு முழ அளவும் 32 அங்குலம் கொண்ட 'கிட்குறா' என்ற முழ அளவும், 42 அங்குல அளவுகொண்ட 'காகசிக்' என்னும் ஒரு முழ அளவும், 54 அங்குலம், கொண்ட ஒரு பெரு முழ அளவும் கௌதலீயத்தில் கூறப் படுகிறது. இவை எல்லாம் அஃச்தமே. இவற்றுள் 28 அங்குல முழம் தராசுகளுக்கும், கன அளவைக்கும் பயன்படுவது எனவும், 42 அங்குல முழம் மரம் அறுப்பவர்கள் கொள்வது எனவும், 54 அங்குல முழம் மரக்காடுகளை அமைக்கப்பயன்படுவது என்றும் கௌதலீயம் கூறும். இந்நூலில் கூறப்படும் 'அஃச்தம் எந்த முழத்தைக் குறிக்கிறது என்பதனை ஆராய்ந்து அறிதல் வேண்டும். இது 24 அங்குலம் கொண்டதாகவோ அல்லது 42 அங்குலம் கொண்டதாகவோ இருக்கலாம்.

24. சுத்ரா—சிறியது (*tiny*)

5. 1. 3. ராசகஸ்த அளவை முறைப்படி, சாமான்ய படகுகள் பத்து ஆகும். அவை 1, சூத்ரா[24] (2) மத்யமா[25] (3) பீமா[26] (4) சபலா[27] (5) படலா[28] (6) அபயா[29] (7) தீர்க்கா[30] (8) பத்ரபுடா[31] (9) கர்பரா[32] (10) மந்தரா[33] என்பனவாம்.

5. 1. 4. முன் கூறப்பட்ட 2 படகுகள் போன்று ஏனைய படகுகள் ஒவ்வொன்றும் ராஜஹஸ்த அளவில் 1 மடங்கு 1½ மடங்கு என்று அதிகப்படியாக இரண்டிரண்டு படகுகளாக எடுத்துக்கொண்டு நீளத்தைக் கணக்கிட வேண்டும். உயரமும் அகலமும் நீளத்தில் பாதி அளவு உள்ளனவாக இருத்தல் வேண்டும்.[34]

5.1, 5. இப்படகுகளுள் பீமா, அபயா, கர்பரா, என்ற மூன்றும் அநுபத்தைக் கொடுப் பவை (கெடுதலைச் செய்பவை). ஆதலால் இவற்றை மிகவும் கண்காணிப்புடன் செலுத்த வேண்டும் என்பது கருத்து. மந்தரா முதலான மற்றப் படகுகள்தான் கடலில் (அச்சமில்லாமல்) செல்வதற்கு ஏற்றவை.

5. 1. 6. இதுவரை சாதாரண படகுகளான பீமா முதலியவற்றின் குணமும், திருடத் தன்மையும் கூறப்பட்டன,

5. 2 சிறப்புப் படகுகள்

இவை தாமிரத்தகடு, காரீயத்தகடு[35] (உலோகம்) காந்தலோகத்தகடு[36] முதலானவை கொண்டவை. இவை தீர்க்கா, உன்னதா என இருவகைப்படும்.

5.2.1. தீர்க்காப் படகுகள்

தீர்க்கா[37] (தீர்க்கிகா)–இதன் நீளம் இரண்டு ராசகஃச்தங்களை உடையதாகவும், உயரம் நீளத்தில் எட்டில் ஒரு பங்கு (அட்டாம்சம்) உடையதாகவும், உயரம் நீளத்தில் பத்தில் ஒரு பங்கு (தசாம்சம்) உடையதாகவும், இருக்கவேண்டும்,

5. 2. 1. 1, தீர்க்காப் படகுகள் பத்து வகைப்படும்.

அவை (1) தீர்க்கிகா[38] (2) தரணி[39] (3) லோலா[40] (4) கத்வரா[41] (5) காமினீ[42] (6) தாத்ரி[43] (7) சங்காலா[44] (8)ப்லாவினீ[45] (9) தாரிணி[46] (10) வேகினி[47] என்பன.

5. 2. 1. 3. இவை ஒவ்வொன்றும் நீளத்தில் ஒன்றைவிட மற்றொன்று ஒவ்வொரு இராசஹஸ்தம் அதிகமாக இருக்கும்; அகலமும் உயரமும் நீளத்தில் எட்டில் ஒரு பங்கு, பத்தில் ஒரு பங்கு என்ற கணக்கில் அமைந்திருக்க வேண்டும்.

5 2. 1. 4. இப்படகுகளுள் லோலா, காமினீ, ப்லாவினீ என்னும் படகுகள் துக்கத்தைக் கொடுப்பவை. (மிகவும் கவனத்துடன் செலுத்தப்பட வேண்டியவை என்பது கருத்து). லோலா என்னும் படகுக்கு கூட்டிய அளவு மற்றவைகளுக்கும் கூட்டிக் கொள்ள வேண்டும். [49] வேகினி என்னும் படகு முதல், அதற்கு முன்னுள்ள படகுகள் (லோலா, காமினீ, ப்லாவினீ நீங்கலாக) அதிக நன்மையைத் தருவனவாக இருக்கும்.

5. 2. 1. 5. இவ் விஷயத்தில் போசனின் கருத்து: இச்சிறப்புப்படகை அமைப்பதில் நீளத்தை அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு அமைத்துக் கொள்ளலாம்; முழ அளவும் தேவையில்லை.[50] வஸு (8) வேத (4) கிரஹ (9) போன்ற கணக்கும் தேவையில்லை. ஆனால் பொதுவாக 60க்கு மேற்பட்ட அளவுடைய படகு, குலத்தையும், பலத்தையும், தனத்தையும் (பொருளையும்) அழித்துவிடும். இதனால் 60, 90, 40 (சத்வாரியம்சது) அளவுக்கு மேற்பட்ட 100 அளவு வரையும் உள்ள படகுகள் ஒரே மாதிரியான பலனைக் கொண்டவைகளாகவே இருக்கும்.[51]

5. 2. 2. உன்னதா

5. 2. 2. 1 ஊர்த்வா-இதன் நீளம் இரண்டு ராசஹஸ்தங்களை உடையதாகவும் அதே அளவு (பாதி அளவு ?) உயரமும் அகலமும் உள்ளதாகவும் இருக்கும்.[53] இப்படகு அரசர்களுக்கு நன்மையைக் கொடுக்க வல்லது.

5. 2. 2. 2. உன்னதா என்னும் வகையைச் சேர்ந்த படகு ஐந்து வகைப்படும் ஊர்த்வா,[54](2) அநூர்த்வா,[55] (3) ஸ்வர்ணமுகி,[56] (4) கர்பிணி,[57] (5) மந்தரா[58] என்பன.

5. 2. 2. 3. இப்படகுகள் ஒன்றைவிட மற்றொன்று ராசஹஸ்த அளவில் ஒரு மடங்கு அதிகமான நீளம், அகலம், உயரம் கொண்டவைகளாக இருக்கும்.[59]

5 2. 2. 4. ஆகப் படகுகள் மொத்தம் 35 விதம் ஆகும்.

5 2. 2. 5. இவைகளுள், அநூர்த்வா, கர்பிணி என்ற இரு படகுகளும் நிந்திக்கப்பட்டவை (பிரயாணத்திற்குச் சிறந்தவையல்ல). மந்தரா முதலான மற்றப் படகுகள் நன்மையைக் கொடுப்பனவாக இருக்கும்.

5. 3 முப்பத்து ஐந்து[60] முழத்திற்கு மேற்பட்ட உயரமுடைய படகுகள் நன்மையைத் தருபவைகளாக இருக்கும். ஆனால் 50 (பஞ்சாசது) முழத்துக்கு மேற்பட்ட உயரமுடையன குலம், பலம், தனம் இம்மூன்றையும் அழித்துவிடுபவைகளாக இருக்கும்.

6. அழகிடல்

படகுகளை அழகு செய்வதற்கேற்ற உலோகங்களைப் பற்றிக் கூறப்போகிறேன் பொன் (கனகம்), வெள்ளி (ரசதம்), செம்பு (தாமிரம்) இவைகளைக் கலந்தோ அல்லது தனித்தனியாகவோ, பிரம்மசாதி முதலான படகுகளை அழகுறச் செய்யலாம்.

7. கொம்பு அமைத்தல்

பிரம்மசாதி முதலான நான்குவகைப் படகுகளையும், நான்கு கொம்பு, மூன்று கொம்பு (சிருங்கம்), இரண்டு கொம்பு, ஒரு கொம்பு என்ற கணக்கில் கொம்புகளை உடைய வைகளாகச் செய்தல் வேண்டும்.

8. வண்ணம் பூசுதல்

பிரம்மசாதி முதலான படகுகளுக்கு முறையே வெண்மை, சிவப்பு, மஞ்சள், நீலம், ஆகிய வண்ணங்களைப் பூசுதல் வேண்டும்.

9, படகின் முகப்பில் வைக்க வேண்டியவைகள்

9. 1. (1) சிங்கம் (2) எருமை (3) பாம்பு (4) யானை (5) புலி (6) பட்சி (7) தவளை (தேகவி) (8) மனிதன். இவைகளினுடைய முகங்களைச் சூரியனது திக்கான கிழக்கு முதலான திசைகளுக்கு ஏற்றவாறு [61] படகின் முகப்பில் அமைத்தல் வேண்டும்.

9 2. அரசர்கள் கடவுளர்கள் இவர்களுக்கேற்றதான கலசம், கண்ணாடி, சந்திரன்[62] கொடி இவைகளையும் அமைத்தல் வேண்டும்.

9. 3. சூரியனுடைய திக்கு ஆகிய கிழக்கு முதலான திசைகளில்[63] தோன்றியவை களான அன்னம் (அம்சம்), குயில் (கேசீ), கிளி (சுகம்), சிங்கம், யானை பாம்பு (அகி) புலி, வண்டு (உட்பதி) இவைகளை நௌகாவின் மேல் வரிசையாக [64] வைக்க வேண்டும்.

10. படகுகளுக்குச் சாயம் பூசுதல்

பிரம்மசாதி முதலான படகுகளுக்கு, நான்கு வண்ணங்கள்[65] மூன்று வண்ணங்கள், இரண்டு வண்ணங்கள், ஒரு வண்ணம் என்ற முறையில் சாயம் பூசுதல் வேண்டும்.

11. பாய்மரத்தில் கட்டும் துணிகள்

11. 1. பாய்மரத்தில் (சதுச்பாதத்தில்) கட்டப்பட வேண்டிய துணிக்கு 'கமலா' என்று பொதுவாகப் பெயர் வழங்கப்படுகிறது. அதன் நீளம் 100 பாதம், 50 பாதம், 25 பாதம்[66] என்ற கணக்கில் இருத்தல் வேண்டும்.

11. 2. பாய் மரத்தில் கட்டப்படவேண்டிய துணியின் நிறம்

வெண்மை, சிவப்பு நீலம், மஞ்சள் என்றநிறங்களையும், இவற்றுள் மூன்றுஅல்லது நான்கு நிறங்களையும் கொண்டதாகச் சித்திரம் இருத்தல்வேண்டும் 'அவஞானிதம்' என்ற பெயரைக் கொண்ட பாய்மரத்துணி எட்டுவித நிறங்களைக் கொண்டதாக இருக்கும்.

12, படகுகளை அலங்கரித்தல்

12. 1. படகுகளில் (நௌகா) புதிய தண்டத்தைப்போல மணி (நவதண்டவத்) கட்டப்பட வேண்டும்.

12. 2. படகைச் சுற்றிலும் முத்துக்களாலான தோரணங்களைக் கட்டவேண்டும். அவ்வாறு முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட படகிற்கு (நௌகாவுக்கு) ''சர்வதோபத்ரா'' என்று பெயர். முத்துத் தோரணங்கள் 9, (ரச), 8 (வசு) 4, அல்லது 2 என்ற வரிசையிலும் (கிரமத்தில்) கட்டப்பட வேண்டும்.67

12. 3. பொன்மணிகளாலான தோரணங்களையுடைய படகிற்கு ''சயமாலா'' என்று பெயர்.

13. கப்பலில் அறைகள் அமைப்பது

13. 1. பிரம்மசாதி முதலான நால்வகைப் படகுகளும் அறைகளைக் கொண்டவை, அறைகள் இல்லாதவை என இரு வகைப்படும், இதற்கு முன்பு கூறப்பட்டவை அறைகள் இல்லாதன. இப்பொழுது அறைகளைக் கொண்ட படகுகளைப் பற்றிக் கூறப்படுகிறது.

13. 2. அறைகளைக் கொண்ட படகுகள் சர்வமந்திரா68, மத்யமந்திரா, அக்ர (முகப்பு) மந்திரா என மூன்றுவகைப்படும். சர்வமந்திரா படகுமுழுதும் அறைகளைக் கொண்டது; மத்ய மந்திரா படகு நடுவில் அறையைக் கொண்டது; அக்ரமந்திரா படகு முன்பக்கத்தில் அறையைக் கொண்டது.

13 3. அ. சர்வமந்திரா—இது அரசர்கள், பெண்கள் இவர்கள் பிரயாணம் செய் வதற்கும்,விலை உயர்ந்த பொருள்களையும் குதிரைகளையும் எடுத்துச்செல்வதற்கும் ஏற்றது.

ஆ. மத்யமந்திரா—இது அரசர்கள் உல்லாசப் பிரயாணம் செய்வதற்கு ஏற்றது.

இ. அக்ரமந்திரா—இது நெடுந்தூரம் பிரயாணம் செய்வதற்கும், போர்க் காலங் களிலும் மழைக்காலங்களிலும் மேகங்களால் மிகவும் மூடப்பட்டிருக்கும் காலங்களிலும் பிரயாணம் செய்வதற்குத் தகுந்தது.

13. 4. படகின் நீளம், அகலம் இவைகளைக் கணக்கிட்டு அவற்றிற்கேற்றவாறு படகில் அறைகளை அமைத்தல் வேண்டும். அறைகளின் அளவு படகின் பரப்பளவில் பாதி அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

13. 5. போசன் கூறுவது: அரசர்களுக்காகக் கட்டப்பட்ட படகுகளது அறைகளின் நீளம், அகலம் ஆகியவை 8—6, அல்லது 12—11, அல்லது 10—9, என்று இருத்தல் வேண்டும் உயரம் 10, 5, 2 என இருத்தல் வேண்டும்: 69

13. 6. முன் கூறப்பட்டவாறு (1) உலோகம் (2) சூரியன் முதலான திக்குப் பாலர் களுக்கு ஏற்ற பிராணிகளின் முகங்கள் ஆகியவற்றை அமைக்க வேண்டும்.70 கொடி, கலசம், ஆகிய ஒன்பதையும் (நவதண்டவத்) புதிய பாய்மரக் கோலை அமைப்பதுபோல் அமைத்தல் வேண்டும். 71

13. 7, படகுகளில் அமைக்கப்படும் அறைகள் மரத்தாலானவை, உலோகத்தாலா னவை என இரு வகைப்படும். அவைகளுள் மரத்தாலானவை சுகமாகப் பிரயாணம் செய் வதற்கு ஏற்றனவாக இருக்கும். உலோகத்தினாலானவை (சிறிதுதூரம்) உல்லாசப் பிரயாணத் திற்கு ஏற்றன.

13. 8, படகுகளில் அமைக்கப்பட்ட படுக்கை, ஆசனம், மற்றவைகட்குரிய உயர, அகல அளவுகள் முனிவர்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. 72

14. இதுவரை படகுகளின் இலட்சணம் ஓரளவு கூறப்பட்டது. இந்த லட்சணங்கள் முக்கியமான(பிரதான) படகுகளுக்கேயன்றி மற்றவைகளுக்கல்ல. படகுகளின் இலகுத்தன்மை, உறுதி(திருடம்), நன்றாகச் செல்லுந்தன்மை, உடைந்துவிடும் தன்மை (சித்ரதா), எப்போதும் ஒரேமாதிரியாக இருக்கும் தன்மை (சமதா) ஆகிய குணங்கள் விளக்கப்பட்டன. படகுகளின் இலட்சணங்களை அறிந்து படகுகளைச் செய்து பிரயாணம் செய்யும் அரசன் நீண்டநாள் சுகமாக வாழ்கிறான்; போரில் வெற்றி பெறுகிறான்; பொருளையும் அடைகிறான்; அவ்வாறன்றி அறியாமையால் படகுகளை வேறு விதமாகச் செய்து பயன்படுத்தும் அரசர்கள் கீர்த்தி, வீரியம், பலம், பொருள் இவைகளை இழந்து விடுகிறார்கள்.

15. இகழப்பட்ட காலில்லா வண்டிகள்[73]

படகன்றி வேறு வாகனங்களைக் கொண்டு சலத்தில் பிரயாணம் செய்வது இகழப்பட்டது. அதற்குரிய காரணங்கள் பலவற்றை மேல்நாட்டவர்கள் கூறியிருக்கிறார்கள். படகின்றிவேறுவழியில் பிரயாணம் செய்வதற்கு எடுத்துக்கொண்ட வாகனங்கள் 1. த்ரோணீ யானம்[74] 2. கடயானம்[75] 3. தும்ப பலயானம்[76] 4. சர்மயானம்[77] 5. விருசயானம்[78] 6. சந்து யானம் [79] என அறுவகைப்படும்,

16 தானே நீந்திச் செல்வது இகழப்படவில்லை.

பயணமுறை (யானயுக்தி) முற்றும்.

அடிக்குறிப்புகள்

1. நௌகா-படகு, ''துர்க்காணி விச்வா, நாவேவ சிந்தும்'' என்பது வேதம்.
2. மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கும் சரலக்னங்கள். செய்யுளில் 'மகராதிசட்கே' என்று கூறப்பட்டிருக்கிறது. சரலக்னங்கள் மேடம் முதல் மகரம் இறுதியாக நான்கே. ஆனால் 6எனக்கூறப்பட்டிருப்பதால் மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய நான்கும் சரம்பாதிஸ்திரம் பாதியாக இருப்பதால் இவைகளை உபய ராசியில் சரமாக உள்ள முற்பகுதிகளைச் சேர்த்த இரண்டு (½ 4) ஆகிறது. இந்த இரண்டையும் சேர்த்து (4 2) ஆறு என்று கூறி இருக்கிறார் போலும்.
3. உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகியவை இறுதி ஏழாம்.
4. அச்வி—அச்விநி நட்சத்திரம்! இதற்குரிய ராசி — மேடம்
5. கராம்சு—சூரியன், இதற்குரிய ராசி—சிம்மம்.
6. சுதாநிதி—சந்திரன்; இதற்குரிய ராசி—கடகம்.

7. மித்ர—வருணனைத் தோழனாகக் கொண்டது செவ்வாய்; இதற்குரிய ராசி—விருச்சிகம்.

8. தன—தனத்தைக் கொடுப்பவன் சுக்கிரன்; இதற்குரிய ராசிகள் — இடபம், துலாம்.

9. அச்யுத-மகாவிட்டுணு: அவருக்குரிய நட்சத்திரம் திருவோணம்; ராசி—மகரம்.

10. சந்திரன் சுத்தனாக இருப்பது என்றால் வேறு பாவக்கிரகங்களுடன் சேராமல் இருப்பது.

11. இலகு—கனம் இன்மை.

12. கோமளம்

13. சுகடம்—சுகமாகச் செய்வதற்கு அல்லது சேர்ப்பதற்கு ஏற்றது

14. திருடம்

15. அசுடம்—சிரமப்பட்டுச் செய்வதாயும் சேர்ப்பதற்கு தகுதியற்றதாகவும் இருப்பது.

16. குரு

17. சூத்திரசாதி என்கிற மூலம்

18,20 ''யுக்திகல்பதரு'' என்ற இந்நூலே போசனால் செய்யப்பட்டது என்பர். இங்கு 'போசனின் கருத்து' என்று சொல்லப்படுவதால், இந்நூலாசிரியர் போசன் அன்றி வேறொருவர் ஆதலும் கூடும்.

19. உலோகம் என்பது இங்கு இரும்பைக் குறிக்கிறது போலும்.

21. சாதாரணம்—சாமான்யம்.

22. விசேடம்

23. ராசகஃச்தம்— (அ)'ராச' என்ற சொல் 16 என்கிற எண்ணையோ அல்லது 28 என்கிற எண்ணையோ குறிப்பதாக இருக்கலாம். ராசா என்றால் சந்திரன் என்று பொருள்; சந்திரனுக்குள்ள கலைகள் 16; ஆகையால் ராசா என்பது 16-ஐக் குறிக்கலாம். மேலும் வடமொழியில்'ஐ' என்பது எட்டாவது எழுத்து;'ரா' என்பது இரண்டாவது எழுத்து. இந்த எண்களின் பெருக்குத்தொகை $(2 \times 8 = 16)$ ஈரெட்டு எனவும் கொள்ளலாம். அல்லது ''கடபயாதி'' சங்கிய (எண்ணிக்கை) முறையில் ராச என்பதை 28 ஆகவும் கொள்ளலாம். அதனை 82 எனவும் ஒரு முறைப்படி கொள்ளலாம் என்பர். ஆனால் இங்கு 'சூத்ரா' என்பது மிகச் சிறிய படகு ஆதலின் 82 முழம் நீளம் உள்ளது எனக் கொள்ளுதற்கு இல்லை.

ஆ. 'கஃச்தம்' என்பது ஒரு முழத்தைக் குறிக்கும். முழம் என்ன அளவு கொண்டது என்பதை கௌடில்யர் தமது பொருள் நூலில் குறிப்பிடுகிறார். அவர் கூறும் முழத்தின் அளவை பின்வரும் வாய்ப்பாட்டின் மூலம் அறியலாம்,

8 சிற்றணு (பரமாணு) —1 தேராழித்துகள் (தேர் சக்கரத்தினின்று எழும் தூசு)
8 தேராழித்துகள்கள் —1 ஈர் (பேன் முட்டை)
8 ஈர் —1 பேன் இடை (பேனின் நடுப்பகுதியின் அளவு)
8 பேன் இடை —1 யவ இடை (பார்லி என்னும் தானியத்தின் நடுப்பாக அளவு)
8 யவ இடை — 1அங்குலம் (நடுத்தரமான மனிதனின் கையின் — நடுவிரலின் நடுப்பகுதியின் அகலம்)
12 அங்குலம் —1 சாண் (ஒரு நிழலாள் அளவு)
2 சாண் அல்லது —1 அரதி அல்லது 'ப்ராசாபத்ய' என்னும்
24 அங்குலம் — முழ அளவு (கஷ்த்தம்)

24. சூத்ரா (*Kshudra*) — சிறியது (*Tiny*)
25. மத்யமா (*Madhyama*) — நடுத்தரமானது (middle)
26. பீமா (*Bhima*) — பயங்கரமானது
27. சபலா (*Chapala*) — அசைவது
28. படலா (*Patala*) — படலா கூடை, (*Basket*)
29. அப்யா (*Abhaya*) — பயமில்லாதது
30 தீர்க்கா (*Dirgha*) — நீளமானது
31. பத்ரபுடா (*Bhdraputa*) — நல்லதைச் செய்வது
32. கர்பரா (*Grabhara*) — மெதுவாக ஆட்டத்துடன் செல்வது
33 மந்தரா (*Manthara*) — மெதுவாக ஆட்டமில்லாமல் செல்வது.
34. இங்கு கூறப்பட்டபடி பத்து சாதாரணப் படகுகளின் நீள, அகல, உயரங்களைப் பின்வரும் அட்டவணையால் அறியலாம்:

எண்.	படகு	நீளம் (ராசகஷ்த்தம்)	நீளம் (முழம்)	அகலம் (முழம்)	உயரம் (முழம்)	விகிதம் (நீளம்:அகலம்: உயரம்)
1.	சூத்ரா	1	16	4	4	4: 1: 1
2.	மத்யமா	1½	24	12	8	3: 1½: 1
3.	பீமா	2½	40	20	20	2:1:1
4	சபலா	3	48	24	24	2:1:1
5.	படலா	4	64	32	32	2:1:1
6.	அபயா	4½	72	36	36	2.1:1
7.	தீர்க்கா	5½	88	44	44	2 1:1
8.	பத்ரபுடா	6	96	48	46	2:1;1
9.	கர்பரா	7	112	56	56	2:1,1
10.	மந்தரா	7½	120	60	60	2:1:1

35. வடமொழியில் உலோகம் என்று உள்ளது. இங்கு காரியத்தை உணர்த்துவது போலும்:

36. காந்த இரும்புத் தகடு [Magnetic Iron sheet]

37. 38, தீர்க்கா—தீர்க்கிகா—நீளமானது

39. தரணீ — வேகமானது

40. லோலா — ஆடிச்செல்வது

41, கத்வதா — வேகமாகச் செல்வது

42. காமினீ — வேகமானது

43. தரித்ரீ — மிகவும் வேகமானது

44. சங்காலா — மிக மிக வேகமானது

45. ப்லாவினீ — தாண்டித் தாண்டிச் செல்வது

46. தாரிணீ — கனத்தைத் தாங்கக் கூடியது

47. வேகினீ — மிக்க வேகமானது.

48, 49 இதன்படி தீர்க்கா வகைப்படகுகளின் நீள, அகல, உயரங்களைப் பின்வரும் அட்டவணையில் அறியலாம்.

வ. எண்.	படகு	நீளம் (ராசகஃச்தம்)	நீளம் (முழம்)	அகலம் (முழம்)	உயரம் (முழம்)	விகிதம் (நீளம்: அகலம்: உயரம்)
1.	தீர்க்கா	2	32	4	3.2	
2.	தரணீ	3	48	6	4 8	
3.	லோலா	4	64	8	6.4	
4.	கதிவரா	5	80	10	8.0	
5.	காமினி	6	96	12	9.6	$10:1\frac{1}{4}:1$
6.	தரீ	7	112	14	11.2	
7.	சங்காலா	8	128	16	12 8	
8.	ப்லாவினீ	9	144	18	14.4	
9.	தாரிணீ	10	160	20	16.0	
10	வேகினீ	11	176	22	17.6	

50. முழ அளவு இல்லாமல் வேறு எந்த அளவிலும் அமைக்கலாம் என்பது போசன் கருத்து.

51. சுலோகத்தில் அளவின் அலகு (unit) என்ன என்று கூறப்படவில்லை. முன்னர் ராசகஃச்தத்தையே அலகாக கொள்ளப்பட்டதால் இங்கும் அதனையே கொள்ள வேண்டுமெனத் தோன்றுகிறது. முழமாகக் கொண்டால் தீர்க்கிகா என்ற படகினைத் தவிர வேறு எதுவும் உகந்தது அல்ல எனக்கருத வேண்டும். நாற்பதுக்கு மேற்பட்ட படகுகள் என்றாலே அதனுள் 60, 90க்கு மேற்பட்டவைகளும் அடங்கிவிடும். 40க்கு மேல் எனத்

கூறியதோடு, 60, 90க்கு மேற்பட்டவை எனக்கூறுவதின் பொருள் விளங்கவில்லை இங்கு கூறப்பட்ட அளவு, நீளத்தின் அளவு போலும்.

53. 'த்வாதத்' ப்ரதரண' என்று மூலத்தில் இருக்கிறது. இதன்படி அகலமும், உயரமும் நீளத்தின் அளவாக இருக்கவேண்டும். இது சரியெனத் தோன்றவில்லை. இது பிழை பட்ட பாடம் எனத் தோன்றுகிறது; அகலமும் உயரமும் நீளத்தில் பாதியாகலாம்.

54. ஊர்த்வா—மேல் நோக்குவது.

55. அநூர்த்வா—மேல் நோக்காதது.

56. சுவர்ணமுகி—தங்க முகத்தை உடையது.

57. கர்பிணி—மெதுவாக அசைந்து செல்வது.

58. மந்தரா—மெதுவாகச் செல்வது.

59. இதன்படி உன்னத வகைப்படகுகளின் நீள, அகல, உயரங்களைப் பின்வரும் அட்டவணையில் காண்க:

படகு	நீளம் (ராசகக்ஷ்தம்)	நீளம் (முழம்)	அகலம் (முழம்)	உயரம் (முழம்)	விகிதம் (நீளம்:அகலம்:உயரம்)
ஊர்த்வா	2	32	16	16	
அநூர்த்வா	3	48	24	24	
சுவர்ணமுகி	4	64	32	32	2;1:1
கர்பிணி	5	80	40	40	
மந்தரா	6	96	48	48	

60. மூலம் ''பாணாக்னி'' என்கிறது. பாணம்-மன்மதனின் பாணங்கள் ஐந்து; ஆதலால் இது 5-ஐக் குறிக்கும். அக்னி (1) ஆகவனீயம் (2) கார்க்பத்யம் (3) தாட்சிணம் என மூன்று. பாணாக்னி என்பது கடபயாதி சங்கியையில் 35 ஆகிறது.

61. மூலத்தில் ''தசாபுவாம்'' என்றிருக்கிறது — ''திசாபுவாம் என்றிருத்தல் வேண்டும்.

62. 'சந்திரன்' என்பது எதனைக் குறிக்கிறது என்பது தெரியவில்லை.

63. தசாசாதா என்றிருக்கிறது—திசாசாதா என்றிருத்தல் வேண்டும் எனத்தோன்றுகிறது.

64. எந்தெந்த திசைகளில் அன்னம் முதலிய எட்டையும் அமைக்கவேண்டும் என்பது தெரிய வில்லை. அன்னம் அக்னியின் வாகனம் ஆதலின், அதனைத் தென்கிழக்கிலும்; யானை இந்திரன் வாகனமாதலின் அதனைக் கிழக்கிலும் அமைக்கலாம் எனத்தோன்றுகிறது.

65. சதுர்திரித்வைக என்றிருக்கிறது 'சது' 'திரித்வைக' என்றிருத்தல்வேண்டும்.

66. பாதம் — ஒரு சாண் (கால் அடியின் நீளம்)

67. "தந்சங்கயா சேத் அதரத வேத த்வயசம் கிதா க்ரம சதாசகா'' என்பது பாடம். 'சேத் அதரச' என்பதற்குப் பதிலாக 'சேத்வகரச' என்ற பாடமும் உண்டு. இப்பாடம் 9, 8 என்ற வரிசைகளைக் கொள்கிறது. ரச—ஒன்பது; வேதத்வய—கட்டு' (4,2)

68. மந்திரா—வீடு, அறை. 'கேச' என்ற பாடம் இருக்கிறது. இது 'கோச' (நிதி—Treasure—2) என்று இருத்தல் வேண்டும்.

69 குறைவு 8. 6 (வக—சட்); 12—11 (திவா க, ரகோந்)—ரகோந்—பன்னிரண்டில் ஒன்று குறைவு. மூலத்தில் அநேக என்று இருக்கிறது. அது 'ரகோந்' என இருத்தல் வேண்டும். நீள —அகல—உயரங்கள் முறையே (8—6—2); (10—9—5); (12—11—10) என்று இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறார் போலும்.

70. திக்குப்பாலகர்களுக்கு ஏற்ற பிராணிகள் :
1. இந்திரன் - வெள்ளையானை, 2. அக்னி - அன்னம், 3. யமன் - எருமை, 4. நிருதி-மனிதன் 5. வருணன் - மகரம், 6. வாயு - மான், 7. சந்திரன் - கிரை, 8. ஈசானன் - இடபம்.

71 புதிய பாய்மரக்கோலை அமைக்கும் முறை எவ்வளவு இன்றியமையாததோ அவ்வாறு கொடியையும் கலசத்தையும் இன்றியமையாதவைகளாகக் கொண்டு அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

72. 'சிவ்த' 27 ஆம் சுலோகம் முதல் பாதத்தில் ''மந்தரோல்லோதயோரபி'' என்று இருக்கிறது இது பிழைபட்டபாடம். பாடபேதத்தில் ''அச்வரோ சோசயோரபி'' என்று இருக்கிறது. இதன்படி ஆசனம், படுக்கை இவைகளின் உயரமும் அகலமும் குறிப்பதாகக் கொள்ளப்பட்டன.

73. பயணத்திற்கு உகந்ததல்லாதவை

74. த்ரோணிவடிவான படகு; த்ரோணி - மரத்தில் குடைந்தெடுக்கப்பட்ட ஒரு நீர்ப் பாத்திரம்.

75. கடயான—மண்பானைச் சட்டிகளை உபயோகப்படுத்திய படகு.

76 தும்பீபல—நீண்ட சுரைக்காயாக இருத்தல் வேண்டும்; ஏனெனில் வேதத்தில் ''நஹிதும்பீ'' பலவிகலோவீணதண்ட பரயாதிமஹீமானம்'' என்று இருக்கிறது. ''தும்பீபழத்தைப் போல் உடையக் கூடிய வீணையின் தண்டம் உயர்வை அடையா தல்லவா'' என்று கூறப்பட்டிருக்கிறது.

77. சர்மயாநமம்—தோலினால் கட்டப்பட்ட படகு (தோலினால் பெரியதலையணை போல் தைத்து அதற்குள் மரத்தூள் முதலியவற்றை வைத்துப் பயன்படுத்துவது.

78. விருயானம் - பெரிய மரக்கட்டைகளைக் கட்டிச் செய்யப்படுவது (கட்டுமரம்).

79. சந்துயானம் - சில நீந்தும் பிராணிகளைக் கொண்டு தண்ணீரில் பிரயாணம்செய்வது.

சிந்து இலக்கியம் - ஓர் ஆய்வு

- தடை விடைகள் -

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் 'இலக்கியக் கொள்கைக்குத்' திரு பழ. முத்தப்பன் அவர்கள் "சிந்து இலக்கியம் - ஓர் ஆய்வு" என்னும் கட்டுரையைப் படைத்தார். அக்கட்டுரை அவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட "சிந்து இலக்கியம்" என்னும் பதிப்பில் நூன் முகமாக இடப்பட்டுள்ளது.

திரு இரா செயராமன் அவர்கள் அக்கட்டுரைக் கருத்துகளை மறுத்து எழுதிய தடைகளும், கட்டுரையாசிரியர் விடைகளும், தொடர்ந்த விளக்கமும் இங்குத் தரப்படுகின்றன.

– ஆசிரியர்

கட்டுரையாசிரியர்

திரு பழ. முத்தப்பன் கட்டுரைக்கு திரு இரா. செயராமன் கூறும் மறுப்பு.

ஏட்டில் இதுவரை பதிப்பில் வெளிவராத சிந்து நூல்களை அளித்த ஆசிரியர் திரு பழ. முத்தப்பன் அவர்கள் முயற்சி சிறந்ததாகும். வரவேற்க வேண்டியதாகும்.

ஆனால், அவரது ஆய்வில் பல குறைபாடுகளை என்னால் காணமுடிந்தது.

சிந்துப் பாடல்கள் மூன்று சீர்களைக் கொண்ட அடியுடன் வருவனவாகும் என இலக்கணம் கூறித் தமது ஆய்வை ஆசிரியர் தொடர்கிறார். அது 12ஆவது நூற்றாண்டில் முதன்முதலாக பாடப்பெற்றது எனக்கூறும் அவர், வள்ளலார் 734 சிந்துப் பாடல்களைப் பயன்படுத்தியதையும் ஆராய்ந்து கூறியுள்ளார். ஆனால், சிந்துப்பாடல்களை நாட்டுப் புறப் பாடல் வகையைச் சார்ந்தவை என்கிறார். ஓரளவு ஒப்புக் கொள்ளலாம்.

அவர் சிந்துப் பாடலுக்கு இலக்கண வரம்பு உண்டு என்று 3 ஆவது பக்கத்தில் 2 ஆவது பத்தியில் குறிப்பிடுகிறார். அதில் சிந்து சமநிலைச் சிந்து என்றும், வியனிலைச் சிந்து என்றும் இருவகையினையும் எடுத்துக்காட்டியுள்ளார். ஆனால், பின்னால் அவரே அதை முரண்பட்டு மறுத்துள்ளார். சிந்தில் பல வகைகள் உண்டு. அவற்றை எடுத்துக்காட்டவில்லை.

சிந்தில் பொதுவாக 27 வகைகளைக் கூறலாம். அவை பின்வருமாறு :

1. சமநிலைச் சிந்து
2. வியனிலைச் சிந்து
3. நொண்டிச் சிந்து
4. வழிநடைச் சிந்து
5. ஆனந்தக் களிப்பு
6. காவடிச் சிந்து
7. வளையற் சிந்து
8. தங்கச் சிந்து
9. சேவற் பாட்டு
10. புரூப்பாட்டு

11. குள்ளத்தாரா சிந்து
12. மேல்வைப்புச் சிந்து
13. தெம்மாங்கு
14. கும்மி
15. இலாவணி
16 தானானேச் சந்தம்
17. தன்னானைச் சந்தம்
18. ஏசல்
19. ஏற்றப்பாட்டு
20. ஏலப்பாட்டு
21. உடுக்கைப் பாட்டு
22. ஒப்பாரி
23. தாலாட்டு
24. கண்ணி
25. இசைப்பாடல்
26 வண்ணப்பாடல்
27. நாடகம்

கட்டுரை ஆசிரியர் சிந்துப் பாடல்களுக்கு எந்தவொரு யாப்பும் வரையறுக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

சிந்துப் பாடலுக்கு எல்லாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய யாப்பு வகை உண்டு. சிந்திற்குச் சீரான மூன்றடி உண்டு. அதற்கு மேலும் வருதலுண்டு,

ஒரு சிந்துப்பாடலில், தனிச் சொல்லுக்கு முன்னும், பின்னும், பின்னுள்ள வரிகள் அளவொத்திருப்பின் அது சமநிலைச் சிந்தாகும். தனிச்சொல்லின் முன் வரியும், பின்வரியும் அளவு ஒவ்வாமல் வருமானால் அது வியனிலைச் சிந்தாகும்.

4 வரிகளுடன் வரும் சிந்துப் பாடல் நான்கு தனிச்சொற்களுடன் வந்தால் அதுநொண்டிச் சிந்தாகும்.

இயல்பான சிந்திற்கு இரண்டு எதுகை வரும்; நொண்டிச் சிந்திற்கோ 4 எதுகை வரும். அரையடிக்கு இரண்டு சீர்கள் முதல் நான்கு சீர்கள் வரை வருதல் சிறப்பானதாகும்.

அடுத்து அரையடியில் உள்ள முதற்சீரும், மற்றோர் அரை அடியில் இருக்கும் முதற்சீரும் மோனை பெற்றிருக்க வேண்டும்.

மற்றவகைப் பாட்டுக்களைப் போல, சிந்திற்கு தளை வரையறை இல்லை. ஏழு தளைக்கும் வரலாம். சந்தம் நன்கு அமையும் போது பாட்டு மிகச் சுவையுடையதாக இருக்கும்.

வழிநடைச் சிந்து மற்றும் காவடிச்சிந்திற்கு மட்டும் சரியாக விளக்கம் கூறியுள்ளார்.

வளையற் சிந்து என்பது உரையாடலாக அமைந்த சிந்தாகும்.

தங்கச் சிந்து, 'தங்கமே' எனத் தனிச் சொல்லுடன் வருவதாகும் குள்ளத்தாரா சிந்தும் அப்படியே.

சேவலையும், புறாவையும் வைத்துப்பாடியதால் அது முறையே அப்பெயர் பெற்றிருக்கலாம்.

மேல்வைப்புச் சிந்தும், தெம்மாங்கும் ஒன்றுபோலத் தோற்றமளிக்கும் சிந்து வகைகளாகும். மேல் வைப்புச் சிந்து கொலை நிகழ்ச்சிகளைப் பாடப் பயன்பட்டதாகும்.

சிந்து வகைகளிலேயே கும்மிப்பாடலுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. அது வெண்டளையில் மட்டும் பெரும்பாலும் பாடப்பெறும்.

இலாவணி என்பது எதிர்த்து உரையாட அமைந்த ஒருவகைச் சிந்தாகும்.

தானானேச் சந்தச் சிந்து பெரும்பாலும் அவலத்தைப் பாடவும், தன்னானைச் சந்தச் சிந்து உவகையைப் பாடவும் பயன்பட்டன.

ஏசல் சிந்தானது ஒருவரைப் பழிப்பது போலப்புகழும்வஞ்சப்புகழ்ச்சிஅணிகொண்டு வருவதாகும்.

ஏற்றப் பாட்டென்பது குறளடியால் ஆன பாட்டாகும். இது ஏற்றம் இறைப்போர் பாடுவதாகப் பாடப்படுவது.

ஏலப்பாட்டு என்பது கப்பற்பாட்டு என்று அழைக்கப்படுவதாகும். இதனைப் பல அடி களாகவும் பாடுவது உண்டு.

உடுக்கைப் பாட்டுச் சிந்தானது, ஒருவன் உடுக்கையடித்துப் பாட, பின்னொருவன் பின்பாட்டுப் பாடுவதாகும்.

ஒப்பாரிச் சிந்து, பெண்கள், யாராவது இறந்தபோது பாடுவதுபோல அமைந்த தாகும்.

தாலாட்டு என்பதும் பெண்களுக்குரிய இனிய ஓசையுடைய பாட்டாகும். கண்ணிச் சிந்தும் தாலாட்டு வகையைச் சார்ந்ததாகும்

இசைப்பாடலென்பது பல்லவி, பல்லவி எடுப்பு, கண்ணிகள் முதலான உறுப்புடன் அமைந்ததாகும். இதில் மோனை, எதுகை மற்றும் இயைபு தொடையமைந்து வர வேண்டும் என்பது முடிவாகும்.

உதாரணமாக 'முத்தைத்தரு பத்தித் திருநகை' எனத் தொடங்கும் பாடல் ஆகும்.

நாடகச் சிந்து என்பது நடித்துக் காட்டப் பயன்பட்ட ஒன்றாகும்.

யாப்பில் வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்று பலவாறாக மாற்றங்கள் அமைந்துள்ளன. அப்படியேசிந்திற்கு யாப்பு இலக்கணம் உண்டு என்பதைப் பலரும் அறிவர்.

பொதுவாகச் சிந்தில் இப்படிப் பலவகை களிருக்க, ஆசிரியர் ஒழுங்காக ஆராயாமல் சிந்திற்கு யாப்பேஇல்லைஎன்றுகூறியுள்ளார்.

அடுத்து ஆசிரியர் திரு பழ. முத்தப்பன் அவர்கள் சிந்துப் பாடலையும் நாட்டுப்புறப் பாடலையும் ஒன்றாகக் கருதிக் குழம்பியிருக் கிறார்.

நாட்டுப் புறப் பாடலென்பது வாய்மொழி இலக்கியம் எனப் பல பேரறிஞர்கள் ஆய்ந்து கூறியுள்ளனர். ஆனால். சிந்துப் பாடலை அந்த வகையில் சேர்ப்பது சரியாகாது.

நாட்டுப்புறப்பாடலிலிருந்து சிந்துதோன்றி யது எனலாம். அதற்காகசிந்து நாட்டுப்புறப் பாடலாகாது. மண்ணிலிருந்து மரம்தோன்றி யதனால் மரம் மண்ணாகுமா? குரங்கிலிருந்து மனிதன் தோன்றிவிட்டதனால், மனிதன் குரங்காகி விடமுடியுமா?

சிந்துப் பாடல் இலக்கண வரம்பிற்கு உட்பட்டே உள்ளது. ஆனால் நாட்டுப்புறப் பாடல் அப்படியன்று. நாட்டுப்புறப் பாடல் களைப் பாடியவர்கள் இன்னார் என்று எவருக்கும் தெரிவதில்லை. ஆனால் சிந்து அப்படியன்று. ஏன்? இதுவரை பதிப்பில் வெளிவராத சிந்துகளை இயற்றிய ஆசிரியர் களை, திரு பழ. முத்தப்பனே தொகுத்து அளித்திருக்கிறார்.

திரு இரா. செயராமன் அவர்கள் மறுப்பிற்கு திரு பழ. முத்தப்பன் அவர்கள் விடை

சிந்து இலக்கியம் பற்றிய மதிப்பீட்டைப் பெற்றேன். மகிழ்வுற்றேன். தங்களின் பாராட்டுதலுக்கும்-குறிப்பிட்டிருக்கும் குறை களுக்கும்—என் பணிவு கலந்த நன்றிதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களின் 4 பக்க மதிப்பீட்டில்-தாங்கள் குறிப்பிட்டிருக்கும் குறைபாடுகள் 5 என்பதை தங்கள் மதிப்பீட்டை மதிப்பீடு செய்பவர் அனைவரும் உணர்வர். அவை குறைபாடுகளா (?) என்பதைத்தான் கவனிக்கவேண்டியுள்ளது. அவற்றை என் ஆய்வு நோக்கில் காணும் போது, அவை குறைபாடுகள் எனத் தங்களால் பிழையாக உணரப்பெற்றுள்ளனவே தவிர, அக்குறைகளே என் நூலில் இல்லை என்றே தெரிகிறது. அவற்றை விளக்குகிறேன்.

தங்களால் சுட்டப்படும் குறை — 1

''சிந்துப் பாடலுக்கு இலக்கண வரம்பு உண்டு என்று 3 ஆவது பக்கத்தில் 2 ஆவது

பத்தியில் குறிப்பிடுகிறார். ஆனால் பின்னால் அவரே அதை முரண்பட்டு மறுத்துள்ளார்'' எனத் தங்களின் மதிப்பீட்டின் பக்கம் 1 இல் 5 ஆவது பத்தியில் கூறப்பெற்றுள்ளது. என் மறுப்பு -...

1 முரண்பட்டு நான் மறுத்துள்ளேன் என்பதை என் ஆய்வுக் கட்டுரையில் எப் பக்கத்தில் கண்டீர்கள்? ஏன் அதைக் குறிப்பிட வில்லை?

2 நான் இப்பகுதியை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறேன். எப்படி எனின், என் ஆய்வுக் கட்டுரையை மீண்டும் ஒரு முறை கையில் எடுங்கள். படித்திடுங்கள், புரியும்.

பாட்டிலக்கண நூல்களில் சிந்து இலக்கியத் திற்கு இலக்கணம் கூறப்பெறவில்லை. சிந்து இலக்கியம் பக். 1. பத்தி 2 எனக் கூறி, பின் அவ்விலக்கியம் வளர்ந்த காரணத்தால் 1981 இல் தோன்றிய யாப்பு நூல் இலக்கணத்தில் இலக்கணம் பெற்றுவிட்டது என்று பக். 1 பத்தி 3 இற் கூறியுள்ளேன். பின்பு எங்கும் 'இலக்கணம் இல்லை' என்று நான்கூறவில்லை. எனவே முரண்பாடு என் கருத்தில் இல்லை.

குறை –2

''சிந்தில் பலவகை உண்டு; அதை எடுத்துக் காட்டாது ஆய்வு என்ற பேரால் (பெயரால் என்று இருக்க வேண்டும்) நுனிப்புல் மேய்ந் திருக்கிறார்'' (தங்கள் பக். 1—பத்தி—5) என்பது தங்களின் தொடர்.

என் மறுப்பு

• என் கட்டுரையில் பக்கம் 5 இல் இரண்டா வது பத்தியில் சிந்து இலக்கிய வகைகள் என்று தனித் தலைப்பே உள்ளது. தனித் தலைப்பிலேயே வகையை விளக்கியிருக்கும் என்னை வகையை எடுத்துக் காட்டவில்லை எனக் கூறுவது தங்களைப்போன்ற அனைத் தும் தெரிந்தவர்களுக்கு முறையாகுமா?

அடுத்து நான் வகைப்படுத்தியிருப்பது பொருள் அடிப்படையில்; மேலும் நான் எடுத்துக் கொண்டிருக்கும் ஆய்வோ ''சிந்து'' என்ற பெயரில் வெளிவந்திருக்கும் நூல் களைப் பற்றியே. எனவே பா அடிப்படையில் வகைப்படுத்தாமல், கருப்பொருள் அடிப் படையில் சிந்து இலக்கியங்களை வகைப் படுத்தி அவற்றைத் தனித் தனித் தலைப்பில் விளக்கியிருக்கிறேன். நன்குபடித்துப் பின்னர் குறையைச் சுட்டுங்கள். ஏற்றுக்கொள்கிறேன்.

அடுத்து தாங்கள் 27 என வகைப்படுத்தி இருக்கிறீர்கள். ஒப்பாரி, தாலாட்டு, கண்ணி, இசைப்பாடல், சேவற்பாட்டு, கும்மி, இலா வணி, ஏற்றப்பாட்டு இவையெல்லாம் சிந்து வகையா? சான்று காட்ட முடியுமா? இவை சிந்து என்றால் - தாங்கள் குறிக்கும் நாட்டுப் புறப் பாடல்கள் எவை? ஏனெனில் தாங்கள் சிந்து நாட்டுப்புறப் பாடல் அன்று என்ற கருத்தை உடையவர்கள். எனவே நாட்டுப்புறப் பாடல்களாகத் தாங்கள் காண்பவை எவை?

குறை-3

நூலில் ஆசிரியர் சிந்துப் பாடல்களுக்கு எந்தவொரு யாப்பும் வரையறுக்கப்பட வில்லை எனக் கூறியுள்ளார் (தங்கள் பக். 2 இல் முதல் பத்தி) என்பது அடுத்த குறை.

ஐயா - அப்படியானால் சிந்துக்கு எந்த யாப்பு வரையறை? அதை நீங்கள் ஏன் குறிப் பிடவில்லை? தமிழில் 5 யாப்புத்தானே. அதில் எந்த யாப்பு சிந்துக்கு? என் கட்டுரையில் பக். 18 இல் பத்தி 2 யாப்பு என்று தலைப்பு இட்டு சிந்து இலக்கிய யாப்பைப் பற்றி விளக்கியிருக்கிறேன். அதில் சிந்துக்கு-ஒரு குறிப்பிட்ட பாவகை காணமுடியவில்லை எனக் குறிப்பிட்டு, பல பா வகையில் நூல்கள் அமைந்துள்ளன என விளக்கியுள்ளேன். அதாவது சீரோ-தளையோ குறிப்பிட்ட நிலையில் அமையவில்லை - என விளக்கி யுள்ளேன்.

1. பக் 2 இல் பத்தி 2 சிந்துப் பாடலுக்கு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய யாப்பு வகை உண்டு. சிந்திற்குச் சீரான மூன்றடி

உண்டு. அதற்கு மேலும் வருவதுண்டு. (அப்படியானால் அடிவரையறை இல்லை என்பது தங்கள் கருத்து.)

2. பக் 2 இல் பத்தி 7 மற்றவகைப் பாட்டுக் களைப் போல் சிந்துக்குத் தளை வரையறை இல்லை. ஏழுதளைகளும் வரலாம். (அப்படி யாயின் தளை வரையறையும் இல்லை அன்றோ?)

3. பக் 3-இல் பத்தி 6, 7. யாப்பில் வெண்பா-கலிப்பா-ஆசிரியப்பா-வஞ்சிப்பா என்று பலவாறாக மாற்றங்கள் அமைந் துள்ளன. அப்படி சிந்துவிற்கு யாப்பு இலக்கணம் உண்டு என்பதைப்பலரும் அறிவர். இனி சிந்திற்கு உள்ள யாப்பு எது என்பதை - அதாவது வெண்பா முதலாகக் குறிப்பிட்ட யாப்பில் ஒன்றா, இல்லை வேறு யாப்பா என்பதை - தாங்கள் குறிப்பிட்டிருக்க லாம். குறிப்பிடாததால் யாப்பு வரையறை இல்லைஎன்பதுஉறுதிஎன்று'அடி,தளை வரை யறையில்லாத' சிந்துக்கு'யாப்பும்வரையறை யில்லை' என்று கூறியிருக்கும் தாங்களும் குறையுடையவர்தானே.

குறை 4

அடுத்து ஆசிரியர் பழ. முத்தப்பன் சிந்துப் பாடலையும் - நாட்டுப்புறப் பாடலையும் ஒன்றாகக் கருதிக் குழம்பியிருக்கிறார். பக் 3. பத்தி 8. என்பது தங்களால் சுட்டப்பெற்ற குறை.

நான் குழம்பவேஇல்லை தனிக்கட்டுரையே எழுதியிருக்கிறேன். பக். 32-36. ''சிந்து- நாட்டுப்புறப் பாடலே'' என்பதுதான் என் கொள்கை.

மேலும் தாங்கள் சிந்து நாட்டுப்புறப் பாடல் அன்று என்று கூறித் தாங்கள் அமைத் துள்ள கருத்துக்கள் மிகவும் வேடிக்கை யானவை. ஆனால் சிந்துப் பாடல்களை நாட்டுப்புறப் பாடல் வகையைச் சார்ந்தவை என்கிறார். அதை ஓரளவு ஒப்புக் கொள்ள லாம். இது தங்கள் கூற்று (பக், பத்தி 9)

''நாட்டுப்புறப் பாடலிலிருந்து சிந்து தோன்றியது எனலாம்'' இதுவும் தங்கள் கூற்று (பக். பத்தி 9)

இப்படிக்கூறிய தாங்கள் தான்,

அதற்காக சிந்து நாட்டுப்புறப் பாட லாகாது - மண்ணிலிருந்து மரம் தோன்றிய தால் மரம் மண்ணாகுமா? (விதையிலிருந்து தான் மரம் தோன்றும் என்பது எம் போன்ற வர்களின் எண்ணம். மண்-துணைக் கருவி). குரங்கிலிருந்து மனிதன் தோன்றி விட்டத னால் மனிதன் குரங்காகி விட முடியுமா? (இவ்வாய்வை இன்றைய உலகம் ஏற்குமா? ஏற்றால் குரங்கோடு சம்பந்தம் செய்து கொள்ளலாம்) என்று கூறியுள்ளீர்கள்.

அடுத்து நாட்டுப்புறப் பாடல் இலக்கண மாகத் தாங்கள் கூறுவது ஆசிரியர் பெயர் அறியப்படாமல் இருக்க வேண்டும் என்ப தாகும் (பக். 3 பத்தி 11). அதாவது பெயர் தெரியாத கவிஞர்கள் பாடியதே நாட்டுப் புறப் பாடல் என்பது தங்கள் கருத்து. அப் படியானால் பெயர் தெரியாத சிற்றிலக்கிய மான 'தமிழ்விடு தூது' நாட்டுப்புறப் பாடல் என்கிறீர்களா?

மேலும் இன்றைய அறிஞர்கள் நாட்டுப் புறப் பாடல்கள் என வகைப்படுத்தி யுள்ள தாலாட்டு, ஒப்பாரி, ஏற்றப்பாட்டு இவற்றைச் சிந்து வகைகளாகத் தாங்கள் எழுதியுள்ளீர்கள். அப்படியானால் சிந்து நாட்டுப்புறப் பாடல்தானே. எனவே தங்கள் கருத்துத்தான் குழப்பமே தவிர-நான் குழம்ப வில்லை.

திரு இரா செயராமன் அவர்களது தடைக் கருத்துகள் சிந்து-இலக்கிய விளக்கம்

தங்களின் முதல் விடைக்குத் தடை.

''சிந்துப் பாடலுக்கு இலக்கண வரம்பு இல்லை என்று என் ஆய்வுக் கட்டுரையில்

எப்பக்கத்தில் மறுத்துள்ளேன் என்றும், அதை ஏன் குறிப்பிடவில்லை என்றும், இலக்கணம் இல்லையென்று கூறவேயில்லை என்றும் தெரிவித்துள்ள தங்களுக்கு என் விளக்கம்.

"ஐயா ... தாங்கள் சிந்துப் பாட்டிற்கு இலக்கண வரம்பு இல்லையென ஒரு பக்கத்தில் மட்டும் மறுத்திருந்தால் நானும் குறிப்பிட்டிருப்பேன். தாங்களோ 'சிந்து-நாட்டுப் புறப் பாடலே' என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரையே சிந்துவிற்கு இலக்கணம் இல்லை என்ற மறுக்க வில்லையா? குறிப்பாக தங்களின் சிந்து இலக்கியம் பக். 35-2ஆவது பத்தியில் பின்வருமாறு மறுத்துள்ளதைக் காணலாம்.

'நாட்டுப்புறப் பாடல்கள், இலக்கணக் கட்டுக்குள் அடங்கா என்பது அறிஞர்கள் கூறும் சிறப்பான விதி· அந்த விதியில் ஒரு சிறிது கூட சிந்துப் பாடல் பிறழவில்லை'.

2 ஆவது மறுப்பிற்கு விளக்கம்

சிந்து இலக்கியங்களுக்குத் தாங்கள் தனியே தலைப்புக் கொடுத்து எழுதியதாகத் தெரிவித்ததற்கு விளக்கம்.

தாங்கள் சிந்து இலக்கியங்களைத் தனியே தலைப்புக் கொடுத்து விளக்கியுள்ளதைநான் மறுத்ததில்லையே. சிந்தின் வகைகளை முழுமையாகத் தெரிவிக்கவில்லை என்பது தானே என் குறைபாடு.

ஒப்பாரி, தாலாட்டு, கண்ணி. இசைப் பாடல், சேவற்பாட்டு, கும்மி, இலாவணி, ஏற்றப்பாட்டு இவையெல்லாம் சிந்து வகைகளா (?) எனத் தாங்கள் வினவிவிட்டதால் மற்றவற்றை சிந்துதானென ஒப்புக்கொண்டதற்கு நன்றி!

தங்களின் மற்ற மறுப்புகளுக்கு ஒட்டு மொத்தமாக விளக்கம் தர விரும்புகிறேன்.

சிந்து

ஒரெதுகை பெற்ற இரண்டடிகள் அளவொத்து வருதல் சிந்து எனக் கூறலாம். இரண்டடிகள் மட்டுமன்றி நாலடிகள் ஒரெதுகையாய் வருதலும் உண்டு. ஓரடியில் மோனைத் தொடையெடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அரையடி இங்கு அடி எனப் பெயர் பெறும். எல்லா அடியானும் வரும். தளை வரையறையில்லை. மோனைத் தொடையெடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அடிகள் ஒத்து வந்தால் அது சமநிலைச் சிந்தாகும். ஒவ்வாது வந்தால் அது வியனிலைச் சிந்தாகும் எனக்கூறப்படும்.

சிந்து என்பது கலிப்பாவின் இனத்தைச் சேர்ந்ததாகும் (1)

சிந்து என்பது நாட்டுப்புறப் பாடலைப் போன்று சிறு சிறு பாடல்களாகப் பாடப் படுவதன்று; நெடும் பாடலாகப் பாடப்படுவ தாகும்.

சிந்து—தோற்றம் யாப்பு

கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன் பிருந்த பாவின வகையைச் சேர்ந்த சிந்து என்னும் பாடல்கள்பாடலிற்பயிலத்தொடங்கின. அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர் கடுவெளிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர் முதலிய சித்தர் பாடல்களில் சிந்துப் பாடல் முன்னோடும் பிள்ளைகளாயுள்ளன. குறவஞ்சி, பள்ளு முதலியன பெரும்பாலும் சிந்துகளாலேயான நூல்களேயாகும். பாரதியார் காலத்திலிருந்து அச்சிந்து வகைகள் மிக்க செல்வாக்குப் பெற்றன. (2)

சிந்துப் பாடல் குறள் வெண் செந்துறையிலிருந்து பிறந்ததாக இருக்கலாம். குறள் வெண்பாவிற்கு இனமாயிருக்கும் குறள் வெண் செந்துறை நேரிய இசையும் சீரிய பொருளும் பெற்று அளவொத்த இரண்டடியாக வருமென இலக்கணம் வழங்கப்பட்டுள்ளது. அனைத்துச் சீராலும் ஒத்த இரண்டடியாய் வரும் குறள் வெண்செந்துறையில்தளையைக் கவனிக்க வேண்டியதில்லை. அதே போல் சிந்துப் பாடலும் விளங்குவதைக்காணலாம்.

குறள் வெண்செந்துறையிலிருந்து சிந்து வேறுபட்டிருப்பது ஒன்றில்தான்: சிந்தில் தனிச் சொல்லும் வரும்.

யாப்பு, செய்யுள் வடிவமைப்புக் கல்வியை அடிப்படையாகக் கொண்டதாகும் (3)

அந்த வடிவமைப்புக் கல்வியை அடிப்படையாகக்கொண்டு சிந்து விளங்குவதைக் காணலாம். சிந்திற்கு நிலைத்த யாப்பு உண்டு என்பதை வீர சோழியம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

இரண்டடி ஒத்து

அழிசீர் இலாதது சிந்தாம் (4)

சிந்து எனும் பாவடியும் முதன் முதலில் 'சித்தாரூடம்' என்ற நூலில் தோன்றியது என்பர். பஞ்சமாபு (83) ஈரடிகள் அளவொத்து அமைவது சிந்து எனக்கூறும். சித்தரின் சிந்துகள் பெரும்பான்மை ஈரடிச் செய்யுட்களே. இவ்வடிகட்கிடையே தனிச்சீர் அமைவதுஒருவகை. ஒவ்வோரடியும் இருபகுப்புற்று இடையே தனிச்சீர் பெறுதலும்உண்டு. முதற் பகுப்புக்கும் தனிச்சீருக்குமிடையே சிறு ஓசை நிறுத்தம் நிகழ்கின்றது. தனிச்சீரால் ஏற்படுகின்ற ஓசை நீட்சி சிந்தின்சிறப்பியல்பு. முன்னிலைப் படுத்தும் நிலையிலும், தொடர்ச்சி தரும் நிலையிலும் பொருள் பொருத்தத்துடனும் இத்தனிச்சீர் வருகின்றது. ஈரடி அல்லது இருபகுதி அளவொத்து வருதல் சிறிதே மாறுபட்டு ஓசைசிந்திநிற்றல்இங்கு அமைகின்றது. இந்த ஓசை சிந்துதலிலும் நிலைத்த யாப்பு உண்டு. இவ்வியல்புகள் இலக்கணமாகவும் இப்பா இப்பெயர் காரணமாகவும் அமைகின்றனஎனலாம். அடிகளும்அடிப்பகுதிகளும் இயைபுத் தொடை பெறுவதும், அடிகள் எதுகையும், அடிப்பகுதிகளிடையே மோனை பொருந்துவதும் இச்சிந்தின் தன்மையாம். இடைக்காடரின்சிலபாடலும்பீருமுகம்மதின் ஞானரத்தினக் குறவஞ்சியும் எளிய சிந்து வடிவின. முன்னது நாற் சீரடிகளிரண்டும், பின்னதுஐஞ் சீரடிகளிரண்டும்உடையபாடல்களாலானவை. முதலடியில் ஈற்றில்தனிச் சீர் உண்டு. அடிகளில், முதல் மூன்றாம் சீரில் மோனை வருகின்றது. முதலடி வினாவாக இரண்டாமடி விடையாகஅமைவதும்உண்டு.

பிறிதொருவகைச் சிந்து, அளவொத்த ஈரடிகள் இவ்விரண்டாய்த் துண்டுபட்டு, அவற்றிடையே தனிச்சீருடையதாய் அமைத்தல் பிற்காலப் பெயர் நிலைப்படி நாற்சீரிரட்டை எனத்தகுவன. இடைக்காடரிடம் காணப்படுகின்றது. ஒவ்வோர் அடிப்பகுதியும் நாற்சீர் பெறுவது இது. இவற்றின்கண் அடிகளின் ஈற்றில் இருசீரும் இயைபாகவும் அமைகின்றது. அடிப்பகுதிகள் முச்சீர் பெறுவது, முச்சீரிரட்டை: இவ்வகையும் இடைக்காடரிடம் உண்டு. தும்பியையும் மயிலையும், குயிலையும் முன்னிலைப்படுத்தும் பாடல்கள் அதற்கேற்ற இயைபு பெறுகின்றன, 'பால்கற' எனச்செயல்படுத்தும் பகுதியும்அவ்வாறேசிந்தில்பொதுத்தொடையமைப்பைப் பொருந்தி அமைகின்றது.

அகப்பேயரின் செய்யுட்களும் இடைக்காடரின் பாடல் சிலவும் பிறிதொரு வகையாக இருசீரிரட்டையில் அடங்குகின்றன. இவை முறையே அகப்பேய், பசுவே எனும் தனிச்சீர் பெறுகின்றன. எளிய வடிவுடைய இவற்றின் இம்முன்னிலைச் சொற்கள் முதன்மை குன்றியே அமைகின்றன.

''ஈசன் பாசமடி அகப்பேய்
இன் வண்ணங் கட்ட தெல்லாம்
பாசம் பயின்றதடி — அகப்பேய்ப்
பரமது கண்டாயே''.

குதம்பையார் செய்யுள்களும் காடரின் புல்லாங்குழல் ஊதலும் தனிச்சிந்துவடிவின. முதலடி நாற்சீராகவர இரண்டாமடி இருசீராக முதலடியுடன் எதுகையும் கருத்து முடிவும் பொருந்துகின்றன. தொடர்ந்து வரும் தனிச்சீருக்குப்பின் இரண்டாவதடி மடங்குகின்றது. முன்னதில் 'குதம்பாய்' என்பதும் பின்னதில் 'கோனே' என்பதும் தனிச்சீர்.

இப்பாடல்கள் முறையே வினாவாகவும் ஏவலாகவும் வருகின்றன.

தன்னையறிந்து தலைவனைச் சேர்ந்
தோர்க்குப்
பின்னாசை யேதுக்கடி—குதம்பாய்
பின்னாசை யேதுக்கடி?

இவ்வகைகள் இடைக்காடரைச் சிந்தின் தந்தை எனக்காட்டுகின்றன. இவற்றை கொடிச் சிந்து எனலாம் (5).

நாட்டுப்புறப் பாடலைப் போன்று வாய் மொழியாகச் சிந்து பரவவில்லை. அது எழுத்து வடிவத்திலேயே பரவியிருக்கிறது.

சிந்து வகைகள்

"இந்நூற்றாண்டின் அறிஞரான புலவர் குழந்தை பல வகைச் சிந்து அமைப்புக்களை இலக்கணம் கூறித் தெளிவுபடுத்துகிறார் (6)

சிந்து வகைகளைப் புலவர் குழந்தை கீழ்க் கண்டவாறு 27 ஆக வரையறுத்துள்ளார் (7)

1. சமநிலைச்சிந்து 2. வியனிலைச்சிந்து 3. நொண்டிச்சிந்து 4. வழிநடைச்சிந்து 5ஆனந்தக்களிப்பு 6. காவடிச்சிந்து 7. வளையற் சிந்து 8. தங்கச்சிந்து 9. சேவற்பாட்டு 10. புறாப்பாட்டு 11 குள்ளத்தாரா சிந்து 12. மேல் வைப்பு 13. தெம்மாங்கு 14. கும்மி 15. இலாவணி 16. தானானேச் சந்தம் 17. தன்னானேச்சந்தம் 18. ஏசல் 19. ஏற்றப் பாட்டு 20. ஏலப்பாட்டு 21. உடுக்கைப் பாட்டு 22. ஒப்பாரி 23. தாலாட்டு 24. கண்ணி 25, இசைப்பாடல் 26. வண்ணப் பாடல் 27. நாடகம்.

சிந்து படைப்பாளிகள்

சிந்துப்பாடல்களைப்பாமரர், யாரும்பாட வில்லை. புலமை வாய்ந்தவர்களே பாடி யுள்ளனர்.

"இலக்கியச் செறிவைக் காட்டிலும் கேட் போராகிய நாட்டுப்புற மக்களையே, பொது மக்களையே, மனத்தில் கொண்டு யாக்கப் பெற்றவை சிந்து நூல்கள். சிந்து நூல்களின் படைப்பாளிகள் சங்கமேறிப்புலமைகாட்டிய புலமைவித்தகர் அல்லர்- அதேநரத்தில், படிப் பறியாத பாமரக் கவிஞரும் அல்லர்" (8)

(கவனிக்கவும்: சிந்து இலக்கியம் பக்கம் 34 35 இல் சிந்துப் பாடல்கள் படிப்பறியா நாட்டுப்புறக்கவிஞர்களால்பாடப்பெற்றிருக் கின்றன எனக் கூறப்பட்டுள்ளது)

சிந்துப் பாடல்கள் நாட்டுப் புறப்பாடல் களைப் போன்று தாமாகப் பிறந்தன அல்ல அவை கவிஞர்களால் உருவானவையாகும்,

"சிந்து நூல்கள் பாடிடும் புலவர்கள் தாங் களே நூல்கள் எழுதியதும் அல்லாமல் அவற்றை அச்சில் கொண்டு வந்து தாங்களே பாடிப் பொதுமக்களைத் தம் வயப்படுத்தி நூல்களை விற்றும் இருக் கின்றனர்" (9)

தமிழிலே இப்போது பாவகை, வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நால் வகையாக இருப்பதை, தமிழ்ப் பெரியோர் கள் சிந்துப்பா என்று ஒன்றை இணைத்து ஐந்தாக இலக்கணம் வகுக்கலாம்.

நாட்டுப்புறப் பாடல் தோற்றம்

"என்று மனிதன் தன் அன்பை, காதலை எண்ணத்தை பிறரிடம் பரிமாறிக் கொள்ளத் தொடங்கினானோ அன்றே நாடோடிப் பாடல்கள் மலர்ந்து விட்டன" என்று கூறலாம். (10)

நாட்டுப்புறப் பாடல் பல்வேறு பெயர் களால் சுட்டப்படுகின்றது. நாட்டுப்பாடல், நாட்டார் பாடல், நாடோடிப் பாடல், ஊர்ப்பாடல், கிராமியப் பாடல், வாய் மொழிப் பாடல், பாமரப்பாடல், செவிவழிப் பாடல், கல்லார் பாடல், மக்கள் பாடல் என்று அறிஞர்களால் சுட்டப்படுகிறது (11)

சிந்திலிருந்து வேறுபட்ட நாட்டுப்புறப் பாடல்இலக்கியங்களை மூன்றாகக் கூறுவர்.

1) மொழி வடிவம் 2. பொருள் 3. சூழல் என்பன மூன்றாகும்.

நாட்டுப்புறத்து மக்கள் அன்றாடம் தம் வாழ்வில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் -தொட்டில் முதல் சுடுகாடுவரை – இன்பம், துன்பம், ஏக்கம். ஏமாற்றம் என்ற அனைத்து உணர்ச்சிகளிலும் குழந்தைமை, இளமை, முதுமை என்ற எவ்வித வேறுபாடும் இல்லாமல் பாடப்பெறும்பாடல்களே நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும். (13)

நாட்டுப்புறப் பாடல்களைப் பாடியவர்கள்

நாடோடிப் பாடல்கள் என அழைக்கப்படும் பாடல்கள் எழுத்தறிவில்லாத மக்களால் பாடப்பட்ட வாய்மொழி இலக்கியமாகும். (13)

"நாட்டுப்பாடல்கள் என்பன முன்னிருப்பவர் கேட்க, பின்னிருப்பவர் பாடுவனவாகும்" (14)

இந்த வாய்மொழி இலக்கியம் ஆசிரியர் பெயர்அறியமுடியாததுஎளியநடையில்வாழ்வோடு பிணைந்த இன்ப துன்ப நிகழ்ச்சிகள் தோய்ந்த வகையில் அவ்விலக்கியம் அமையும். மேலும் நாட்டுப்புறப்பாடல்கள் வழி நடைசெல்வோரும் வருந்தி உழைப்போரும் தம் நடையில் தளர்வும், உழைப்பால் சோர்வும் தோன்றாது இருக்க உதவுபவை. சிற்றூர் மக்களுக்குப் பழக்கமான கதைகளை இசையமைத்து அவற்றால் நல்ல அறநெறியை உலகுக்கு உணர்த்தும் வகையில் சிறப்பது. பாடுபவரே அதன் உடையவராக அவர் வழியே வாய்மொழிப்படியே மற்றவரிடம் பரவி உலகம் உள்ளளவும் காணும் இலக்கியமாக வாழ்ந்து வருவது. கேட்டு மகிழப் பயன்படுவதன்றி, பயின்று தெளிவது அன்று. இத்தகைய வாய்மொழி இலக்கியம் தமிழில் மொழி வரலாறு வரையறுக்க முடியாத காலந்தொட்டே இருந்து வருகின்றது. (15)

நாட்டுப்புறப் பாடல் என்பது வாய்மொழியாக, செவி வழியாகவழங்குவதன்றிஏட்டில் எழுதப்படாததாகும். இப்பாடல்களில்உள்ள தனித்தன்மைகளில் ஒன்று பாடியவர்களின் பெயர் தெரியாத நிலையாகும்.

எங்கேயோ ஓரிரு பாடல்கள் தனிப்பட்டவரால் பாடப்படுவன என்றாலும், பெரும்பாலான பாடல்கள் கூட்டுப் பாடல்களே. இந்த இலக்கியங்களைப் பாடியவர் யாவர்? நாகரிக வாழ்வின் உச்சியில் வாழ்கின்றோம் என்று தருக்கி வாழும் பெரும் மனிதர்களோ அன்றி கற்றவர் என்று தம்மைக் கூறிக் கொள்பவரோ இந்த இலக்கியங்களைப் பாடியதாக எந்த நாட்டு வரலாறும் நமக்குக் காட்டவில்லை. (16)

நாட்டுப்புறப்பாடல்களில் ஆசிரியர்வேறு, பாடகர் வேறு என்ற வேறுபாடில்லை. ஆசிரியரே பாடுகிறார்; பாடகரே இயற்றுகிறார் (17)

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் இத்தகைய நாட்டுப் பாடல்களில் ஐம்பதைத் தொகுத்து தமிழ் உலகுக்குத் தந்துள்ளார். (18)

என்றோ தோன்றிய இத்தகைய வாய்மொழி இலக்கியங்கள் நீடித்து வாழப் பெண்களே துணை புரிகின்றனர். அவர்கள் ஒருவருக் கொருவர் பேசியும் பாடியும் அவற்றை எங்கும் பரப்பி வருகின்றனர். இந்த இலக்கியங்களை ஏட்டில் எழுதி வைத்திட, சிற்றிலக்கியம் பாடிய புலவர்கள் பலர் அவற்றை எழுதி வைக்க ஆரம்பித்தனர். இத்தகைய வாய்மொழி இலக்கியங்களை என்றும் பாதுகாத்திட முயன்ற தமிழ்ப் புலவர்கள் பலர் கலம்பகம், பிள்ளைத்தமிழ், பரணி, உலா, தூது, சிந்து மற்றும் குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்களில் இடம்பெறச் செய்துவிட்டனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்நாட்டுப்புறப் பாடல்களை முதன் முதலில் தொகுத்

த்வர்கள் சார்லசு. இ. கோவார், பெர்சி மக்லீன் ஆகிய இருவருமே ஆவர். முன்னவர் தொகுத்த பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்புஒன்றுஉள்ளது. பின்னவர்தொகுப்பு "மலையருவி" என்றபெயரில்1956-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. நாட்டுப்புறப் பாடல் களை 30-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். அதில் நாட்டுப்புற பாடலை ஆய்வு செய்ததற்காகவே சுமார் 19 பேர் முனைவர் (டாக்டர்) பட்டங்களும் பெற் றுள்ளனர் (19). அவர்களில் ஒருவரும் நாட்டுப்புறப் பாடல்களைச் சிந்துப்பாடல் எனக் கூறவே இல்லை.

நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கு முழுமையாக இடம் பெற்ற முதல்இலக்கியம் சிலப்பதிகாரம் ஆகும். நாட்டுப்புறப் பாடல் பறறிய ஆய்வு 19-ஆம் நூற்றாண்டில் முதன் முதலில் தொடங்கியதாகும். நாட்டுபபுறப் பாடலானது நாட்டுக்கு நாடு, மொழிக்கு மொழி, வேறுபடுகிறது. நாட்டுப்புறப்பாடல் கள் சோவியத் நாட்டில் நிலச் செல்வர் களை எதிர்த்துப் போராட, புரட்சிக் குரலாகவும் விளஙகியிருக்கின்றன.

மேற்கண்ட செய்திகளிலிருந்து சிந்துப் பாடலும், நாட்டுப்பாடலும் ஒன்றலல என்பது தெளிவாகும். அவற்றினை ஒட்டு மொத்தமாகக கொண்டு கீழ்க்கண்ட முடிவிற்கு வரலாம்.

1. நாட்டுப்புறப் பாடல் என்பது எப் பொழுது உருவானது என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் சிந்துப் பாடல் அப்படி யன்று. அதன் காலத்தை எளிதாகக் கணக் கிடலாம்.

2. நாட்டுப்புறப்பாடல் என்பது எழுத் தறிவு சிறிதுமில்லாதவர்களால் பாடப் பட்ட தாகும். ஆனால் சிந்துப்பாடல் அப்படியன்று. சிந்தினைப் பாடியவர்கள் படிப்பறியாத பாமரரும் அல்லர்; சங்கமேறிப் புலமை காட்டிய வித்தகரும் அல்லர்.

3. நாட்டுப்புறப் பாடலுக்கென்று எந்த விதயாப்பும் இல்லை. அது இலக்கணத்திற்குக் கட்டுப்படாது. ஆனால் சிந்து அப்படியன்று. அதற்கு யாப்பு உண்டு என்று வீரசோழியம் விளக்குகிறது. புலவர் குழந்தையும் தெளிவு பட விளக்கியுள்ளார்.

4. நாட்டுப்புறப் பாடல்களை இதுவரை 30-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் ஆய்வு செய் திருக்கின்றனர். அவர்களின் ஒருவரும் நாட்டுப்புறப் பாடல்களை சிந்துப் பாடல் கள் எனக் கூறவில்லை.

5. சிந்துப் பாடலைப் பாடிய புலவர்கள் அதனை அச்சிட்டு, தாங்கள் எழுதிய பாடல் களை ஊர் ஊராகப் பாடிப், பரப்பி, சிந்து நூல்களை விற்றுள்ளனர். ஆனால் நாட்டுப் புறப் பாடல்களை யாரும் அப்படிச் செய்ய வில்லை.

6. நாட்டுப்புறப் பாடல் என்பது முன்னே யிருப்பவர்களுக்குக் கேட்க வேண்டும் என்று பின்னேயிருப்பவர்கள் பாடியதாகும். ஆனால சிந்துப் பாட்டினை அப்படி யாரும பாடிய தாகத் தெரியவில்லை.

7. சிந்து என்பது, கேட்போராகிய நாட்டுப்புற மக்களை மனத்தில் கொண்டு யாக்கப் பெற்றதாகும். ஆனால் நாட்டுப் புறப் பாடல்கள் பாமர மக்களால்சொல்லப் பட்டனவாகும்,

8. நாட்டுப்புறப்பாடல் என்பது மக்கள் தமது கவலையை மறக்கக் கும்பல் கும்ப லாகத்தம்விருப்பப்படிபாடுவதாகும். சிந்துப் பாடல்கள் கவிஞர்கள் இயற்றிப் பாடுவன வாகும்.

6 நாட்டுப்புறப்பாடல் என்பது கேட்டு மகிழப் பயன்படுவதாகும். சிந்துப்பாடல் என்பது படித்து மகிழப் பாடியதாகும்.

10. நாட்டுப்புறப்பாடல் என்பது வாய் மொழியாகப் பரவி வாழ்வதாகும். சிந்துப் பாடல் ஏட்டுவடிவாகப் பரவி வாழ்வதாகும்.

11. மேலும் நாட்டுப்புறப்பாடல் வகைகள் 50-ஐ முனைவர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் வகைப்படுத்தியுள்ளார்கள். சிந்து பாடல்களை 27 - ஆகப் பிரித்து அதற்கு இலக்கணம் கண்டிருக்கிறார் இந்நூற்றாண் டுத் தமிழறிஞர் புலவர் குழந்தை அவர்கள்.

தீர்ப்புகள்

நமதுஇந்திய அறமன்றங்கள், தமதுதீர்ப்பு களைஉண்மை அடிப்படையின்றி,வாதத்தின் அடிப்படையிலேயே வழங்கு கின்றன. மேற்கண்ட முடிவுகளின்படி உண்மை அடிப் படையிலும் வாத அடிப்படையிலும் பார்த் தாலும் கூட, நாட்டுப்புறப்பாடல்கள்என்பன வேறு, சிந்துப்பாடல்கள் என்பனவேறுஎன்றே தமிழறிஞர்கள் தீர்ப்பை வழங்குவார்கள்.

> திரு. பழ. முத்தப்பன் அவர்களும் ''நாட்டுப்புறப் பாடல்களை ஆய்வு செய் திடும் பெருமக்கள் சிந்துப் பாடல்களை யும் ஒதுக்கிவிடாமல் அவற்றையும் தொகுக்கவேண்டும் (20)''

எனத் தமிழர்கள் பால் வேண்டியிருப்பதும் நினைவு கூரத்தக்கதாகும்.

பின் இணைப்பு

1. பக். 258 - தொடையதிகாரம்-புலவர் குழந்தை, பாரிநிலையம், சென்னை - 600 001, முதற் பதிப்பு-1967
2. பக். 8 தொடையதிகாரம் - புலவர் குழந்தை, பாரிநிலையம், சென்னை-600 001, முதற்பதிப்பு-1967
3. பக். 1 இலக்கணத்தொகை - யாப்பு பாட்டியல். டாக்டர் ச. வே. சுப்பிர மணியம், தமிழ்க் கலைப்பதிப்பகம் சென்னை-20. முதற்பதிப்பு பிப்ரவரி 1978
4. வீரசோழியம் 127 1:2
5. பக். 99-101 பின் இணைப்புத்தொடர் எண் 3இல் உள்ளபடி.
6. பக். 99-தொடர் எண் 3இல் உள்ளபடி.
7. பக். 54 & 55 தொடர் எண் 1இல் உள்ள படி.
8. பக். 163, 172 தமிழ்இலக்கியக்கொள்கை -தொகுப்பு ச .வே. சு. சிந்து எனும் தலைப்பில் பழ. முத்தப்பன், உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடு.
9. பக். 172-தொடர்எண் 8இல் உள்ளபடி.
10. பக். 1 நாட்டுப்புறப் பாடலும் பண் பாடும் வே.அந்தோணிஜான், அழகரசன் சின்னமலை தங்கள் பதிப்பக வெளியீடு, சென்னை-15. முதற்பதிப்பு மே' 77.
11. பக். 11 தமிழக நாட்டுப்புறப்பாடல்கள் டாக்டர் சண்முகசுந்தரம், பூம்புகார் பிரசுரம், சென்னை-17. முதற் பதிப்பு அக்டோபர் 1978.
12. பக். 11 தொடர்எண் 11-12இல் உள்ள படி.
13. பக். 11இல் உள்ளபடி.
14. பக். 9 வன்னியராசன் கதை பதிப்பு, லாரன்ஸ் நாயகம், கிருஷ்ணா அச்சகம், நாகர்கோவில், முதற் பதிப்பு 1972.
15. பக். 10, 11 வாய்மொழி இலக்கியம் அ. மு. பரமசிவானந்தம், தமிழ்க்கலைப்

பதிப்பகம், சென்னை-30. முதற்பதிப்பு டிசம்பர் 64.

16. பக் 22-25 16இல் உள்ளபடி

17. பக். 14 - தமிழ் நாட்டுப்புற இயல்ஆய்வு தொகுப்பு, ச. வே. சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, செப்டம்பர்'79 சென்னை நகர் என்னும் தலைப்பில் டி அய்யாசாமி.

18. பக் 45 - சங்கத்தமிழும், பிற்காலத் தமிழும் எனும் நூலில் டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர்.

19. பக் 194 - நாட்டுப்புற இயல் ஆய்வுகள் எனும் நூலில் ஆறு, இராமநாதன் அணியகம் வெளியீடு, முதற்பதிப்பு 1979.

20 பக் 189-8 இல் உள்ளபடி.

யாழ்ப்பாணக் கரையோரப் பரதவர் தொழிற்கலைச் சொற்கள் - ஓர் அறிமுகம்

சண்முக. முருகானந்தம்

1

பரதவர் அல்லது மீனவர் சமூகம்பற்றிய ஆய்வு தற்சமயம் பெருவிருப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எந்தப் பழங்குடி மக்களிடமும் காணக்கிடக்கும் அரிய பல தகவல்கள் போன்றவை இவர்களிடமும் உறைந்துள்ளன. கலையியலார், மொழியியலார், சமூகவியலார், மானுடவியலார் ஆகிய பலதுறை வல்லுநர்கள் இச்சமூகத்தை ஆய்ந்தாய்ந்து பல தகவல்களை வெளிப்படுத்திய வண்ணம் உள்ளனர். பாதவ சமூகத்தினர் வழங்கும் நாட்டார்பாடல்கள்,[1] கலைச்சொற்கள்[2] கருத்த கவனிப்பைப் பெற்றுள்ளன. அவர் தம் சமூகப்பழக்க வழக்கங்கள்[3] ஆய்வுக்குட்படுக்கப்பட்டுள்ளன தமிழ்நாட்டுஆய்வாளர்களைப் போலவே ஈழத்து ஆய்வார்களும் கலைஆர்வலர்களும்[4] இத்துறையில் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றி வருகின்றனர். மொழியியல் ஆய்வாளர்[5] தமிழ் நாட்டுப் பரதவர் மொழியை ஆய்தல் போலவே ஈழத்துத் தமிழ் ஆய்வாளர்களும் ஈழத்துத் தமிழ்ப்பரதவர் மொழியை ஆய்தலும் கூடும். இந்த இருவழிப்பட்ட ஆராய்ச்சிப் (பரிவர்த்தனையை) பரிமாற்றங்களை 'யாழ்ப்பாணக் கரையோரப்பரதவர் தொழிற்கலைச் சொற்கள்-ஓர்அறிமுகம்' எனும் தலைப்பிடப்பட்ட இத்தொகுப்பு 'எளிதாக்கித் தொடங்கி வைக்கிறது. இந்தொகுப்பு யாழ்ப்பாணக் கரையோரக் குருநகர்ப்பகுதிக் கலை ஆர்வலர் மு.புட்பராசனின் 'அம்பா' எனும் நூலை ஆதாரமாகக் கொண்டது கட்டுரைவடிவில் அவரால் தரப்பட்ட செய்திகள் திரட்டப்பட்டுத் தொழிற்கலைச் சொற்கள் எனும் அகராதி வடிவில் இத்தொகுப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கரையோர மீனவர் பேசுங் கிளைமொழியில் சொல்லியல் ஆய்வு (*Lexical Study*) நடத்த முனைபவர்க்கு நல்ல வாய்ப்புள்ளது என்பர்.[6] சொல்லியல் ஆய்வு நடத்துவதன் பயனாக அப்பழங்குடிமக்களின் நம்பிக்கைகள்,பழக்கவழக்கங்கள், சடங்குகள் (மரபுகள்), தொழில் நுணுக்கங்கள் போன்ற (பண்பாட்டுக்)கூறுகளை ஆராய்ந்து வெளிக் கொண்டு வருவதும், அப்பண்பாட்டுக் கூறுகளோடு தொடர்புடைய மொழியியற் கூறுகளையும் சொற்றொகுதியையும் ஆராய்வதும் இயலும். (பண்பாட்டு) மானுடவியலாரும் (*Cultural Anthropologists*), மானுடவியல் மொழியியலாளரும் (*Anthropological Linguists*) இதுபோன்ற பணிகளில் ஈடுபடுதல் நலம் பயக்கும்.

யாழ்ப்பாணக்கரையில் அமைந்துள்ள குருநகர்க்கரையூர் அல்லது குருவூர் மீனவர் தமது வாழ்வில் வழங்கும் தொழிற்கலைச் சொற்கள் ஈண்டு அகரவரிசையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. பேசாலை, வங்காலை பள்ளிமுனை, கொக்குளாவா பகுதி மீனவர் சொற்களும் இவற்றுடன் பெரும்பாலும் ஒத்தவை எனலாம். ஆயினும் இவண் இடம் பெற்றுள்ள சொற்கள் குருநகர்ப் பகுதிப் பரதவரின் சொற்களே என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாணக் கடற்கரைப்பரதவர் தொழிற் கலைச்சொற்கள் எனும் தலைப்பின் கீழ் கள

ஆய்வு செய்யப்புகின், பல்லாயிரக்கணக்கான சொற்கள் குவியும். அவ்வாறு தொகுக்கும் சொற்களைக் கொண்டே அம்மக்களைப் பற்றிய ஒரு நிறைவான அறிவைப் பெற முடியும். இங்குச்செய்யப்பட்டிருப்பதுமுடிந்த முடிவான ஆய்வன்று: ஓர் அறிமுகப்படுத்தல் மட்டுமேயாகும். மீனவர் தொழில் மீன் பிடித்தல் மட்டுமன்று: சங்கு, முத்துக்குளித்தல், உப்பு விளைவித்தல், சுண்ணாம்பு சுடுதல்[7] என்பனவுமாகும். ஒவ்வொரு தொழிலும் பல நூற்றுக்கணக்கான தொழிற் கலைச்சொற்களைக் கொண்டிருத்தல் கூடும். அவ்வளவும் திரட்டப்படுங்கால் அது ஒரு கலைக்களஞ்சியமாகவும் உருவாகலாம். இங்கு அகராதி வடிவில் அறிமுகப்படுத்தப்பட்ட சொற்றொகுதியுள் சங்கு, முத்துக்குளித்தல் பற்றிய சொற்கள் அறவேயில்லை. இக்காரணம்பற்றி, யாழ்ப்பகுதியில் இத்தொழில்கள் இல்லை எனும் தவறான முடிவுக்கு வருதல் கூடாது.

இந்தியப் பெருநாட்டில் தென்தமிழ்ப்பகுதியில் நடைபெற்று வந்த சங்குத் தொழிலுக்கு இணையாக இலங்கையிலும் இத்தொழில் நடைபெற்று வந்தமை தகுந்த வரலாற்றுச் சான்றுகள் மூலமாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது 8 பாண்டியர் காலம் தொட்டு இத்தொழில் மிகவும் சிறப்புற்றிருந்தமை 9 பலரும் அறிந்ததே. போர்த்துக்கீசியர், பிரஞ்சுக்காரர் ஆங்கிலேயர் போன்றாரும் இத்தொழிலுக்கு மிகுந்த அரவணைப்புக் கொடுத்து வளர்த்தமையும் இங்கு கவனிக்கத்தக்கது 10 இத்தகைய பின்னணியில், பெருவளர்ச்சி பெற்ற தொழில்களைச் செய்து வரும் பெரும்பான்மையான பழங்குடி மக்களாகிய பரதவர்தம் வாழ்வில் பயின்று வழங்கும் தொழிற்கலைச் சொற்களும் பல்லாயிரக்கணக்கானவையாக இருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

முன்னர் சொன்னபடி, பின்வரும் சொற்கள் இம்மக்களின் பண்பாட்டைப் புலப்படுத்துகின்றன. கரைவலை, சம்பளக்கரை வலை ஆகியன தொழில் நுணுக்கத்திற்கும்; பாதங்கழுவியதண்ணி, இழுத்துவைத்தல் ஆகியன சடங்கு மரபிற்கும்; பாலைத்தீவில் அடியழித்து வருதல் நம்பிக்கைக்கும் சான்றுகளாகலாம். பரதவர் பற்றிய ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டோர்க்கும், ஈழத்தமிழ்க் கிளைமொழியியல் பற்றிய ஒப்பியல் ஆய்வில் விருப்பம் மிகுந்தோர்க்கும் ஓர் அடி எடுத்துக் கொடுக்கு முகத்தான் இங்குஇடம்பெற்றுள்ள சொற்களும் இன்ன பிறவும் மேலும் நுணுகி ஆய்தற்குரியன. இங்கு அகர வரிசையிலே அமைந்துள்ள அத்துணைச் சொற்களும் யாழ்ப்பாணப் பரதவர் சமூக எழுத்தாளர் மு. புட்பராசனின் நூலை அடித்தளமாகக் கொண்டவை என்பது நினைவில் இருத்திக் கொள்ள வேண்டிய இன்றியமையாக் கருத்தாகும்.

3

தொழிற்கலைச் சொற்கள்

அணியம் ... பெ., படகின் அல்லது மரக்கலத்தின் முன்பக்கம், (த. மொ. அ). கடற் கலத்தின் முன் பக்கத்தில் குறுக்கப் பாடாக அமைந்த பலகைக்குத் தென்தமிழ் நாட்டில் 'அணியத்துவாரி' என்பது பெயர்.

அம்பா ... பெ., கடல் தொழிலாளர் அல்லது பரதவர் பாடும் பாடல். அம்பி — தோணி. தோணிப் பாடல் — அம்பிப் பாடல். இதுவே அம்பா எனத் திரிந்தது(புட்பராசன்). சிலர் அம்பாள் (கடலன்னை. கன்னிமரி) பாடல் என்பர் (நா வானமாமலை) அம் — நீர். அம்புவி—கடல். அம்போதி—கடல். அம்—கப்பல். அம்பரம்

—கடல். அம்பி—மரக்கலம். ஆக, 'அம்' எனும் வேர்ச் சொல்லானது, கடல், கடல் நீர், கடற்கலம்ஆகியவற்றைக் குறிக்கும் எனலாம். அம் + பா = கடற் பாடல், மரக் கலப்பாடல் என உருவாகி யிருக்கலாம்.

அலைகடல் . பெ., கரையொட்டிய கடற் பகுதி. அலைகள் மிகுந்த கடற்கரைப் பரப்பு. கரை யோரம் அலை மிகுந்து இருத் தல் நினைக்கத்தக்கது.

அலைவாய் ... பெ., கடல்அலை மோதும் கரைப்பகுதி அலைவாய்க் கரை—கடற்கரை.

அல்லில்லா ... அசை, இராகம், ஒலிக்குறிப்பு. அம்பாப் பாடலில், ஓசை இசையின்பத்திற்காக—இடம் பெறும் பொருளற்ற சொல். எடுத்துக்காட்டு—

"காப்புநல்ல அல்லில்லா
கலகலன்ன
கைவளையல் அல்லில்லா
சோதிமின்ன
செப்பிலையோ அல்லில்லா
சிலையெழுதி
சிலைதனிலே அல்லில்லா
வடிவெழுதி
எழுதினவன் அல்லில்லா
கண்கெடுவான்
எழுத்தாணி அல்லில்லா
கூர்முறிவான்"
— நாட்டார்பாடல்.

அளி ... பெ., ஒரு வலைக்கண்.

அறக்கொட்டி வலை ... பெ., வலைவகை. நைலோன் (நைலான்) வலை போன்ற புதுமை வலை.

ஆரியக் கட்டா ... பெ., மீன் வகை. வலைக்குள் அகப்பட்டாலும் பிடிபடாமல் வெளியேறிவிடும் தந்திரம் மிகுந்த மீன்.

ஆழ்வான் ... பெ., யாழ்க்குடாப்பகுதியில் வலை வளைப்பதற்கு என்றே சில குறிக்கப்பட்ட 'பாடுகள்' உள்ளன. இவ்விடங்களில் கரை மிகவும் ஆழங் குறைந்ததாக இருக்கும். இப்படிப்பட்ட இடங்களில் வலை வளைப்பது எளிதாக இருக்கும். இப்பாடு களில் ஒன்றுதான் 'ஆழ்வான்'

இசங்கம் பார் ... பெ., 'ஆழ்வான்' போன்ற ஆழங்குறைந்தஒரு கடற்பாடு

இலந்தயடி . பெ., ஓர் இடத்தின் பெயர். பாலத்தீவு போல் இதுவும் ஓர்இடம்.

இளம் பாரை ... பெ., மீன்வகை.

இறங்கு பொழுது ... பெ., நண்பகல் பன்னிரண்டு மணிக்குப் பிற்பட்ட நேரம்.

இறா ... பெ, மீன்வகை. இருப்பைப் பூவைப்போன்ற மெல்லிய தலை உடைய மீன். (விலங் கியலார் இறாவை நண்டினம் என்பர்)

ஈரவலை ... பெ., மீன்பாட்டிற்காகக் கரையிலிருந்து ஆழ்கடலை நோக்கி ஓடியபடகு, மீண்டும் கரையை நாடி பலவகைப் பட்ட வலைகளை இளக்கிக் கொண்டே வரும். இத்தகைய வலைகளுள் ஒன்றே ஈரவலை

என்பதாகும். 15 அளியும் 4½ அடி நீளமும் கொண்டது இது இதுவே முதலில் இறங்கும் வலையாகும்.

ஈலக் கண்ணி ... பெ., ஈரவலைக்குப் பிறகு இறக்கும் வலை ஈலக்கண்ணி என்பது. இது 21 அளியும் 3 அடி நீளமும் கொண்டது.

உருவு ... வி., அவிழ் 'அந்த மடியை உருவு' என்னுமிடத்து, இது 'அவிழ்' எனும் பொருளது.

உலமடி ... பெ., 'உலைமுடி' என்பதன் திரிபு.

ஏத்தி வளைத்தல் ... தொ. பெ., வலையை ஏத்தி வளைத்தல்—ஏற்றி வளைத்தல். எடுத்துக்காட்டு:
ஏத்திவளையு மண்ணே
இலந்தயடிப் பாடாக
பாத்து வளையு மண்ணே
பாலத்தீவுப் பாடாக''—
நாட்டார் பாடல்.

ஏத்து ஏத்து ... பெ , ஒரு வரிப்பாடல் (எ-டு)
''ஏத்தேத்து லைலா கரவலய
ஏசுநாதர் லைலா படிதருவார்
பார்த்துத்தான் லைலா
வளையுமண்ணே
பாலதீவு லைலா பாடாகத்
தான்—நாட்டார் பாடல்.
'ஏத்தேத்து' என ஒருவர் பாட, தோணியில் உள்ள அனைவரும் லைலா என ஒருங்குபாட, மீண்டும்முதலில் பாடியவர், கரவலய, என்று பாடுவார். இப்படி இந்தப் பாடல் பாடப்படும்.

ஏலேலப் பாட்டு ... பெ., மீனவர் பாட்டுக்கு ஏலேலப்பாட்டு என்பது மறு பெயர்.

ஏலேலோ ... அசை, இராகம், ஒலிக்குறிப்பு. ஏலேலசிங்கனை நினைவுறுத்துவது என்றும் சொல்வர். அல்லில்லா, லைலா, றோசா போன்ற இசையியைபுச் சொல். பாடல் இனிமைக்காக வருவது.

ஏறு பொழுது ... பெ., காலைக் கதிரவன் தோன்றி நண்பகல் பன்னிரண்டு மணி வரையுள்ள நேரம்.

ஐயங்குடா ... பெ., ஆழ்வான், இசங்கம் பார் போன்ற இடம். மீன் பாட்டிற்கு வலை வளைக்கத் தோதான பாடு.

ஒடியல் புட்டு ... பெ., உணவுவகை.

ஒழுக்கை ... பெ., மீன்பாட்டிற்கு வலை வளைக்க வாகான பாடு. ஐயங்குடா போன்ற பகுதி.

ஓரா ... பெ. , மீன்வகை.

ஓலைவலை .... பெ., நகரை என்று சொல்லப்படும் ஒரு வகைச் சிறிய மீன்கள் கரைவலைக்குத் தொகையாகப் பிடிபடாதபோதிலும் பனை ஓலைகளை அடுக்கு அடுக்காக வலையுடன் இணைத்து வலையிழுக்கும் போது, இவ்வோலைகள் கடலினுள்உண்டாக்கும் ஓசையால் இந்நகரை மீன்கள் பயந்து 'மடி' யைத் தேடி

ஓடிவிடும். இதனால், இம் மீன்கள் ஓலைவலைக்கு அதிக மாகப் பிடிபடும்.

ஓவலை ... பெ., குடியிருப்பு. வீடு.

கச்சத்தீவு ... பெ., ஒரு தீவு. இது முன்னர் இந்திய அரசுக்கு உரிமையாக இருந்தது. இப்போது ஓர் ஒப்புடன்பாட்டு அடிப்படை யில் இலங்கைக்குத் தரப் பட்டு, இலங்கை அரசுக்கு உரிமையாக உள்ளது. யாழ்க் குடாப் பரதவர் இத்தீவுக்கு வழிபாட்டுக் காகவும் மீன் பாட்டுக்காகவும் வருவர், பரதவப்பெண்கள் இத்தீவில் உள்ள கோவிலுக்கு வழிபாட் டின் பொருட்டு வந்து போ கின்றனர்.

கடலலை ... பெ., கடலில் உண்டாகும் அலை.

கடையர் ... பெ., சாதியமைப்பு அடிப் படையில் மிகவும் கீழ்நிலை யில் இருந்தவர். பரதவர் குலத்தைச் சேர்ந்த ஓர் உட் பிரிவினர் (அ. சி). சுண்ணாம் புக் கிளிஞ்சல் சுடுதல், முத்துக் குளித்தல் என்பன இவர் தம் தொழில். (அ. சி). 1624 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பகுதிக் கடையரும் பரதவரும் இந்து சமயத்தைத் துறந்து கத்தோ லிக்கராக மாறி, சமூகப் பண்பாட்டு மாற்றங்களுக்கு உட்பட்டனர்.

கடையால் பெ., படகின் பின்புறம். அணியத்துக்கு எதிர்ப்பக்கம். தென்தமிழ்நாட்டில் இதனை 'அமரம்' என்பர்.

கந்தா ... பெ., ஒரு குறிப்பிட்ட அளவு மீன். அளவுப்பெயர். எ-டு: ஓலைக்குலைலா ஒதுங்குமடா ஒருகந்தா லைலா நகரயடா- நாட்டார் பாடல்.

கப்பல் பாட்டு ... பெ., அம்பா, தோணிப்பாட்டு, ஏலேலப்பாட்டு என்பவை போல, கப்பல்பாட்டு என்ப தும் அம்பாவைக் குறிக்கும்.

கம்பாங் கயிறு ... பெ., வலை வளைக்கும் பொழுது, குறிப்பிட்டவொரு பாட்டில் பல தொழிலாளர் களைக் கரையில் இறக்கி விட்டு, ஆழ்கடலை நோக்கிக் கயிற்றைப் போட்டுக் கொண்டு போவார்கள். இக் கயிறு 'கம்பாங் கயிறு' எனப் படும். இதன் இறுதியில் ஈர வலை முடியப் பட்டிருக்கும்.

கம்பான் ... பெ., கம்பாங்கயிறு, கம்பான் இரண்டும் ஒரு பொருள் குறிப்பன. கடலில் முதலில் இறக்கப்படும் கயிறு. இதன் பின்னர் இறக்கப்படுவது ஈர வலை. ஒரு கம்பான் கயிற் றின் நீளம் சுமார் 100 அடி.

கரைவலை ... பெ., வலைவகை. கரைவலை கள் மூலம் மீன்பிடிப்பது மிக வும் கடினம். இன்று பொறி களின் உதவியுடன் கரை வலைத்தொழில் எளிதாக்கப் பட்டுள்ளது. முன்னர் கரை வலைகள்மூலம் மீன்பிடி த்தொழிலைச் செய்தோர் உடல்வலி மிக்கோராக இருந் தனர். இதனாலேயேபரதவர் 'வன்கைப்பரதவர்' (நற்றி ணை) என்றழைக்கப்பட்ட

னர். கரைவலை வலிப்பது ஒரு வித்தையாகவே கருதப் படுகிறது. எ-டு:

''கரவலையும் அல்லில்லா
வேலைதான்ரா
கற்றதொரு அல்லில்லா
வித்தைதான்ரா''.
— நாட்டார்பாடல்

2 கிலோமீட்டர் நீளமும் 200 மீட்டர் அகலமும் 5 மீட்டர் உயரமும் உடைய கரை வலைகள் இவர் தம் தொழிலிற் பயன்படுகின்றன.

கரைவலைத் தொழில் ... பெ., கரைவலை இழுக்கும் தொழில். இத்தொழிலை யாரும் எடுத்த எடுப்பிலே கற்றுக் கொள்ள முடியாது. இதனை முற்றாகக் கற்றுக் கொள்ளப் பல ஆண்டுகளாகும். துவக்க வேலையான கம்பான்கயிறு வளைப்பதிலிருந்து, அடுக்காகக் கால் போட்டு வலையிழுப்பது பயின்றுமேலாவிற்குப்போகும் இறுதிவரைக்குமுள்ளதொழில் நுட்பங்களைக் கற்றுக் கொள்ளப் பல ஆண்டுகள் செல்லும். அன்றியும் இவற்றை எல்லோருமே கற்றுக் கொள்ள முடியாது. கரைவலை வளைக்கும் பொழுது, கடலுள் இறக்கப் படும் வலைகளும் அவ்வவற்றின் அளவுகளும் அளிகளுமே முக்கியமாகும். முதலில் இறக்கும் வலைகளுக்கு 'ஈர வலை' என்றுபெயர். இவற்றின் அளிகள் ஏழு பிணையலும் ஒற்றையுமாகும். இவற்றின் நீளம் மூன்று முழமாகும். இதனையடுத்து 'ஈலக் கண்ணி' வலைகள் இறக்கப்படும். இவற்றின் அளிகள் பத்துப்பிணையலும் ஒற்றையுமாகும். இவற்றின் நீளம் இரண்டு முழமாகும். இதற்கு அடுத்து இறக்கப்படுவது 'நடுவணி'; இது பதினைந்து பிணையலும் ஒற்றையுமாகும். இதன் நீளம் ஒரு முழம். இதற்கு அடுத்து இறக்கப்படும் 'மாலக்கண்ணி' இருபத்தெட்டுப் பிணையலாகும். இதன் நீளம் முக்கால் முழம். இறுதி வலையாகிய 'மாரி வலை' முப்பத்திரண்டு பிணையலாகும். இதன் நீளம் ஒரு சாண். இவற்றிலிருந்து மடியை நெருங்கி இருக்கும் வலைகளின் நீளமும் அளவும் குறைந்தும், அளிகளின் எண்ணிக்கை கூடியும் இருப்பதைக் கவனிக்கலாம். இதனால் 'மடி'யை நெருங்கியிருக்கும் இவ்வலைகள் நெருக்கமாயிருந்து, வலைக்குள் அகப்பட்ட மீன்களை வெளியிற் செல்ல விடாமல் பாதுகாக்கின்றன. இன்னும், மீன் பிடிப்பதற்கு இன்றியமையாத 'மடி'யின் 'மடவலை'யிலும்'மோவலை, யிலும்'பெருங்கைக்கயிற்றைப் 'பெருக்கி' யிருப்பார்கள். இப் பெருங் கைக்கயிற்றை மையமாக வைத்து வலதுபுறமும் இடதுபுறமுமாக ஒன்றரை முழமும் முக்கால் சாணுமாக அளந்து நூலால் வலிந்து பெருக்கியிருப்பார்கள். இவற்றின்மொத்த நீளம்மூன்றுமுழமும் ஒன்றரைச் சாணும் ஆகும். இந்தஅளவின் மத்தியிலேயே' பெருங் கைக்கயிறு இருக்கும். இந்தஅளவுகள் சற்

றுக்கூடியோகுறைந்தோஇருந்தால், மீன்களை எளிதாகப் பிடிக்க முடியாது. இவ்வளவு நுணுக்கம் இருப்பதாலேயே இவர்கள் 'நுண்வலைப் பரதவர்' (குறுந்தொகை) என்று அழைக்கப் படுகின்றனர். 'கரைவலைத் தொழிலுக்குப் போனால் உடம்பெல்லாம் வலிக்கும்; காய்ச்சல் வரும், என்னும் அளவுக்கு மிகுந்த கடினமானது இது. எடுத்துக் காட்டு:

''கந்தாவாடா லைலா
கரவலைக்கு
காய்ச்சல் வரும் லைலா
நான்மாட்டேன்
நோகுதடா லைலா
சந்துக்குள்ளே
நோக்கா டெல்லாம் லைலா
பொந்துக்குள்ளே
காச்சல் நல்ல அல்லில்லா
உடன்தடுமல்
கண்குத்து அல்லில்லா
நாரிவலி
இடுப்பிலே அல்லில்லா
கவுத்தைமாட்டி
இழுக்கிறதும் அல்லில்லா
வேலைதான்ரா.
—நாட்டார்பாடல்'

கலக்
கெறிதல் — பெ., மீன்கள் பெருந்தொகையாகச் சேர்ந்து, வலையின் நெருக்கங் காரணமாக அங்குமிங்கும் ஓடும் போது உண்டாகின்றகடற்சுழிவால், கடலினடியிலே காணப்படும் மணல் கடல் மேல் எழும். இதனையே 'கலக்கெறிதல்' என்பர்.

கல்பாறை — பெ., கடலினடியில் அமைந்திருக்கும் கற்பாறை. இதனுடன் கடல்நீர்மோதுதலால் வெண்ணுரை உண்டாகும்.

கழி — பெ, கடல்நீர் நிலை.

குடாப்
புறவா — பெ., வலை வளைப்பதற்கென்று குறிக்கப்பட்ட பாடுகள் சிலவற்றுள், இதுவும் ஒன்று. ஆழ்வான், ஒழுக்கை போன்றது இது.

குறுங்கரை — பெ., இதுவும் அது.

கூறப்பாய் — பெ., கூரைப்பாய், மழைக்குப் பாதுகாப்பாகப் போட்டுக் கொள்ளும் ஓலைப்பாய். இரு கூறாகப் பிரிந்திருக்கும் பாய் என்றும் கொள்ளலாம்.

கொடுவா — பெ., மீன்வகை. மீன்பிடிக்கும் பொழுது சில மீன்கள் மடியைப் பிய்ப்பது உண்டு. அவற்றில் இவ்வகை மீனும் அடங்கும். எ—டு:

''வலைய பிக்குது கொடுவா
வயிறு பெருத்தது பேத்தை''
— நாட்டார்பாடல்.

கொண்டல் — பெ., வடகிழக்குத்திசை. இத்திசையிலிருந்துவீசும்காற்றையும் இப்பெயரிட்டே அழைப்பர்.

''கொண்டலிலே லைலா
மழை கறுக்க
கொண்டுவாடி லைலா
கூறப்பாயை
கொண்டலிலே லைலா
மழைகறுக்க
குமரிமுலை லைலா தள
தளக்க''
— நாட்டார் பாடல்

சம்பளக் கரைவலை ... பெ., கரைவலைகளில் சம்பளக் கரைவலை என்றொரு கரைவலையும் உண்டு. இதற்கும்மற்றையகரைவலைகளுக்கும் தொழில் முறையில் எவ்வித வேறுபாடும் இல்லை. ஆனால், பங்குப்பணங்களைப் பிரிப்பதில் வேறுபாடு உண்டு. இச்சம்பளக் கரைவலையில் எவ்வளவுதான் அதிகமான வருவாய் வந்தாலும், அல்லது குறைவான வருமானம் வந்தாலும், ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட சம்பளம் கொடுக்கப்படும். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என்பது அவரவர் தொழில் திறமைகளைப் பொறுத்து, தொழில் உரிமையாளராற் குறிக்கப்படும்.இத்தொழில் முன்னர் இருந்த அளவு இப்போது இல்லை; குறைந்து வருகிறது. 'கொக்குளாவா' போன்ற பகுதிகளில் மட்டும் இருப்பதாகத் தெரிகிறது. இத்தொழில் செய்பவர்களுக்கு,தொழிலின் உரிமையாளரே தேநீர், உணவு போன்றவற்றிற்குப் பொறுப்பானவர்.

சம்மாட்டி ... பெ., கடற்கலத் தலைவர்.

சிவப்புக் கட்டுதல் ... தொ. பெ., மீன்கள் பெருந்தொகைக் கூட்டமாக நின்றால், கடலின் மேற்பரப்பில் ஒருவிதப் பழுப்புநிறம் பரவலாகத் தோன்றும், இதையே சிவப்புக்கட்டுதல் எனக் கூறுவர்.

சிறுதீவு ... பெ., ஒரு தீவு. மீனவர்கள் மீன்பாட்டுக்கும் கோயில் வழிபாட்டுக்கும் கடல் வழியாகச் சென்று வருகின்ற இடம்,

சுற்று ... பெ,, 'சுத்து' எனப்பேச்சில் வழங்கப்படும் சொல். ஒரு சுற்று என்பது குறிக்கப்பட்ட நீள அகலங்களைக் கொண்ட வலை. மீன்பிடிக்கப் பயன்படும் மடியை ஒவ்வொரு சுற்றாகப் 'பிதைந்து' மடியாக்குவர்.

'நான் கேட்ட லைலா
மண்டாட்டம்
நாலு சுத்து லைலா
மீன்படவே,
—நாட்டார்பாடல்.

சுற்றுமால் ... பெ., சுற்று வலை, சுத்து மால். மால்-இணைப்பு.தென் தமிழ்நாட்டில் 'வலைமால்' என்பர். பல வலைகளின் இணைப்பு இங்ஙனம் அழைக்கபடும்.

சொன்னவன் பாடு .. பெ,, ஒல்வொரு மீனவருக்கும் தாமே அதிக உழைப்பை -ஊதியத்தை-பெறவேண்டும் என்ற ஆவல் நிரம்ப இருக்கும். இப்படியாக ஒரு பாடு வளைக்க வேண்டுமாயின் ஒருவர் ஒரு குறிப்பிட்ட 'பாட்டின்' பெயரைச் சொல்லுவார். அப்பாட்டை அத்தொழிலாளருட் பெரும் பான்மையினர் ஒப்புக்கொண்டால் அப்பாட்டை வளைப்பார்கள். அப்பாடே, 'சொன்னவன் பாடு' எனக் குறிக்கப்பெறும்.

சோதி

வெள்ளி... பெ., ஒளி மிகுந்த வெள்ளியை (நட்சத்திரம்,) குறிக்கும்

ஞான

சௌந்தரி — அசை அல்லது ஓசைக்குறிப்பு. பரதவரின் அம்பாப் பாட்டில் 'அல்லில்லா, லைலா,' 'றோசா' போல, 'ஞான சௌந்தரி' எனும் அசைத் தொடரும் ஓசையின்பத்திற் காக இடையிடையே வரும். ஞானசௌந்தரியின் கையை வெட்டிக் காட்டில் விட்டதாக ஒரு கதை உண்டு அதனாலேதான் இவர் தம் பாடல்களின் இறுதி அடியில் 'கைஎங்கே 'ஞானசௌந்தரி' எனும் தொடர் இடம் பெறுகிறது எடுத்துக் காட்டு—

''ஏலம்மா ஏலேதண்டு
கைஎங்கே ஞானசௌந்தரி
ஓவலம்மா ஏலேதண்டு
கைஎங்கே ஞானசௌந்தரி
வருகுதடா கப்பலொண்டு
கைஎங்கே ஞானசௌந்தரி
வாழக்காய் பாரமேத்தி
கைஎங்கே ஞானசௌந்தரி
ஐயோமச்சான் கையைவிடு
கைஎங்கே ஞானசௌந்தரி
ஆச்சிகண்டா அடிக்கப்போறு
கைஎங்கே ஞானசௌந்தரி''
-நாட்டார் பாடல்

இப்பாடலில் 'கை எங்கே ஞானசௌந்தரி' எனும் தொடருக்குப் பொருள் இல்லை என்பது எளிதில் விளங்குதல் காணலாம்.

தங்குகடல் ... பெ., மீன்பாடு மிகக்குறைவாய் இருக்கும்போது, நடுக்கடலுக்கு அல்லது ஆழ்கடலுக்குச் சென்று இரவு தங்கி, மறுநாள்விடியலில் மீன்பிடிப்புடன் திரும்புவர். இங்ஙனம் இரவு தங்கிய நடுக்கடலையே தங்கு கடல் எனக்குறிப்பர்.

தண்டு

காரன் ... பெ., தண்டு-துடுப்பு, கோல். கடற்கலம் இயக்க உதவும் கருவி.

'தண்டைவலி
தடியை வலி
தண்டுகாரன்
மகளை வளை''—நாட்டார் பாடல்

தலைவலை ... பெ., வலையின் ஓர் உறுப்பு வலை இழுக்கும்போது தலைவலை வந்தவுடன், மீன்கள் வலைக்குள் வருகின்றனவா எனப்பார்க்க, மடியைத்தேடி மண்டாடி நீந்திப்போவார். மடிக்குமுந்தியது தலைவலை.

தாளையுப்

பாடு ... பெ., ஆழ்வான் போன்றதொரு பாடு

தோணி ... பெ., கடற்கலம்.

தோணிப்

பாட்டு ... பெ., அம்பாப்பாட்டு, கப்பல் பாட்டு, ஏலேலப் பாட்டு என்பவைகளின் மறுபெயர்.

நகரை ... பெ., மீன்வகை. சிறுமீன். ஓலைவலையில் அகப்படுவது' ஓசைக்கு வெருண்டு வலைக்குள் மிகுதியாக மாட்டிக் கொள்ளும் இயல்பினது.

''ஓலைக்கு லைலா ஒதுங்கு மடா
ஒருகந்தா லைலா நகரயடா''
—நாட்டார்பாடல்

நடுவணி ... பெ.' வலைவகை. 31 அடியும் 1½ அடி நீளமும் கொண்டது. பார்க்க—கரைவலை.

நாச்சிக் குடா ... பெ., பள்ளிக்குடா போல் மீன்பிடிப்பதற்கரிய ஒரு பாடு 'நாச்சிகுடா லைலா நல்ல கரை
காய்ச்சல் வந்தா லைலா
காக்கா கொத்தும்,
—நாட்டார்பாடல்,

நாரிவலி ... பெ., இடுப்புவலி. நாரி-இடை (த.மொ,அ) மீனவர் வலை இழுக்கும் போது வலைக் கயிற்றை இடுப்பில் கட்டி இழுப்பதால் உண்டாகும் வலி.

நீர்வகை .... பெ.. கடல்தொழில் நுணுக்கத்தில் 'நீர்வகை' மிக முச்கியமானது. நீரின் நிறம், அளவு, ஓட்டம், இருப்பு போன்றவற்றை நுணுகிக் கவனித்தே அவ்விடத்தில் படும் மீன், படாத மீன், மீன் வகை, அளவு ஆகியவற்றை அனுமானிப்பர். நீண்ட தொழில்அனுபவம் வாய்ந்தவர்களாலேதான் நீர்வகை நுணுக்கத்தைக் கண்டறிய முடியும்.

நைலான் வலை ... பெ., வலைவகை. நைலான் எனும் செயற்கை இழையால் உண்டாக்கப் பட்ட வலை.

படகு இழுத்து வைத்தல் ... தொ.பெ., மீன்பிடி தொழிலில் தொடர்ந்து அதிகநாள் உழைப்புகிடைக்காவிட்டால் தொழில் சரியாக இல்லையெனக் கண்டு, படகைக் கட்டுந் துறைக்குக் கொண்டு வந்து, கடற்கரை மணலில் ஏற்றி வைப்பர். இதற்கு 'இழுத்து வைத்தல்' என்பது பெயர். பின்பு சில வழிபாடுகள், சடங்குகள் செய்த பின்னர். மீண்டும் தொழில் செய்யப் படகைக் கடலில் இறக்குவர்.

படகு கெழிதல் ... தொ. பெ., பாய் இழுக்கும் போது, பாய்மேற்படும் காற்றின் அழுத்தத்தால் படகு கெழிதல். இவ்வாறான கெழிவிற்கு எதிராகவும் பாய்மரத்திற்குப் பொறுப்பாகவும் கயிற்றைப் பலமாக இறுக்கிக் கட்டுவர். கவனம் இல்லையெனில் பாய்மரம் சரிந்து கடலில் மூழ்கநேரிடும்.

பரதவர் ... பெ., மீனவர். கடல்தொழில் மக்கள். மீன்பிடித்தல், சங்கு முத்துக்குளித்தல். உப்பு விளைவித்தல்எனும் தொழில்களைச் செய்து வாழ்வோர். நாகர் இனத்தவர். நெய்தல் நில மக்கள்.

பருமரக் கோல் .... பெ., பாய்மரத்துடன் பாயைப் பிணைத்திருக்கும் பாரியமரக்கோல். பருமக் கோல் என்றும் கூறுவர்.

பருமலுப் பாய் ... பெ., பருமலுப்பாய் என்பது பருமரக்கோல் என்று சொல்லப்படும் பாரியமரத்துடன்

விரித்து இப்பாய் கட்டப்பட்டிருப்பதால் இதற்குப் பருமரப்பாய் என்று பெயர் வந்தது. பருமை + மரம் + பாய் = பருமரப்பாய். இது சிதைந்து 'பருமலுப்பாய்' ஆகியது.

பழங்கயிறு — பெ., மீனவர் வலை இழுக்கும் போது இடுப்பிலே சுற்றிக் கட்டிக் கொண்டு வரிந்து இழுப்பர். இடுப்பில் கட்டப்பட்டிருக்கும் கயிறு பல பழங்கயிற்று இழைமடிப்பால் ஆனது. இதனால் அது பழங்கயிறுஎன்றழைக்கப்படுகிறது.

பள்ளிக்குடா — பெ., ஆழம் குறைந்த கடற்பகுதி வலை இழுக்கத் தோதான இடம். இடுப்பளவு நீர்நிற்குமாறு ஆழம் அமைந்திருப்பதால் வலையை வலிந்தும் சாய்ந்தும் இழுக்கலாம். அந்த அளவுக்கு வாகானமீன் பிடி இடம்.

பாடு — பெ., வலை வளைப்பதற்கு ஏற்ற குறிக்கப்பட்ட கடலின் அளவு. சிலபாடுகளுக்குப் பரதவர் பெயரிட்டிருப்பர். அவ்விடங்களில்ஆழம் குறைந்தும்மீன்பாடு மிகுந்தும் இருக்கும். ஆழ்வான்பாடு, குறுங்கரைப்பாடு ...என்பன எடுத்துக்காட்டுகள்.

பாதங் கழுவிய தண்ணி — பெ., 'இழுத்து வைத்த' படகை (பார்க்க—'படகு இழுத்து வைத்தல்') மீண்டும் நீருக்குள்ளே தள்ளிவிடும் முன்பு சிலமரபுகளைக்கடைப் பிடிப்பர், பச்சை மஞ்சளை அரைத்துப்படகின்கொம்பில் பூசுவார்கள், பாதங்கழுவிய தண்ணீரால் அணியத்தைக் கழுவுவார்கள். பாதங்கழுவிய தண்ணீர் என்பது, ஒரு போத்தல்நிரம்பத்தண்ணீரை எடுத்து, சிறுபூக்களை அத்தண்ணீரில் கொட்டித் தமக்கு விருப்பமான தெய்வங்களின் பாதக்கடியில் நின்று, மெழுகுதிரிகொளுத்தி, அதன் அனலால் உருகும் மெழுகினின்றும் மூன்று துளியைப் போத்தலிலுள்ள நீருள்விட்டு, பின் அம் மெழுகை உருச்கிப் போத்தலினுட் போட்டு, அப்பால் ஒரு வெள்ளைச் சீலைத் துண்டை அந்நீரில் நனைத்து, அத்தெய்வத்தின் பாதத்தைக் கழுவி, அந்நீரின் மூன்றுசொட்டினைப் போத்தலுள்விடுவார்கள். இம்முறை இடத்திற்கு இடம் சிறிது வேறுபடும், எனினும், பொதுவாக இதுவே பாதங்கழுவிய தண்ணி எனப்படும். இத்தண்ணீரைக் கொண்டு அணியத்தைக் கழுவி வழிபட்டு, கலத்தைக் கடலினுள் இறக்கித்தொழில்பார்த்தால் மீன்பாட்டம் மிகுந்து, வருவாய் பெருகும் என்பது நம்பிக்கை.

பாய் — பெ., காற்றின் வீச்சாலும் திறனாலும் கலத்தை ஓட்டுதற்குக் கட்டப்படும் பாய். பாய்மீது தாக்கும் காற்றின் திறனைப் பயன்படுத்திப் பரதவர் கலத்தை இயக்குவர். இப் பாய் பொதுவாக முரட்டுத்துணியால் தயாரிக்கப்பட்டிருக்கும்.

பாய்மரம் — பெ., பாய் கட்டப்பட்டுள்ள மரம்.

பாய்மரம் நாட்டுதல் — தொ.பெ., இறக்கப்பட்டுள்ள பாயை ஏற்றி இழுத்துக்கட்டுதல் பாய்மரம் நாட்டுதல் எனப்படும்.

"பூட்டடா பருமலுப் பாயை
பொற் சிரசிலே பொறுக்க
நாட்டடா பாய்மரத்தை
நாலு பண்ணில் பொறுக்க"
— நாட்டார் பாடல்.

பாலைத்தீவு... பெ., கச்சத்தீவு, சிறுதீவு போன்று இதுவும் ஒரு தீவு. மீன்பாட்டம் தேடியும் கோயில் வழிபாடு நாடியும் பரதவர் இத்தீவுக்கு வந்து செல்வர். இத்தீவில் புனித அந்தோணியார் கோயில் ஒன்று உண்டு. இங்கு மீன் பிடிக்கவரும் மீனவர்கள் இத் இத்தீவை ஒரு தூய தீவாக மதிக்கிறார்கள். இத்தீவின் கரையில் அமைந்துள்ள வெண்மணற் பரப்பில், எத்தகைய உடனடி அலுவலானாலும், மீனவர் ஓடிச்செல்ல மாட்டார்கள். ஓடிச்சென்றால், அது விளையாட்டு என்பது இவர்களது கருத்தாகும். பாலைத்தீவில் தொழிலுக் கென்று வந்து விளையாட்டுப் போக்கில் திரிந்தால், மீன்பிடிபடாது என்ற நம்பிக்கை இவர்களிடையே உண்டு. இத்தூய அந்தோணியார் கோயிலுக்குச் செல்பவர்கள் செல்லும் பொழுதும் சென்று திரும்பிவரும் பொழுதும் தரையிற் பதிந்த காலடிச் சுவடுகளைக்குனிந்து கையால் அழித்துக் கொண்டேவருவார்கள். இப்படிச்சுவட்டை அழிக்காமல் வந்தால், மேற்குறிப்பிட்டபடி மீன்பிடிபடாமல், மீன்பிடிக்கப் பயன்படும் வலை குறுக்காகவெடித்தும் போகும் என்ற நம்பிக்கை இவர்களிடையே இருந்து வந்தது. இப்போது, இவ்வாறு அடி அழிப்பதில்லை, முன்னர் இருந்தஇப்பழக்கம்நாட்டார் பாடலிற் பதிந்துஆவணமாகி விட்டது.

"படியளப்பார் லைலாஎன்று வந்தோம்

பாலதீவு லைலா கரையையண்டி

அடியழித்த லைலா வந்தேனப்பா

ஆதரிப்பீர் லைலா எங்களையும்

–நாட்டார் பாடல்

தொழில் செய்வதற்குப் பாலைத் தீவுக் கரையை அண்டியவுடன் தொழிலாளர்கள் கரையில் இறங்கி நின்று கொண்டு தம்முட் பக்தி மிக்க ஒருவரை கோயிலுக்குச் சென்று வளமாக மீன் பிடிபட வேண்டுமென வழிபட்டு வருமாறு அனுப்புவர், (கவனிக்க. 'வந்தோம் — வந்தேன்' வினை முற்றுகள்; தன்மைப்பன்மை — தன்மை ஒருமை). ஆகவே, பரதவர்களைப் பொறுத்தமட்டில் இத்தீவு புனிதமானது.

பிதை ... வி., கோத்துக்கட்டு. 'இந்த மடியைப் பிதை' எனத் தொழில் செய்யும் போது ஒருவர் மற்றவர்க்குச் சொல் வார்.

புட்டி
வெள்ளை பெ., ஆழ்வான் போன்ற ஒரு பாடு

புணை ... பெ., ஒருவகை மரவேரின் துண்டு. இது நீரில் மிதக்கும். (தென் தமிழ் நாட்டில் 'புளோட்', ,போயா' என முறையே வழங்கப்படும் இரப்பர், அலுமினியமிதவை, களின் பணியை இவ்வேர் செய்கிறது.)

புணை
உறுட்டி பெ., ஆழ்வான் போன்ற ஒரு பாடு

புறவா . பெ., இதுவும் அது.

பெரிய
வேலி ... பெ.. இதுவும் அது.

பெருக்குதல் தொ.பெ., முடிந்து கொள்ளு தல். 'மோவலையில் புணை யைப் பெருக்கு' எனின் 'மோ வலையில் (மேல் வலையில்) புணையைமுடி (கட்டு)' என்று பொருள்.

பெருங்கக்
கயிறு — பெ., 'பெருங் கைக்கயிறு' என்பதன் திரிபு. மடவலை யிலும் மோவலை யிலும் (மேல்வலையிலும்) 'பெருங் கைக் கயிற்றை' முடிந்து இழுப்பார்கள். இதன் மையத் திலே வலப்புறமும் இடப் புறமும், ஒன்றரை முழம் முக்காற் சாண் நீளத்தில் நூலால் வலிந்து பெருக்கி யிருப்பர். பெருங் கைக்கயிறு என்பது கரைவலையில் ஓர் உறுப்பாகும்.

பெருங்கைக்
கயிறு ... பெ., பார்க்க பெருங்கக்கயிறு

பேத்தை ... பெ., மீன்வகை. மீனவர்மீன் பிடிக்கும் போது, இம்மீன் மடி நூலை நறுக்கிவிடும். பிடி பட்டுவிட்டது எனில், உடனே வயிறு ஊதிப் பெருத்துவிடும். எனவே, மீனவர் இம்மீனைப் பிடித்ததும் எறிந்து விடுவர்.

பொண்டு — பெ., பெண், பெண்டு என் பதன் திரிபு

பொரி
செழுறு ... பெ., மீன்வகை.
'போன வருஷமண்ணே
பொரிசெழுறு பட்டவலை
இந்த வருஷமண்ணே
இளம்பாரை பட்டவலை —
நாட்டார் பாடல்.

போத்தல் ... பெ., நீர் போன்றவற்றைக் கொண்டு செல்லப் பரதவர் பயன்படுத்தும் கலம்.

மடவலை .... பெ., வலை இளக்கும்போது, அழகாக மடக்கெறிந்து படகினுள் இருக்கும் வலையை ஒருவர் தூக்கி இளக்குவர். இவருக்கு உதவியாக இன் னொருவர் இவருக்கு முன்னே நின்று வலையைக் கூட்டிப் பிடிப்பர். இவ்வாறு கூட்டிப் பிடிக்கும் வலையை மேலும் இருவர் நின்று, ஒருவர் மோவலையாகவும் இன்னொ ருவர் மடவலையாகவும்

தெரிந்து சிக்கற்ற முறையிலே கடலினுள் இறக்குவார்கள். மோவலை கடல் மீதுமிதக்க, மடவலை கடலடியில் தாழ்ந்து இருக்கும்.

மடி ... பெ., மடியென்பது நூலால் நெய்யப்பட்டு, பறியின் அமைப்பில் அமைந்துள்ள வலையாகும்.

மடி பார்த்தல் ... பெ., கடலில் இளக்கப்பட்டிருக்கும் வலையுள் மீன்பாடு நிறைந்திருக்கிறதாவென, மண்டாடி நீந்திச் சென்று வலை மடியைப் பார்த்தல.

மண்டதீவு ... பெ., ஒரு தீவு.

மண்டாடி ... பெ., தொழில்நுணுக்கங்களை அறிந்தவர். இவரை 'மேலாப் பாசசு' எனவும அழைப்பர்.

மரக்கோல் ... பெ., பாய்களின்றிப் படகைச் செலுத்தும வேளையிலே காற்றும்கூளிக்கொண்டு வேகமாக வீசுமவரை, அப்பாரிய படகை 'மரககோல மூலம தாங்குவார்கள். அவ்வாறு தாங்குமபோது, அணியதது மரக்கால வைபபவரும் கடையால் மரக்கோல் வைப்பவரும்மிகவும பலசாலிகளாக இருந்தற்பாலர். குறித்தவுலக் கிற்குக்காற்றிற்கும் கடலலைகளுக்கும் எதிராகத தாங்க வல்லவர் இத்தகையாரே. 'ஆள் இளக்காரம் கண்டால், தோணி மிதத்து அலைபாயும்' என்றமுதுமொழி நோக்குதற்குரியது.

மாரிவலை ... பெ., கரைவலையில் உள்ள இறுதி வலை மாரிவலையாகும். 32 பிணையலும் 1 சாண் நீளமும் கொண்டது. 64 அளியும் 9 அங்குல நீளமும் உடையது எனினுமாம்.

மாலக் கண்ணி ... பெ., கரைவலையில் நடு வணிக்குப் பின் உள்ளது மாலக்கண்ணி. 28 பிணையலும் 3/4 முழ நீளமும் கொண்டது. 56 அளியும் $13\frac{1}{2}$ அங்குல நீளமும் உடையது எனிமானும்.

மான்பாடு ... பெ., கடலினடியில் மீன்கள் நிற்கிறபோது கடல்தளத்தின் மேல் ஒரு திரவப்படர்வு காணப்படும். இதனைக் கண்ணுறும் மீனவர், அத் திரவப் படர்வின் கீழே மீன் தொகையாகத் திரண்டிருத்தலை அறிந்து கொள்வர். இததிரவப் படர்வுக்கு மான்பாடு என்று பெயர்.

''மான்பாட்டு லைலா
நேரமண்ணே
மறியுங்கடா லைலா
வலையதினால'' —நாட்டார் பாடல்.

மீன் இரைதல் ... தொ.பெ., கடல்மேல் வெண்ணுரை காணப்படின் மீன்கள் இரைகின்றன என்பர், மீன்கள் இரைவதால் நுரை உண்டாகும் என்பது இதன் பொருள்.

மீன்படுதல் — தொ.பெ., வலையுள் மீன் சிக்குதல்.

மீன் பிடித்தல் ... தொ.பெ., கலங்கள் மூலமும் கருவிகள் மூலமும் மீன் வேட்டையாடல்.

முச்று .... பெ. மீன்வகை

மேலாப்
பாச்சி .. பெ.,மண்டாடிக்குள்ள இன்னொரு பெயர்.

மோவலை ... பெ., 'மேல்வலை என்பதன் சிதைவு.கடலில் இள(ற)க்கப் கப்பட்ட வலையுள், மேல் மிதப்பது மேல்வலை. (கடலின் அடியில் தாழ்ந்து இருப்பது மடவலை.)

லாவுதல் ... தொ.பெ., மீனவர் கடலில் தொழில் செய்யும் போது கையசைத்துச் சைகை மூலம் தொலைவில் உள்ளார்க்குச் செய்திகளைத் தெரிவித்தல். பொதுவாக மண்டாடி அல்லது மேலப்பாச்சி சக தொழிலாளர்க்கு லாவுதல் மூலம் அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களைச் சுட்டுவார்.

லைலா ... அசை அல்லது ஒலக்குறிப்பு. 'அல்லில்லா' போன்றது. பொருளற்றது. அம்பாப் பாடலில் இடம் பெறுவது எடுத்துக் காட்டு.

"போட்டாளே லைலா
மாலை யொண்டு
வாட்டாளம் லைலா பூத்
தொடுத்து
காட்டிலோ லைலா மெத்தை
யுண்டு
கால்பிடிக்க லைலா தாதி
யுண்டு"—நாட்டார் பாடல்.

வலை
இளக்குதல் ... தொ. பெ. , வலையைப் பிரித்துக் கடலுள்இறக்குதல்.

வலைக்
கண் .. பெ., அளி.

வலைக்
காரன் ... பெ., வலைத்தொழில் செய்பவன்.

வலை
வளைத்தல் .... தொ, பெ., மீன் தப்பிச் செல்லாவாறு வலையைச் சுழற்றி வளைத்தல்.

வலை
வளைப்பு ... தொ.பெ.. போதிய அளவு மீன்பிடிபட வேண்டுமென்பதற்காக ஒருபாடு வளைப்பு, இருபாடு வளைப்பு, மூன்று பாடு வளைப்பு என வளைப்பதுண்டு. பார்க்க — வலை வளைத்தல்,

வலை
வாங்குதல் ... தொ பெ.. கடலில் இறக்கப்பட்ட வலையைத் திரும்ப இழுத்துச் சுருட்டுதல்.

வழுவாடி ... பெ., பாலைத் தீவுக்கண்மையில் அதிகமாகப் பிடிபடும் ஒருவகைத் திருக்கைமீன்.

வாட்டாளம்
பூ .... பெ., கடல் தாவரமான வாட்டாளம் என்பதன் பூ.

வாட்டாளை
... பெ., கடல்தாவரம். வலை இழுபடும்போது இது வலைக் கண்களை அடைத்து விடும்.

"வாட்டாளை லைலாகொண்
டல்லோ
வலைகளெல்லாம் லைலா
நெகிழுதில்லை"—நாட்டார்
பாடல்

வாளை ... பெ., மீன்வகை.
"ஓரா மீனடி ஓடியல் புட்டடி
வாளை மீனடி வரகு சோறடி
— நாட்டார் பாடல்.

விளமீன் ... பெ., மீன்வகை. அரிதாகக் கிடைக்கும் மீன்.

வீச்சுவலை பெ., வலைவகை. வீசி எறியும் வகையில் அமைந்த வலை.

வெண்ணுரை ... பெ., வலை வளைக்கும் போது, கடலினுட் கற்பாறை ஏது மிருப்பின். அதன் மீது அலை மோதி நுரை உண்டாகும். மீன் இரைதலாலும் நுரை உண்டாகும்—இதனை வெண்ணுரை என்பர்.

வெந்நீர் ... பெ., தேநீர். சம்பளக் கரைவலைத் தொழிலாளர்க்கு முதலாளியர் தொழிலினிடையில் வெந்நீர் (தேநீர் தருதல்) வழக்கம். எடுத்துக்காட்டு: "வெந்நீரும் அல்லில்லா தாரானில்ல" — நாட்டார் பாடல்.

வேளாக் கடல் ... பெ., தொழில் செய்யக் கடினமான கடல்.

றோசர் ... அசைஅல்லது இராகம்அல்லது ஒலிக்குறிப்பு. 'அல்லில்லா, போன்றது. எடுத்துக்காட்டு-வன்மம் நிறைந்த ஒரு காதற் பாடல்:

"என்னஎன்ன றோசா
பாக்கிறது
எட்டுப்பானம் றோசா
கேக்கிறது
வேசைபொண்ணே றோசா
காசுதாடி
வேணுமெண்டா றோசா
பாயைப்போடு"—
நாட்டார்பாடல்

(4)

முன்னர் கூறியபடி, தமிழ்நாட்டின் கரையோர மீனவர்களது மொழிநிலை, கலைச் சொல்லியல் ஆகியன ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளன. யாழ்ப்பாணக் கரையோரப் பரதவர் தொழிற்கலைச் சொற்களை அறிமுகப்படுத்தும் இக்கட்டுரையும், இக்கட்டுரையாளராலேயே உருவாக்கம் பெற்றுள்ள 'மட்டக்களப்பு மாவட்டக் கடற்கரைப் பரதவர் தொழிற்கலைச் சொற்கள்—ஓர் அறிமுகம்' எனும் கட்டுரையும் ஈழநாட்டின் வடக்கு, கிழக்குப் புலங்களின் பரதவர் மொழியியலை ஓரளவுக்குப் புலப்படுத்துகின்றன எனலாம். இனிவரும் ஆய்வாளர் 'தமிழ்நாட்டு ஈழநாட்டுத் தமிழ்ப்பரதவர் வழங்கும் தொழிற்கலைச் சொற்கள்—ஓர் ஒப்பாய்வு' எனும் திசையில் ஆய்வை முன்னடத்திச் செல்லலாம். அவ்வாறாக, இவ்விரு நிலப்பகுதிகளிலும் வசிக்கின்ற பரதவரிடையே உண்டாகி நிலைபெற்றிருக்கும் சடங்கும், மரபுமாகிய பண்பாட்டுப் பரவல்களும், தொழில் நுணுக்கம் முதலானவை தொடர்பான பேச்சுப் பரவல்களும் துலக்கமாக வெளியாகலாம். மானுடவியல், சமூகவியல், வரலாற்றியல் எனும் துறைகளைப் போலவே மொழித்துறையும் இவ்விரு நில மக்களின் நெடுநாளைய தொடர்பினைத் தகுந்த சான்றுகளின் அடிப்படையில் உலகுக்கு வெளிப்படுத்தும் என நம்பலாம்.

5

நெறித்துணை

1. *i* உதயகுமார், வெ., புதுச்சேரி மீனவர் பாடல்கள், பிஎச்.டி. பட்டத்திற்கான ஆய்வு, சென்னைப் பல்கலைக் கழகம், (ஆய்வு தொடர்கிறது).

ii நோவா, எஃச்.டி; தூத்துக்குடிப் பரதவர் நாட்டுப்புறப் பாடல்களும் கதைகளும் பிஎச்.டி. பட்டத்திற்கான ஆய்வு மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை (ஆய்வுதொடர்கிறது).

iii முருகானந்தம், ச., இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டக்கடற்கரைப் பரதவர் நாட்டுப்பாடல், பிஎச். டி. பட்டத்திற்கான ஆய்வு மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, (ஆய்வு தொடர்கிறது)

2. முருகானந்தம் ச, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டக் கடற்கரைப் பரதவர் தொழிற்கலைச் சொற்கள், பிரசுரிக்கப்படாத ஆய்வேடு குறுகிய கால ஆய்வுத்திட்டம், தமிழ்ப் பல் கலைக்கழகம், தஞ்சாவூர், 1983.

3. i குணசேகரன், மு, தூத்துக்குடிப் பரதவர் சமூகப் பழக்கவழக்கங்கள், பிரசுரிக்கப்படாத எம்.பில். பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல் கலைக்கழகம், மதுரை, 1981.

ii *Grace Elizabeth, Miss, The Lady of Snow, M.A Dissertation, Madurai Kamaraj University, Madurai.*

4. பாலசுந்தரம், இ., ஈழத்து நாட்டார் பாடல்கள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, நவம்பர், 1979.

5. புட்பராசன். மு. 'அம்பா' – அலை வெளியீடு, யாழ்ப்பணம், 1976.

6. *Chidambaranatha Pillai, V. A. Descriptive Study of a Tamil Dialect (Fisherman Dialect of South Arcot District), Annamalai University, 1969*

7 நுஃமான், எம்.ஏ., முன்னுரை,-அம்பா (மு. புட்பராசன்), அலை வெளியீடு, யாழ்ப்பாணம், அக்டோபர், 1976

8. கடையர் என்பவர் பரவர் சமூகத்தினருள் ஓர் உட்பிரிவினர். இவர்தம் தொழில் சுண்ணாம்புச் சிப்பி சுடுதல், முத்துக் குளித்தல் என்பன-அபிதான சிந்தாமணி பக். 322

9. *James Hornell, The Sacred Chank of India, Article: The Chank Fisheries of India and Ceylon-Part I, Madras Fisheries Bulletin (No. 7), 1914, Pp. 3-40*

10. *'When the Pandyan Kingdom was powerful the Paravas had grants of certain rights from the monarchy, paying the tribute from the produce of the fisheries and receiving protection and immunity from taxation in return. The fishing in these early days appears to have been extremely prosperous-thus in A.D. 1330 Friar Jordanus, who visited India at this time tells us that as many as 8,000 boats were employed in the pearl fisheries of Tinnevelly and Ceylon'*

—Edgar Thurston, Pearl and Chank Fisheries, Madras, 1894, P. 9.

11. *'The description of the conduct of the fishery under the Portuguese by Juan Ribeyro in his 'History of Ceylon' dated 1685, is the only detailed account handed down to us. (From the English translation from the French version of the Abbe Le Grand, Ceylon, 1847).*

கருவி நூல்கள்

(1) தமிழ்

1. கதிரைவேற்பிள்ளை, நா., தமிழ்மொழி அகராதி, ஆசியன் எசுகேசனல் சர்வீசசு புதுடெல்லி, மறுபதிப்பு, 1981.

2. குணசேகரன் மு.; தூத்துக்குடிப்பரதவர் சமூகப் பழக்கவழக்கங்கள். பிரசுரிக்கப் படாத எம். பில். ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 1981

3. சிங்காரவேலுமுதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, ஆசியன் எசுகேசனல் சர்வீசு, புதுடெல்லி, மறுபதிப்பு, 1982.

4, பாலசுந்தரம், இ., ஈழத்து நாட்டார் பாடல்கள், தமிழ்ப்பதிப்பகம், சென்னை முகற்பதிப்பு, நவம்பர், 1979.

5. புட்பராசன், மு., அம்பா, அலைவெளி யீடு, யாழ்ப்பாணம், அக்டோபர் 1976,

6. பெரியகருப்பன், இராம., மற்றும் பலர் தமிழியல் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை மதுரை, முதற்பதிப்பு, 1983.

7. முருகானந்தம், ச., இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டக் கடற்கரைப் பரதவர் தொழிற்கலைச் சொற்கள், பிரசுரிக்கப்படாத குறுகிய கால ஆய்வுத் திட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1983.

8. வானமாமலை., (தொ. ஆ.) தமிழக நாட்டுப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக். கவுஸ், சென்னை, முதற்பதிப்பு, 1964,

i English

1. *Annie Thomas, Dissertations on Tamil -ology, International Institute of Tamil Studies, Adaivar' Madras, First Edition, March, 1977.*

2. *Grace Elizabeth, Miss, The Lady of Snow, Unpublished M A. Dissertation Madurai Kamaraj University, Madurai*

3. *Hornell, James, The Sacred Chank of India, Madras Fisheries Bullettin No. 7, 1914.*

4. *Thurston, Edgar, Pearl and Chank Fisheries, Madras, 1894.*

கலைக்களஞ்சிய மைய நிறுவனம் ஒன்று தொடங்குவதற்கான திட்டக் குறிப்பு

தமிழாக்கம்: டாக்டர் இராம. சுந்தரம்

கலைக்களஞ்சிய மைய நிறுவனத்தின் தேவை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கலைக் களஞ்சிய மையம் (சென்னை) அண்மையில் சென்னையில் ஒரு கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தது. இக்கருத்தரங்கில் கேரளம், மைசூர், வங்காள மாநிலங்களிலிருந்து கலைக்களஞ்சியத் தலைமை ஆசிரியர்களும், புது தில்லி சாகித்ய அகாதமி தயாரிக்கும் 'இந்திய இலக்கியக் களஞ்சியத்தின்' மூத்த உறுப்பினர் ஒருவரும் கலந்து கொண்டு, கட்டுரைகள் வழங்கினர். கருத்தரங்கின் ஒரு பகுதியாக விரிவான கலந்துரையாடல் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இக் கலந்துரையாடலின்போது கலைக்களஞ் சியத்தார் எதிர்கொள்ளும் பல சிக்கல் களுக்குத் தீர்வு காண உதவும் வகையில் கலைக்களஞ்சிய மைய நிறுவனம் ஒன்று அமைப்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்கப் பட்டது. இதற்கான ஒரு முறையான திட்ட முன்மொழிவைத் (Formal proposal) உருவாக்குவதென்றும், தேவையான உதவி களைப் பெறுதற்காக நடுவண் அரசை அணுகுவதென்றும் இக்கருத்தரங்கிலே தீர் மானஞ்செய்யப்பட்டது.

கலைக்களஞ்சிய மைய நிறுவனப் பணிகள்

1 வீண் செலவையும் உழைப்பையும் தவிர்த்தல்

முன்மொழியப்பட்டுள்ள மைய நிறுவனம் நமது நாட்டில் பல மொழிகளிலும் வெளி வரும் கலைக்களஞ்சியங்களுக்குத் துணை செய்யும். பல்வேறு கலைக்களஞ்சியங்களும் பயன்படுத்துகிற உண்மை விவரங்களும் விளக்கங்களும் அவை எல்லாவற்றிற்கும் பொதுவாக இருக்கின்றன என்பதும், ஒரு குறிப்பிட்ட மொழிக்கலைக்களஞ்சியத்திற்கு மட்டும் உரியவை என்று குறிக்கத்தக்கன வாக உள்ள செய்திகள் மிகக் குறைவே என்பதும் தெளிவு. எடுத்துக்காட்டாக, பல்வேறு இந்திய மொழிகளில் வெளியிடப் படும் கலைக்களஞ்சியங்களுக்கும் மூளை குருதி ஓட்டம், நரம்பு மண்டல அமைப்பு ஞாயிற்று மண்டல அமைப்பு பற்றிய அறிவியற்செய்திகளைஉள்ளடக்கியகட்டுரை கள் பொதுவானவையாகும். தன்னுடைய இலக்கிய வட்டாரத் தன்மை கூடுதலாக உள்ள வாழ்வியல் (Humanities) கலைக் களஞ்சியத்தில்கூட ஆங்கில, சமற்கிருத இலக்கியங்கள் பற்றிய கட்டுரைகளை அதிக மாற்றங்களின்றிப் பொதுவாகப் பயன் படுத்த இயலும். குறிப்பிட்ட ஒரு மாநிலத்தில் இருந்து வெளிவரும் ஒரு கலைக்களஞ்சியம், தன் மாநிலத்தைப் பற்றிய செய்திகளை எளிதாகத்தொகுத்துக் கொள்ள முடியும் என்பதைத் தவிர, மற்றப் படி அக்கலைக்களஞ்சியத்தில் இடம்பெறக் கூடிய இந்திய மாநிலங்கள் பற்றிய செய்தி கள், உலக நாடுகளைப் பற்றிய செய்திகள் ஆகிய அனைத்தும் எல்லாக் கலைக்களஞ் சியங்களுக்கும் பொதுவானவையே.

ஆனால் இன்று. ஒவ்வொரு கலைக், களஞ்சிய அலுவலகமும் கணிசமான பணத் தையும் உழைப்பையும் செலவழித்து இந்தச் செய்திகளையெல்லாம் தனித்தனியாகத் தொகுத்து வருகிறது. கலைக்களஞ்சியமைய நிறுவனம் இவ்வகைப் பொருள்களைச்

குறித்த செய்திகள் அடங்கியகோப்புகளைப் பேணி வைத்து, தேவைப்படுகிற கலைக் களஞ்சிய அலுவலகங்களுக்கு, அவைவேண்டு கிற ஒவ்வொரு கட்டுரைக்கும் குறிப்பிட்ட ஒரு தொகையைக் கட்டணமாகப் பெற்று, செய்திகளைத் தந்து உதவும். அல்லது வெவ்வேறு கலைக்களஞ்சிய அலுவலகங் களும் இந்த மையக் கலைக்களஞ்சிய நிறு வனத்தின் உறுப்பினராகத்தன்னைப்பதிவும் செய்து கொள்ளக்கூடும் என்றும், அதற்காக ஆண்டுக் கட்டணம் செலுத்தக்கூடும்என்றும் எதிர்பார்க்கலாம்,

2 வரைபட வங்கி

ஒவ்வொரு கலைக்களஞ்சியமும் வரை படங்கள், படங்கள், அட்டவணைகள் முதலியவற்றைத் தனக்கெனத் தனித்தனி யாகப் பயன்படுத்துகின்றது. இவற்றிற்கான மூலப் பொருள்களையும் இவற்றின் மேல மைந்த இறுதி வடிவங்களையும் நமதுநாட்டி லுள்ள எல்லாக் கலைக்களஞ்சியங்களும் பெரும்பான்மை இடங்களில், பொதுவாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சில இடங் களில்; வரைபடங்கள் ஒரு குறிப்பிட்ட வட்டார மொழியில் அல்லது ஆங்கிலத்தில் குறியீடுகளைக் கொண்டிருக்குமானால், அவற்றைத் தேவைப்படும் மொழிக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளுதலும் கூடும். எனவே, கலைக்களஞ்சிய மைய நிறுவனத் தில் படங்கள், அட்டவணைகள். வரைபடங் கள் ஆகியவற்றைப் பேணிக் காக்கும் ஒரு வங்கி இருக்குமேயானால், அவற்றிற்காக ஒவ்வொரு கலைக்களஞ்சிய அலுவலகமும் செலவிடும் பணத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்தலாம்.

3 அறிவுறுத்துநர் பணி

இந்த மைய நிறுவனம் பயனுள்ள ஓர் அறிவுறுத்துநராகக்கூடச் செயல்படக்கூடும். பலதுறைக் கட்டுரைகளை வேண்டிப் பெறு தற்கும், குறிப்பிட்ட வட்டார மொழிகளில் அவற்றை மொழிபெயர்ப்பு செய்வதற்கும் உதவும் வகையில், உலக அறிஞர்களின்பெயர் களையும் முகவரிகளையும் தொகுத்து [illegible]க்கும். தனித்தனியாக உள்ள கலைக் [illegible]ஞ்சிய அலுவலகங்களைவிட இவ்வகைக் களஞ்சிய மைய நிறுவனம் பெருமதிப்பு பெற்று இயங்குமாதலால், அயல்நாடுகளி லுள்ள அறிஞர்களும் தனி நிறுவனத்திற்கு உதவுவதைவிட இவ்வகை மைய நிறுவனத் திற்கு உதவ அதிகவிருப்புக் காட்டுவர். 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா' போன்று பிற நாடுகளில் வெளியாகும்கலைக் களஞ்சியங்களிலிருந்து தேவையான படங் களையும் அட்டவணைகளையும் எடுத்தாளு தற்கு வேண்டிய இசைவைப் பெறுதற்கும் இந்த மைய நிறுவனம் உதவி செய்யக்கூடும்.

4) மொழிபெயர்ப்பாளர் குழு

மையநிறுவனத்தின் பணநிலை அனுமதிக்கு மெனில் மொழிபெயர்ப்பாளர் குழு ஒன்றைக்கூட வைத்துக் கொள்ள இயலும். இம்மொழி பெயர்ப்பாளர்கள் குறிப்பிட்ட ஊதிய அடிப்படையில், ஆங்கிலத்திலுள்ள கட்டுரைகளை வட்டார மொழிகளில் மொழி பெயர்த்துத் தரக்கூடும். இது மிகவும் இன்றி யமையாதது. ஏனெனில், தனிப்பட்ட கலைக் களஞ்சிய அலுவலகங்கள் ஒவ்வொரு கட்டுரைக்கும் தொழில்வழி மொழிபெயர்ப் பாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்குப் போதியபண வசதியைப் பெற்றிருக்க இயலாது.

மைய நிறுவனத்தின் தன்மை

கலைக்களஞ்சிய மைய நிறுவனம் பிற ருடைய செல்வாக்குக்கு உட்படாது தனித் தியங்க விரும்புகிற, —தனிப்பட்ட —கலைக் களஞ்சிய அலுவலகங்களின் அதிகாரத்தில் தலையிடவோ அதைக் கண்காணிக்கவோமுற் படாது. இந்த மைய நிறுவனம், குறிப்பாக, ஒரு தரவு வங்கியாகச் (Data Bank) செயல் படும்: தனிப்பட்ட கலைக்களஞ்சிய அலு வலகம் உதவி வேண்டினால் மட்டும் அதற்கு ஏற்றதைச் செய்யும். பிற கலைக்களஞ்சிய

அலுவலகங்களின்மீது இதற்கு எந்தவிதமான ஆட்சித் தலைமையும் (Administrative authority) இருக்காது.

பண நிலை

இந்த மைய நிறுவனத்திற்கான பண வருவாய் இதன் நிறுவன உறுப்பினர்களாகப்பதிவு செய்து கொள்ளும் கலைக்களஞ்சிய அலுவலகங்கள் தரும் நுழைவுக் கட்டணத்திலிருந்தும், ஆண்டு உறுப்பினர் கட்டணத்திலிருந்தும் பெறப்படும். நடுவண் அரசு இதன் வரவுசெலவுத் திட்டத்தைச் சமப்படுத்தும்விதத்தில்உதவித்தொகை (Subsidy) தந்து துணை செய்யலாம், இந்த மைய நிறுவனம் ஒவ்வொருதுறையிலும் திறமைசான்றவர்களாகவும் ஈடுபாட்டுடன் உழைக்கக் கூடியவர்களாகவும் உள்ள அறிஞர்களைக் கொண்டு இயங்கும். எனவே இவர்களுக்காகும் செலவே தலைமைச் செலவாகும். இச்செலவிற்கான உதவித் தொகையை நடுவண் அரசிடம் வேண்டிப் பெறலாம் இந்தியா போன்ற ஓர் இளைய குடியரசு நாட்டில், வட்டார மொழிகளிற் கலைக் களஞ்சியங்கள் வெளி வருவது என்பது மிகப் பெரியதும் இன்றியமை யாததுமான வளர்ச்சிப் படியாக இருப்பதால் இந்த மைய நிறுவனத்தால் விளையும் நன்மைகள் நடுவண் அரசுதரும் உதவித்தொகையை விடப் பல மடங்கு மதிப்புடையவாகும்.

தலைமை அலுவலகம்

இந்தத் திட்ட முன்மொழிவு கொள்கையளவில் ஒத்துக் கொள்ளப்படுமேயானால் இந்த மையநிறுவனத்தின் அமைப்பு குறித்து விவர அறிக்கை ஒன்றை உருவாக்க ஒரு சிறு குழு அமைக்கப்படலாம். இரண்டு மாதங் கட்டடம், பணியாளர் அளவு, அவர்களைப் பணிக்கு அமர்த்துதல் பற்றித் தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த மையத்திற்கான தலைமையகத்தை அமைப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் நகரத்தைப் பொறுத்து, இந்த மையத்திற்கான நிலம் மற்றும் கட்டடச் செலவுகள் அமையும்.

நூல் நிலையம்

இந்த மையம் மிகவும் நல்ல ஒரு நூலகத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு, பொது இயல்பினவும் சிறப்பு நிலையினவுமான பல இன்றியமையா இதழ்களையும் கட்டணம் செலுத்திப் பெற வேண்டும். இந்த நூலகத்தை அமைப்பதற்குத் தொடக்கத்தில் குறைந்தது 15 இலட்சரூபாயும் ஆண்டுதோறும் நூலகத்தை விரிவாக்குவதற்காக 2 இலட்ச ரூபாயும் முதலீடாக ஒதுக்கப்பட வேண்டும். இதழ்களுக்கான கட்டணத்தொகையாக ஓர் இலட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும். எனினும், இந்த மையத்திற்கான முதன்மைச்செலவும் அவ்வப்போது ஏற்படும் செலவினங்களும் (Capital and revenue expenditure) மேலே குறிப்பிட்ட சிறு குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப அமையும்,

ஆட்சிக்குழு

இந்த மைய நிறுவனத்தின் அனைத்து மட்ட ஆட்சிப் பொறுப்பும் ஓர் ஆட்சிக் குழுவின் [illegible] இருக்கும். இந்த ஆட்சிக் குழு[illegible]னங்களின் சார்பாளர்கள் [illegible]ர். அரசு, சி. எஃச். ஐ. [illegible]டாமி, ஐ. சி.சி. ஆர். பே[illegible]களிலிருந்து சில உறுப்பி[illegible]த்தலாம். முந்தியபத்தியில் [illegible]